# மெய்கண்டார்

அருளிய

# சிவஞானபோதம்

வாழ்வியல் ஆய்வு விளக்கம்

முனைவர் நல்லூர் சா. சரவணன்



சமயக் குரவர்கள்



சந்தானக் குரவர்கள்

மெய்கண்டார் அருளிய

# சிவஞானபோதம்

## வாழ்வியல் ஆய்வு விளக்கம்

முனைவர் நல்லூர் சா. சரவணன்
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
இராமகிருஷ்ணா மிஷன் விவேகானந்தா கல்லூரி,
சென்னை - 600 004.

திருமண விழா
சிறப்பு வெளியீடு

**16.06.2008**

*12-3/3, Castle Lane, Bambalapitiya,*
*Colombo - 04. Phone : 011 - 2596032*

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை**
**கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.**

- திருஞானசம்பந்தர் III-282-1

உலகில் நிலைபேறுடைய நல்வாழ்க்கை வாழலாம்; எப்போதும் மாறாத வாழ்க்கை வாழலாம்; விரும்பினால் நல்ல செய்கைகள் விளையச் செய்ய யாதும் குறைவில்லை!

உலகு நன்மை பொருந்தவே நல்லவளொடு பெருந்தகையாக சிவபெருமான் குடும்ப வாழ்வினனாகக் கழுமல வளநகரில் (சீகாழி) இருந்து அருள் செய்கிறான்! அவனைக் கண்ணுக!! அவனால் அவ்வாழ்வு பெறலாம்.

இல. 43, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,
திரு & திருமதி **த. சண்முகலிங்கம்**
மகள்
திருவளர் செல்வி **சுபோதினி**
அவர்களுக்கும்

இல. 504, ரெஸ்கிவா கிறசென்ட்,
ஒட்டவா, கனடா K 2W 1 X7
திரு & திருமதி **நா. சோமசுந்தரம்**
மகன்
திருவளர் செல்வன் **உதயகுமரன்**
அவர்களுக்கும்

# திருவருளால் அமைந்த திருமண விழா
# சிறப்பு வெளியீடு

*அன்புடன்*
செல்வி **ச. நந்தினி**, M.A.,
செல்வி **ச. வினோதினி**, MBBS

**16.06.2008**
**நியூ உட்லன்ஸ் ஓட்டல்**
**மயிலாப்பூர், சென்னை- 600 004.**

**காமம் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமம் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.**

- தொல்காப்பியம், பொருளியல் - 51.

விருப்பம் என்ற ஒன்றின் ஓட்டத்தால் நிறைவுபடும் வாழ்க்கையின் முடிநிலையானது பாதுகாப்புக்குரிய மக்களாக வளர்க்கப்பட்ட பிள்ளைகள் உடனிருக்க, அறத்தை இயக்கப்படுத்தி வாழ்கின்ற உறவினர்கள் சூழலில் தலைவன் - தலைவி வாழ்வதாக இருக்க வேண்டும். அப்படி வாழும் அவர்களின் வாழ்க்கை வாழ்ந்ததன் பயன் என்னவென்றால் 'சிறந்தது பயின்ற வாழ்க்கை' என்பதே விடை.

திருவள்ளுவர் கூறும் செம்பொருள் காண்டலுக்கான மூலமாக சிறந்தது பயிலும் வாழ்க்கை குடும்பங்களில் அமையட்டும்.

**தெரிந்து எல்லாம் கொடுக்கிறது...**
**தெரியாமல் பயன் கொள்கிறோம்...**
**தேவை தெரியாமல் கேட்கிறோம்...**
**நமக்குச் செய்ய**
**'குனிய வலமாம் அடிமை'★ அது...**
**அதைவிடக்**
**குனிய முடியாது நம்மால்...**
**கேட்டுப் பெறுவதில் விஞ்சிய அடிமை ஆனோம்**

**நட்டார்... உறவோர்... உற்றார்...**
**எல்லார்க்கும் செய்தோம்... செயப்பட்டோம்...**
**எல்லாம் கடன்களாயின!!!**
**கடனாக இல்லாமல் கடன் தந்தது கடவுள்**
**கடனாக இல்லாததும் கடனாக ஆனது உலகம்**
**எல்லோரும் கேட்கிறார்கள் கழிக்கிறோம்**
**கடவுளுக்கும் கடன்.......... நன்றி..................**

**தந்த வகையில் ஞானம்**
**அது தரட்டும் போதம்**
**அன்பின்**
**நல்லூரன்**

★ காரைக்காலம்மையார்

உ

திருச்சிற்றம்பலம்

**நன்றியால் வாழ்வது உள்ளம்**
**உலகுக்கு ஒரு நன்மையாலே**
**கன்றினார் மும்மதிலும் கருமால்**
**வரையே சிலையாய்**
**பொன்றினார் வார்சுடலை பொடிநீறு**
**அணிந்தார் அழல் அம்பு**
**ஒன்றினால் எய்த பெம்மான்**
**உறையும் இடம் ஒற்றியூரே.**

- திருஞானசம்பந்தர் - 3-57-7

'நன்றி' என்ற ஒன்றால்தான் உள்ளம் வாழ்வதாக ஆகும். உலகுக்கு உரிய நன்மையாக அக்கொள்கையே உறுதிபடுவது. இதனை நிலைப்பாடாகக் காட்டுமாறு, இறைவன் மலையை வில்லாக வளைத்து அழல் அம்பு எய்து பகைமையான மூன்று மதில்களை ஒழித்தார். அதனால் ஒளி விளக்கமான திருநீற்றினை அணிந்த அடையாளம் உடையவர். அப்பெருமான் உறையும் இடம் திருஒற்றியூராகும்.

## பொருளடக்கம்


| தலைப்பு | | பக்கம் |
|---|---|---|
| **தோற்றுவாய்** | ... | 9 |
| **சிவஞானபோதம்** | ... | 41 |
| சிறப்புப் பாயிரம் | ... | 42 |
| மங்கல வாழ்த்து | ... | 50 |
| அவையடக்கம் | ... | 53 |
| நூற்பா - 1 | ... | 59 |
| நூற்பா - 2 | ... | 99 |
| நூற்பா - 3 | ... | 138 |
| நூற்பா - 4 | ... | 152 |
| நூற்பா - 5 | ... | 169 |
| நூற்பா - 6 | ... | 176 |
| நூற்பா - 7 | ... | 187 |
| நூற்பா - 8 | ... | 195 |
| நூற்பா - 9 | ... | 205 |
| நூற்பா - 10 | ... | 214 |
| நூற்பா - 11 | ... | 221 |
| நூற்பா - 12 | ... | 227 |

# தோற்றுவாய்

அற்புதம் அல்லது அதிசயம் நிகழ வேண்டும்! அப்போதுதான் எல்லாம் சரியாகும்! என்று எதிர்பார்ப்பது சரிதானா? மகான் ஒருவர் வருவார்! வந்து ஏதாவது செய்வார்! என்று எண்ணுவதும் சரிதானா? பல மகான்கள் கால காலத்தில் வந்து மக்களுக்கு நல்லது / போதனை செய்தார்கள் / செய்வார்கள் என்பது எந்த அளவுக்கு முறையானது?

அதிசயம் நடக்க வேண்டும் என்பதற்கும் மகான் ஒருவர் வரவேண்டும் என்பதற்கும் களம் எது? இடர் அல்லது பிரச்சனை அல்லது சிக்கல்தான் அடிப்படைக் களம். வாழ்க்கையைப் போராட்டத்துக்கு உட்படுத்துகிற அந்தக் களம் வலிமையாக இருக்கிறது. எதிர்த்து / சமாளித்து வெற்றிபெற முடியாத மனிதர்க்கு அற்புதம், மகான் வருகை போன்ற எதிர்பார்ப்புகள் எழுகின்றன.

வாழ்க்கையே போர்க்களம்! எதிர்த்துப் போராட வேண்டும் என்ற உபதேசங்கள் இதமாக / உணர்ச்சி பூர்வமாக ஏன் உபதேசிக்கப்படுகின்றன? வாழ்க்கை ஏன் போர்க்களமாக ஆனது? அப்படி ஆக்கியது யார்? போராடிக் கொண்டிருப்பதே வாழ்க்கையா? உண்மை யான போராட்டம் எது?

வாழ்வதில் ஏற்பட்டிருக்கிற சிக்கல்களை வெற்றி கொள்ள யாராவது வரவேண்டும் என்று தன்னை மறந்து போன மனிதர்; வாழ்க்கைப் போர்க்களத்தில் தான் வெற்றி பெற வேண்டும் என்று சமூகச் சூழலை மறந்து போன மனிதர் என எல்லோர்க்கும் விடை கூற வேண்டியது தத்துவத்தின் கடமை.

மனசாந்தி வகையில் விடை கூறினாலும் சரி; மனசாட்சி வகையில் விடை கூறினாலும் சரி. மனித வளர்ச்சி கண்கூடாக்கப்பட வேண்டும். அது கண் கூடாக்கப்பட முடியாவிட்டால் ஒன்று நமக்கு அதற்குரிய தகுதி இல்லை என்று சமாதானப்படுவது; அல்லது, அதற்குரிய தகுதி நம்முடைய தத்துவத்திற்கு இல்லை என்று ஒத்துக் கொள்ள வேண்டும். பிறகு, கண்கூடாக மனித வளர்ச்சி ஏற்பட பலவற்றை மாற்றியமைத்து வேலை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தத்துவம் தானே காலகதியில் போய்விடும்.

அற்புதத்தையோ சமாதானத்தையோ பழைய வரலாறுகளிலிருந்து காட்டிக் காலங் கழிக்கக் கூடாது. இது இருக்கும்! அழியாது! என்று சொல்லிக் கொண்டு இருக்கலாம். கடைசியில் சிந்துவெளி நாகரிகக் கல்



என்று ஒரு கல்லை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிற மனிதனுக்கு மனநிலை பாதிக்கப்படாமல் இருந்தால் சரி. பிறகு அவர் அந்தக் கல்லால் மற்றவர்கள் தலையைப் பதம் பார்த்துவிடுவார்?

யாராவது வருவார் தலைமை ஏற்பார்! என்றோ, நான் தலைமை ஏற்க வேண்டும்! என்றோ முயற்சி செய்வதே தவறு. 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்பதைப் போல பொதுமையில் அனைவருக்குமான வளர்ச்சி பற்றிய சிந்தனையை முன் வைக்க வேண்டும். அப்போதுதான், அற்புத எதிர்பார்ப்புக்கான போராட்டம் நீடிக்காது.

திருஞானசம்பந்தர் அற்புதம் நிகழ்த்தினார் என்றால் சமணப் போராட்டம் அப்படி! திருநாவுக்கரசர் அற்புதம் நிகழ்த்தினார் என்றால் சமணப் போராட்டம் அப்படி! இவர்கள் அற்புதம் நிகழ்த்தினார்கள் என்பது ஒருபக்கம். அதற்குத் தேவையாக இருந்த போராட்டம் போன்றதொரு நிலைமையை நாம் வரவேற்க வேண்டுமா? அப்படி ஒரு நிலைமை நீடிக்கும் எண்ணம் அல்லது தன்மைதான் அற்புதத்தை நாடுகிறது. உண்மையில் இப்படி எண்ணுவது அற்பமானது! எப்படியென்றால், தலைமையை மீள மீள தனி ஒருவருக்குத் தரும் முயற்சி அதுவாகும்.

காப்பியத் தலைவன் யார் எனக் கண்டுபிடிக்க முடியாத வகையில் சுந்தரர், சம்பந்தர், அப்பரடிகள் வரலாற்றைக் கூறி திருநீலகண்டர் வரலாற்றை முதலில் சுந்தரர் வழியில் வைத்த சேக்கிழார் எண்ணத்தைச்

சரியாக உணர்ந்தால் ஒருவரிடம் தலைமையை அடகு வைக்கும் எண்ணம் வராது.

இறைவனையே 'அடியார்க்கும் அடியேன்' என்று சொல்ல வைத்த ஓர் அடிமை நாயகனான சுந்தரர் மக்கள் பொதுமையை மலரச் செய்தவர். சைவம் தொகுத்துக் கொண்டுள்ள வரலாறு தமிழ் மரபுப் பின்புலத்ததான வரலாறு. அதை முதன்மையாக மொழிந்த சுந்தரர், பெரிதுபடுத்திய சேக்கிழார் இவர்களின் உள்ளக்கிடக்கையை உணர்ந்து செயல் மேற்கொள்ள வேண்டும்.

இறைவனை மன்னன் உவமையில் சித்தாந்தம் தெரிவித்தாலும் சமய வரலாறு ஆண்டவனை ஆளாகத் தான் அறிமுகப்படுத்தியிருக்கிறது. இதனை அறிமுகப் படுத்தி மாற்றுமுறைச் சிந்தனையை அறிமுகப் படுத்தியவர்தான் காரைக்காலம்மையார் எனப்பெறும் புனிதவதியார். இவர்தான், "குனிய வலம் ஆம் அடிமை" என்பதைப் பேசினார். தலைமை பற்றிய பேச்சே இல்லாமல் அடிமையில் வெற்றி பெற்ற அடிமை என இறைவனை அறிமுகப்படுத்தினார். 'அடிமை' என்பதைப் பேச்சுக்காக எடுத்துக் கொள்கிறோம் அவ்வளவே. உழைப்பு அல்லது பணி செய்தல் என்பதன் விளக்கத்திற்காக அச்சொல் பயன்படுத்தப் படுகிறது.

மிகவும் சிக்கல் உடைய சமூகச் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தக் காலகட்டம் கோயில் வழிபாட்டைப் பெருக்கியுள்ளது. அறிவியல் வளர்ச்சியில்



தன்னுடைய மனோவேகத்திற்கு ஈடு செய்யும் அனைத்தையும் பயன்கொள்கிற நிலைமையையும் சமூகத்தில் பார்க்கிறோம். இத்தகைய வளர்ச்சியோடு சித்தாந்த வளர்ச்சி இணையவில்லை. சித்தாந்த அடையாளமே புறக்கணிக்கப்பட்ட நிலைமைதான் உள்ளது. ஆனால் இதனோடு தொடர்புபட வேண்டிய கோயில் வழிபாடு மாறான திசையில் வளர்ச்சி கண்டுள்ளது. அதாவது, தவறு செய்துவிட்டு பாவ மன்னிப்பு கேட்பது போல! சூழலில் ஏற்பட்ட சிக்கல் தீர வேண்டுகோள் வைக்கும் இடமாகக் கோயில் வழிபாடு வளர்ந்துள்ளது. உண்மையைச் சொல்லப் போனால் வாழ்க்கைப் போராட்டச் சிக்கல் மிகுதிக்கேற்ப வழிபாட்டு வளர்ச்சி மிகுந்து உள்ளது அவ்வளவே. சிக்கலைத் தீர்ப்பதற்கும் சிக்கல் வராமலிருக்கவும் சித்தாந்தத்தின் பின்புலத்தில் அடிப்படை விளங்கிக் கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் வாழ்வியல் ஆய்வு விளக்கமாக மலர்கிறது.

## (ii)

வாழ வேண்டும் என்று ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள். இடர் வராமல் இருக்க வேண்டும் என்பதற்குச் சில செய்கிறோம். திருமுறை தெரிந்தவர்கள் இடர்களையும் பதிகம் ஓதுகிறோம். திருமணம் ஆக வேண்டும் என்றும் பதிகம் படிக்கிறோம். பிள்ளை வேண்டும் என்றும் பதிகம் ஓதுகிறோம். நல்ல பிள்ளை வேண்டும் என்றும் பதிகம் படிக்கிறோம். இப்படி

எல்லாவற்றையும் பெருமானிடம் கேட்டுப் பெற வேண்டும் என்று அவனை நோக்கி நம் செயலை மேற்கொள்கிறோம். இது நம்முடைய நடவடிக்கையாக இருந்தாலும் இதில் நாம் நம்முடைய நம்பிக்கையில் எதுவரை நம்பிக்கை வைத்தல் சரியானது என்று தெரியவில்லை. நம்முடைய வேண்டுகோளை இறைவனிடம் வைத்துவிட்ட பிறகு குறிப்பிட்ட வேண்டுகோள் நிறைவேற வேண்டி நம்முடைய செயல்கள் எப்படி அமைய வேண்டும்? நம்முடைய செயல்கள் நாம் நினைத்தபடி செய்ய முடியாதபடி வெளியே நிறைய தடைகள் இருக்கின்றனவே! இவற்றை நாமே நீக்கிக் கொள்ள முடியவில்லையே! அதுவும் இறைவன் திட்டம் என்றோ, விதி என்றோ இருந்து விடலாமா? எப்படியெல்லாம் தெளிவுபெற்று எப்படி செயல் வெற்றி பெறுவது? அதற்கு மேலும், செயல் வெற்றி என்பது நாம் நினைப்பது தானா? அதன் வளர்ச்சிப் படிக்கற்கள் எப்படிப்பட்டன என்பதை எப்படி விளங்கிக் கொண்டு ஏற்றுக் கொள்வது? இப்படிப்பட்ட நடைமுறைகளைச் சைவ சமய வாழ்க்கை எப்படித் தெளிவுபடுத்துகிறது என்பதை விளக்கவும் சிவஞான போத விளக்கமாக எழுந்தது இவ்வுரை நூல்.

சமய வாழ்க்கை வாழும் மனிதர் சமூக மோதல் நடவடிக்கையிலிருந்து பொறுத்துப் போதல் அதற்கு மேலும் தியாகியாதல் என ஓர் அடையாளத்தில் கையாலாகாத் தனத்திற்குட்படும் தன்மையையும் விளங்கிக் கொண்டு சமய வாழ்க்கையின் மூலம் வெற்றிக்குரிய நடைமுறைகளைக் கொண்டு செயல்படவும் வழிகாண வேண்டும்.



வாழுகிற மனிதர் தன் வாழ்க்கைக்குப் பலவற்றைத் தேடிக் கொள்கிறார். தேடப்படுகிற தேவைகள் அவராலும் சமூகத்தாலும் வரையறைப்படுகின்றன. அவரைப் பொறுத்தவரை உடல் தேவை நிறைவு என்பது மட்டுமே. அதற்குப் பிறகு பாதுகாப்பு அவருக்குத் தேவையான ஒன்றே. அது அவருடைய தேவையாக இருந்தாலும் அதைச் சமூகம் ஆக்ரமித்து விட்டது. தொடர்ந்து உணவுத் தேவையும் ஆக்ரமிக்கப்பட்டு வருகிறது. இவற்றைச் சார்ந்து ஐம்புலத் தேவைகள் சமூக மாற்றத்திற்கேற்பத் திணிக்கப்பட்டு வருகின்றன.

உதாரணமாகச் சொல்லப் போனால், இளம் பிராயப் பிள்ளைக்கு (டீன் ஏஜ்) தொலைக்காட்சிப் பெட்டியும் 'தன்னியக்கி' (ரிமோட்) யையும் தந்துவிட்டால் சேனலை மாற்றிக் கொண்டே இருப்பார்கள். எந்த ஒன்றும் அவர்கள் தேவையை நிறைவு செய்யவில்லை என்பது போல வேகப்படும் மனநிலை இருக்கும். அடங்கப்படாத ஒரு மனநிலை வாழ்க்கையை மனமும் சிதறலுக்கான களங்களைத் தந்து கொண்டே இருப்பதாகச் சமூகமும் உள்ள நிலைமையை இன்று பார்க்க முடிகிறது. இந்நிலையில் ஒழுங்குபடுத்தற்கான பணியை மெய்ப்பொருள் முடிபாகப் பட்டறிவு முதிர்ச்சியில் வழங்க வேண்டும். அதற்கான களத்தைத் தமிழ்நாட்டின் தெளிவில் உள்ள தத்துவத்தால் வழங்க வேண்டும் என்ற உறுதியில் மலர்வது இந்நூல்.

மனிதனின் தேவையை வரையறுப்பதன் மூலமே ஒரு சிறு அளவாவது முன்னேற்றத்திற்கான முன்

வடிவைத் தயாரிக்க முடியும். இன்றைய வளர்ச்சி எதுவாயினும் மனிதரை மனிதராக எண்ண வைக்கிற அடிப்படையைச் செய்ய வேண்டும். நேரடியாக மனிதரை ஆன்மா என்றோ, உலகம் மாயை என்றோ, மனிதர் அறியாமையிலிருந்து விடுபட வேண்டும் என்றோ, அதற்காகச் செயல்பட வேண்டும் என்றோ, செயல்பட்டு இறைவனை நோக்கிப் பயணப்பட வேண்டும் என்றோ சொல்லுவதைக் கேட்கிற வைக்கிற நிலை சற்று அன்னியமானது. அவற்றையும் பசு, மாயை, ஆணவம், கன்மா, பதி என்று பட்டியலிடுவதே அன்னியம். சிலராக இருந்தே சமய சித்தாந்தம் பேசுகின்றனர். அவர்களுக்குள் பேசிக் கொள்வது அவர்களுக்குப் புரியலாம்! ஆனால் சமய வாழ்க்கையில் வாழ்ந்து விளங்கிக் கொள்வது புரியாமலே இருக்கிறது!

**"மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம் மா நிலத்தே"**

என்பது அப்பரடிகள் வாக்கு. இவர்தான்,

**"நாம் ஆர்க்கும் குடி அல்லோம்"**

என்றவர். இந்த இரண்டு மகா வாக்கியங்களால் சைவம் விளங்கிக் கொள்ளப் பெற வேண்டும் என்பதை சைவ சித்தாந்த மூல நூலில் விளங்க வைக்க எழுவது இந்நூல்.

**"வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது**
**நாதன் நாமம் நமச்சிவாயவே"**

என்ற மேற்கண்ட இருமை மகாவாக்கியத்தின் ஒருமை



மகாவாக்கியமாக அமைந்த திருஞானசம்பந்தர் வாக்கை அடிப்படையாகக் கொண்ட 'சித்தாந்தத்' தெளிவு விளங்கிக் கொள்ளப்பெற வேண்டும் என எழுவது இந்நூல்.

"நன்றாகச் சாப்பிட வேண்டும்" என்பதுதான் படைப்பின் ரகசியம். நன்றாகச் சாப்பிட முடியவில்லை! இதுதான் விடை. இந்த விடை எத்தனை முனைகளில் இருந்து வருகிறது என்று சிலவற்றைப் பார்ப்போம்.

வறுமையால் சாப்பிட முடியவில்லை! என்பது நாட்டின் நிலையைப் பொறுத்து இயல்பாக வரும் விடையாகி விட்டது.

முழுமையாகச் சாப்பிட முடியவில்லை! என்பது ஒரு விடை. உணவில் உள்ள கறி போன்ற பொருள்கள் குறைவால் வரும் விடை. உதாரணமாக, வடை பாயசத்தோடு சாப்பிட முடியவில்லை என்பது போல. இன்னும், உடல்/உணவு ஆராய்ச்சியாளர்கள் உணவுக் குறை என்பதை கலோரி/சத்து மூலம் கூறுகிறார்கள்.

அடுத்து, நிறைவாகச் சாப்பிட முடியவில்லை என்பது ஒரு விடை. இந்த நிறைவு குறித்த கருத்து பல்வேறு காரணங்களைச் சுமந்து கொண்டிருப்பது! சாப்பாட்டை நிம்மதியாகச் சாப்பிட முடியவில்லை; வீட்டில்/வெளியில் பிரச்சினைகள் என ஒரு காரணம். வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் நிம்மதியாக இல்லையே என ஒரு நிலை. வீட்டைக் கட்டி முடிக்க முடியவில்லையே என ஒரு நிலை. முறையாக வீட்டில் உள்ளவர்களுக்கு படிப்பு, வேலை

கிடைக்கவில்லையே என ஒரு நிலை. வீட்டில் எல்லா வசதிகளும் இல்லையே என வரும் ஒரு நிலை. இது நாளுக்கு நாள் பெறப்பெற வளர்ந்து கொண்டே இருப்பது. இது வளர வளர அடுத்தவர் பிரச்சனை அதிகமாகிறது. தவிர, நாம் வளர அடுத்தவர் தொடர்பில் ஏமாற்றுதல் சூழ்ச்சி முதலிய முறையின்மைகள் வந்து சேருகின்றன. இவற்றை முறையின்மைகள் என்று சொல்லலாமா? "வலிமையுள்ளது வாழும்!" என்று சொன்னானே டார்வின், இந்தப் பரிணாமம் உண்மை என்றால் எப்படியும் வாழலாம் என்பது வருமே. இதில் முறை தவறு என்றெல்லாம் கிடையாது. வேண்டு மானால் பாதுகாப்பு உணர்வு எச்சரிக்கையோடு எல்லாவிதமான சூழ்ச்சியையும் கையாளலாம் என்பது தானே உண்மையாகி விடும். ஆக, நிறைவாக வாழ்வது எப்படி? அதாவது சிக்கல் எதுவுமில்லாமல் உணவு உண்டால் நிறைவாகச் சாப்பிட்டதாக ஆகிறது. இது இயலாமையால்தான் 'போதும் என்ற மனமே, பொன் செய்யும் மருந்து' என்றும் 'இருப்பதைக் கொண்டு நிறைவாக வாழ்' என்றும் உபதேசங்கள் வந்து விழுந்தன. அப்படிப் பார்த்தால் சமண சமயத்தில் இருந்து கொண்டே தோன்றிய சிவபரம்பொருள் எண்ணத்தில் தருமசேனர் (அப்பர்) வாழ்ந்திருக்கலாமே. 'நாம் ஆர்க்கும் குடியல்லோம்' என்று ஏன் போராடியிருக்க வேண்டும்.

பொறுத்துக் கொள்வது அல்லது வெளிப் படுத்தாமையை எதில் மேற்கொள்ள வேண்டும். கொதித்தெழுவது அல்லது உரிமையை நிலை



நாட்டுவதை எதில் மேற்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக்காட்டத்தான் நாயன்மார் வரலாற்றை விரிவாக்கினார் சேக்கிழார்.

உணவை அடிப்படையாகக் கொண்டு உயிர்கள் வாழுகின்றன. ஆனால் வளர்ச்சி என்பது எப்படி அமைகிறது என்பதுதான் விளங்கவில்லை. மரம் சூரியனால் வாழலாம். மீன் அழுக்கால் வாழலாம். ஏதாவதொரு நிர்ணயிக்கப்பட்ட உணவால் வாழும் ஒன்று வேறொரு மாற்றத்தையும் பெறலாம். இது அதனுடைய வளர்ச்சி என்று சொல்ல முடியாது. அது அதனுடைய திட்டமாக இல்லை. பல்லி முதலையாக ஆகியிருக்கலாம். முதலை டைனசராக ஆகியிருக்கலாம். இந்த மாற்றம்/வளர்ச்சி யாவும் நிகழுகின்றன. அதேபோல மனிதரும் வளர நினைக்கின்றனர். திட்டம் கணக்கிடப்பட்ட வகையில் பின்பற்றப்படுகிறது. உண்மையில் நிகழ்வது நிகழ்ந்ததன் மூலமாகப் பெறப்படுகிறது. முறையாக உண்டால் வளரலாம் என்பது சரி. வளர்ச்சி முதுமையில்/முதுமை என்னும் நோயில் கொண்டு போய் விட்டு விடுகிறது. இங்கே வளர்ச்சி என்பது முட்டுப்பட்டு விடுகிறது.

மனிதன் அடுத்து எந்தப் பிறவியாக மாற/வளர நினைக்கிறான்? என்று கேட்டால் சரியான விடை வரவில்லை. மிருகம் மனிதனாக மாற நினைத்ததா என்று கேட்டால் தெரியாது. ஆனால், மனிதன் தன்னை மிருகத்திலிருந்து வேறுபடுத்திக் கொண்டு உழைக்கவும் படைக்கவும் கற்றுக் கொண்டான் என்று அறிவியல்

விடை தருகிறது. மாணிக்கவாசகரும் முன்னரே விடை தந்திருக்கிறார்.

மனிதன் எப்படி மாற வேண்டும் என்று நினைக்கிறான் என்று கேட்டால் சுற்றியிருப்பவைகளைப் பார்த்து எவையெல்லாம் என்னென்ன வலிமையைக் கொண்டிருக்கின்றனவோ அந்த அந்த வலிமையைப் பெற நினைக்கிறான். பறவை போல மிதக்க நினைக்கிறான். கல்லைப் போல சிதைவுபடாமலிருக்க விரும்புகிறான். இவற்றைத் தன்னில் பெற முடியும் என்று யோகமும் (சித்தர்) கருவிகளால் (விமானம், பாதுகாப்பு கவசம்) அமைத்துக் கொள்ள முடியும் என்று அறிவியலும் விடை தந்திருக்கின்றன.

எல்லா மனிதருக்குமான வாழ்க்கைச் சிறப்பைப் பார்க்க உயர்ந்ததைக் கண்டு செயற்பட வேண்டும் என்று தமிழகச் சிந்தனை குறிப்பிட்டிருக்கிறது. அடிப்படை என்னவென்றால், மனித நிறைவு எதில் இருக்கிறது என்பதுதான்! மாற்றத்தை மனிதனால் எண்ண முடியாத வகையில் இது ஒத்துக் கொள்ளப்படுகிறது.

உணவு உண்ணுகிற மனிதன் உணவால் தன் வாழ்க்கையை நிறைவு செய்து கொள்ள முடிகிறதா? என்பதை நிறைவாக உணவு சாப்பிடுவதிலிருந்து தொடங்கினோம். வாழ்க்கையை நிறைவு செய்தல் வரும் போது ஐம்புல இன்பம்தான் கண்ணுக்குத் தெரிந்தது. அதாவது நம் உடம்பு விழையும் விழைவுகளிலிருந்து தெளிவாகப் பிடிபடுவது. சிறிய வயதிலிருந்தே எல்லாவற்றுக்குமான விழைவு இருந்தாலும் பிடிபடுவது



இளமையில்தான். அதன் பக்குவம் நடுத்தர வயதில் வருகிறது. இதை, இப்படி முறையாக அனுபவிக்க வேண்டும் என்று சமூகம் கற்றுத்தர வேண்டும். அப்படியே கற்றுத் தந்துவிட்டாலும் மனிதன் அதன்படி அனுபவித்து விட்டாலும்,

**"பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க்**
**கோதைமார்தம்**
**மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு**
**மூப்புவந்து**
**கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது**
**கெட்டேன்"**
**(அப்பரடிகள்)**

என்று விடை வரும். இந்த முறையான வாழ்க்கையே முறை தவறிய வாழ்க்கையாக ஏன் சொல்லப்படுகிறது?

ஐம்புல இன்பத்தை ஒரு சேர அனுபவிக்க வேண்டும்; தனித்தனியும் அனுபவிக்க வேண்டும். ஒருசேர அனுபவிக்கும் ஒன்றிலேயே தனித்தனியும் அனுபவிக்க வேண்டும். இப்படியெல்லாம் அனுபவிப்பது வாழ்க்கை என்பது தெளிவாகத் தெரிகிறது; குறை ஒன்றுமில்லை. இந்த அனுபவத்தை நிலையாகக் கொள்ள வேண்டும் இதுதான் மனித அனுபவப் போராட்டம்!

இப்போது, ஐம்புல இன்ப நிலை ஆண் பெண்ணிடமும் பெண் ஆணிடமும் பெறுகின்றனர் என்பது உண்மைதான், இதை மறுப்பதற்கில்லை. இல்லையென்றால் சுந்தரர் அவ்வளவு போராடியிருக்க

மாட்டார். தக்க வைத்ததான இன்பம் வேண்டும் என்பதில் தான் பிரச்சினை. இதை விடுத்து இது மாதிரி, அதே சமயத்தில் நிலையான இன்பம் பெறுவது என்பது குறிக்கோள். இதற்கான ஆராச்சியில்,

**'பெற்ற சிற்றின்பமே பேரின்பமாகப்'**

பெறுதல் கூறப்பெற்றது. அடுத்து இன்பத்தைப் பாலாரிடம் (ஆண், பெண்) பெற்றதை எப்படியெல்லாம் சிறக்க வைக்க என்ன பண்புகளைக் கடைபிடித்தோமோ அவற்றை நிறைவடைய வைப்பது என வழிமுறை களைக் கையாண்டதைச் சைவம் நிலை நிறுத்தியுள்ளது. அதனால்தான் திருமுறைகளின் பெருமையை மன்னனுக்குச் சொன்ன அமைச்சரான சேக்கிழார் நாயன்மார்கள் வரலாற்றைத் தெளிவுபடுத்தினார்.

ஐம்புல இன்பத்தைப் பாலாரிடம் பெறுவதுதான் வாழ்க்கை என்று முடிவு செய்துவிட்டால் அதை முடித்து விட்டுத் தன்னை முடித்துக் கொள்ள வேண்டும். அதன் மூலமாக வரும் ஏப்பு நோய், மூப்பு நோய் முதலியவற்றை நினைக்கக்கூடாது. இதன் மூலமான கருத்து யாதெனில், பால் இன்பத்தின் தொடர்ச்சி அல்லது முடிவு குறைவுபட்டதாகி விடுகிறது என்பதுதான். இதற்கான முறையைப் பார்த்து சரியான வாழ்க்கைக்குரிய விடையை 'வீடு' விடுத்துப் பேசிய வள்ளுவர்,

**'அளவறிந்து வாழ்தல்'**

என்பதாக 'பெற்றான் நெடிதுய்க்கும் வழி'யைக் கூறினார். இதனைத் தெளிதலில் வாழ்க்கை நீளுகிறது. இந்த நீட்டம் பண்புகளை வளர்த்து



**"சிறப்பு என்னும் செம்பொருள்"**

காண வைக்கிறது. இப்படி, வாழ்க்கையை விளங்கிக் கொள்ள சைவமும் சித்தாந்தமும் விளக்கப்பட வேண்டும் என்ற அவாவில் எழுவதே இந்நூல்.

(iii)

'சைவ சித்தாந்தம்' என்ற பெயர் பெற்ற மெய்ப்பொருட் கொள்கை (தத்துவம்/Philosophy) இந்தியத் தத்துவ மரபில் ஒட்ட வைக்கப்பட்டது. ஆனால் பண்டைய இந்தியா, இந்தியாவின் முன்மை நாகரிகமான திராவிட நாகரிகம் இவற்றில் வேர் பரவியது சைவ சித்தாந்தம். இந்தியத் தத்துவ மரபு என்பதைச் சொல்ல வந்தவர்கள் சார்பில் சைவம் ஒட்டிப் பார்க்கப்பட்டது. உண்மையில் இந்தியத் தத்துவ மரபுக்கே வேரானது இது. சைவ சித்தாந்தம் என்ற பெயரை அடையாளப்படுத்திய திருமூலர், சைவ வாதியை அறிமுகப்படுத்திய 'மணிமேகலை' என சைவ சித்தாந்த அடையாளம் பிறப்பட்டதாகலாம். அதற்கு முன்னும் மனித வாழ்வின் உயர்ச்சித் தேடலை அடிப்படையாகக் கொண்ட மெய்ப்பொருட் சிந்தனை இருந்து வந்து கொண்டுதான் இருந்தது.

'சைவ சித்தாந்தம்' என்று பெயரிடப்பட்டதற்குப் பின்னும் 'அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதீக சைவ சித்தாந்தம்' பேசினார் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள். 'சமரச சுத்த சன்மார்க்கம்' பேசினார் 'வள்ளல் இராமலிங்க சுவாமிகள்'. இவர்கள் வளர்த்த வகையில்

சைவ சித்தாந்தம் நீண்டது. இவ்வாறு 'சைவ சித்தாந்தம்' என இடையில் பெயர் பெற்ற தமிழகச் சிந்தனை பின்னர் பல பெயர்களில் நீண்டுள்ளது. சிந்தனை வேர் மூலத்திலிருந்து காலந்தோறும் தளிர்த்து வந்திருக்கின்றது என்பதே சரியானதாகும். மனிதரைப் பற்றிய ஆராய்ச்சியில் மனிதப் பண்பின் உண்மையிலிருந்து விளைந்த விளைவை அவற்றில் பார்க்கலாம்.

**"பேரன்பைப் பெருக்குதல்"** (காரைக்காலம்மையார்)
**"நடமாடும் நம்பர்க்கு ஈதல்"** (திருமூலர்)
**"மாலற நேயம் மலிதல்"** (மெய்கண்டார்)
**"அடியார்க்கும் அடியேன்"** (சுந்தரர்)
**"ஜீவகருணை"** (வள்ளலார்)

என மக்கட் பண்பிலிருந்தே சமய இயக்கம் பேணப்பட்ட நிலைமையில் தமிழ் மரபு மெய்ப்பொருட் சிந்தனையை அடையாளங் காணலாம். மாறாக மனிதனை - பொருளா? ஆன்மாவா? இறைவனா? என்றெல்லாம் நேரடியாக வாக்கியார்த்தப்படுத்துவதில்லை. பின்னாளில் மோதல் கருத்துகளுக்கு விடை தரும் வகையில் மெய்கண்டார், சிவஞான முனிவர் போன்றோர் விரிவாக்கம் செய்தனர்.

சைவ சித்தாந்தத்தைத் தமிழர் உரிமை கொண்டாடுகின்றனரோ இல்லையோ மற்றவர் உரிமை கொண்டாடவில்லை. அந்தணராயிருந்து சைவ இயக்கம் நடத்திய திருஞானசம்பந்தர் அதனால்தானோ என்னவோ 'தமிழ்ஞான சம்பந்தன்' என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். இன்னும் சைவ சித்தாந்தத்தைத் தெளிவாக மகாவாக்கியப்படுத்திய பெருமை அவருக்கு உண்டு. 'நமச்சிவாய' தான் வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது என்று சொன்ன சம்பந்தர்,



**"அனைய தன்மையை ஆதலின் நின்னை**
**நினைய வல்லவர் இல்லை நீள் நிலத்தே"**
(திருஎழுகூற்றிருக்கை)

என்றும் சொன்னார். 'இவ்வாறாகச் சொல்லப்பட்ட உன்னை (இறைவனை) நான் சொன்ன இப்படி நினைத்தால்தான் உன்னை அடைதல் முடியும்' என்று கூறுகிறார். இந்த நினைத்தல் முறைக்குத் தமிழையே முதன்மைபடுத்தினார் திருஞானசம்பந்தர் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

சைவ சித்தாந்தத்தை நிறுத்திய போது வேத மகா வாக்கிய விளக்க மரபை முன்னிறுத்தவில்லை. மகாவாக்கிய விளக்கமாகத் தத்துவ விளக்கம் செய்தது பின்னாளைய மரபு. முன்னதாக பௌத்தம், சமணம் கொண்ட விளக்க மரபை மறுத்தலாகச் சைவம் முதலில் விளைந்தது. மகாவாக்கியத்திற்கு விளக்கம் வந்த பிறகு 'பெரும்பெயர்' என்பதை எடுத்து சிவஞான முனிவர் விளக்கம் செய்தார். முன்னதாகத் திருமுருகாற்றுப் படையில் 'பெரும்பெயர்' என முருகனுக்குக் கூறப்பட்டு தனிப்பட்ட தன்மையில் வந்தது. அதாவது **'சுவாமி'** என்ற பெயராலேயே அழைக்கப்பட்ட தனி ஒருவன் முருகன்

என்பதன் விளக்கமாகக் கூறப்பட்டது அது. அதனாலேயே மேலும் 'ஒரு நீயாகத் தோன்றினை' என்றும் முருகனைக் குறிப்பிட்டார் நக்கீரர்.

மக்கள் வாழ்க்கையை அவர்கள் பிரச்சினைகளோடு அணுகி மக்கள் வாழ்க்கையை மலர்ச்சிக்கு உட்படுத்தியது சைவ சித்தாந்தம். திருஞானசம்பந்தர் வரலாற்றையும் இப்படித்தான் காட்சிப்படுத்தினார் சேக்கிழார். பாண்டி நாட்டில் மக்கள் விரும்பிய நெறி பயிலாதவாறு சமணரால் சிக்கல் எழுந்தது. மங்கையர்க்கரசியாரும் அமைச்சரும் யாருக்கும் தெரியாமல் சைவ நெறிப்பட்டார்கள். இந்தக் காலத்தில் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க சம்பந்தர் வரவழைக்கப்படுகிறார். மக்கள் வாழ்க்கை வாழ நெறி நிலைநாட்ட சம்பந்தர் பாடுபடுகிறார். இத்தகைய பின்புலங்களைக் கொண்டே மெய்கண்டாரும் "அன்பில் தொழும் அத்துவித நெறியை" சைவ சித்தாந்தமாக உலகிற்கு வழங்குகிறார்.

## (iv)

இந்திய மரபில் தத்துவம் அட்டவணைப்படுத்தப்பட்ட ஒரு போக்கைக் கொண்டது. அதற்காக எழுப்பப்பட்ட ஒரு மேல் வரி ஒன்று உண்டு. அதாவது, வேதம் என்ற அறிவுக்களம் மனிதரால் செய்யப்படாதது (அபௌர்ஷேயம்) எனப்பட்டு, அதன் கீழான உபநிடதத் தொடர்ச்சியில் 'மகாவாக்கியம்' கோடிடப்பட்டது. இவைகளின் மேல்வரியின்கீழான விளக்கங்கள் மெய்ப்பொருளியலானது.



வேதத்தையும் அதைத் தொடர்ந்து வந்த உபநிடதங்களையும் பரம்பொருள் நூல்களாகக் கொண்டு அதன் விளக்கமாகத் தத்துவம் கூறினர். இவ்வகையில் பரம்பொருளை முன்னிட்டு மெய்ப் பொருள் கூற வேண்டும் என்ற மரபு வேரூன்றியது. இதே மரபைச் சைவ சித்தாந்தம் எழுப்ப வந்தவர்கள் பின்பற்றினர். ஆனால், வேதத்திலிருந்து தொடங்கிக் கொள்ளவில்லை. கடவுளிலிருந்து தொடங்கினார்கள். சிவ பரம்பொருள் மெய்ப்பொருள் கூறினார் என மரபு கூறினர்.

சிவ பரம்பொருள் நந்தி பெருமானுக்கு அளித்தார். நந்தி பெருமான் சனத்குமாரருக்கு அளித்தார். சனத்குமாரர் சத்தியஞான தெரிசனிகளுக்கு அளித்தார். சத்திய ஞான தெரிசனிகள் பரஞ்சோதிக்கு அளித்தார். பரஞ்சோதி திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டாருக்குச் சொன்னார். அதனை உரைத்தார் மெய்கண்டார். இப்படிச் சொல்லப்பட்டது 'சிவஞான போதம்'. அதனால் விளங்கப்பெறுவது சைவ சித்தாந்தம் என்பது மரபு. இந்த மரபு விளக்கம் பெற்றதற்கான காரணம் உயர்ந்த - முழுமை ஞானத்திடமிருந்து வரும் ஞானமாக மெய்ப்பொருட் சிந்தனையை நிறுத்துவதற்காகும். இன்னும் அதனைச் சிவஞானம் என்றே நிறுத்தினர்.

சிவபரம்பொருள் ஏன் தத்துவம் சொன்னது? என்பதற்கும் காரணம் சொல்லப்பட்டது. பரம்பொருள் தானே சொன்னது என்பதாக சைவ மரபில் இல்லை.

நந்திக்கு ஏற்பட்ட மலைவு (ஐயம்) தீர்ப்பதற்காக சிவபரம் பொருள் சிவஞானபோதம் சொன்னது என்று காரணம் சொல்லப்பட்டது.

**"கல்ஆல் நிழல் மலைவு இல்லார் அருளிய"**

சிவஞான போதம் என மெய்கண்டார், விநாயக வணக்கப் பாடலில் கூறுகின்றார். சிவபரம்பொருள் மலைவு இல்லாத பரம்பொருள் என அடையாளப் படுத்துகின்றார் மெய்கண்டார். மலைவு இல்லாத தன்மையை வழங்குபவர் ஆதலால் அவருடைய தன்மை 'மலைவு இல்லாத தன்மை' எனப்பட்டது. நேரடியாக 'ஞானம்' என்று சொல்ல விரும்பாமல் அதன் பயனைச் சுட்டி 'மலைவு தீர்ப்பது' என்று கூறினார்.

'மலைவு' என்பது பொதுவாக 'ஐயம்' என்ற பொருளில் விளக்கப்படும். இந்த ஐயம் எப்படிப்பட்டது என்றால் துல்லியமாகச் சொல்ல முடியாத நிலையில் தோற்றப்படுதல், அளக்க முடியாத அளவில் பெருகியிருப்பது ஆகிய கூறுகளாக இருப்பது. இப்படி ஐயப்பட்டவனை மலைத்துப் போனவன் என்பார்கள். அதற்கான விடை தெரிந்தால் ஒரு வியப்பு/ஆச்சரியம் உண்டாகும். இதற்கும் மலைப்பு என்றே பெயர். இந்த மலைவைத் தீர்ப்பவர்தான் 'மலைவு இல்லார்' ஆவார். அப்படிப்பட்ட ஒரு அறிவைப் பரம்பொருளுக்குக் கூறி அதன் மூலமாகச் சொல்லப்பட்ட மெய்ப்பொருள் முடிவைச் 'சிவஞானபோதம்' என்றார் மெய்கண்டார்.

வேதத்தில் முதலில் வந்தது 'ரிக்' வேதம். பழமையானதாக அதைக் கொண்டு அதற்குப்



பின்னதாகவே மற்றவற்றைக் கருதுகின்றனர் அறிஞர். நால்வேதங்களின் விரிவாக உபநிடதங்கள் பின்னாளில் அமைந்தன. அவற்றின் பரவலை ஒருமையாக்கி 'பிரம்ம சூத்திரம்' செய்தனர். இது 'சர்வ சுருதி சமன்வயம்' என்ற கருதுகோளை முன் வைத்தது. முன்னதாக வந்த வேத முதலான செவி வழிப் பெறப்பட்ட (ஸ்ருதி) நூல்கள் அனைத்தின் கருத்தையும் சாரப்படுத்தியது. ஆனால் இதை வைத்துக் கொண்டு உரை செய்த வகையில் கேவலாத்வைதம், விசிட்டாத்வைதம் எனப் பல வேறுவேறான தத்துவங்கள் எழுந்தன.

உயிர் அறிவு வகையில் கிளைக்கும் பல்வேறு விளக்கங்கள் மலைப்பைத் தோற்றுவிப்பன. இப்படியான, மலைப்பை நீக்கி நந்திக்கு 'சிவஞான போதம்' என்ற முடிவான ஞானத்தைச் சிவபரம்பொருள் தந்ததாக மரபு உரைத்தனர். 'நந்தி' என்பது சிவலிங்கத்திற்கு நேரே உள்ள வாகனம் என்பர். சுத்த 'ஆன்மா'வே அது எனப்படும். ஆன்மாக்களின் மலைப்பை நீக்க உயர்ந்த ஒரு ஆன்மாவுக்கு இறைவன் கூறியதாக 'சிவஞானபோத' மரபு கூறப்பட்டது. அந்த ஆன்மநந்தி திட்டவட்டமான அறிவைத் தெளிந்து முடிவு செய்து வழிவழி வெளி உலகுக்கு அளிக்கிறது. இதில் ஒரு நுட்பத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். இறைவன் ஒரு நூல் செய்து ஆன்மாவிற்குத் தரவில்லை. ஆன்மாவிற்கு உலகில் ஏற்பட்ட பல்வேறு அறிவு முடிவுகளின் மலைப்பை நீக்கித் தெளிவு தருகிறான். அந்தத் தெளிவும் ஆன்மாவால் உறுதி

செய்து கொள்ளப்பட்டு உலகிற்குச் 'சிவஞானபோதம்' என அறிமுகப்படுத்தப்பட்டது. ஆன்மத் தெளிவாக அமைந்தது சிவஞானபோதம் (சைவ சித்தாந்தம்) என முதலில் அடிப்படையை உணர வேண்டும்.

அடுத்தது, சைவ சித்தாந்த கட்டடம் கட்டிய மெய்கண்டார் வரலாற்றிலும் அறிவின் பின்புலத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். மெய்கண்டார் வரலாற்றில் இரண்டு உண்மைகள் உண்டு.

1. **திருமுறை அனுபவம்**
2. **தமிழ் நிலை**

என்ற இரண்டே அவை.

மெய்கண்டார் பிறப்பு வரலாறு திருமுறை உண்மையைத் தெரியப்படுத்துவது. மெய்கண்டாரின் தந்தை அச்சுதக்களப்பாளருக்குக் குருவாக இருந்தவர் சகல ஆகம பண்டிதர். அச்சுதக் களப்பாளருக்கு நெடுநாள் மகப்பேறு இல்லை. அவர் வருந்திய போது சகலாகம பண்டிதர் வருத்தம் தீரத் திருமுறை மூலம் தீர்வு காண்கிறார். திருவெண்காடு என்ற தலத்தில் திருஞானசம்பந்தர் பாடிய "பேயடையா பிரிவு எய்தும்; பிள்ளையினோடு உள்ள நினைவு ஆயின" பெறுவர் என்ற பாடல் வரிகளின் ஆதாரத்தால் திருவெண்காடு அனுப்புகிறார். அங்கிருந்து பிள்ளைப்பேறு வாய்க்கிறது அச்சுதகளப்பாளர் தம்பதியர்க்கு. அதன் மூலம் பிறந்த பிள்ளைக்கு "சுவேதவனப் பெருமாள்" என்று பெயர் தரப்படுகிறது. சுவேதவனம் என்பது வெண் (சுவேதம்), காடு (வனம்) என்பதன் வடமொழியாக்கம். சுவேதவனப் பெருமாள் என்று பெயரிடப்பட்ட மெய்கண்டார் பிறந்தது திருமுறையை அடிப்படையாகக் கொண்டு.



மெய்கண்டாரின் ஞானப் பிறப்பு வரலாறு தமிழ் மொழி நிலையைப் புலப்படுத்துகிறது. மெய்கண்டாருக்கு சிவஞானபோதத்தைத் தெரியச் செய்தவர் பரஞ்சோதியார். இவர் சுவேதவனப் பெருமாளாக இருந்த பிள்ளைக்கு ஞானத்தைத் தெரிவித்துவிட்டுத் தன்னுடைய குருவின் பெயரை வைக்கிறார். பரஞ்சோதியாரின் குருவின் பெயர் சத்தியஞான தெரிசினிகள். சத்தியஞானம் - மெய்; தெரிசனி கண்டார் என அதன் விளக்கம். சுவேதவனன் என்ற வடமொழிப் பெயரை 'மெய்கண்டார்' என தமிழ்ப்பெயராகத் தரப்பெறுகிறார். அவர் மூலமாக 'சிவஞானபோதம்' தமிழுலகில் தலைநின்றது.

தத்துவம் மொழியைக் கடந்தது ஆயினும், சிந்தனை மரபை நிலை நிறுத்த சிந்தனைக்குரிய வேர் நிலையில் சொல்ல வேண்டிய அவசியம் இருந்தது. இவ்வகையில் உணரப்படுவது யாதெனில், மக்கள் பண்பாட்டில் வளர்த்தடுக்கப்பட்ட சிந்தனை என்பதன் அடையாளம் முதன்மைப்படுகிறது என்பதாகும். இவ்வகையில் தமிழ் மக்கள் நாகரிக வேரிலிருந்து வந்ததை சைவ சித்தாந்தம் என வரைவு செய்து காட்டிய தன்மை தெளிவுபடுகிறது.

சைவ சித்தாந்த மெய்ப்பொருளியல் வரலாற்றிற்கு மக்கள் நாகரிகம் வேர்ப் பாய்ச்சலை எடுத்துக்

காட்டினாலும் நேரடியாக உணரப்பட்ட மரமாகத் திருமுறை அமைந்தது. இதனை உணர்த்துவதுதான் மெய்கண்டார் பிறப்பு வரலாறும் சித்தாந்த ஞானப் பிறப்பு வரலாறும் என உணர வேண்டும்.

**“ஒன்றே வேறே என்று இரு பால் வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப”**

என்ற நூற்பா இலக்கண நூலான தொல்காப்பியத்தில் வருவது. காதலர்கள் தங்களுக்குள் காதலைப் பரிமாறிக் கொள்ள காரணமாக எது இருந்தது என்பதைப் பற்றிய ஆராய்ச்சிக்கு விடை தான் அதில் உள்ளது. அதில் முதலில் உலகப் பொருள்களைப் பார்க்கும் அணுகுமுறையும், இயக்கத்திற்கான மூலப் பொருளைச் சுட்டும் நிலையும் விளக்கப்படுகின்றன.

உலகப் பொருள்கள் யாவற்றையும் ஒருங்கு சேரப் பார்க்கலாம். ஆனால் பார்க்கும் பொருள், பார்க்கப்படும் பொருள் என்ற அடிப்படையில் அதன் இருமை உண்டு. அதேபோல பார்க்கப்படும் ஒருபொருள் அதற்கு வேறான மற்ற பொருள் என இரண்டு பகுப்பில் பார்வையத் தெளிவுபடுத்துகிறார் இலக்கண ஆசிரியர். ஒரு பொருளோடு மற்ற பொருளையோ பொருள்களையோ தொடர்புபடுத்தலில் இரண்டுக்கும் இடையே வேறொன்று வேலை செய்கிறது என்பதுதான் இரண்டு பகுப்பிற்கிடையே தெளிவு பெற வேண்டியது. “இரண்டாகப் பொருள்களை நிறுத்தி அதனிடையே இயக்கத்திற்குரிய காரணத்தை கடந்த பொருளில் கண்டு காரணத்தைத் தெளியச் சொன்னது” தொல்காப்பியம். இந்தத் தமிழ் அணுகுமுறையை “அத்துவித உறவில்” தெளிவாக்கி சைவ சித்தாந்த மையத்தை அறிவித்தவர் மெய்கண்டார்.



## (V)

**உறவுப் பார்வையில் உலகை அடையாளப்படுத்திக் தத்துவ நோக்கை நெறிப்படுத்தித்தான் மெய்கண்டார்,**

**“கேள் ஆம் புறன்” (சிவஞானபோதம், அவையடக்கம்)**

**என்பதைக் கூறுகின்றார். ‘யாவரும் கேளிர்’ என்ற பண்டைத் தமிழ்ப் பண்பாட்டை மெய்ப்பொருள் முறையிலும் முன்வைத்து சமரசத்தை உண்மை படுத்தியவர் மெய்கண்டார். அவர் மூலமான சைவ சித்தாந்த நிர்மாணத்தைத் தெரியச் செய்ய சிவஞான போதத்தின் உரை வழித் தொண்டாற்றக் காரணமானவர் என் மதிப்பிற்குரிய மாணவி நந்தினி சண்முகலிங்கம் அவர்கள். இலங்கை யாழ்ப்பாணத்தைச் சார்ந்த தொழிலதிபர், சித்தாந்தத் தொண்டுத் திலகம் திருவாளர் சண்முகலிங்கம் அவர்கள். இவரின் இனிய வாழ்க்கைத் துணைநலமாக அமைந்தவர் திருமதி. இராஜலக்ஷ்மி அவர்கள். இரு பெருமக்களின் பெண்மக்கள் மூவரில் இளைய மகள் தான் ச. நந்தினி அவர்கள். இடைமகள் ச. வினோதினி அவர்களை மருத்துவராக்கி, தலைமகள் திருமதி. சுபோதினி அவர்களை அறிவியல் ஆசிரியராக்கிய திருவாளர் சண்முகலிங்கம் அவர்கள் தமிழும் சைவமும் தொண்டுபெற இளைய மகளைத் தமிழகத்தில் படிக்க வைத்தார். தாம்பரம் கிறித்துவக் கல்லூரியில் தமிழ் பயின்ற ச. நந்தினி அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகச் சைவ சித்தாந்தத் துறையில் ‘சைவ சித்தாந்தம்’ படித்தார். இந்தக் குடும்பத்திற்கு வழிகாட்டுந்**

தலைமைத் தகையவர் பேராசிரியர் வை. இரத்தினசபாபதி அவர்கள். இவர்களையொட்டி யானும் ச. நந்தினி அவர்கட்கு ஆசிரியராக அமைந்தேன். ச. நந்தினி அவர்கள் தம்முடைய தமக்கையின் திருமணத்திற்குச் சிவஞானபோதத்தை உரையுடன் வெளியிட விரும்பினார்கள். அதனடிப்படையில் இந்நூலாக்கம் நிகழ்ந்தது. சிவஞானபோதத்தை வாதப் பிரதிவாத நூலாக ஆக்காமல் வாழ்வியல் விளக்கமாக்க முடிவு செய்து யானே உரை வகுத்தேன். பாம்பன் சுவாமிகள் திருவருட் சமாதி நிலையத்தில் எழுதத் தொடங்கியதோடு பெரும்பகுதியையும் அங்கேயே சென்று எழுதி முடித்தேன். மதிப்பிற்குரிய மாணவர் நந்தினி சண்முகலிங்கம் அவர்கள் என்னை சித்தாந்தப் பணியின் செழுமையில் உயர்த்திப் பார்ப்பவர். அதே சமயத்தில் இடையறவுபடாமல் சிக்கல் தெளிவில் சிதறாமல் உசாவுபவர். உசாநிலையும் உயர்த்தும் நிறையும் கொண்ட சிந்தையராக என்னைச் சித்தாந்தப் பணியில் ஆளுங்கொண்ட ச. நந்தினி அவர்கட்கு என் நன்றி. அவர்தம் குடும்பத்தார் அனைவருக்கும் என் நன்றி.

## (vi)

'வாழ்வியல் உரை'யாக சிவஞானபோதத்தைக் காண்பதற்கு வாழ்க்கை நடைமுறையைத் தீவிரமாக உள்வாங்கும் நடவடிக்கை என்னில் இயல்பாகவே உண்டு. எண்பதாண்டு வாழ்க்கையை எனக்கு வார்த்தையுட்புகுத்தி (உபதேசம்) இருக்கிறவர் தத்துவத் தலைக்காவலர் பேராசிரியர் முனைவர் வை. இரத்தின சபாபதி அவர்கள். அவரும் அவர்தம் துணைவியார் திருமதி. வசந்தகுமாரி அவர்களும் குடும்பவியலைத் தத்துவமாக்கி எனக்கு வழங்கியிருப்பவர்கள். 1988 தொடங்கி இவர்களோடு தலைநாள் தொடர்பில் நிற்கின்றேன்.



பேராசிரியர் இரத்தினசபாபதி அவர்களை வைத்தே சென்னைப் பல்கலைக்கழகத்தில் என்னைச் சைவ சித்தாந்தம் படிக்க ஆற்றுப்படுத்தியவர் மயிலம் ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி முதல்வர் முனைவர் துரை. கார்த்திகேயன் அவர்கள். கல்லூரி தொடங்கும்முன் தினமும் காலையில் இலக்கணக்கடல் திரு. ஆ. சிவலிங்கனார் அவர்களுடன் என் ஆய்வை 1987-களிலிருந்தே நெறிப்படுத்தியவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டிருந்த சைவ சித்தாந்தத் துறையில் மாணவர்கள் பலர் முதுகலையில் சேர்ந்தோம். முதலாண்டுத் தேர்வுக்குச் சென்றது இருவர்தான். என்னுடன் படித்த தோழிக்குத் திருமணம் ஆகிவிட்டது. இவர் இரண்டாமாண்டைத் தொடரவில்லை. தனி ஒருவனாகவே சைவ சித்தாந்தம் முடித்தேன். பின் முனைவர் பட்டத்திற்குப் பேராசிரியர் வை. இரத்தினசபாபதி அவர்களிடமே சேர்ந்தேன். முடிப்பதற்கு முன் அவரின் ஓய்வு அமைந்து விட்டது. இடையில் துறையின் பொறுப்பில் இருந்த பேராசிரியர் முனைவர் R. கோபாலகிருஷ்ணன் அவர்கள் என் முனைவர் பட்ட ஆய்விற்குப் பல்கலைக்கழக உதவித் தொகை கிடைக்க உதவினார்கள்.

அதற்குப்பிறகு சைவ சித்தாந்தத் துறையில் இடர்கள் பல. அதையெல்லாம் களையத் துணை நின்ற செல்வாக்கு சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவையின் தலைவர் மா. செல்வராசன் அவர்களால் அமைந்தது. இன்றளவும் என் உரம் ஊக்குபவர். அவர்கள் ஆற்றுப்படுத்தலால் முனைவர் பட்டத்தையும் முடித்தேன். பல தடைகளையும் தாண்டுகின்றேன்.

பல்கலைக்கழக அனுமதி கிடைக்குமா கிடைக்காதா என்ற எல்லைகளையெல்லாம் தாண்டி பணம் வந்தாலும் வரவில்லையென்றாலும் சைவ சித்தாந்தத் துறையில் எட்டு

ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றவும் என் சித்தாந்த விளைவுக்கும் அருமையான மாணவர்களைப் பெறுவதற்கும் உரிய களத்தைத் தடையில்லாமல் அமைத்துத் தந்தவர் மதிப்பிற்குரிய பேராசிரியர் முனைவர் பெ. கிருட்டினன் அவர்கள்.

பல்கலைக்கழகத்திற்கு வெளியே சித்தாந்த நிறுவனமான 'சைவ சித்தாந்தப் பெருமன்றம்' என்னைப் பணி கொண்டது. அதன் செயற்குழு உறுப்பினராகவும் 'சித்தாந்தம்' இதழின் துணை ஆசிரியராகவும் அமைத்தவர் பெருமன்றத் தலைவராயிருந்த மதிப்பிற்குரிய தொழிலதிபர் திருவாளர் எஸ். தியாகராசன் அவர்கள். தொடர்ந்து பெருமன்றத் தலைவராக வந்த பாம்பன் அடிப்பொடி திருவாளர் சி.வி. சதானந்தன் அவர்கள் என்னைப் பெருமன்றச் செயலாளராக அமைத்துக் கொண்டார்கள்.

சைவசித்தாந்தம், தமிழ் எனப் பணியாற்றிய என் செய்கையறிந்திருந்த தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ம. இராஜேந்திரன் அவர்கள் காசி இந்துப் பல்கலைக்கழகப் பாரதியார் இருக்கையில் பணி பெற வாழ்த்தினார்கள். அந்த வாழ்த்தில்தான் அங்கீகாரப்பட்டேன். காசியில் பணியாற்றிய மூன்றாண்டுகளில் சைவ சித்தாந்தத்திற்குத் தெளிவுபடுத்த முடியாத சில எடுத்துக்காட்டுகளை விளக்கமாகப் பெற அனுபவங்களை உற்றேன். புழு குளவியாதல், கானல் நீர் போல பாசம் இருப்பது இரண்டையும் விளங்கிக் கொள்ள கங்கைக் கரை 'அனுமான் காட்'டிலிருந்து காசிப் பல்கலைக்கழகம் வரை களப்பட்டேன்.

காசியிலிருந்த போது பாரதியார் 125ஆவது பிறந்த நாள் விழா பன்னாட்டுக் கருத்தரங்க ஏற்பாட்டின் போது அது சம்பந்தமாகத் தொடர்பு கொண்டார் மதிப்புறு தோழர்



சிவசுப்பிரமணியன் (விரிவுரையாளர், விவேகானந்தா கல்லூரி) அவர்கள் கல்லூரி விளம்பரத்தைத் தெரிவித்தார். சுவாமி விவேகானந்தருக்குப் பிடித்த இடம் காசி. அங்குதான் இறுதி நாட்களுக்கு முன்னதாக தங்கியிருந்தார். இதன் பிறகுதான் பாரதியார் காசி வருகிறார். பாரதியாரின் அத்தை வீடான 'சிவமடத்தில்' தங்கியிருந்த எனக்கு விவேகானந்தரின் அழைப்பு காலத்தின் அழைப்பாகத் தோன்றியது. விண்ணப்பித்த வகையில் பணி பெற்றேன். தற்போது மயிலை இராமகிருஷ்ண மிஷன் விவேகானந்த கல்லூரியின் செயலாளராக இருப்பவர் பெருமதிப்பிற்குரிய சுவாமிகள் ஆத்மகனானந்தா அவர்கள். அவர்களின் அருளாசி எமக்குண்டு.

விவேகானந்தர் கல்லூரியில் பணியாற்றும் வகையில் 2008ஆம் ஆண்டில் என் வாழ்வின் வரமாகக் காட்சிப்படுகிறார் மதிப்பிற்குரிய தமிழ்த் துறைத்தலைவர் முனைவர் கா.மு. பாபுஜி அவர்கள். என்னை என் கருத்தில் செயல்படவும் நன்றாக ஆய்வுலகில் அனுபவப்படவும் எல்லைப்படுத்தியிருக்கிறார்கள். உடன் பணியாற்றுகிறவர்கள் தோழர் முனைவர் இளங்கோ, முனைவர் மாணிக்கவேலு, திரு. தாமோதரன் ஆகியோர். இந்தச் சூழலும் சித்தாந்தத்தை ஞானமாக அனுபவப்பட வைத்தருக்கிறது. போதத்தால் இறைவன் தான் ஆட்கொள்ள வேண்டும்!

சைவசித்தாந்த வாழ்வில் நண்பர்கள் பலர் தலை நின்றனர். முனைவர் கி. தட்சணாமூர்த்தி, திரு. வே. பரந்தாமன், திரு. பழனி (வழக்கறிஞர்), திரு. லெனின் (நக்கீரன்), திரு. பழனிவேல் குமரன் (மாநிலக் கல்லூரி குடியிருப்பு) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அண்ணனாக அமைந்தவர் கவிஞர் நெல்லை அருள்மணி அவர்களின் தலைமகன் அருள்.

சிவசுப்பிரமணியன் அவர்கள். என்னுடைய எடுப்பு, எடுத்தெறிப்பு, ஏற்றம், குழப்பம் எல்லாவற்றிலும் சத்தமில்லாத நீரோடையாக நகர்ந்து வருபவர். இயற்கையை இரசிக்கும் நான் மனிதர்களில் இந்த மனிதரை அதிகம் இரசிப்பேன். என் வாழ்க்கையின் ஓட்டத்தை இசைப்படுத்திப் பார்க்கிற அந்த மனிதர் என் இசையை (புகழை) உண்மையிலேயே விரும்புபவர். என் வாழ்க்கையை ஓர் எல்லைப்படுத்தும் இந்த நூலை அவருக்கு ஏர்வை (காணிக்கை) ஆக்குவது என்பது சரியான ஒன்று.

என்னுடைய சைவ சித்தாந்தப் பணியில் 'கொடிக்கவி' நூலைத் திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயிலில் பல ஆண்டுகள் சொற்பொழிவாற்ற வைத்தவர் மதிப்பிற்குரிய ஓதுவார் இராசரத்தினம் அவர்கள். அவரால் அங்குள்ள தேவாசிரிய மண்டபத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகளால் சித்தாந்தத் திட்ப நுட்பங்கள் என்னுள் திறம் பெற்றன.

இந்நூலைத் திறமாகப் படியாக்க என்னுள் பட்டவர் என் மாணவர்களில் முதலிலேயே எனக்கு வாய்த்திட்டவர் முனைவர் வேலாயுதம். அவர்கள் கீதா கம்ப்யூட்டர்ஸ் மூலம் கனிணிப்படி ஆக்கினார்கள்.

இனி வருங்கால வாழ்வியலைத் தீவிரமாக்க என்னுடைய மிக ஆழமான அமைதியில் உருக் கொண்டிருப்பவர் மதிப்பிற்குரிய நண்பர் இளங்கோ (சமூக விஞ்ஞானம்) அவர்கள். பாவை அச்சகம் மூலம் இந்நூலை அச்சாக்க அவர்கள் துணை நின்றிருக்கிறார்கள்.



மெய்கண்டார் அருளிய சிவஞான போத வாழ்வியல் உரையாக்கத்தோடு மேற்கண்ட வரலாற்றின் நேர் நின்ற அத்துணை மனித நெஞ்சங்களுக்கும் என் நன்றி ஆற்றும் கடன்.

இருபதாண்டுக் காலத்தில் எதிர்நின்று திருவருளை அனுபவக் களமாக்கியவர் பலர். அவர்களும் திருவருளுக்கு ஆள் ஆன வகையில் உரியதே நன்றி.

சென்னை-32, **முனைவர் நல்லூர் சா. சரவணன்**
16.05.2008.

**நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்பு பாராட்டும் உலகு**

**குறிப்பு**

மெய்கண்டார் செய்த சிவஞானபோதம் மங்கல வாழ்த்து, அவையடக்கம், நூற்பா, பொழிப்பு (வார்த்திகம்), மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு (திருட்டாந்தம்) இவைகளால் ஆனது. பன்னிரு நூற்பாக்கள், எண்பது வெண்பாக்கள் என அமைந்தது. நூற்கு அதிகாரிகள் குறித்த ஒரு வெண்பாவும் உண்டு. வேறொரு புலவர் செய்த இரண்டு சிறப்புப் பாயிரங்கள் உண்டு.

இந்நூலினுள் தடித்த எழுத்தில் மூலங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இயல்பாக இருப்பவை ஆய்வு விளக்கப் பகுதிகள்.

விளக்கப்பகுதியின் உள்ளடக்கம் சில மாதவச் சிவஞான முனிவரைப் பின்பற்றியும் அமைகிறது.

சிவஞான போதத்தைக் கருத்தியமாகவே வைக்காமல் இயக்கிப் பார்க்கும் முயற்சி இது. அதனால் வாழ்வியல் ஆய்வு விளக்கமாக மனிதத்தை அதன் இயக்கத்தில் இணைத்து மலர்ந்திருக்கிறது. உங்கள் மூலம் அரன் இயங்குவானாக.

ஞானமும் போதமும் அயரா அன்பால் கூடிக் குலவட்டும்!!

**வெண்பா எண்முறை**

0-0-0 எண் - முதலில் உள்ளது நூற்பா, இடையில் உள்ளது அதிகரணம், மூன்றாவது உதாரண வெண்பா.

உ

திருச்சிற்றம்பலம்

# திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவர் அருளிய

# சிவஞானபோதம்

# சிறப்புப் பாயிரம்

**நேரிசை ஆசிரியப்பா**

**மலர்தலை உலகின் மாயிருள் துமியப்**
**பலர்புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்**
**காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய**
**பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் இருள்தீர்ந்து**
**அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி**
**மயர்வுஅற நந்தி முனிகணத்து அளித்த**
**உயர்சிவ ஞான போதம் உரைத்தோன்**
**பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்**
**பொய்கண்டு அகன்ற மெய்கண்ட தேவன்**
**பவநனி வன்பகை கடந்த**
**தவரடி புனைந்த தலைமை யோனே.**

நூலின் சிறப்பை வரலாற்றுடன் கூறுவன பாயிரப் பாடல்கள். சிவஞானபோத நூலுக்கு இரண்டு சிறப்புப் பாயிரங்கள் உண்டு. அவற்றைச் செய்த புலவர் யார் என்ற வரலாறு இல்லை. ஆயினும் மெய்கண்டாரின் நிலைப்பாட்டைத் தெரிந்து செய்ததாக இச் சிறப்புப் பாயிரம் அமைந்துள்ளது.



**உரைத்தொடர் :** மலர்தலை உலகின் மா இருள் பலர் புகழ் ஞாயிறு படரின் துமிய; அல்லதைக் காண்டல் செல்லாக் கண்; (கண்) போல் ஆன்மா அருந்துயர்க் குரம்பையின் நாடி, ஈண்டிய பெரும் பெயர்க் கடவுளின் கண்டு கண் இருள் தீர்ந்து மயர்வற; நந்தி முனி கணத்து அளித்த உயர் சிவஞான போதம் உரைத்தோன்; பொய் கண்டு அகன்ற மெய்கண்ட தேவன்; பவநனி வன் பகை கடந்ததவர் அடி புனைந்த தலைமையோன்; வெண்ணைப் புனல் சூழ் வெண்ணைச் சுவேதவனனே.

**விளக்கம்**

உலகமானது மலர்ச்சி எனுந்தன்மையை தன் இயல்பாகக் கொண்டிருப்பது; மலட்டுத் தன்மையை ஒருபோதும் கொண்டிராது.

உலகின் மலர்ச்சித் தன்மைக்கு மாற்றாகவும் மலர்ச்சித் தன்மை வெளிப்படாதவாறும் உலகை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது பெரிய இருள்.

அந்த இருளானது ஞாயிறு படர்வதால் சிறுமைப்படுகிறது. ஒளி படர்ந்தாலும் இருள் ஒளியில் இணையாமல் துமிந்து விடுகிறது (சிறுமைப்படுகிறது). வீட்டில் நெய் விளக்கை ஏற்றுகிறோம். உடன் அதிக ஒளிச் சக்தி உள்ள மின்சார விளக்கையும் ஏற்றுகிறோம். இருட்டை விலக்குகிற அந்த இரண்டும் விளக்கு தான். மின்சார விளக்கு ஒளியில் நெய்விளக்கு ஒளி இணைந்து விடுகிறது. எதுவும் சிறுமைப்படவில்லை. இப்படி இணையாது தன்னை ஒளித்துக் கொள்ளும் இயல்பை இயக்கத்தில் பெற்றது இருட்டு. இவ்வாறு ஒளிப் படர்ச்சியில் இணையாமல் மறைத்துக் கொள்வதாகச் சிறுமைப்படுவதே இருட்டு. உலகமானது இருட்டால் மலர்ச்சித்தன்மை தெரிய வராமல் அடங்கிக் கிடக்கிறது. எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கொண்டு பிறவற்றை – அவ்வவற்றின் தன்மையில் இயங்கவிடாமல் தடுத்துக் கொண்டு

இருப்பதே இருட்டின் தன்னியல்பு. இதுதான் 'மாஇருள்' என்ற தொடரால் சுட்டப்பட்டது. இருளின் இயக்கம் கதிரவன் படர்ச்சியால் துளி போல சிறுமைப்படுவதைத் 'துமி'கிறது என்றார். எல்லாவற்றையும் அடக்கி மறைத்து உட்கொண்டுள்ள இருளைச் சிறுமைப்படச் செய்து அவ்வவற்றை இயங்கை வைத்ததால் பலராலும் புகழப்படுவதாக இருப்பது ஞாயிறு. ஞாயிற்றுக்கு அயலாக உள்ள பலரும் ஞாயிற்றைப் புகழும் நிலையில் அவன் செயல் அமைந்தது. அச்செயலை மற்ற ஒன்று நிகழ்த்தாமையே அதற்குக் காரணம்.

உலகத்தை மறைத்த இருளை நீக்கி உலக மலர்ச்சியை அமைத்த ஞாயிற்றின் செயலில் இணைந்து கண்ணானது காண்டல் தொழில் செய்கிறது. ஞாயிறு இருளைச் சிறுமைப்படுத்தவில்லையென்றால் (அல்லதை) கண்ணின் காண்டல் தொழில் நிகழாது (செல்லாது).

ஞாயிறு ஒளியாகப் படர உலகைக் காணும் கண்ணைப் போன்றது ஆன்மா. கண்ணானது உலகைக் காண நிகழும் நிகழ்ச்சி வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிவது. இதே போல ஒரு நிகழ்ச்சி ஒவ்வொரு ஆன்மாவுக்கும் உண்மை காட்டுகிற நிகழ்ச்சியாக நிகழ்த்தப்படுகிறது. இதனை ஆன்மாவானது, புற உலகைக் காணுகிற கண் போலக் காண வேண்டும். கண் பார்ப்பதற்கு இருக்கிற புற உலகம் போல ஆன்மாவுக்கு இருப்பது உடம்பு. புற இருட்டு போல ஆன்மாவைப் பொருந்திய (கண் இருள்) ஒன்று உண்டு. இதை நீக்க ஞாயிறு போன்ற பெரும்பெயர்க் கடவுள் தரும் ஒளியால் காண வேண்டும். இப்படிக் கண்டால் மயர்வு (மாயப் பிறப்பின் அயர்வு) நீங்கும்.

உடம்பானது (அருந்துயர்க் குரம்பை) உலகில் நிலவ நமக்குப் பயன்பட்டு ஞானத்தால் நாம் கீழ்நிலையைக் கடக்க உதவத் தரப்பட்டது. ஆனால் அது நமக்குத் துன்பத்தைத் தொடர்ச்சியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இது நம்மை கீழ்ப்படுத்துவதாக - கீழ்நோக்கிப் படுத்துவதாக உள்ளது.



ஆன்மா உடம்பைப் பண்படுத்தி மேலேறிப் பிறவியைக் கடக்க முடியாத அளவிற்கு அரிய ஒன்றாக துன்பத்தால் பீடிக்கப்பட்டதாக உடம்பு அமைந்து விடுகிறது. உடம்பிற்குத் துன்பமானது அரிதான (இருக்கமாட்டாது) ஒன்றாக மாற வேண்டும். அதற்குரிய வழித் தொடக்கந்தான் துன்பத்தின் மூலமாக ஆன்மாவானது தன்னை நாட முயற்சி செய்வது.

கடவுளை 'ஈண்டிய பெரும்பெயர்க் கடவுள்' என்றார். கடவுள் என்ற சொல்லால் கடந்த உள்பொருளை விளக்குவர். அக்கடவுள் பெரும்பெயரால் சுட்டப்படுபவன் என்றும் அவன் 'ஈண்டியவன்' என்றும் கூறினார். இங்கு காட்சிப்படுபவன் என்ற பொருளில் 'ஈண்டிய(வன்)' பெரும்பெயர்க் கடவுள் என்றார். உலகப் பொருள்களில் அவனைக் காட்சிப்படுத்தி / நெறிப்பட்ட ஒன்றே பெரும் பெயர். பெயராக அமைந்தது நமசிவய. அதுவே பெரும்பெயராக 'சிவயநம' என அனுபவப்படும்.

**"வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது**
**நாதம் நாமம் நமச்சிவாய"**

என்றார் திருஞானசம்பந்தர். இவர் ஐந்தெழுத்து பொறிக்கப்பட்டதை ஓதித்தான் தங்கத் தாளத்தில் ஓசை எழுப்பினார். ஐந்தெழுத்தை ஓதித்தான் சிவிகையிலிருந்து பெருமறை நல்லூர் சோதி வரை ஏறினார். திருஞானசம்பந்தர் வேதம் நான்கை விட உயர்ந்தது இறைவன் பெயர் என்றார். வேதம் நான்கிலும் அதுவே உணரப்பட வேண்டும் என்ற பொருளிலும் அத்தொடரை அமைத்தார் திருஞானசம்பந்தர்.

ஈண்டு பெரும்பெயராகக் கடவுளைக் காணுதல் என்பது பெரும் பெயரனுபவமாகக் கடைபிடிக்கப் பெற வேண்டும். 'சிவயநம' என்பதில் 'சிவ' என்பது இறைவனும் அருளும் என்பதன் அடையாளம். 'ய' என்பது ஆன்ம அடையாளம். 'நம' என்பது மறைப்பும் உலகமும் குறித்தது. சிவத்தை முன்னிறுத்தி மறைப்புலகைப் பின்னிடச் செய்யுமாறு ஆன்மா இயங்க

வேண்டும் என்பதே கடவுள் பெயரைக் காட்சிப்படுத்தல் (ஈண்டிட) ஆகும். பெரும்பெயரை உச்சரித்து அதனுடன் மேற்கண்டவாறு உறவுபட வேண்டும். அப்படி உறவுபடுவது பெரும்பெயர்க் கடவுளை 'ஈண்டிய பெரும்பெயர்க் கடவுளாகக்' காட்டுவதாகும். அதுவே பெரும்பெயர்க் கடவுளின் கண்டு கண் இருள் (ஆன்மாவைப் பொருந்திய ஆணவ இருளே கண் இருள்) தீர்ந்திட வழியாகும்.

ஆன்மாவின் மயர்வறுப்பதற்காக நந்தி முனி கணங்களுக்கு அளித்தது உயர் சிவஞானபோதம். முனி கணங்களாயிருந்தவர்கள் துயரங்களுக்கு இடமாக இருந்து துயரத்தை ஓர் அரிய பொருளைப் போல (துயரத்தையே) பிடித்து வைத்துக் கொண்டிருக்கிற உடம்பை அத்தன்மையிலிருந்து நீக்கியவர்கள் முனிவர்கள். அவர்களுக்கு சிவஞானபோதத்தை அளித்தார் நந்தியெம்பெருமான். அவ்வாறு அளிக்கப்பெற்றதை நமக்குரிய நூலாக உரைத்தவர் மெய்கண்ட தேவன்.

பெருவலிமையானது பிறவி எனும் பகை. அது தொடர்ந்து துயரத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் உடம்பால் தொடர்ச்சிப்படுவது. அந்த பகை கடக்கப்பட வேண்டும். பகையைக் கடக்க அளிக்கப்பட்டதே சிவஞானபோதம். அது பிறவியில் கீழ்ப்படும் துயரத்தைக் கடந்து மேலேற உதவுவது. அதனால் அது உயர் சிவஞானபோதம். இதனைப் பெற்று பொய்யைக் காணவும் அதிலிருந்து அகன்று இருப்பதுமான உண்மைத் தன்மையில் உறைபவர் மெய்கண்டார். அவர் மூலமாகப் பெருவலிமைப் பிறவி எனும் பகை கடந்த தவசிகள் பலர். அவர்கள் மெய்கண்டார் திருவடியைத் தலைமேல் கொண்டு இருக்கின்றனர். அப்படிப்பட்ட தலைமை உடையவர் மெய்கண்ட தேவன். அவர் யாரென்றால், பெண்ணையாற்றின் நீர் சூழும் திருவெண்ணெய்நல்லூரில் பிறந்த சுவேதவனன் என்பவரே.



**கருத்து**

இயக்கத்தை இரண்டாகக் கணித்து மெய்ப்பொருளை நிறுவிய மெய்கண்டார் கருத்தை உள்வாங்கிக் கொண்டு நூலின் சிறப்பையும் நூலாசிரியர் சிறப்பையும் சிறப்புப் பாயிரத்தில் பாடினார் புலவர். சிவஞானபோதத்திற்குள் சிறப்புப் பாயிரம் இரண்டு. இன்னொன்று நூலின் இறுதியில் வரும்.

மெய்கண்டான் அனுபவமும் இரண்டாக விளக்கப் பெற்றுள்ளது. 'பொய்கண்டகன்றவர்' என்பது அகநிலை. இரண்டாவது புற/வெளிப்பாட்டு நிலை. இதற்குரியது 'பவ நனி வன் பகை கடந்த தவர் அடி புனைந்த தலைமையோன்' என்பது.

சிறப்புப் பாயிரத்தில் எடுத்துக்காட்டு ஒன்றின் மூலம் நூல் சிறப்பை விளக்க வந்த புலவர் எடுத்துக்காட்டின் மூலமே தெளிவாகச் சுட்டியுள்ளார்.

மலர்ச்சிக்குரிய உலகம் இயங்குகிறது; கண் உலகைக் காண இயங்குகிறது. இந்த இரண்டு இயக்கமும் கதிரவன் படர்ச்சியால் நிகழ்கின்றன. இந்த நிகழ்ச்சியில் ஓர் அடிப்படை ஒன்று உண்டு. அஃதாவது, இதனால் இப்படி இயங்குகிறது எனும் நிலை. இது ஓர் இயக்க நிலை. இதைப் புற இயக்கமாகக் கொள்ள வேண்டும். புற இயக்கம் என்பது தடையில்லாத முறைப்பட்டது. இதைப் பார்த்து இன்னொரு இயக்க நிலை இயங்கு நிலையாக உணரப்பட வேண்டும். இது இயக்க நிலையாக இருந்தாலும் இதில் தடை உண்டு. அந்த தடை இருப்பதனாலேயே இது இயங்கினாலும் இயக்க நிலையாகக் கொள்ளப்படவில்லை. அந்தத் தடை நீக்கத்தால் அது இயங்கு நிலையாக அனுபவப்பட வேண்டும். இதனால் இது அக நிலைப்பட்டது. கதிரவன் ஒளியால் இருளின்றி உலக மலர்ச்சி என்பதில் தடை இல்லை. கண் காணுதல் என்பதில் தடை உண்டு. கண்ணைச் செலுத்துகிற ஒன்று அந்த இயக்கத்தை இயங்குவதாக ஆக்க வேண்டும். இதுவே 'பார்த்தல்' என்பது. மேற்கண்ட எடுத்துக்காட்டை அமைத்து அதில் கூறப்பட்ட 'கண்' போன்றது 'ஆன்மா' என்றார்.

ஆன்மாவானது அருந்துயர்க் குரம்பையால் நாடித் தெரிந்து கொள்ளப்பட வேண்டியது. செயல்களால் துயரத்தை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிற உடம்பின் அனுபவத்தால் ஆன்மா தன்னை அறிந்து கொள்ள வேண்டும். பிறகு உலகத்தின் இருளை நீக்கக் கதிரவன் இருப்பது போல ஆன்மாவாகிய தன்னைப் பொருந்திய இருளை நீக்க கடவுள் இருப்பதை உணர்ந்து அவன் இயக்கத்தில் பொருந்த வேண்டும். உடம்பின் இயக்கம் ஆன்மாவைக் காண உதவும். அந்த இயக்கத்தில் தடையில்லை. ஆன்மா காண உதவிய கடவுளின் இயக்கத்தில் இணையாத தடை உண்டு. தடை தாண்டி அதில் இணைந்து இயங்கப் பெறல் வேண்டும்.

அங்கே கண் இணைந்தது போல (உலகைக் காண கண் கதிரொளியில் இணைந்தது போல) ஆன்மா கடவுளின் காணுதல் வேண்டும். இதுதான் ஞானமும் போதமுமாக சிவத்தால் பெறும் ஆக்கம்.

உலக மலர்ச்சிக்கு உதவிய சூரியன் போல உடம்பின் இயக்கமும் சிவத்தால் அமைந்தது. அதன் மூலம் ஆன்மா தன்னை அறிதலே ஞானமாக அமைந்தது. இந்த இயக்கம் நேராக அனுபவமாவது. இந்த 'ஞானம்' தொடர்ந்து ஆன்மா கடவுளின் கண்டால் அமைவது 'போதம்'. இந்த இரண்டையும் ஆக்குவது 'சிவ'(ம்).

முரண் இயக்கமான இருள்/ஆணவ இயக்கத்தை நீக்க உயிர்கட்கு அமையும் இயக்கம் இரண்டு. உடம்பால்/உலகால் இயக்குகிறான். இது அதன் வழிப்படும் இயக்க நிலை. இதன் மூலம் பெறுவதெல்லாம் ஞானம்.

விளங்கிக் கொள்ளப்படாத (தடை) நிலை நீங்கி இயக்கத்தில் இயங்குதலே இரண்டாவது இயக்கம். இதுவே போதம். இரண்டிற்கும் உள்ள நுட்பமான வேறுபாட்டை அறிந்து கொள்ள வேண்டும். உலகம் பொருளும் உடம்பு அவை தம் சார்பில்



இழுத்துக் கொண்டு செல்வன. சூரியனோ கடவுளோ தன்னை நோக்கி இழுக்கமாட்டா. இதுவும் இயக்கமே. ஆனால் புற உலகு இழுப்பில் ஓடுவது போல் உடம்பின் இயக்கத்தில் ஓடுகிறதேயொழிய இதில் ஓடுவதில்லை உயிர். கண் விரும்பிப் பார்ப்பது போல ஆன்மா திரும்பி – விரும்பிப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்காமைதான் தடை. இது இயக்கத் தடை இல்லை; இணையாத் தடை. இந்த இயக்கத்தில் இணைந்ததே போதம். இணையாமல் புற இழுப்பில் இணைந்து பெற்ற ஞானம் மட்டுமே இருக்கும். அதில் முழுமை வரை செல்லுவதில் ஏற்றத்தாழ்வு உண்டு. முழுமைக்குச் சென்றாலும் போதமின்மையால் முடிவானதல்ல. முடிவு என்று சொன்னால் ஞானமும் மேல் போதமும் இணைந்த மயர்வற்ற நிலை. இதைத்தான் 'பிறப்பு என்னும் பேதைமை நீக்கலும் செம்பொருள் காணலுமாகத்' திருவள்ளுவர் கூறினார். அயர்வு பிறப்பால் வருவது. பிறப்பு தான் மயர்வு. பிறப்பும் பிறப்பால் வருவனவும் நீங்கலே மயர்வறுதல்.

ஞானத்தையும் போதத்தையும் சிவத்தால் கண்ட மெய்கண்டார் பொய்கண்டகன்றவராக இருந்து முன் ஆறு, நூற்பாக்களை ஞான வகையிலும் பின் ஆறு நூற்பாக்களை போத வகையிலும் கூறியதை அறிந்து சிறப்புப் பாயிரத்தில் மெய்கண்டார் குறிப்பை விளக்கி அமைத்தார் புலவர்.

'சிவஞானபோதம்' எனும் நூல் அவ்வகை முறையில் முடிவாகவும் விளைவாகவும் காட்டப் பெறுகிறது. பொருள்களை மெய்ப்பொருளாக நாட்டுதல் காட்டும் பணி. அதனை விளைவாக நிகழ்த்திக் காட்டுதல் ஆக்கும் பணி. இது அரும்பு மலராவதை இருந்து பார்க்கும் அனுபவம் போன்றது. இந்த ஆக்கும் பணியை அகமாகக் கொண்ட வகையில் 'சைவ சித்தாந்தம்' மெய்கண்டார் அருளிய சிவஞானபோதத்தைத் 'தலைமை' நூலாகக் கொண்டது. இதனை அருளிய வகையில் வலிய பிறவிப் பகை வென்ற தவசிகள் சூடும் திருவடிகளை உடையவராக மெய்கண்டார் இருக்கின்றார்.

## மங்கல வாழ்த்து

**கல்லால் நிழல்மலை**
**வில்லார் அருளிய**
**பொல்லார் இணைமலர்**
**நல்லார் புனைவரே.**

### விளக்கம்

கல்லால மரத்தின் நிழலில் வீற்றிருக்கும் மலையை வில்லாகக் கொண்ட பெருமான் வரச் செய்த பொல்லாப் பிள்ளையாரின் இரு திருவடி மலர்களை நல்லவர்கள் சூடிக் கொள்வார்கள்.

'தனதடி வழிபடும் அடியவர் இடர்களைக் கடிய "கணபதி வர அருளினன்" சிவபெருமான்' என்பது திருஞானசம்பந்தர் வாக்கு.

நல்லார் எனத் தன்னை நிறுத்திக் கொண்ட மனிதருக்கு சூட்டிக்கொள்ள உரிய மலராக திருவெண்ணெய்நல்லூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவடி அமைகின்றது என்பது



மெய்கண்டார் வாக்கு. திருவெண்ணெய்நல்லூரிற் பிறந்தவரான மெய்கண்டார் நந்தியருளிய சிவஞானபோதத்தை உரைக்கிறார். இந்தச் சிவஞானபோதம் கைவர வேண்டுமானால் நல்லவராகத் தங்களை நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்போது அவ்வாறு நல்லவராக நிறுத்திக் கொண்ட மனிதர் உள்ளத்தே தானே தோன்றும் பொருளாக அமைபவர் பொல்லார். அவருடைய திருவடிகள்தான் அவரை அலங்கரிக்கும் மலர்களாகின்றன.

இப்படி, பொல்லாப்பிள்ளையார் தோன்றுவதற்குக் காரணம் கல்லால மரத்தின் நிழலில் இருந்த சிவபெருமானால் அருளப்பெற்ற சிவஞானபோதத்தின் 'மலைவுஇன்மை' கைவரப் பெறுவதற்காக.

மலைப்பைத் தருவதான மலையையே வில்லாகக் கொண்டவர் சிவபெருமான். மலைப்புக்குரியவற்றைத் தூக்கி நிறுத்தி பகையை அதன் மூலமே அறுக்கும் தன்மையைக் காட்டிய கோலம் சிவபெருமான் மலையை வில்லாக எடுத்த கோலம்.

உலக மலைப்பையும் ஞான மலைப்பையும் போதத்தால் விலக்கி விளங்கச் செய்பவன் சிவபெருமான். ஆதலினாலே 'மலைவை இன்மையாகச் செய்பவன்' என்ற பொருளாளராக 'மலைவு இல்லார்' என அமைகிறார். அவர் அருளிய 'மலைவு இன்மையைச் சிவஞானபோத நூலின் மூலம் கைவரப்பெறத் தம்மை நல்லவராக நிறுத்திக் கொண்டால், அவர் தானே தோன்றி (பொல்லார்) அருளுவர்! 'நல்லாராக நின்று அவர் திருவடிகளைச் சூடிக் கொள்ளுங்கள்' என்கிறார் மெய்கண்டார்.

'நல்லார்' எனத் தம்மை நிறுத்திக் கொள்வது ஞான/போதத் தேடல்தான். அதை நேரடியாகப் பெறற்குக் கருவி இல்லை. பாடநூல் போன்றவை கருவி அல்ல. அவை அறிமுகமே. அதற்கான அணுகுமுறை ஒன்று உண்டு. அஃதாவது, நன்மையை இயக்குபவர் நல்லார் ஆதல் எனும் முறையாகும். இதுவரை தான் வாழ்ந்த முறையில் நன்மையை நிலைநாட்ட எந்த வகையில் முயற்சி செய்தேன் எனத் தன்னை எடை போட

வேண்டும். உங்கள் அளவில் ஏதாவது ஒரு சான்று கிடைக்கலாம். கிடைத்தால் அந்த முயற்சியை நன்மை நாட்டலைப் பல முறைகளிலும் நிலைநாட்ட முடியாமைக்கான காரணங்களை அறிந்து அவற்றிற்குப் பாடுபட வேண்டும்.

'சான்று' கிடைக்கவில்லையானால், நன்மைக்காக முயற்சித்து வாழ வேண்டும். சமூகச் சூழலில் அது வெற்றி பெற உடம்பை உயிரைத் தாண்டி பெருமான் தோன்றிக் காப்பது அனுபவமாகும். அந்த உறுதியைப் பிடித்தால் பல முனைகளாலும் வரும் தடை நீக்கி அந்த நன்மையைக் காக்கும் தலைமையில் நீங்கள் நிற்பீர்கள். உங்களுக்கும் மலைப்பு ஆயுதமாகும்; நன்மை வெல்லும்! இதுதான் ஞானத்தைத் தந்து போதத்தில் பெருமான் நிறுத்தும் முறை. இதற்கு இந்நூலின் மூலம் தயாராகுங்கள் என்பதுதான் கருத்து.



## அவையடக்கம்

**தம்மை உணர்ந்து தமைஉடைய தன்உணர்வார்**
**எம்மை உடைமை எமைஇகழார் – தம்மை**
**உணரார் உணரார் உடங்குஇயைந்து தம்மில்**
**புணராமை கேளாம் புறன்.**

'அவையடக்கம்' என்ற மரபுச்சுட்டில் இப்பாடலைக் காட்டினர். இப்பாடல் நூலொடு தொடர்பு கொள்ளவேண்டிய உலகத்தை இரு கூறுகளில் வேறுபடுத்தி உரைக்கிறது. இந்நூலொடு இணைபவர்; இணையாதவர் என உலகவர் யாவரையும் உயர்த்தி வந்த வகையில் பொது. ஆயினும் தொடர்பு கொள்ளுபவர் நிலை நோக்கி இரண்டாக வகை செய்து கூறுகிறது.

**உரைத்தொடர் :** தம்மை உணர்ந்து தமை உடைய தன் உணர்வார் எம்மை உடைமை எமை இகழார். தம்மை உணரார் உணரார் தம்மின் புணராமை புறன், உடங்கி இயைந்து கேள் ஆம்.

### விளக்கம்

'சிவஞானபோதம்' அவரவர்க்கும் வாய்க்கும். அதனைப் பெற நூலாகத் தந்த வகையில் அதனோடு தொடர்பு கொள்பவர்

'தம்மை உணர்தல்' கொண்ட முறையாளர் எனில் இகழ மாட்டார்கள். அவர் 'எம்மையும் உடைமை' எனக் கொண்டு அமைவர். தம்மை உணராதவர் 'தன்' உணரமாட்டாதவர்; தம்முள் உள்ள இணைப்பை உணராத அவர் புறம் ஆவார், ஆயினும் கேள் ஆகக் கூடியவர்.

(i)

### தம்மையும் தன்னையும் உணர்தல்

தன்னை உணர்தல் என்பது அறிவதற்கான முறையாக இருக்கலாம். ஆனால் அது பொருள் முடிவான ஒன்று அன்று. தன்னை உணர்தல் என்பது காண்கின்ற தன்னையோ எந்த ஒரு பொருளையுமோ சார்பு இன்றி உணர்தலாகும். அப்படி உணரப்படற்கு எந்தப் பொருளும் இல்லை.

'தன்' என்பதே எந்தச் சார்பும் இன்றி இயங்குவதான பொருள் என்பதாகும். அதுவும்கூட தனித்து இருந்து கொண்டு இருக்கிறது என்ற முடிவுக்கு உரியதாக இல்லை. அது தனித்து இருக்கக்கூடிய தகுதி கொண்டது அவ்வளவே. இந்தத் 'தன்' என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்று முயற்சி செய்தாலும் சரி, தான் எப்படிப்பட்டவன் என்பதை ஆராய்ச்சி செய்ய முற்பட்டாலும் சரி. அதில் கிட்டும் சரியான முடிவு 'தம்' என்பதுதான்.

தன் செயல்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் மனிதன் தன்னையும் ஆராய முற்படும்போதே அவன் தன்னைக் கூட்டுப்பொருள் என்றே காண்பான். கை கால்களால் இயங்கும் மனிதன் வெளியே உள்ள பொருட்களின் தொடர்புடன் காரியங்களை ஆற்றுகிறான். எல்லாமே கூட்டு நடவடிக்கையாக இருக்கிறது.

தொடர்ந்து தன்னுடைய அறிவை ஆராய்ச்சி செய்தால் பொருள்களைப் பயன்படுத்தும் முறையில் இதுவரை தெரிந்து கொள்ளாத ஒன்றைத் தெரிந்த வகையில் கண்டுபிடித்த வனாகிறான். பயன்படுத்தும் முறையில் புதியதாகத் தெரிந்து



கொண்டதையோ இருக்கிற பொருள்களைப் புதிய முறையில் இணைத்ததையோ மனிதனின் படைப்புகளாகக் காண்கிறோம். இப்படி விரியும் இவனுடைய ஆற்றலானது 'அறிவு' என அமைந்தது. இவனுடைய அறிவு மொத்தத்தையும் அவன் எடுத்து தாளில் எழுதி வைத்துவிடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். இப்போது அவனுக்கும் அவன் அறிவுக்கும் என்ன சம்பந்தம் என்றால் தாளில் உள்ளதுததான் அவன் அறிவாக இருக்கிறது; ஆனால் தாளுக்கு இல்லாத அறிவு அவனுக்கு இருக்கிறது என்பது மட்டுமே உண்மை. அந்த அறிவையும் எடுத்து வைத்து ஆராய்ந்தால் அதுவும் உலகத் தொடர்பில் உருவானதுதான். 'அறிவு' என்ற ஒன்றால் செயலாற்றும் அந்த ஒன்றுதான் உயிர், சீவன், ஆன்மா, உள்ளம் என்ற பெயர்களில் குறிக்கப்படுகிறது. 'அறிவு' என்ற ஒரு ஒளித்தன்மை மற்ற பொருள்களின் விளக்கத்தால் இருக்கிறது. சூரிய ஒளியால் எல்லாப் பொருள்களும் தெரியும். ஆனால் அறிவு ஒன்ற ஒளியில் இருக்கிற பொருள்கள் காட்டப்படும். காட்சிப்படுத்தும் விளக்கு (Focus Light) போன்றது அறிவு (இருட்டறையில் பொருள் வெளிச்சத்தாலும் பொருளின் மீது மட்டுமே படும் வெளிச்சத்தாலும் பொருள் தெரிவது போல). இந்த ஒளித்தன்மைப் பொருளான ஆன்மா என்பது இருக்கிறது என்பதையே அதன் அறிவால்தான் காட்ட முடிகிறது. அதை இன்னும் செறிவாக உணர வேண்டுமானால் பொருளில் தெரிகிற ஒளியால் பொருளை அடையாளம் காண்பது போல அதன் அறிவு (ஒளித்தன்மையைத் தனியாகக் காட்டிக் கொள்ள முடியாது) இருக்கிறது. ஆக தொடர்பு கொண்ட பொருள்களால் தன் இருப்பைத் தெரிவித்துக் கொண்டிருப்பது ஆன்மா. இது எந்நாளும் தனித்து அறியப்பட முடியாதது. அதன் அறிவால் அதனை அறியும் போது அது எப்படி உலகப் பொருள்களைத் தெரிந்து வைத்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியுமேயொழிய அதன் அறிவு என்பதை மட்டுமே அடையாளப்படுத்த முடியாது.

கூட்டுப்பொருளாக அடையாளப்படுகிற அறிவாளியை உலகம், உடம்பு சார்பில்தான் உணரமுடியும். இப்படி உணரும் மனிதர் தம்முடைய எல்லையை உணர வேண்டும். தம்முடைய எல்லையில் தன்னைத் தானே இயங்கு பொருளாக உறுதிப்படுத்த முடியாத தன்மையை உணரலாம். உடம்பு இல்லாமல் இயங்க முடியாத தன்மை, உடம்புக்கும் பிற பொருள்களின் தொடர்பில் இயங்க முடியாத தன்மை என இயங்கமுடியாத தன்மையை உணர்வது போல இயங்கும் தன்மையிலும் மற்றவற்றின் தூண்டலால் இயக்குவதை உணரலாம். பசியால் இயங்கத் தொடங்கி கவர்ச்சியில் ஓங்கி இயக்கத்தில் சோர்வுபடுவதை உணரலாம். இப்படிப்பட்ட இயக்கத்தில் தான் எனத் தன்னை ஒருபோதும் நிலைப்படுத்திக் கொள்ள முடியவில்லை என்பதில் தெளிவு பெற வேண்டும். இதன் தெளிவில்தான் எல்லாவற்றின் சார்புத்தன்மை இயக்கமும் புலப்படும். சார்புத்தன்மையில் கூட்டாக இயங்கும் இந்த இயக்கத்தின் மூலத்தன்மையை உணர்வதுதான் 'தமை உடைய தன்' என்பதை உணர்தல்.

தனித்த இயக்கத் தகுதியில் முட்டுப்படும் எல்லாவற்றையும் ஆராயும் போது முட்டுப்படாத ஒன்றாகத் 'தமை உடைய தன்' என்பது இருக்கிறது. அதுவும் 'தன்' என்பதாக இயங்கும் தகுதியில் இருக்கிறதேயொழிய தானே இருந்து விடவில்லை. அதுவும் 'தமை உடைய தன்' என்பதாகத்தான் இருக்கிறது. இவற்றையெல்லாம் உடைமையாகக் கொண்டு தன் என்பதாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. மற்றவற்றை உடைமையாகக் கொண்ட வகையில் அவற்றின் இயக்கத்திற்குத் துணையாகிறது. எனவே 'தன்' என்பதன் இயக்கம் என்பது மற்றவற்றின் இயக்கத்திற்கு. மற்றவற்றின் இயக்கத்தில் அவ்வவற்றிற்குரிய பயன் விளைவு உண்டு. ஆனால் மற்றவற்றிற்கான இயங்கும் 'தன்' என்பதற்குப் 'பயன்' என்ற விளைவு இல்லை. அதனாலும் மற்றவற்றின் அல்லதாய்த் 'தன்' என இருக்கிறது.



**"புவி முதல் ஐம் பூதமாய்ப் புலன் ஐந்தாய்**
**நிலன் ஐந்தாய்க் கரண நான்காய்**
**அவை அவை சேர் பயன் உருவாய் அல்லஉரு**
**வாய் நின்றான்"**

**- திருஞானசம்பந்தர்-I, 129, திருக்கழுமலம் 7**

பயன் உருவாக அவ்வவற்றின் இயக்கத்தில் உள்ள 'தன்' என்பதே பயன் அல்ல உருவாகவும் இருப்பது என்றார் திருஞானசம்பந்தர். மனிதர் தன்னை 'தம்மை' என அறுதியிடல் வேண்டும். 'தம்'முடைய எல்லையில் 'தன்' என்ற ஒன்று இல்லாமை புலப்படும். பின்னரே தன் என்பதாக இருந்து தம் என்பதை உடைமையாகக் கொண்டிருக்கின்ற தலைமையான ஒன்று புலப்படும். அது 'தன் உடைய தம்' என்ற தொடராக விளங்கிக் கொள்ளப்படுவது.

'தன்' என்பதன் உடைமையாக எல்லாக் கூட்டும் அமைவதால் இந்த நிலையை உள்வாங்கிக் கொண்டவர்கள், 'தன்' அனுபவத்தைப் பெற அறிவுறுத்தும் எம்மை இகழ்ச்சிப் படுத்தமாட்டார்கள். இது மெய்கண்டார் 'முறை நின்றார்' நூலொடு தொடர்பு கொள்ளும் வகையில் கூறியது.

(ii)

**தம்மை உணராமையும் புறமாதலும்**

தாம் கூட்டுப்பொருள் என்ற உண்மையில் முறைப்பட உணராதவர்கள் இறுதிவரை இயக்கத் தலைமையான 'தன்' என்பதனை உணரமாட்டார்கள். 'தம்' எனும் கூட்டுப்பொருள் இணைப்பு உண்மையை அனுபவியாத அவர்கள் தம்மை அன்னியப்படுத்திக் கொண்டு வெளியே (புறம்) நிற்பவர்கள். அவர்கள் அனுபவத்தால் வேறுபட்டு (உடங்கி) இருப்பவர்கள். ஆயினும் நம்மோடு இணைந்து (இயைந்து) நம் கருத்தில் நிற்கும் உறவாக (கேள்) ஆவர்.

'தம்மின் புணருந்' தன்மையை உணராமையால் தம்மை உணராதவர்களாக உள்ளனர். அதன் 'தன்' என்பதையும் உணரமாட்டார். தம்முடைய செயல்பாட்டில் தொடர்புடைய அனைத்துப் பொருள்களின் உண்மைத் தன்மையை அறிதல் வேண்டும். அப்படி அறிந்தால் புணர்ந்திருக்கிற தன்மையான 'தொடர்பு நிலைகள்' புலப்படும். தொடர்பு நிலையை உணர்வதால் 'தம்' எனும் கூட்டைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் அமையும். இதனால் 'தன்' என்பதில் உறுதிபட தம்மின் இயக்கம் தலைப்படத் தொடங்க வாய்ப்பில்லை. இதனால் அவர்கள் சிவஞான போதத்திற்குப் புறமாக நிற்கிறார்கள். அவர்கள் குறைந்தபட்சம் தம்மின் இயக்கத்தை/தம்முள் இயைபை உணர்ந்தால் உறவினராகி உள்புகுவர்.

சிவஞான போத நூலை மெய்கண்டார் செய்த திறம் பற்றி சிறப்புப் பாயிரக் கருத்தால் ஆறு ஆறு நூற்பாக்களாக ஞான வகையிலும் போத வகையிலும் பகுப்பு செய்தோம்.

சிவஞான முனிவர் முதல் ஆறு சூத்திரங்களைப் பொது அதிகாரம் எனவும் பின் ஆறு சூத்திரங்களை உண்மை / சிறப்பு அதிகாரம் எனவும் வகை செய்தார்.

# முதல் நூற்பா

**அவன் அவள் அதுவெனும் அவைமூ வினைமையின்**
**தோற்றிய திதியே ஒடுங்கிமலத்து உளதாம்**
**அந்தம் ஆதி என்மனார் புலவர்**

**வார்த்திகம் : என் நுதலிற்றோ எனின், சங்கார காரணனாய் உள்ள முதலையே முதலாக உடைத்து இவ்வுலகம் என்பது உணர்த்துதல் நுதலிற்று.**

இக்கருத்தை மேலும் விளக்க ஐந்து அதிகரணங்களில் மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு வெண்பா ஆகியனவும் செய்கின்றார்.

**நூற்பா உரைத்தொடர் :** அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின் ஒடுங்கி மலத்து; தோற்றிய திதியே, (ஒடுங்கி மலத்து) உளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர்.

**விளக்கம்**

(i)

ஆண், பெண், அது எனும் மூன்றின் இயக்கம் மூவினைமையானது. தோற்றியதால் அவை திதியாவன. 'அவை' எனப் பலவாக உணரப்பட்ட அப் பொருள்கள் 'அது' எனவே ஒருமப் பொருளாக ஒடுங்கி மலத்து உளதாம். ஒருமைப் பொருளை மலத்திலிருந்து பலவாகப் பொருள்களை உளவாக்கத்

தோற்றித் திதி செய்து இயக்கப்படுத்தியது 'அந்தம் ஆதி' எனும் பொருள். ஒருமைப் பொருளான மலத்தில் அவற்றை ஒடுங்கச் செய்து ஒன்றாக்குவதும் 'அந்தம் ஆதி' எனும் பொருளே என்பர் புலவர்.

(ii)

உலக இயக்கத்தை உலகில் உள்ள பொருள்களால் வரையறைப்படுத்திக் காட்டுகின்றார். காட்சிப்படும் பொருள்களின் பன்மைத் தன்மையை இதில் விளக்கிப் பின் அவற்றுக்கான ஒருமை நிலையை உணர வைக்கிறார்.

தம்மை உணர்தலுக்கான முறை இந்நூற்பாவில் தொடங்கி வைக்கப்படுகிறது. பொருள்கள் கூட்டாக இருப்பன என்பதுதான் உண்மை என்றாலும் இத்தனை பொருள்கள் கூட்டாக இருக்கின்றன என்று பொருள்களைத் தனித்தனி அடையாளங் காண வேண்டும். இப்படி, இதனால் பொருள்கள் கூட்டாக இருக்கின்றன என முடிவுகளைத் தெரிவிக்க வேண்டும்.

உலகப் பொருள்களின் கூட்டமைப்பை ஆண், பெண், அது என்று முதற்கட்டமாகச் சுட்டுகின்றார். இந்த மூன்றின் இயக்கம் 'மூவினைமை'யானது என்று கூறுகின்றார்.

மூவினைமைப்படும் அவை தோற்றியதால் திதியாயின (இருப்பனவாயின) தோற்றிய (தோற்றுவிக்கப்பட்ட) அப்பொருள்கள் மலத்தில் ஒடுங்கி மலமாகவே இருப்பதாம். இதிலிருந்து பல்பொருள்களையும் வெளிப்படுத்தியது 'அந்தம் ஆதி' செய்யும் பொருள்.

மலத்திலே உளதாகிய பொருளை பல பொருள்களாகத் தோற்றுவிக்கும் அந்தாதிப் பொருள்தான் பலவாகிய பொருள்களை ஒரு பொருளாக மலத்தில் ஒடுக்கி வைத்தது. மலத்தில் ஒடுங்குவதற்கும் உலகத்தில் இருப்பதற்கும் உள்ள வேறுபாடு யாதெனில் மலத்தில் ஒரு பொருளாகவே இருக்கிறது; உலகத்தில் பலபொருள்களாக இருக்கிறது என்பதாகும்.



'மலத்தில் உளதாம்' என ஒருமையில் உள்ள பொருள் அவன் அவள் அது எனும் அவையாகத் தோற்றுவிக்கப்பட்டு இருப்பனவாகின்றன.

'அவை' எனப் பலவாக உணரப்படும் அப்பொருள்கள் 'அது' எனவே ஒருமைப் பொருளான மலத்து உளதாம். ஒடுங்கித்தான் ஒருமைப் பொருளான மலமாக உளது. இதனை 'உளவாம்' (உள்ளனவாம்) என்று பன்மையில் சொல்ல முடியாது. அப்படிப் பன்மையில் சொன்னால் பல பொருள்களும் மலம் என்பதில் அப்படியப்படியே அருவமாக உள்ளன என்பதாக ஆகிவிடும். அப்படியன்று, ஒருமைப்பொருளாக ஒடுங்கி (ஒடுக்கப்பட்டு) உள்ளது என்பதே. இதனால்தான் (அவை) 'உளதாம்' என ஒருமையில் முடிவு சொன்னார் மெய்கண்டார். இந்தப் பன்மைகளைத் தோற்றி இயக்கப்படுத்திய வகையில் பன்மைகளை உடைய 'தன்' என்ற ஒருமைப்பொருள் தான் 'அந்தாதி' என்பது.

அவன், அவள், அது என்ற பன்மைப் பொருள்களை அவ்வவற்றின் ஒருமைத் தன்மையில் ஒடுங்க வைத்துக் கொள்வது 'மலம்'. அந்த 'மலம்' என்ற ஒருமைப் பொருளைப் போல பல ஒருமைப் பொருள்களின் முடிவுகளும் தொடர்ந்து பெறப்படும். இவைகளையெல்லாம் உடைய 'தன்' ஒருமை தான் 'அந்தாதி'ப் பொருள். இதனை இறுதி முடிவாகப் பெறுவதற்கு முன்பாக, அவன், அவள், அது எனும் மூவகையாகக் காட்சிப்பட்ட பொருள்களை அவற்றினுடைய மூலத்தில் (மலத்தில்) ஒடுக்கித் தோற்றித் திதி செய்த 'அந்தாதி' தான் 'முதல்' பொருள் என்பது முதல் நூற்பாவின் தெளிவு என்று 'வார்த்திகத்தாலும்' கூறினார் மெய்கண்டார்.

(iii)

'அவன், அவள், அது எனும் அவை மூவினைமையன என உலகைப் பார்த்த வகையில் முதற்கண் பன்மை முடிவு பெறப்படுகிறது.

உலகம் ஆண், பெண், அது என மூன்றாக மெய்கண்டாரால் வகை செய்யப்படுகிறது. ஆண்மைத் தன்மை பெண்மைத் தன்மை விலங்கு, பறவை என உயிர்ப் பொருள்கள் எல்லாவற்றுள்ளும் இருப்பவும் மனிதரில் ஆண், பெண் என வகை செய்து மற்ற உயிர் உள்ளனவற்றையும் உயிர் இல்லனவற்றையும் அது என வகைப்படுத்தினார். 'உயிர்த் தன்மையால்' இறுதி செய்ய கருதல் அளவைத் துணை செய்கிறது. ஆனால் இங்கே காட்சி அளவையால் முடிவு பெறுமாறே அவன், அவள், அது என்ற வகையை அடையாளப்படுத்தினார்.

ஆண் தன்னை வேறுபடுத்திக் கொண்டும் பெண் தன்னை வேறுபடுத்திக் கொண்டும் இயங்குவது தனிநிலைப் படுவதாகவே மனிதரில் காண்கிறோம். மற்ற அஃறிணை உயிர்களில் தனிநிலை நிலைமை இன்றி அவ்வவற்றுக்குரிய இயல்பான ஒழுங்கில் இயக்கம் அமைவதைக் காண்கிறோம். இதே முறையை அறிவற்ற சடப் பிரிப்பாக பின்பற்றப்படும் ஒழுங்கு பொருளுக்கும் காணலாம்.

இயக்கத்தைக் காட்சி அளவையால் இறுதி செய்து அவன், அவள், அது என மெய்கண்டார் எடுத்துக் காட்டுவதற்குக் காரணம் இந்த இயக்கத்தின் கணக்கீடான 'வினை' பற்றிய அடிப்படையை அடையாளப்படுத்தும் எண்ணமே.

இயங்குவதில் உயிருள்ளன, உயிரில்லாதன என இரண்டு பட்டாலும் அஃறிணைப் பொருள்களின் இயக்கம் தொடர்புகளில் விதிகளை வினைப்படுத்திக் கொள்ளாத வகையில் ஒன்றாகவே கருதப்படுகிறது. ஆணும் பெண்ணும் மனிதர் எனப் பொதுவில் நின்றாலும் விதிகளை எழுப்பி வினைப்படுவதில் தனித்தனி நிலைமைகளில் பங்காற்றுகிற வகையில் ஆண், பெண் என இரண்டை நிறுத்த வேண்டியுள்ளது. இவ்வகையில் உலகக் காட்சியை அவன், அவள், அது என அடையாளப்படுத்தினார் மெய்கண்டார்.



அவன், அவள், அது என உள்ள யாவுமே கால வேறுபாட்டில் தோன்றி நின்று அழிவதைப் பார்க்கிறோம். தோன்றியிருக்கின்ற குழந்தை அழிந்திருக்கலாம்; முதியவர் அழிந்திருக்கலாம்; மரம் அழிந்திருக்கலாம்; அழிந்த எல்லாமே நேற்று இருந்து இல்லாமற் போனவை. இவற்றைப் போன்றனவாகவே தோன்றிக் கொண்டிருக்கின்றன. இப்படித்தான் தோன்றி – இருக்கிற எல்லாம் அழியும். இப்படிப் பார்க்கப்பட்ட வகையில் அவன், அவள், அது என இருக்கின்ற பொருள்கள் யாவும் தோன்றி நின்று அழிவன. 'இருக்கிறது' என்று சொல்லப்படுகிற ஒன்று தோன்றியது. இனி அழியக்கூடியது.

தோன்றி நின்று அழிகின்ற இந்த மூன்று செயற்பாட்டின் முறை எப்படிப்பட்டது? என்பதே இனி அறிய வேண்டியது!

(iv)

**(மூவினைமையின்) தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து**
**உளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர்.**

தோன்றி நின்று அழிவது என்பது உலகில் பார்க்கப்படுகிறது. இப்போது 'இருப்பது' என்பது நேர் அனுபவம். தோன்றியது என்பது முன் நிலை. இனி அழிவதாகிய நிலை வரும்; ஆனால் தேவையற்றது. அழிவது என்பது உலகக் காட்சியில் பார்க்கப்படுகிற ஒன்றுதான். ஆனாலும் அதற்கும் நமக்கும் ஓர் இடைவெளி உண்டு. இதனைக் குறிப்பிடும் அமைப்பில்தான் 'தோற்றிய திதியே' என்பதில் 'ஏ'காரம் அமைத்தார். தோற்றப்பட்டதுதான் 'திதியே' என ஒரு முடிவில் (தெளிவைக்) கூறுகிறார். இந்த இருப்பில் இருந்து ஒடுங்குதல் என்பது மலத்தில் ஒடுங்குதலாக இருக்கக் கூடாது என்பதை அறிவுப் பொருளுக்குரிய முடிவாகத் தெளிவுறுத்தியும், 'ஏகாரம்' அமைத்தார். (தோற்றியதான திதி திதித் தன்மையில் வலிமை பெறட்டும் என்பது).

காட்சி அளவையால் தோன்றி நின்று அழிவதை உறுதி செய்த பின் கருதல் அளவையால் அழிகிற பொருள்கள் ஒடுங்கி மலத்தில் இருக்கும் என்ற விடையைத் தருகிறார். அழியாத வகையில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டிய எல்லாப் பொருள்களும் ஒடுங்கி இருந்த மலத்திலிருந்தே தோற்று விக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அதே கருதலளவையால் தெளிவுபடுத்துகிறார். தோற்றுவிக்கப்பட்டனவாக இருக்கிற பொருள்கள் மலத்தில் ஒடுங்கி இருந்ததிலிருந்தே 'அந்தம் ஆதி' என்ற பொருளால் தோற்றுவிக்கப்பட்டன. ஒடுங்கிய மலத்திலிருந்து தான் தோற்றம் செய்யப்பட்ட வகையை உணர்த்தவே தோற்றுவிக்கும் பொருளை 'அந்தம்' என்ற சொல்லால் முதலில் சுட்டி 'ஆதி' என்ற சொல்லைப் பின் வைத்து 'அந்தாதி' என்றார். தோற்றுவிக்கும் பொருளை அந்தம் ஆதி என்று சுட்டியவர் தோன்றக் காரணமான பொருளை 'மலம்' என்றார்.

ஒடுங்கியிருந்த மலத்திலிருந்து பொருள்களை ஆதிப்படுத்திய (தோற்றுவித்த) பொருளைத்தான் 'அந்தம் ஆதி' என்கிறோம். அதை பொருளாராய்ச்சி செய்த புலவர்களும் சொல்லியிருக்கிறார்கள் (என்மனார் புலவர்) என்கிறார் மெய்கண்டார். (இதன் மூலம் உரை அளவையை உறவுபடுத்துகிறார்).

தோன்றி நின்று அழிகிறவைகளை அதன் மூலத்தில் (மலத்தில்) ஒடுங்கச் செய்கிற பொருள் உண்டு. ஒடுங்கச் செய்த அந்தப் பொருள்தான் தோற்றுவிக்கவும் செய்கிறது. அவ்வாறு தோற்றுவிக்க 'ஒடுக்குவதனால் ஒடுங்குந்தன்மை'யை அறிந்த வகையில் செய்கிறது. அதுதான் தோற்றுவிப்பதற்கான தலைமைத்துவம் உடையது. ஒடுக்கி ஒடுங்கிய அமைப்பைச் செய்த பொருளே ஒடுங்கியதிலிருந்து உண்டாகுந்தன்மை உணர்ந்து உண்டாக்குவதாக இருக்கிறது. இவ்வகையில் 'அந்தத்தால் ஆதி' செய்யும் அப்பொருளையே 'சங்காரகாரணன்' என்றார். இவனே இந்த உலகிற்கு 'முதல்' பொருள் என்றார். 'சங்கார காரணனாகிய முதலையே முதலாக உடையது இவ்வுலகம்' என்ற தொடரால் முதல் நூற்பாக் கருத்தைக் குறித்தார்.



(v)

### தோற்றமும் ஒடுக்கமும்

இருக்கிற ஒன்றை வெளிப்படுத்துவதுதான் தோற்றம். அது இரு வகையில் நிகழ்த்தப்படுகிறது. ஒன்று தனிப்பொருளாக மறைந்திருப்பதை வெளிக் கொணர்வது. இன்னொன்று பல பொருள்களில் மறைந்திருப்பதை வெளிக் கொணர்வது.

நிலத்தில் மறைந்திருக்கும் நீரைக் கண்டுபிடித்தால் ஊற்று. வெற்றிலை பாக்கு சுண்ணாம்பைச் சேர வைத்து அதன் குழம்பில் இருக்கிற சத்து, நிறம் போன்று புதுமைப்படுத்துவது. கலப்பாக உள்ளவற்றையும் மயங்கி உள்ளவற்றையும் தனிப்பிரித்தலை தோற்றச் செய்தலாகக் காண்கிறோம்.

நீர் ஆவியானால் மீண்டும் நீராகிறது. பால் தயிரானால் மீண்டும் பாலாகாது. இதிலும் தனிப்பொருள் ஒடுக்கம், மயக்கப் பொருள் ஒடுக்கம் என்ற வேறுபாடு உண்டு. தனிப்பொருள் அருவ ஆற்றலாக மாற்றம் பெறும். மயக்கப் பொருள் வேறொன்றாகி தனிப் பொருள் நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அருவ ஆற்றலாகும்.

இரண்டு நிலைப்பட்ட பொருள்களாக ஆக்கியும் இரண்டு நிலைப்பட்ட பொருள்களை ஒடுக்கியும் பணியாற்றுகிற ஒரு பொருள் தேவை என்று ஏன் சொல்கிறோம்.

மயக்கம் - அரிசியும் உளுந்தும் மாவாகக் கரைதல்.

கலப்பு - அரிசியும் உளுந்தும் பொருளாகக் கலத்தல்.

தோன்றி நின்று அழிகின்ற நிலை இயற்கையாக (இயல்பாக) நடைபெறுதல் ஒன்று. தோன்றி நின்று அழிதல் ஆக்கமாக

நடைபெறுதல் ஒன்று. இயல்பாக நடைபெறுதல் என்பது நிலத்தில் மறைந்த நீரை வெளியாக்குதல் (Discovery) போன்ற நிகழ்ச்சி. ஆக்கமாக நடைபெறுத்தல் என்பது இனிப்பு தயாரிப்பது போலவும் விஷம் தயாரிப்பது போலவுமான எல்லாம். நீர் ஆவியாகிறது என்பதை சூடேற்றித் தெரிந்து கொள்வது ஒரு முறை. நீர் நிலைகளில் ஆவியாவதைக் காண்பது ஒருமுறை. இரண்டுமே இயற்கை நிலைகள்தான். அதாவது பொருள் அதுவே மாற அதன் சூழல் தன்மையே காரணமாக இருப்பது. இரண்டாவது, பொருளைத் தெளிவாக இணைப்பது, பிரிப்பது போன்ற வேலைகளால் ஆக்கப்படுத்துவது. பால் கெடுதல் என்பதோ புரையால் கெட்டது என்பதோ நிகழ்ந்தாலும் நிகழ்த்தப்பட்டாலும் இதுவே ஆக்கம் (செயற்கை).

இயற்கை, செயற்கை எனும் இரு நிலைகளாலும் நடைமுறை உண்மையையும் அடிப்படை உண்மையையும் உணர வேண்டும்.

இயற்கை, செயற்கை இரண்டாலும் தோற்ற ஒடுக்கம் யாவும் பார்க்கப்படுகின்ற பொருள்களுக்கே நிகழ்த்தப்படும் என்பது தான் நடைமுறை உண்மை.

(பார்க்கப்படாத பொருள்களின் தோற்ற ஒடுக்கம் என்பது அவ்வவற்றின் ஆற்றல் பெருக்க சுருக்கமாகவோ சுருக்க பெருக்கமாகவோ அமைவதாகும். இதற்கு உதவுகிற பொருளை சிவசத்து, ஆணை என்ற சொற்களால் குறித்திருக்கிறார் மெய்கண்டார். ஆற்றல் பெருக்க சுருக்கம் என ஒடுக்கம் அமைவது ஆணவத்திற்கு. ஆற்றல் சுருக்க பெருக்கம் என ஒடுக்கம் அமைவது ஆன்மாவிற்கு).

அடிப்படை உண்மை என்னவெனில் 'அது' என்பதாகப் பார்க்கப்படுகிற உயிருள்ள, உயிரில்லா பொருள்களின் தோற்ற இருப்பு ஒடுக்கம் 'இயற்கை' முறை இயக்கப்பாட்டின. ஆண், பெண் என்ற வேறுபாட்டில் பார்க்கப்படுகின்ற (உயர்திணை) இரண்டுமே செயற்கை முறை இயக்கப்பாட்டின. இந்த வேறுபாட்டில் இயற்கைத் தன்மைக்குப் பாவ, புண்ணிய



விளைவுக்குரிய வினை இல்லை. பின்னதில் 'வினை' உண்டு. இந்த 'வினை' எனும் மூலப்பொருள் விளங்க அடுத்த 'நூற்பாவை' அமைத்தார். முன்னதாக அமைந்த இந்நூற்பா பார்க்கப்பட்ட உலகத்தின் தன்மையைத் தெளிவாக்கி, உலகத்தினை காட்சிப்பாட்டில் நிகழ்த்தும் பொருளான 'அந்தம் ஆதி'யை முடிவு செய்துள்ளது.

ஒடுக்கத்தில் குறை ஒன்று உண்டு. ஒடுக்குவதில் ஆற்றலாக்கி மலம் ஒன்றில் ஒடுக்குகிறது அந்தத்தைச் செய்யும் பொருள். 'அது' எனும் பொருள்களை ஒடுக்குவதில் இது முழுமை பெறும். ஆனால் அவன், அவள் என்பதில் ஒடுக்கம் என்பது குறை உடையது. அவன், அவள் என்பவற்றின் ஒடுக்கம் அதனதன் தனி நிலைகளைச் சார்ந்து நிகழ்வது. ஆன்மாக்கள் நிலைத்தன்மை (முத்தி) பெறும் போது கருவிகளை விடா. எனவே தோற்றியதானது திதியாகவே நின்றுவிடும். எனவேதான் 'தோற்றிய திதியே' என்றும் முற்றுப்புள்ளி வைத்து விடுகிறார். 'அது' என அறியப்படும் பொருள்களில் தனிநிலை சார்ந்தே அவை ஒடுக்கப்பட்டாலும் ஒடுக்கத்தில் தடை இல்லை. (மரத்தை விலங்காக மாற்றுவது வரை ஒடுக்க மாற்றம் உண்டு; ஒடுக்கத்தில் தடை இல்லை).

அந்தப்பட்டதிலிருந்து வெளிப்படுத்தும் செயல்பாட்டில் முழு உரிமையில் சொல்லப்படும் வகையிலேயே முதற்பொருளை 'அந்தம் ஆதி' என்று குறிப்பிடுகின்றார். இன்னும், அத்தன்மையிலிருந்து ஆதிப்படுத்தலை விளங்கிக் கொண்டால் அதன் சொல்லின் (அந்தம்) தலைமைத் தன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

ஒருவன் பிறந்ததிலிருந்து 50 வயது வரை உணவு உண்டால் 50 x 250 = 18,250 நாள்கள் உடைய 54,750 முறை உண்டான். குறைந்த அளவு அரிசி 15,000 கிலோ உண்டிருக்கிறான். மிளகாய், எண்ணெய் என நூறு நூறு கிலோ உண்டிருக்கிறான். அவ்வளவு சாப்பிட்டவன் 60 - 70

கிலோவைத் தாண்டவில்லை. ஆற்றலை மாற்றினான். ஆற்றல் மாற்றம் ஒடுங்கியதா தோன்றியதா? தோற்றமும் ஒடுக்கமும் குறித்து ஈடு எப்படிப்பட்டது என்பதை விளங்கிக் கொண்டால் 'ஒடுங்கியதிலிருந்து தோற்றுவிக்கும்' என்பதன் 'அந்தாதி' உண்மை புலப்படும். அரிசியிலிருந்து ஆற்றல் விளைகிறது; ஆற்றல் சேகரமாக அது இல்லை. அதுவும் விளைவாகிறது. இப்படிப்பட்ட தொடர் நிகழ்ச்சியில் காட்சிப்பட்ட அரிசியிலே ஆற்றல் என்பது ஒடுக்க இறுதி. இது அனுபவம். ஆனால் அரிசியில் ஆற்றல் ஒடுக்கப்பட்டிருந்த வகையிலேயே ஆற்றலுக்கு ஆனது. ஆக பார்க்கப்பட்டது என்பதே ஒடுக்கம்தான். அது காட்சிப்பட்ட வகையில் பொருள்கள் அவ்வளவே. அவை குறித்த அழிவும் இன்னொரு தோற்றமே. அதன் இறுதி என்பதுதான் ஒடுக்கம். காட்சியில் இறுதிப்படவில்லை. அரிசியின் ஒடுக்கம் தெரிந்தால்தான் ஆதிகாரணம் தெரியும். அப்படியில்லையென்றால் ஆற்றலாக அழிகிற அரிசி மீள அரிசி போலவே தான் ஒடுக்கம். உண்மையில் நமக்கு ஒடுக்கம் தெரியாது. ஆதியும் தெரியாது. அப்படி ஒன்று நம்முன் காட்சியில் இறுதிபடவில்லை. அதனால் தான் மலத்து உளதான ஒடுக்கத்தைத் தோற்றிய திதியாக்குவது 'அந்தாதி' என்றார். அந்தப்படுத்தி ஆதியாகக் காட்டுகிற ஒன்றுதான் அந்தாதி. ஒடுங்கிய மலத்திலிருந்து தோற்றி அதை மாற்றி மாற்றித் தோற்றப்படுத்தித் திதிப்பட வைத்துக் கொண்டிருக்கிறது அது. அது திதித் தன்மையில் முற்றுப்பெறும் வரை நீளுவது. இந்த நீட்டத்திற்கு 'மலம்' துணையாக இருக்கிறது என்ற வகையில் 'ஒடுங்கி மலத்து உளதாம்' என்கிறார். பாலைத் தயிராக்கிடும் சுழற்சியில் பால் வரவேண்டுமானால் பொருள் மூலத்திற்கே சென்று வர வேண்டும். இந்தச் சுற்று முறைக்கும் வேறொன்றாக மாற்றவும் மலத்தில் ஒடுக்கி ஆக்க வேண்டியிருக்கிறது.

இந்த முறையை எண்ணித் தலையடித்துக் கொள்ள வேண்டாம்.



உணர வேண்டியது ஒன்றுதான் – இருப்பது என்ற ஒன்றாக உணரப்படுவது தோற்றுவிக்கப்பட்டது என்பது. அவ்வாறு தோற்றுவிக்கப்பட்டது அழிவது. என்றாலும் அழிவது என்பது இன்னொரு மாற்றமே. இந்த மாற்றத்திற்கு உட்படாமல் தோற்றிய திதியை திதியாக உணர்வதோடு கூட 'திதி' எனவே நிறுத்தச் செயல்பட வேண்டும் என்பதுதான்.

அரிசியில் ஒடுக்கப்பட்ட ஆற்றல் பார்க்கப்படவில்லை. அரிசி பார்க்கப்படுகிறது. அரிசியிலிருந்து ஆற்றல் மாறும் போது 'அரிசி' என்ற ஒன்று இல்லை. அடுத்த ஆற்றலாக அது ஒடுக்கப்படுகிறது. பார்க்கப்பட்டதன் எல்லாவற்றின் மூலம் மலம். அந்த ஒடுக்கத்திலிருந்து முதற்பொருள் செய்த தோற்றத்தால்தான் திதியே. இந்தத் திதி உம்மால் உணரப்பட வேண்டும் என்பதே கருத்து. உள்ளதை உணர்ந்தால் 'அந்தம் ஆதி' என்ற முதற்பொருள் உண்மை உணரப்படும்.

அவன், அவள், அது என காட்சிப்படுகிறது உலகம். இந்த மூன்றில் தோன்றி நின்று அழியும் தன்மையில் உலகக் காரியப்பாடும் காட்சிப்படுகிறது. தோன்றி நின்று அழிதல் என்ற முடிவானது இருக்கிற எந்த பொருளுக்கும் உண்டு என்பது கருதல் முடிவாகிறது. இதனை ஆராய்ந்தால் அழிதல் (ஒடுக்கம்) என்பது ஆற்றல் மாற்றமாக உணரப்படுகிறது. இதனை ஆராய்ந்தால் ஒடுங்கி இருந்த ஆற்றலைப் பொருள்களாக மாற்றிய நிலை புலப்படுகிறது. ஒடுங்கியிருந்த மூலப் பொருளான ஒன்றை 'மலம்' எனக் குறிப்பிடலாம். அதிலிருந்து தோன்றியதனால் இருக்கிற நிலைதான் 'திதி' என்பதே. இந்த வகையில் அந்தப்பட்டிருந்ததை ஆதிப்படுத்திய 'அந்தாதி' தான் 'முதற்பொருள்'. இதை மாற்றத்தாலும் (புலன்கள்) கூறியுள்ளார்.

குறிப்பு : நூற்பாவில் உரைத்த கருத்தை விரிவாக்கி நிறைவாக விளக்க அதிகரணம் (பிரிவு) வைத்து எடுத்துக்காட்டு வெண்பாக்களை அமைத்துள்ளார்

மெய்கண்டார். இதன்படி மேலே நூற்பாவின் கருத்தை விளக்க அமைந்தவற்றைக் காண்போம்.

காட்சியால் காணப்படும் பொருள்களைப் பற்றிய முடிவை வழங்குவது முதல் நூற்பா. அந்த முடிவினில் பெறப்படும் முடிவுகளையும் உறுதி செய்யும் புலமை (உரை) முடிவையும் தெளிவாக்குகிற வகையில் முதல் நூற்பாவில் எடுத்துக்காட்டு வெண்பாக்களை அமைத்துள்ளார். அதில் முதல் வெண்பாவானது காட்சிப்படும் அவன் அவள் அது என்பதன் 'காட்சி உண்மை'யை விவரிப்பது.

## முதல் அதிகரணம்

**மேற்கோள் : ஈண்டு, உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து என்றது.**

ஏது : தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்.

**மேற்கோள் விளக்கம் :** இங்கே இருக்கிறது என்பதாக பார்க்கப்படுகிற உலகம் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று காட்டப்படுகிறது. இது உண்டாக்கப்பட்டு, இருந்து அறிகிற நடைமுறை உடையது.

**ஏது விளக்கம் :** 'இருக்கிறது' என்பதன் மீதே தோன்றியது எனும் உண்மையும் அழிவது என்ற உண்மையும் அடங்கியிருக்கிறது.

எடுத்துக்காட்டு வெண்பா 1-1-1

**பூதாதி ஈறும் முதலும் துணையாக,**
**பேதாய், திதிஆகும் பெற்றிமையின் - ஓதாரோ**
**ஒன்று ஒன்றின் தோன்றி உளதாய் இறக்கண்டும்**
**அன்றுஎன்றும் உண்டுஎன்ன ஆய்ந்து.**



**வெண்பா உரைத்தொடர் :** ஈறும் முதலும் துணையாகத் திதி ஆகும்; பூதாதி ஒன்று ஒன்றின் தோன்றி உளதாய் இறக்கண்டும் அன்று என்றும் பேதாய் ஓதாரோ; பெற்றிமையின் உண்டு என்ன ஆய்ந்து.

### விளக்கம்

(i)

இறுதி, தொடக்கம் இவைகளை உடன் கொண்டே இருப்பது (திதி) என்பது அமைகிறது.

பூதம் தொடங்கிக் காணப்படுகின்ற பொருள்கள் அனைத்தும் ஒன்று ஒன்றின் சார்பு என இணைப்பால் தோற்றப்பட்டு காட்சிப்படுவதாக உள்ள தன்மையன. அவை பின் இல்லாமையைக் காண்பதாலும் பொருளை இல்லை என்றும் ஓதுபவர் பேதையர். அப்படிப் பேதை கூட ஓதக்கூடாது.

ஆய்ந்து பார்த்தால் இல்லாமற் போகின்ற பொருள்கள் பெற்றுக் கொள்ளும் பொருளில் அப்பொருளாக உள்ளதாகவே (ஒரே பொருள் என) அமையும்.

(ii)

காணப்படுகின்ற பொருள்களை 'பூதம் தொடங்கி' என்று குறிப்பிடுகின்றார். பார்க்கப்படுகிற எல்லாமே 'பூதம்' என்ற சொல்லால் குறிக்கப்படும். 'நிலம்' பார்க்கப்படுவதாக இருக்கிறது. நிலம் என்பது பார்க்கப்படுகிற எல்லாவற்றையும் உள்ளடக்கிக் காட்சிப்படுகின்ற தலைமைத் தன்மை உடையது. இதில் சூரியனும் கூட அடங்கும். நிலத்தின் சார்பில் உணரப்பட்டது நீர். நிலம் தாங்குவதாகவும் (மழை நீர், கடல் நீர்) நிலத்தின் உள் தங்கியதாகவும் நீர் அமைகின்றது. நிலத்தைவிட அருவப்பட்டதாக நீர் அறியப்பட்டது. அதனைவிட பொருள்களின் உள்ளிருந்து வெளிப்பட்டது தீ. இது மூன்றாம் நிலை அருவத் தன்மையினது பின் அருவத் தன்மையின் பார்க்கப்படாமல் உணரப்படுகிற

'வளி'யை உறுதி செய்தான். மற்ற காணப்படாத அருவத்தை 'வெளி' என நிறுத்தினான். இப்படிப் பார்க்கப்பட்டதன் ஆதித் தன்மை பார்க்கப்படாதனவற்றையம் உறுதி செய்ய அமைந்த முறைதான் ஒன்று ஒன்றின் தோன்றும் முறை. பூதம் தொடங்கி பொருள்கள் இந்த முறையின் அடிப்படையில் உள்ளதாக இருக்கின்றன. இந்த முறையை அறிந்தால் இருந்த பொருள் இல்லாமற் போவதைக் கண்டு 'பொருளே இல்லை' என்று பேதை கூட சொல்ல மாட்டான். ஆராய்ந்து பார்த்தால் இல்லாமற் போன பொருள்கள் 'பெற்றுக் கொள்ளவதான பொருளில்' இருக்கும்.

## (iii)

### 'இருப்பது' என்ற சொல்லின் பொருள்

ஒரு பொருள் இருக்கிறது என்று சொன்னாலே அதன் பொருள் என்ன என்பது முதல் ஆராய்ச்சி.

ஈறு (அழிவு), தோற்றம் இவைகளைத் துணையாகக் கொண்ட ஒன்று தான் 'இருப்பது' என்பது.

உலகத்தில் நமக்கு எதிரே இதுவரை இல்லாத ஒன்று இப்போது வந்திருக்கிறது. அது எதிரே இருக்கிற செடியாக இருக்கலாம். நம் வீட்டுக் குழந்தையாக இருக்கலாம். இந்த புதிய ஒன்றன் இருப்பு இதுவரை இல்லாதிருந்து வந்திருக்கிறது. இதே போல எதிரே இருக்கிற பொருள்களில் பல இல்லாமற் போயிருக்கிறது. எதிரே இருந்த மரம் அழிந்து விட்டது; மனிதர் ஒருவரும் இறந்து விட்டார். இருந்த அந்த பொருள்கள் இல்லாமற் போய்விட்டன.

இருக்கிற பொருள் தோன்றியதாகவும் இருந்த பொருள் இல்லாமற் போனதையும் கண்படக் காண்கிறோம். இதனால் 'இருப்பது' என்ற உண்மையைப் பற்றி ஒரு முடிவுக்கு வருகிறோம். 'இருப்பது' என்பதே 'தோன்றியது' என்பதும் 'அழிவது' என்பதும் கொண்ட ஒரு நிலை என உணர்கிறோம்.



தோன்றி, அழிகிற தன்மையை 'இருக்கிற' ஒவ்வொரு பொருளுக்கும் சொன்னாலும் 'இருப்பது' என்ற நிலைமையைத் தெளிவாகச் சொன்னதாக ஆகவில்லை. காரணம், 'இருப்பது' என்பதே விதையிலிருந்து செடியாகவும், செடியிலிருந்து மரமாகவும் மாறி மாறி இருப்பதாக இருக்கிறது. ஒன்றே இப்படி மாற்றம் அடைகிற தன்மையில் 'இருப்பது' என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். இதற்கும் விடை அதிலேயே இருக்கிறது. அதாவது தோன்றி அழியும் பொருள்களின் இருக்கிற தன்மை என்பது அழிந்து அழிந்து மாறிக்கொண்டே இருக்கிறது என்பது. இந்த அழிதல் தன்மை என்பது நிலைமாற்றமாக ஒரே பொருளில் உணரப்படுகிறது என்பதும் குறித்துக் கொள்ளப்பட வேண்டியது.

தோன்றி இருக்கிற எந்தப் பொருளும் முற்றாகக் காட்சியிலிருந்து அழிவதற்கு முன்னாலும் நிலைமாற்றதமாக உணரப்படுகிறது. எனவே 'இருப்பது' என்பதே அழிதல் தன்மையை உடன்கொண்டே 'இருப்பது' என்பதால் ஈறும் முதலும் துணையாக நிகழும் காரியமாகச் சொல்லப்பட்டது. இந்த முறையினாலும் அழிவுபடுதல் என்பது முதன்மைக் காரியமாக உணரப்படுகிறது. முற்றாக அழியும் தன்மை என்பது காட்சியிலிருந்து நீங்கும் தன்மை என்பதாகவே நம்மைப் பொறுத்த விடையாக மலர வேண்டும்.

காட்சியிலிருந்து நீங்கிய அத்தன்மையே 'அழிதல்' என்றெல்லாம் நமக்கு உடனடியாக நினைவுபடுத்தப்படுகிறது.

'இருப்பது' என்ற ஒரு காரிய நிலையின் தன்மையை இதன் மூலம் தெளிவுபடுத்துகிறார் மெய்கண்டார்.

'உள்ளதே தோன்றும் இல்லது வாராது' என்பது "தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்" என்ற ஏதுவால் மெய்கண்டாரால் விளக்கப்படுகிறது.

'தோற்றமும் இறுதியும் உள்ளதனிடத்தே இருக்கிறது' என்று விளக்கியதன் நோக்கம் காரண காரியத் தன்மையை தெளிவாக்குவதற்காகும்.

களிமண் என்பது குடம் என்ற காரியத்திற்கு உரிய காரணப் பொருள். கணிமண் என்பதில் குடத்தன்மை இருந்தால்தான் குடம் என்ற காரியம் கிடைக்கிறது. சாதாரண மண் என்பது குடத்திற்கான காரணமாக அமையாது.

அடுத்து, 'களிமண்' என்பதை ஒரு காரியமாகக் கொண்டால் அதற்குரிய காரணம் எது? மண்ணின் நெகிழ்வுத் தன்மை அதன் காரணத் தன்மைக்குத் துணையாவது.

சிலிக்கா மணலிலிருந்து கண்ணாடி உருவாக்கலாம்; கண்ணாடிக் குடமும் உருவாக்கலாம். களிமண் குடம், சிலிக்கா மணல் (கண்ணாடி) குடம் இரண்டும் வேறு வேறு. இப்படி காரியப்பாட்டை நாம் காணும் பொருள்களிலிருந்தே முடிவு செய்ய வேண்டும். காணும் பொருள் என்பது 'உள்ளது' (இருப்பது). இதுதான் தோற்றத்தையும் இறுதியையும் காரண காரியமாகக் கொண்டிருக்கிறது. குடத்திற்கான காரணம் களிமண். தண்ணீர் பிடிக்க குடம் உதவும்போது குடம் துணைக் காரணம். இப்படிக் காரண காரிய உறவில் வந்த பொருள்கள் பலவும் துணைக் காரண நிலையில் வந்து நின்றுவிடும்.

இங்கே மறுபடியும் குடம் என்ற ஒன்று காரணமாக இருந்து எந்த ஒன்றையும் தோற்றுவிக்காது. இப்போது இதன் அழிவு என்பது காட்சியிலிருந்து முற்றாக நீங்குதல் என்பது. (பிறகு அதற்குரிய மூலமாக மாறும். அது எது என்பது 'இறுதி' ஆராய்ச்சி).

மாத்திரை மருந்து சில பொருள்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. அது குடத்தைப் போல ஒரு காரியம்தான். ஆனால் அதுவும் நோயை நீக்குகிற வகையில் காரணப் பொருளாக ஆகிறது. ஆனால் இந்தக் காரண நிலைக்கும் களிமண் குடத்தைத் தோற்றுவிக்கும் காரண நிலைக்கும் வேறுபாடு உண்டு. நோய் நீங்குகிறது என்பது கதிரவன் வந்ததும் இருள் நீங்குவது போன்றது.



ஆக, காரண காரிய உறவில் இருவகை இயக்கப்பாடு உண்டு என்பதை முடிவு செய்ய வேண்டும். அதைப் பொருளின் இருப்பால் (உள்ள தன்மையால்) முடிவு செய்ய வேண்டும்.

காட்சிப் பொருள்களை உணர்வதிலிருந்து பொருளின் இருப்பு குறித்த முடிவில் உறுதிப்படும் காரண காரிய விளைவு இரண்டாகும்.

அ. தனிப்பொருள் காரண காரிய மாற்றம்

ஆ. தனிப்பொருள் காரண காரிய காரணத் தொடர்ச்சி

தனிப்பொருள் காரண காரிய மாற்றம் களிமண் குடம் போல.

தனிப்பொருள் காரண காரிய காரணத் தொடர்ச்சி என்பது மாத்திரை உண்டாக்கப்பட்டு மாத்திரை நோய் நீக்கக் காரணமாவது போல.

இந்த இரண்டுக்கும் கூட வேறுபாடு பெரிதாக எதுவும் இல்லை. என்னவென்றால், களிமண்ணை மாத்திரையைப் போல மூலமாக உருவாக்கத் தெரிந்த மனிதருக்கு. இதில் பொருத்த வேறுபாடு அல்லது அறியப்பட வேண்டிய நுண்பொருள் யாதெனில், முடிவு பற்றிய கருத்தில்தான்.

குடம் பற்றிய அழிவும் மாத்திரை பற்றிய அழிவும் ஆகிய அழிவு வேறுபாட்டில் உயிர் அறிவியல் (Bio Science) விடை கூறலாம். உண்மையில், அழிவுப் பொருளையும் அழிவில் பொருளையும் வேறுபடுத்தி விளக்கப்படும் இந்த இடம்தான் காரண காரிய உறவின் தேவையையும் வலிமையையும் உறுதி செய்கிறது.

முயலுக்குக் கொம்பு இல்லை என்றும் முயலுக்குக் கொம்பு வராது என்றும் கூறுவது 'இல்லது' என்று வராது என்பதற்கு எடுத்துக்காட்டு. களிமண்ணில் குடம் வரும். இது உள்ளது தோன்றும் என்பதற்கு எடுத்துக்காட்டு. ஆனால் பூதாதியில் வல்லான் வரின் நிலைப்பாடு மாறும். ஏனெனில் ஐம்பூதக் கலப்பும் மயக்கமுமாக இருக்கிற உலகில் எதுவும் காட்சிப்படுத்தல் இயலும். இதுதான் எப்பொருளும் ஆக்கும் ஈசத் தன்மைக்குப் பொருந்துவது.

பொருள் தன்மையின் இருப்பில் என்ன உண்டு என்பதை அறிதல்தான் காரியத்தன்மை அறிவு. அதுதான் அதன் முதற் காரணத்தையும் இன்னொரு காரியத்திற்கான காரணத் தன்மையையும் விளங்க வைக்கும். இதை உணர்வதுதான் தோற்றமும் ஈறும் உள்ளதன்பால் காணும் அறிவு.

காரண காரிய உறவில் 'காரிய முடிவு' உணர்த்தும் உண்மை என்னவெனில் பொருளின் உள்ள தன்மையால் பொருள்கள் வேறுபடுகின்றன என்பது.

'பொருளின் உள்ள தன்மை' என்பது அறிவு உள்ள தன்மை, அறிவு இல்லாத தன்மை என இதில் சென்று முடிவுபடுகிறது.

காரண காரிய உறவில் பொருள் வேறுவேறாக இருப்பன உறுதி செய்யுமிடம்தான் பொருள் முடிவுக்கு உரிய இடம். கதிரவன் ஒளி வந்தால் இருள் சிறுமைப்படுகிறது. இந்தக் காரண காரிய உறவில் இரண்டு வேறுபட்ட பொருள் தன்மை உண்மையாகிறது. களிமண், குடம், மண் (குடம் உடைக்கப்பட்டு ஆக்கப்பட்ட துகள்) இவை அதன் தொடர் காரண காரிய நியதியாவன. இவை எல்லாம் ஒரு மூலத்தில் இணையும். எடுத்துக்காட்டாக ஐம்பூதத்தில் அவை ஒடுங்கும், பின் ஐம்பூதமும் மலத்தில் ஒடுங்கும் முறை என்பது. இதனை உறுதி செய்ய நாம் உணர வேண்டிய முறைதான் உருவத்திலிருந்து அருவத்தை உணரும் முறை. நிலத்திலேயே அருவமாக நீரை; பொருள்களிலிருந்து வெளிப்படுத்தும் அருவமாகத் தீயை; உணரப்படும் அருவமாகக் காற்றை; இவை யாதாலும் உணரப்படாது அருவமாக வெளியை உறுதி செய்து காட்சிப் பொருள்களின் மூலமாக மலத்தை (மாயை) உறுதி செய்தல்.

இங்கே, காரண காரிய உறவில் தெளிவாக இறுதி செய்ய வேண்டிய கருத்து யாதெனில், பொருள்களைத் தனிப்பொருளாக உறுதி செய்ய உதவும் முறையில் தெளிவுபடுதல். இந்தத் தெளிவு தான், அறிவுப் பொருளான ஆன்மாவையும் அறிவில்லாப் பொருள்களான மலங்களையும் தனித்தனிப் பொருள்களாக இறுதி செய்ய உதவுவது.



'இருப்பது' என்பது எப்படி இருக்கிறது என்பதை முடிவு செய்ய வேண்டும். இருக்கிற பொருளின் காரியத்தன்மை அது காரணமாகப் பயன்படும் தன்மை இரண்டையும் உரைப்பதால் அந்த முடிவு கிடைக்கும். அதுவே அதன் தோற்றத்தையும் இறுதியையும் தெரிவிப்பது. எப்படித் தோன்றியது என்பதுதான் அப்பொருள் உண்டாக்கப்பட்ட காரணத்தை ஆராய்வது. எப்படி எது காரணமாக இருந்து விளைவிக்கும் என்பதை அறிவதுதான் அதன் இறுதி பற்றிய அறிவு. இந்த இரண்டை இணைத்துக் கொண்டு தான் 'உள்ளதாக' காட்சிப்பாட்டில் பொருள் இருக்கின்றது.

'இருப்பது' என்பதன் ஆராய்ச்சி அருவத்தை நோக்கி இட்டுச் செல்கிறது. அது பொருள்களைத் தனித்தனிப் பொருளாக அடையாளங் காட்டுகிறது. அப்படி அடையாளப்படும் பொருள்களில் 'இதிலிருந்து இதுதான் வரும்; இது இப்படித்தான்' ஆகும் என்பது தெளிவாகிறது.

### (iv)

### ஒன்று ஒன்றின் தோன்றி உளதாய் இறக்காணல்

உள்ளதாகக் காட்சிப்படுகிற பொருள்களின் தோற்றம் பற்றிய விளக்கமே 'ஒன்று ஒன்றின் தோன்றும்' என்பது. தோன்றிய பொருள் காட்சியில் இல்லாமல் நீங்கும் அறிவும் 'ஒன்று ஒன்றின் அழியும்' என்பதும் உடன் அமைந்த விளக்கமாகும்.

ஒன்று ஒன்றின் தோன்றுதல் என்பதையும் அழிதல் என்பதையும் காரண காரிய உறவில் தெளிவுபடுத்த வேண்டும். ஆனாலும் காட்சிப்படுகின்ற பொருள்களிலிருந்து விளக்கித்தான் காட்சிப்படும். பொருள்களின் காரண காரியத்தை விளக்க வேண்டுவது மெய்கண்டார் முதல் நூற்பாவில் எடுத்துக் கொண்ட முறை. காட்சியளவை அடிப்படையிலான இந்த முறையே எல்லா மனிதருக்குமான பொது முறையாகும்.

காட்சிப்படும் பொருள்கள் 'ஒன்றின் ஒன்றாக' தோற்றப்பட்டு இருப்பவை.

பொருள்கள் காட்சிப்படுகின்றன என்று சொன்னால் அவை 'சுட்டி அறியப்படுகின்றன' என்பது பொருள். 'இது' என்று பொருள்களை முதலில் காணுகிறோம்.

'இது' என்று சொல்லப்படும் பொருள்களை 'இப்படிப்பட்டது' என்று கூறுகிறோம். இந்தக் காட்சி முறைக்கு விடைதர பொருள்களின் 'அவயவப் பகுப்பு' உதவுகிறது. அதாவது, பகுதி பகுதியாக பல்வேறு உறுப்புகளால் இணைந்த தொகுப்பாகப் பொருளைப் பார்க்கிறோம். இவ்வாறு 'கண்டு' கூறும் முடிவுக்கு உதவும் பொருள்களின் தன்மை 'அவயவப் பகுப்புத் தன்மை' ஆகும். மேசையானது நான்கு கால்கள், இடைச்சட்டம், மேற்பலகை எனப் பல உறுப்புகளால் ஆனது. அது பல்வேறு உறுப்புகள் இணைப்பால் உள்ள 'மேசை' என்று ஒரு பொருளாக பார்க்கப்படும் பொருள். இதே போலவே கை, கால், தலை முதலிய உறுப்புகளின் தொகுப்பாக மனிதர் இருப்பது.

'இது' எனச் சுட்டியறியப்பட்ட பொருளை உறுப்புகளாக 'இன்னது' எனப் பார்க்கும் போது காட்சிப்பட்ட எல்லாமே அறிவில்லாதவை (சடம்) என்பது தான் முடிவு. இப்படிப் பார்க்கப்பட்டதான பொருள்கள் (சடம்)தான் பலவாக இருக்கின்றன.

ஆக, பலவாக இருக்கும் பொருள்கள் அறிவில்லாதனவாக உறுப்புகளின் இணைப்பாக இது எனச் சுட்டி அறியப்படுகின்றன என்பது உணரப்பட்டது.

இப்படி உணரப்பட்ட அப்பொருள்களின் இருப்பு என்பது சார்பாக ஒன்றின் ஒன்று இணைப்பாகத் தோற்றுவிக்கப்பட்டு இருக்கின்றன. ஒன்றின் ஒன்றன் பிரிவாக அழிவு என்பது அமைகிறது.



ஒன்றின் ஒன்றன் சார்பை உணர்ந்தால் காட்சிப்படும் பொருள்களின் தோற்றுவித்தல் முறையும் அறிவு பற்றிய தெளிவும் கிட்டும்.

கை, கால் முதலியன சேர்ந்து இருப்பதால் மனிதர். சட்டம், கால் சேர்ந்து இருப்பதால் மேசை. இவைகளை நீக்கிப் பார்க்கிறோம், மேசைப் பொருள்கள் உண்டு, மேசை இல்லை. அதே போல மனிதன் இல்லை. (இங்கு உயிரை நினைக்க வேண்டாம்). பார்க்கப்பட்ட முழுமையானது பிரிப்பில் இல்லை. இந்தப் பிரிக்கப்பட்ட முழுமையை (கை, சட்டம்) இன்னும் பிரித்தால் நுண்மை புலப்படும். இந்த நுண்மை அருவத்திற்குக் கொண்டு செல்லும். அது இறுதியில் மூலப் பொருளாக, ஐம்பூதமாக மாறும். உலகப் பொருள்களை மேசை, மனிதரைப் பார்ப்பது போல நீக்கிப் பார்த்தால் இவைகளின் மூலப் பொருளான அருவப் பொருள் புலப்படும். மேசை, மனிதர் போன்றவற்றை நேராகப் பார்க்க முடிகிறது. ஆனால் பூதப் பிரிப்பைச் செலுத்தி மூலத்தைப் பார்க்க முடியவில்லை. இதைப் பார்க்க முடியாவிட்டாலும் முன்னதன் முறையை உணர்ந்தால் போதும். பொருளுக்கான மூலம் இல்லை என்று சொல்ல மாட்டோம். முன்னதன் முறையை உணராத பேதையாயிருந்தால்தான் அழிந்தபின் பொருளே இல்லை என்பது சொல்லுவான்.

அந்தத் தெளிவை முன்னும் பின்னுமாகப் பெற்றவன் பொருளுக்கான மூலம் பற்றிய முடிவையும் அப்பொருள் மூல ஒடுக்கத்திலிருந்து தோற்றுவிக்கப்பட்டது என்பதையும் பெறுவான்.

உறுப்புகளால் இணைந்து தொகுப்பாகப் பார்க்கப்படும் பொருள் பகுதிகளாகப் பிரிந்து அழிகிறது. எனவே ஒடுங்கியதிலிருந்து பகுதிகளை முதலில் தோற்றுவிக்க வேண்டும் என்பது முக்கியமானது என்பதை உணர வேண்டும். இப்படித் தோற்றுவிக்கப்பட்ட பகுதிகள் அந்த மூலத்தில் இருந்தவை என்பதோடு கூட அவை காட்சியிலிருந்து நீங்கி இல்லாமல்

போகின்றன என்றால் பெற்றுக் கொள்ளும் பொருளாகவே (மூலமாகவே) ஆகும் என்பதே உண்மை; அழிந்தபின் பொருளே இல்லை என்று சொல்வது தவறு. ஆய்ந்து பார்த்தால் இந்த உண்மை புலப்படும் என்பது கருத்து.

ஒன்று ஒன்றின் சார்பில் தோற்றுவிக்கப்பட்ட பொருள்களாக காட்சிப்படும் 'நிலம் தொடங்கி' விவரிப்பர். மொத்தம் 36 உறுப்புகளை (தத்துவங்கள்) இறுதி செய்கின்றனர் என்பது அவற்றின் மூலப் பொருளான மலத்தை மாயாமலம் என்பர். மாயாமலத்தை இரண்டாக எடுத்துக் கொண்டு பொருள் தோற்றக் காரணத்தை விளக்குவதைப் பின்வருமாறு காணலாம்.

தன்மாத்திரைகள் எனப்படும் ஐம்புலன்களை இடமாகக் கொண்டு தோன்றியவை ஐம்பூதங்கள். நிலம், நீர், தீ, வளி, வெளி ஆகிய ஐந்திற்கும் மூலங்களாய் அமைந்தவை நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஓசை ஆகிய தன்மாத்திரைகள். தன்மாத்திரைகள் ஐந்தும் தாமத அகங்காரத்தில் தோன்றுவன.

இராசத அகங்காரத்தில் தோன்றுவன செயல் கருவிகளான (கன்மேந்திரியங்கள்) வாய் (வாக்கு), கால், கை, மலவாய், கருவாய் முதலியன.

சத்துவ அகங்காரத்தில் தோன்றுவது மனம். அந்த மனத்தின் பிறகு தோன்றுவன செவி, மூக்கு, கண், நாக்கு, மெய் ஆகிய அறிகருவிகள் (ஞானேந்திரியம்). சாத்துவிக, அகங்காரத்தில் எஞ்சிய தமோகுணக் கூறாக விளைவது இருள்.

'கலை' என்ற தத்துவத்திலிருந்து 'மூலப்பகுதி' என்னும் 'குணதத்துவம்' தோன்றும். இதனை 'மாயை என வித்தியா தத்துவத்துள் ஒன்றாகக் குறிப்பிடுவர். முக்குணங்களும் விளங்காமல் நிற்கும் இம் மூலப் பகுதியிலிருந்து சீகண்ட ருத்திரரால் முக்குணமாகப் பிரியும். சத்துவம், ராசதம், தாமதம் என்ற மூன்று குணங்களில் சத்துவ குணம் மிகுந்தும் பிற குணங்கள் குறைந்தும் பரிணமித்தது புத்தி தத்துவம்.



புத்தியிலிருந்து சத்துவம், தாமதம் குறைந்து இராசதம் மிக்குத் தோன்றுவது ஆங்காரம் எனும் தத்துவம். சத்துவ அகங்காரத்தில் தோன்றிய மனத்தின் விருத்தியாக அமைவது 'சித்தம்' எனும் தத்துவம்.

மேலே கண்ட தத்துவம் அல்லது உறுப்பு விளக்கமானது காரணப் பொருளை ஒன்றின் ஒன்றன் மூலமாக விளக்குவது. மேலே கண்டது வரை உள்ள பொருள்கள் 'மூலப்பகுதி' எனப்படும் அருவப்பொருளில் முடிவு பெறுகின்றன. இந்த மூலப்பகுதியைத் தோற்றுவிக்கக் காரணமான 'கலை' போன்ற தத்துவங்களின் தோற்றத்தை இனிக் காண்போம்.

'அசுத்தமாயை' என்ற ஒன்று காலம் முதல் நிலம் ஈறாக உள்ள அனைத்திற்கும் மூலப்பொருள். இது 'அநந்ததேவர்' சத்தியால் இயக்கப்பட்டு பொருள்களாக்கப்படுகிறது. முதலில் காலம் பின் நியதி, பின் கலை ஆகியன தனித்தனி தோற்றுவிக்கப்படும். கலையிலிருந்து வித்தை தோன்றும். வித்தையிலேயே அராகம் தோன்றும். புருடன் என்ற தத்துவம் 'காலம், நியதி, கலை, வித்தை, அராகம்' என்ற ஐந்தன் தொகுப்பால் தனித்தனி ஆன்மாவுக்காக ஐந்தை ஒருப்படுத்தி தரும் பகுதி. (இதில் ஓர் ஆன்மா இணைக்கப்பட).

மேலே கண்டவாறு பொருளாக்கம் நிகழ்த்த உதவிய அருவப் பொருள் 'சுத்தமாயை' என்பது. இதனைப் பயன்படுத்தியே 'அந்தம் ஆதியைச்' செய்யத் தொடங்குவது பரம்பொருள். அது இலயம், போகம், அதிகாரம் என்ற மூன்று நிலைகளை வழங்கச் செயல்படுகிறது. அதை உயிர்களுக்குப் பொருள்கள் மூலம் வழங்க முதலில் சுத்தமாயையை இயக்கி பொருள் தோற்றங்களைச் செய்கிறது.

சுத்தமாயை சொல், பொருள் உலகங்களாகக் காரியப்படுத்தப்படுகிறது. சூக்குமையாகத் தோன்றி அதிலிருந்து பைசந்தியும் இதிலிருந்து மத்திமை வாக்கும், இதிலிருந்து

வைகரியும் தோன்றும். இவை யாவும் சொல் உலகம். பொருள் உலகம் சுத்த தத்துவம், கலை எனத் தோற்றுவிக்கப்படும். சுத்த தத்துவம் ஐந்து. தானேயான பரம்பொருளின் ஞான சத்தியால் சுத்த மாயையிலிருந்து உண்டாக்கப்படுவது 'சிவ தத்துவம்' (நாதம்). சூக்கும லய நிலைப் பரம்பொருளின் கிரியா சக்தியால் உண்டாக்கியது 'சத்தி தத்துவம்'. தூல லய நிலைப் பரம்பொருளாக போக அவத்தையால் ஞான சத்தியால் சிறப்பாக நோக்கி கிரியா சத்தியால் சிறப்பாகச் சங்கற்பித்து சுத்த மாயையில் உண்டாக்கியது 'சதாசிவ தத்துவம்'. அதிகார அவத்தையால் கிரியா சத்தியை மிகுதியும் செலுத்தி சுத்த மாயை உண்டாக்குவது ஈசுர தத்துவம். தூல அதிகார அவத்தையில் இருந்து ஞானசத்தியை மிகுதியும் செலுத்தி சுத்த மாயையில் உண்டாக்கியது சுத்த வித்தியா தத்துவம்.

நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என ஐந்து கலைகளை சிவமும் சத்தியும் தனித்தனி கலைகளாகச் சுத்த மாயையிலிருந்து தோற்றுவிப்பர். சுத்த மாயா விருத்தியாகவே தத்துவம், பதம், வன்னம், மந்திரம், ரூபம் ஆகிய மற்ற ஐந்து அத்துவாவும் தோற்றுவிக்கப்படும்.

'மாயை' எனும் அருவப் பொருளை மூலப்பொருளாக விளக்கினர். இந்த மாயை இறைவனைத் தொடர்பு கொள்ளவும் உலகத்தைத் தொடர்பு கொள்ளவுமாக கருவிகளாக ஆக்கப்படுகின்ற வகையில் இரண்டு மாயை எனப்பட்டன.

முதலாவதான, சுத்தமாயை ஆற்றல்களைப் பரம்பொருளிடத்திலிருந்து பொருளாக்கத்திற்குத் தாங்கிக் கொள்ளும் கருவிகளைத் தோற்றுவிக்கப் பயன்படுவது.

இரண்டாவதான அசுத்த மாயையிலிருந்து காலம், நியதி, கலை முதலான கருவிகள் தோற்றுவிக்கப்படுகின்றன. இவைகளின் தோற்ற முறைதான் மேலே விளக்கப்பட்டது. உலகத்தில் பார்க்கப்படுகிற பொருள்களால் அவ்வவற்றுக்குரிய



மூலத்தை ஒன்றின் ஒன்றன் சார்பாக மேலே கண்ட முறையில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

### (v)

### பெற்றிமையின் உண்டு

உலகத்தில் பொருள்கள் ஒன்றின் ஒன்றாய்த் தோற்றப்பட்டு இருக்கின்றன. இந்த முறையில் பொருள் என்பதாக நம்மால் பார்க்கப்படுகிற ஒன்றே 'அருவம்' என அமைவது. அதாவது மனிதனாகவோ மேசையாகவோ பார்க்கப்படுகின்ற ஒன்று உறுப்பகளாகத் தான் இருக்கின்றது. ஆனால் பார்க்கப்படுகின்ற போது முழுவதாகப் பார்க்கப்படுகின்றது. இந்த காட்சிக்குரிய முழுமையான தோற்றம் அருவமான ஒன்றே. இந்த தன்மையில் பொருள்களுக்கான மூலமாக மாயை என்ற மலம் அருவமாக இருக்கிறது என உணர வேண்டும். அதுதான் அவன், அவை, அது எனும் காட்சிப் பொருள்கள் ஒடுங்கியிருந்த இடமாகும். அதிலிருந்து பலவாக அவற்றைத் தோற்றுவித்ததுதான் அந்தத்திலிருந்து ஆதியைச் செய்த பொருள்.

அந்தத்திலிருந்து ஆதியைச் செய்தற்குரிய மலம் தான் பொருள்கள் அழியும் போது பொருள்களைப் பெற்று 'பொருளாக' (மூலமாக/மலமாக) நிற்கும் ஒன்று. இதைத்தான் 'பெற்றிமையின்' காணுதல் என்பதாகக் கூறுகிறார். பெற்றுக் கொள்ளும் ஒன்றாக இருப்பது என்பதோடு கூட ஒன்றின் ஒன்றன் சார்பில் தோற்றப்படும் முழுமைத் தன்மை போலக் காட்சிப்படும் எல்லாவற்றின் உள்ளடக்கமான பெற்றியுடைய பொருளாக இருப்பது என்பதையும் அதன் மூலம் விளக்கப்படுத்தினார்.

### கருத்துரை

'இருப்பது' என உள்ள பொருள்கள் காரியப்பட்டவை. அதாவது தோன்றியவை அழிபவை. இந்தத் தோற்றம், அழிவை இவற்றைக் காரண காரிய உறவில் சிந்தித்தால் பொருள் முடிவுகள் கிடைக்கின்றன. முடிவாக உள்ள தனித்தனிப்

பொருள்கள் அடையாளப்படுகின்றன. இருக்கின்ற பொருளின் காரண காரியத் தன்மையால் அறிவு உள்ள பொருள், அறிவு இல்லாத பொருள் என இரண்டு பொருள்களை முடிவு செய்வதற்கு உரிய முறையைப் பெறலாம். ஒன்றின் ஒன்றாகப் பொருள்கள் சார்பினால் தொகுதிப்பட்டிருக்கின்றன. இவை யாவும் அறிவு இல்லாத பொருள்கள். இந்தப் பொருள்களின் தொகுப்பின் முழுமை அருவம் போல காரணப் பொருளும் (மலம்) அருவமாக பொருளாக உள்ளது. இது காரண காரிய உறவில் தொடர்ச்சி நிலையில் அறிவில்லாத மூலப் பொருளைத் தனிப்பொருளாகக் காட்டுகிறது.

களிமண்ணிலிருந்து குடம் போல உலகப் பொருள்கள் அமையும் தொடர்ச்சிக் காரண காரிய உறவில் காட்சிப்பட்ட உலகத்தின் மூலப் பொருளாக அவற்றைப் பெற்றுக் கொள்ளும் பொருள் (மாயை) இருக்கிறது. இதற்கு வேறாக சூரியனில் விலகும் இருள் போன்ற காரண காரிய உறவில் வேற்றமைத் தொடர்பில் அறிவில்லாத பொருளின் உண்மையும் உண்டு என்பதும் பிடிபடுகிறது.

## இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, ஒடுங்கின சங்காரத்தின் அல்லது உற்பத்தி இல்லை என்றது.

ஏது : இல்லதற்குத் தோற்றம் இன்மையின், உள்ளதற்குச் செய்வோர் இன்றிச் செய்வினை இன்மையின்.

எடுத்துக்காட்டு வெண்பா 1-2-1

**இலயித்த தன்னில்இல யித்ததாம் மலத்தால்**
**இலயித்த வாறு உளதா வேண்டும் – இலயித்தது**
**அத்திதியில் என்னின் அழியாது அவையழிவது**
**அத்திதியும் ஆதியுமாம் அங்கு.**



**மேற்கோள்விளக்கம் :** ஒடுங்கினது என்பதாக அமையும் சங்காரத்தால்தான் உற்பத்தி (தோற்றம்). ஒடுங்கின சங்காரம் நிகழவில்லையென்றால் உற்பத்தி என்பது இல்லை.

**ஏது விளக்கம் :** இல்லாதது என்ற ஒன்றுக்குத் தோற்றம் என்பது இல்லை. உள்ளதாக ஆகும் எல்லாம் செய்வோர் இல்லாமல் செய்யப்படவில்லை. உள்ள தன்மையிலிருந்து செய்வோரால் செய்யப்பட்டு உள்ளதாகவே அமைந்து தோன்றிய பொருட்களும் இருக்கின்றன.

**வெண்பா உரைத்தொடர் :** மலத்தால் இலயித்தவாறு உளதா வேண்டும்; இலயித்தது அத்திதியில் என்னின் அழியாது; இலயித்த தன்னில் அத்திதியும் ஆதியும் ஆகும்; அவை அழிவது அங்கு இலயித்தது ஆம்.

(i)

இலயம் - ஒடுக்கம். 'ஒடுக்கம்' என்ற பொருளுக்கு அழிவு போன்ற சொற்களைப் பயன்படுத்துகிறோம். 'அழிவு' என்பதன் நிலைகளை ஆராய்வதில் 'ஒடுக்கம்' என்பதன் பொருள் உள்ளது.

அழிவு என்பது உறுப்புகள் பிரிவது; பின் காட்சியினின்று மறைவது. இதைச் சுட்டவே நாம் அழிவு என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

உணவு உண்ணுகிறோம். பொருள்களைக் கலந்தும் கலக்க வைத்தும் (வேக வைத்தல் போல) உணவாகத் தயாரிக்கிறோம். இது முதல் ஒடுக்கம். உணவை உணர்கிறோம். அது செரிக்கிறது. இது ஒரு ஒடுக்கம். 40 ஆண்டு வாழ்ந்த மனிதன் உண்ட 'டன்'களில் சாப்பிட்டவை போன இடம்தான் ஒடுக்கத்திற்கு உரிய இடம். இதை இறுதியாக ஒடுக்கியது ஆற்றல் மாற்றமாக. இந்த ஆற்றல் மாற்றத்தை ஏற்றுக் கொள்வதும் நிகழ்த்துவதும் என இரண்டு முதன்மைக் காரணிகள் உண்டு. இந்தக் காரணிகளை காணப்பட்ட பொருள்களிலிருந்து இறுதி செய்வதுதான் இந்த அதிகரணத்தின் பணி.

ஒடுக்கம் நிகழ்த்தப்படுவதை விளக்கியும் ஒடுக்கம் எப்படி நிகழ்த்தப்படுகிறது என்பதை விளக்கியும் 'ஏன்' நிகழ்த்தப்படுகிறது என்பதை விளக்கியும் மூன்று வெண்பாக்கள் அமைந்துள்ளன. அவற்றுள் முதல் வெண்பா ஆய்வு விளக்கம் இனி.

(ii)

**மலத்தாலேயே ஒடுக்கம் நிகழுமா!**

மலம் என்பது உலகப் பொருள்கள் அழிவின் போது அவற்றைப் பெற்றுக் கொண்டிருப்பது. அதில் எல்லாம் ஒடுங்கித் தோன்றுவது எப்படி என்பது ஆய்வு. அதனை 'மலத்தால் இலயித்தவாறு உளதா வேண்டும்' என்பதால் முதலில் தொடங்குகிறார்.

மலத்தாலேயே பொருள்கள் இலயித்தன (ஒடுங்கின) என்று சொன்னால் மலத்தாலேயே உண்டாக்கப்பட வேண்டும்.

மரம் ஒடுங்குகிறது என்று சொன்னால் மரத்தின் உயிர் இல்லாத போது காய்ந்து அழிகிறது. மனிதன் அழிகிறான் என்று சொன்னால் உடம்பைப் பேணாமையால். இவனால் பழுதாகிட இவன் அதை நீங்கிடும் நிலை ஏற்படுகிறது. நீர் ஒடுங்குகிறது என்று சொன்னால் ஆவியாகிறது. இப்போது அதன் ஹைட்ரஜனைப் பிரித்து எரிபொருள் ஆக்குகிறோம் (நானோ டெக்னாலஜி). 'கரி' ஒடுங்குகிறது என்று சொன்னால் செயற்கையாக எரிக்கப்படுகிறது. இயற்கையாக வைரமாக (எரி/ஒளி செய்வதாக) மாறுகிறது. இப்படிச் செல்லும் ஒடுக்க நிலைகள் எதுவாயினும் அவை தானே நிகழ்வதில்லை. இன்னொன்றன் துணையால் நிகழும். இது காட்சி விதி.

இதற்கு மேலும் ஒரு மூல விதி ஒன்று உண்டு. அதாவது, 'வைரமான' ஒன்று தானே பழைய கரி நிலைக்கு மாறுமானால் அது தானே காரணமாவதற்குக் காரியப்படும் தன்மை உடையது என்று ஒத்துக் கொள்ளலாம். இதுதான் மேலே சொன்னதன்



விளக்கம். இதன் மூலம் பெறப்படும் இன்னொரு கருத்தை அடுத்துக் கூறுகிறார்.

**தோற்றத்தையே ஒடுக்கம் எனலாமா!**

'இலயித்தது அத்திதியில் என்னின் அழியாது' என்பது இரண்டாவது கருத்து. இதன் விளக்கம் யாதெனில் ஒடுங்கியது என்பதே திதியாக மாற்றம் பெறுவதுதான் என்று சொன்னால் அது 'அழிவது' என எப்போதும் ஆக முடியாது என்பது. கரி வைரமாக ஆனதில் கரியானது காரணம்; வைரமானது காரியம். கரியிலிருந்து வந்த வைரம் அழியக்கூடாது. வேண்டுமானால் இன்னொரு காரியமாக மாறலாம். அந்தக் காரியம் காட்சியினின்று நீங்குவதை அறிவாக அமையக்கூடாது.

(iii)

**இலயித்த தன்னில் திதியும் ஆதியும் ஆகும்**

தானே ஒடுங்காமல் ஒடுக்கப்படுவதாக இருப்பதனால்தான் 'இலயித்தது' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். ஒடுக்கப்பட்டதனில்தான் திதியும் ஆதியும் ஆக்கப்படுகின்றன.

ஆதிப்படுத்தல் என்ற ஒன்று ஒடுக்கப்பட்டதிலிருந்து செய்யப்படும் காரியம். இதன் பொருள், 'ஒடுங்கியதே தோன்றும்' என்பதைத் தெளிவாக்கிக் கொண்டால்தான் விளக்கமாகும். அழிகிற வாழை மரம் வாழை மரமாகவே அழிவதில்லை. ஆனால் தோன்றுவது வாழைமரத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது. இந்தத் தோற்றம் என்பது ஆதியை உடையது. அந்த ஆதிப்படுத்தல் என்பதுதான் முக்கியமான பணி. அழிவதிலிருந்து தான் பொருள் தோற்றுவிக்கப்படும் என்று சொல்வதில் இரு நிலைகள் உண்டு.

அ. அழிவது என்பதாகிய மாற்றங்கள்

ஆ. மூலமாக மாறுவது.

களிமண், குடம், ஓடு, சுட்ட செம்மண் என மாறுவது போல நிலைமாற்றம் முதல் வகை.

குடத்தின் சுட்ட செம்மண் களிமண்ணாக ஆகாது. மண்ணின் மூலம் எதுவோ அதுவாக மாறுதல்தான் மூலமாதல். இது இரண்டாம் நிலை.

இந்த இரு வகை வினாக்களுக்கும் விடை தராத நிலையில்தான் 'மலமே ஒடுக்கிக் கொள்ளாது என்பதும், மலம் தோற்றப்பட்டது என்பதே ஒடுக்கம் என்பதும்' மறுக்கப்பட்டன.

எனவே 'ஒடுங்கியது' என்று சொல்லுவதன் பொருளை ஒடுக்கப்பட்டதால் 'ஒடுங்கியது' என விளங்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறே, ஆதியாதல் என்பதையும் ஆதிப்படுத்தப் பெற்றது என விளங்கிக் கொள்ள வேண்டும். இதனால்தான், ஒடுங்கிய அதனில் உள்ளதாக்கப்பட்டதும் தோற்றுவிக்கப்பட்டதும் ஆக்கப்பட்டன என்பதைக் குறிப்பதே 'ஆம்' (ஆகும்) என்றார்.

தோற்றுவிக்கப்பட்டவற்றின் 'அழிவு' என்பதும், உலகில் உள்ள பலவான பொருள்கள் அழியும் போது மூலப் பொருளாகவே ஒடுங்குவது ஆகும். இதுவும் ஒடுக்கப்படுவதால் ஆவது என்பதைச் சுட்டியே, 'அவை அழிவது அங்கு இலயித்தது ஆம்' என்றார்.

இனி, ஒடுக்கத்திலிருந்து ஆதிப்படுத்தப்படுதலை விளக்கும் முகத்தான் அடுத்த எடுத்துக்காட்டு வெண்பாவை அருளுகிறார்.

எடுத்துக்காட்டு வெண்பா 1-2-2

**வித்துண்டாம் மூலம் முளைத்தவா தாரகமாம்**
**அத்தன்தாள் நிற்றல் அவர்வினையால் - வித்தகமாம்**
**வேட்டுவன்ஆம் அப்புழுப்போல் வேண்டுருவைத்**
**தான்கொடுத்துக்**
**கூட்டானே மண்போல் குளிர்ந்து.**



**வெண்பா உரைத்தொடர் :** மூலம் வித்து, மண் குளிர்ந்து உண்டாம் முளைத்தவா தாரகம் ஆம், போல்; வித்தகம் ஆம் அவர் வினையால் அத்தன் தாள், தான் வேட்டுவன் ஆம் அப்புழுப்போல் வேண்டு உருவைக் கொடுத்துக் கூட்டானே.

**விளக்கம்**

மூலமானது வித்தாக இருக்கிறது. அது மண்ணில் கிடந்தாலும் மண் (நீரால்) குளிர்ச்சியடைந்த போது உண்டாவதுதான் முளைத்த நிலை. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளால் மூலத்திலிருந்த நிலைக்களங்களைக் காட்சிப்படுத்தி உண்டாக்கப்படுவதாம் நிலை போல,

வித்தகம் எனப்படுவது அறிவுப்பொருளின் ஆக்கம். அதன் செயலையொட்டி தலைமைப்பொருளின் இயக்கத்தால் வித்தகம் அமைகிறது. அது எப்படியெனில், புழுவிலிருந்து குளவி ஆக்கம்பெறும் நிலை போலத் தேவையான உருவைத் தந்து கூட்டாக்கிப் பொருளாகக் காட்சிப்படுத்துகிறான்.

(i)

எடுத்துக்காட்டு வெண்பாவின் மூலம் காட்சிப்பட்ட உலகப் பொருள்களை ஆராய்ந்த அளவில் காரண காரிய உறவால் தனித்தனி நிறுத்தப்பட வேண்டிய தனிப் பொருள்களை அடையாளங் காட்டுகிறார்.

'வித்தகம்' என்ற சொல்லால் ஒரு பொருளாயும் உருவம் கொடுக்கப்படுதலையும் கூறுகிறார். 'வித்தகம்' எனப்பட்ட பொருள் உருவம் இல்லாத பொருள். அதற்கு 'உருவம்' கூட்டுவிக்கப்படுகிறது. உருவானது வித்தகத்தின் காரியமன்று. உருவம் என்ற காரியப்பாட்டுடன் வித்தகம் இணைக்கப்படுகிறது. இச் செய்தியில் உள்ள விளக்கத்தைப் பின்வருமாறு விளங்கிக் கொள்ள வேண்டும். கதிரவன் ஒளியின் காரணத்தால் இருள் விலகும் காரியம் நிகழ்கிறது. இருள் விலகுதல் என்பது

எப்படிப்பட்டதாக இருக்கிறது? இருள் ஒளியுடன் இணைந்தே இருக்கிறது. இதனால்தான் ஒளி மறைந்தவுடன் இருளின் வெளிப்பாடு நிகழ்கிறது. இணைந்த ஒளி பாலொடு பால் போலக் கலக்கவில்லை. இணைந்து பிரிகிறது. என்றாலும் காரண காரிய சம்பந்தமாகவே நம்மால் விளங்கிக் கொள்ளப்படுகிறது. இவ்வகையில் பார்த்தால் வேறான இரண்டு பொருள்களுக் கிடையில் உள்ள காரண காரிய உறவில் பொருள்களின் தனித்தனி நிலையை உணர வேண்டும் என்பது. இந்தக் காரண காரிய உறவு களிமண்ணிலிருந்து குடம் போலவோ பாலிலிருந்து தயிர் போலவோ உண்டாகும் உறவன்று. இதில் பொருள் சம்பந்தமுண்டு. முன்னதில் பொருள் (இருள்/ஒளி) சம்பந்தம் இல்லை. இதுபோலவே வித்தகம் என்பது உருவின் (உலகப்பொருள்) காரணம் ஆகாமையை உணர வேண்டும். அதேநேரத்தில் இருள் விலக்கும் காரியத்திற்காக ஒளி இணைப்பு நிகழ்வது போல வித்தகம் மற்ற பொருள்களுடன் இணைவதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

'வித்தை' எனும் அறிவுத்தன்மை உலகில் காணப்படும் உருவப் பொருள்களுக்கு இல்லாதது; உருவப் பொருள்களின் மூலத்திற்கும் இல்லாதது. எத்தன்மையில் ஒன்று அறியப்படுகிறதே அது அதன் தன்மையிலேயே அருவமாக ஆகும். பகுப்புகளாக / உறுப்புகளாக அறியப்படும் உலகம் அறிவில்லாதது. இதுதான் முதல் நூற்பாவின் முடிவு. இதனைத் தொடர்ந்து வரும் அறிவுத் தன்மையுடைய 'வித்தகமானது' காணப்படுகின்ற பொருள்களில் இணைந்ததற்கான காரணம் விளக்கப்படும். இதை விளக்குவது இரண்டாம் நூற்பா. அதனையொட்டிப் பின்னர் இணைந்த பொருளான வித்தகம் ஆன ஆன்மா பற்றிய விளக்கம் அமையும். இது மூன்றாம் நூற்பாவால் விளக்கப்படுவது.



(ii)

காணப்படும் உலகமான அவன், அவள், அது என்பவற்றை ஆராய்ந்தால் 'அவற்றின்' அருவமான 'மூலம்' உணரப்பட்டது. அதில் இல்லாத ஒரு தன்மை வித்தைத் தன்மை. வித்தைத் தன்மை பொருந்தியது 'வித்தகம்'. அந்த 'வித்தகம்' காட்சிப்படும் பொருளின் கூட்டுறவில் இயங்குகிறது. காட்சிப்படும் பொருள்களின் உள்ளே இருந்து அறிவுப் பொருளாகத் தானே இயங்குகிறது. அழிவில்லாத மற்ற பொருள்களும் இது இயங்குதற்குப் புறமாக நின்று துணையாகின்றன. (புறமாக இருக்கும் அவைகள் இயக்க இயங்கும் தன்மையாய் இருப்பதை அறிந்தால் தானும் இயக்க இயங்கும் பொருளாக இருக்கும் உண்மையைத் தெளிய வேண்டும் என்பது கருத்து).

காட்சிப்படும் உலகப் பொருள் காரிய காரணத்திலிருந்து, இதன் தொடர்ச்சியில் வேறு ஒன்றன் இணைப்பு, உணரப்பட்ட வகையில் 'காரணப் பொருள் பன்மை' உறுதி செய்யப்படுகிறது. இநநிலையில் காரியக் கூட்டமைப்பில் இணைந்துள்ள காரணங்களைப் பின்வருமாறு வகை செய்வர்.

'காரணம்' என்பது முதல், நிமித்தம், துணை என்ற மூன்றாக அமைய 'காரியம்' நிகழ்த்தப்படுகிறது.

களிமண் - முதற் காரணம்

குயவன் - நிமித்த காரணம்

சக்கரம், தண்டு, நீர் ஆகியன - துணைக் காரணம்

இம்மூன்று காரணங்களின் இணைப்பால் 'குடம்' என்ற காரியம் விளைகிறது. இதற்கு இன்னொரு காரணம் ஒன்று அடிப்படை. அதாவது நோக்கம். நோக்கக் காரணம் என்னவெனில் நீர் பிடித்தல் போன்ற பயன் கருதுதல்.

இப்படி, உலகில் காட்சிப்படும் அவன், அவள், அது யாவும் பல காரணங்களால் விளைந்த காரியங்களே.

களிமண்ணின் காரியம் போல உலகம் (காட்சிப்படும் பொருள்கள்) அமைகின்றது. இது பொருள் தொடர்ச்சி. பொருள் சார்புக் காரணங்கள் (இணைப்பு) மேலே கூறப்பட்டவை.

பயனை அடிப்படையாகக் கொண்டு குடம் செய்யப்பட்டது போல, வித்தகனை அடிப்படையாகக் கொண்டு உலகம் (தனு, கரணம், புவன, போகம்) தோற்றுவிக்கப்பட்டது. களிமண்ணில் குடம் உருவாக்கிய குயவன் போல இருப்பவன் அத்தன் (அந்தம் ஆதி செய்பவன்). அவன் வித்தகனின் செயலையும் (வினை) தன் ஆற்றலையும் துணைக் காரணங்களாகக் கொண்டு அனைத்தையும் தோற்றுவிக்கிறான். குடம் தோற்றுவிப்பதற்கு உரிய முதற்காரணமான களிமண் போல உலகப் படைப்பிற்கு உரிய பொருள் மாயை. இதிலிருந்து தோற்றுவித்து இருக்கச் செய்கிறான்.

(iii)

தோற்றுவித்து இருக்கச் செய்கிறவன் உலகை முழுமையாகப் படைத்திருப்பது போலத் தோன்றினாலும் உறுப்புகளின் காரணமாகவே உறுப்புகளாகவே படைத்திருக்கிறான். அதாவது வித்தகமான ஆன்மாவுக்கு ஏற்பத் தோற்றித் திதி செய்கிறான். இப்படிப் பல ஆன்மாக்களுக்குக்காகவும் செய்யப்பட்ட வகையில் உலக முழுமை தோற்றம் பெற்று இருக்கிறது. இதனை விளக்கும் பகுதியாக வருவதே எடுத்துக்காட்டு வெண்பாவின் விளக்கம்.

விதையானது மூலப்பொருளாக இருக்கிறது. விதை முளைக்க வேண்டிய இடமான மண்ணும் இருக்கிறது. இதில் நீர்த்தன்மையை இணைக்கிறான். பின் விதையை மண்ணில் முளைக்க இணைக்கிறான். இப்போது விதையின் நிலைக்களம் விளைவாக ஆக்கம் பெறுகிறது.

வாழை மரம் கன்று நிலையில் (இளமை) இருக்கும் போது மரத்தன்மைக் காட்சியாகவே காட்சிப்படுகிறது. இதை எடுத்துக்காட்டாமல் வித்தகமான ஆன்மா உருவைப் பெறுவதை



விளக்கும் எடுத்துக்காட்டைத் தனிப்பட விளக்குகிறார். புழுவானது குளவி ஆதல் போல உருவம் தருகிறான் என்கிறார். இதுவே காரணப் பொருளிலிருந்து காரியத்தை உண்டாக்கும் ‘அத்தன் இயக்கம்’ பற்றிய விளக்கம். ‘அத்தன் இயக்கம் (தான்)’ ஆன்மாவின் (வித்தகம்) செயல் அடிப்படையில் நிகழ்த்தப்படுவது என்பதை விளக்கவே அவ்வாறு கூறினார்.

புழுவிலிருந்து பெரிய புழு என்பதல்ல காரியம். புழுவிலிருந்து குளவி. இது உருமாற்றம். களிமண்ணில் குடம், அகல் (விளக்கு), பானை, மண்குதிரை என குயவன் எண்ணத்தால் பயன்பாடு நோக்கி படைப்பு அமையும். அத்தனான இறைவனும் வித்தகம் ஆன ஆன்மாவின் செயலை அடிப்படையாகக் கொண்டு உருவம் தருகிறான். ஆக, குடம், விளக்கு என அப்படியே களிமண்ணில் காரியம் உருவாக இல்லை. உருத்தன்மை உண்டு. அதில் வேண்டும் / தேவையான உருவைத் தயாரிப்பது போல இறைவனே ஆன்மத் தரம் நோக்கித் தோற்றுவிக்கிறான் என்பதை இவ் வெண்பாவால் விளக்கினார்.

பல்வேறு காரணப்பொருளை காரியத்தில் இணைத்து கூட்டாக இயக்கப்படுத்தும் அத்தன் (அந்தம் ஆதி செய்யும் பொருள்) செயலைப் பின்வரும் மூன்றாம் எடுத்துக்காட்டு வெண்பாவில் விளக்குகிறார்.

### எடுத்துக்காட்டு வெண்பா 1-2-3

**நோக்காது நோக்கி நொடித்துஅன்றே காலத்தில்**
**தாக்காது நின்றஉளத்திற் கண்டுஇறைவன் – ஆக்காதே**
**கண்ட நனவுஉணர்விற் கண்ட கனவுஉணரக்**
**கண்டவனின் இற்றுஇன்றாம் கட்டு.**

**வெண்பா உரைத்தொடர் :** உளத்தில் இறைவன் ஆக்காதே கண்டு, அன்றே காலத்தின் தாக்காது நின்று, நோக்காது நோக்கி நொடித்து கட்டு இன்றாம்; கண்ட நனவு உணர்வில் கண்ட கனவு உணரக் கண்டவன் இற்று.

**விளக்கம்**

இறைவன் கருதி நின்று ஆக்க முயற்சி ஏதும் இன்றி பொருள்களைப் படைக்கிறான். பொருள் படைப்பில் காலத்தை உருவாக்கிய அவன் எப்போதும் காலத்தில் தாக்குறாமல் நின்று செய்கிறான். காத்தலையும் அழித்தலையும் தானே நிகழ்த்தும் வித்தகன் தன்மைக்கேற்பச் செய்கிறான். அவ்வம் நிலை மாற்றத்திற்கு ஏற்பக் காத்தலும் அழித்தலும் நிகழ்கின்றன. இச்செயல்களுக்கு இவன் தன்னுடைய விருப்பு வெறுப்பாகச் செய்யும் கட்டு இல்லாமல் கருதிச் செய்பவனாக இருக்கின்றான்.

இவ்வாறு இயங்கும் இறைவன் எந்தத் தாக்கமும் இன்றிச் செயல் நிகழ்த்துகிறான். அதைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளால் விளங்கிக் கொள்ளலாம்.

அ. நனவில் கண்டு செயல்படுபவருக்கு உள்ள உணர்வுத் தாக்கமும் விளைவும்.

ஆ. கனவில் கண்டு செயல்படுபவருக்கு உள்ள உணர்வுத் தாக்கமும் விளைவும்.

இரண்டில் முதலில் உள்ளது வெளிப்படத் தெரிவது. இரண்டாவது அருவத்தில் உள்ள தாக்கம். உருவ அருவத் தாக்கம் இரண்டும் இன்றி படைத்துக் காத்து அழிக்கும் இறைவனின் கட்டு இலாத் தன்மையை அவ்வாறு விவரித்தார் மெய்கண்டார்.

## மூன்றாம் அதிகரணம்

**மேற்கோள் : இனி, சங்காரமே முதல் என்றது.**

**ஏது : சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வுஇன்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரம்இன்றி நிற்றலான்.**

**மேற்கோள் விளக்கம் :** அழித்தல்தான் முதன்மைச் செயலாக இருப்பது. அழித்தல் செய்யும் பொருள்தான் முதன்மைப் பொருள்.



**ஏது விளக்கம் :** சுட்டி அறிவதற்கு இடமாகிய உலகம் சுட்டி அறியப்படாத தன்மையில் அழிக்கப்பட்டாலன்றி அதன் தன் உண்மை அமையாது.

பொருள்களின் தன் உண்மையைத் தரும் வகையில் இறைவனின் அழித்தல் செயல் இருப்பதை விளக்குகிறார். தன் உண்மையை உணர்ந்த வகையில் பொருள் நிற்கும் தன்மையையும் கூறுகிறார். இது காட்சிப்படும் பொருளிலிருந்து கூறப்படுவதாம்.

காட்சிப்பட்ட பொருளுக்கு மூலமான மாயையின் உவமையும் காட்சிப்பட்ட பொருள்களில் இணைந்திருந்த வித்தகர் என (அறிவுப்பொருள்) ஆன்ம உண்மையையும் விளக்குகிறார்.

எடுத்துக்காட்டு வெண்பா 1-3-1

**ஒன்றுஅலா ஒன்றால் உளதுஆகி நின்றவாறு**
**ஒன்றுஅலா ஒன்றில்அவை ஈறாதல் - ஒன்றலா**
**ஈறே முதல் அதனின் ஈறுஅலா ஒன்று பல**
**வாறே தொழும்புஆகும் அங்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** ஒன்றலா ஒன்றால் உளது ஆகி நின்றவாறு ; ஒன்றலா ஒன்றில் அவை ஈறு ஆதல் ; ஒன்று அலா ஈறே முதல் ; அதனின் தொழும்பு ஆகும் அங்கு ஈறு அலா ஒன்று பலவாறே.

**விளக்கம்**

'ஒன்று அலாத' தன்மை என்பது சுட்டி அறியப்படாத தன்மை. இதை முதல் நூற்பாவின் தொடர்ச்சிப் பொருளாகக் கொள்ள வேண்டும். காணப்படும் பொருளின் மூலமாக காணப்படாத அருவப்பொருளை நிறுவுதல் முதற்பணி. காணப்படும் உலகத்தை வைத்து அதன் தோற்றம் இருப்பு அழிவு அமைவதைத் தெளிந்தால் அதனைச் செய்யும் பொருளை

'அந்தாதி' என உணரலாம் என்றார். காணப்படும் பொருள்களின் அறிவில்லாத் தன்மையில் அதற்குரிய மூலப்பொருள் 'மலம்' என்றார். அதனை ஒடுக்கித் தோற்றப்படுத்திய பொருளை 'அத்தன்' எனத் தலைமையில் கூறினார். காட்சிப்பொருளுக்கும் அத்தனுக்கும் வேறாகக் காட்சிப் பொருள் கூட்டில் இணைக்கப்பட்ட அறிவுப் பொருளாக வித்தகம் (ஆன்மா) இருப்பதை விளக்கினார். இந்த மூன்று பொருள்களின் தனித்தன்மையைத் தனிப்பொருளாக விளக்கி முதல் நூற்பாவை நிறைவு செய்து இவ் இறுதி வெண்பாவை அமைக்கிறார்.

காட்சிப்படும் உலகப் பொருள்களைப் போல சுட்டியறியப்பட முடியாத தன்மையில் இயங்கும் பொருள் 'ஒன்று என்று சொல்லப்பட முடியாது ஒன்று'. ஒன்று என்று சுட்டியறியப்பட முடியாத ஒரு பொருளால் உலகப்பொருள்கள் உள்ளதாக ஆக்கப்பட்டன. அவை அழிக்கப்படுவதாக ஆகும்போது, சுட்டியறியப்படும் அவை அவற்றின் மூலமான சுட்டியறியப்படாத காலத்தில் ஒடுக்கப்படும்.

ஒன்று என்று சுட்டியறியப்பட முடியாத தோற்றி அழிக்கும் அம் முதல்பொருள் எப்படி உறுதி செய்யப்படுகிறது எனில் 'ஈறு' செய்யும் இயக்கத்தால். ஒன்றல்லாத அது 'ஈறு' செய்வதாக நின்ற தன்மையில் அதுதான் ஈறு. ஈறாக அது நிற்பது எவ்வாறெனில் எல்லாவற்றையும் முடித்து வைப்பதால் அதுவே முடிவிடம் எனக் கருதப்படுதலாலும் என்க.

தோற்றுவிக்கப்பட்டு இருப்பதான பொருள்கள் நிலை மாற்றம் அடைகின்றன. அவற்றின் உள்ளதன் மாற்றத்தை இறுதிப்படுத்தும் போது மூலத்தில் மூலமாக ஒடுங்க வேண்டும். களிமண்ணில் செய்யப்பட்ட குடத்தை மீளக் களிமண்ணாக மாற்றுதல்தான் மூலத்திலிருந்து உண்டாக்கப்பட்டதை மூலமாக மாற்றுதல். இந்த மாற்றத்தைச் சரியாகச் செய்தால்தான் மறுபடியும் பொருளை உண்டாக்க முடியும். இதைச் செய்யும் பொருள் 'இறுதி' செய்யும் பொருள்தான். அதனை நோக்கி



எல்லாவற்றின் தொடக்கமும் அமைவதால்தான் அதுவே 'முடிவிடம்'.

காட்சிப்படும் பொருள்களின் மூலமாக ஒன்றில் ஒன்றாக மாயா மலம் அமைகிறது. அதிலிருந்து பலவற்றை உண்டாக்க அவற்றில் பலவற்றையும் ஒடுக்கத் தெரிந்த பரம்பொருள் பணியாற்றிட எல்லாம் உண்டாயின. அதுதான் எல்லாவற்றிற்கும் முடிவிடம். அந்தப் பொருள் தான் ஒன்றலா ஈறாகவே இருக்கிறது. காட்சிப்படும் பொருள்களில் இணைக்கப்பட்ட (கூட்டி வைக்கப்பட்ட) பொருள்தான் வித்தகம் (ஆன்மா). இது அழிவுக்குட்படாத ஒன்றாக இருப்பது. அழித்தலுக்குட்படாத அருவமான அது பலவாக இருக்கிறது.

ஆன்மாக்கள் பலவாக இருப்பதை 'ஈறலா ஒன்று பலவாறே' என்பதாக முடிவு செய்கிறார். அழிவுக்கு உட்படாத ஒன்றாக ஆன்மா அமைவது எவ்வாறெனில் சுட்டியறியப்படும் தோற்றம் இருப்புக்கு அது உள்ளாவதில்லை. சுட்டியறியப்படும் அவற்றில் கூட்டுவிக்கப்பட்ட அருவப்பொருள். இது அதனளவில் இறுதி என்ற ஒன்றுக்குரியதாகாத வகையில் ஈறலா ஒன்று என்றார். இப்படி ஒவ்வொன்றிலும் உள்ள அது பல ஆன்மாக்களாகத் தனித்தனி உள்ளது என்கிறார்.

பலவாக உள்ள ஆன்மா 'தொழும்பு' ஆக இருக்கிறது. முடிவிடமாக நின்ற பரம்பொருளுக்கு ஆன்மா தொழும்பாக ஆகிறது. காணப்படும் பொருள்களின் இணைப்பில் தன்னை அவற்றின் ஆளாக நிறுத்திக் கொண்ட ஆன்மா, தன் இயக்கத்தை உணர்ந்தபோது தனக்கு'ஆள்' இறைவன் என்பதில் தெளிந்து நிற்பதாகிறது.

### கருத்து விளக்கம்

முதல் நூற்பாவில் காட்சிப்படும் உலகத்தின் மூலமாக பொருள் முடிவுகளை அறுதிப்படுத்த வந்த மெய்கண்டார் காட்சிப்படும் பொருள்களின் மூலத்தையும் காட்சிப்படுத்தப்படும்

அப்பொருள்களின் தன்மை இருப்பதையும் முதலில் தெளிவுபடுத்துகிறார். காட்சிப்படுத்தப்படுதலில் தோற்றம், இருப்பு, இறுதி உள்ளன. இவற்றை நிகழ்த்துவதில் இறுதி செய்வது தான் தலைமை உடையது. அதுதான் சரியான படைப்பை ஆக்கும் திறன் உடையது. இவ்வகையில் அந்தத்தைச் செய்யும் பொருள்தான் ஆதியைச் செய்தது என விளக்கி அதனை 'அந்தாதி' என்றவர் அதுதான் இயக்கத் தன்மையுடையது என்ற வகையில் 'அத்தன்', 'இறைவன்' என்ற சொற்களால் வெண்பாவில் குறித்தார்.

காட்சிப்படும் பொருள்களை வைத்து, அவற்றில் கூட்டி வைக்கப்பட்டதே வித்தகமான (அழிவு) தனிப்பொருள். அது தோற்றம் அழிவுக்குட்படாமல் காட்சிப்படும் பொருள்களின் கூட்டுவிக்கப்பட்டதாக இருக்கிறது. அது தன் ஆளுமையின் தன்மையை உலகில் விளங்க வைத்து - முடிவில் இறைவன் ஆளுமைத் தன்மையில் இணைந்திருக்கிறது. அப்படிப் பல ஆன்மாக்களும் அமைகின்றன.

இப்படிப் பொருள் பலவாக இருக்கும் முடிவை காட்சிப்பட்ட பொருள்களின் மூலமே முடிவு செய்து, பொருளுண்மையில் தனித்தனிப் பொருள்களாக மாயை, இறைவன், ஆன்மா ஆகியவற்றை முடிவு செய்தார்.

'ஆன்மா'வுக்காக உலகம் படைக்கப்பட்டதைக் கூறிய வகையில் ஏன் படைக்கப்பட்டது எனும் போது 'ஆன்ம வினையால்' எனவும் கூறினார். இதன் விளக்கமாக 'வினை' பற்றிய முடிவை விளக்குவது இரண்டாம் நூற்பா.

# இரண்டாம் நூற்பா

காட்சிப்படும் உலகத்தைத் தோற்றுவித்து உள்ளதாக்கி ஒடுக்கும் பொருளான 'அந்தாதி' (இறைவன்) பற்றிய முடிவை முதல் நூற்பாவில் விளக்கினார். காட்சிப்படும் உலகத்தின் ஒடுக்கம் என்பது அருவப்படுதலாக அமைவதை விளக்கி, அவ்வாறு அருவப்படுவது தானே நிகழாமையை விளக்கி, அது தோற்றுவிக்கப்படுவதற்கான மூலப்பொருளாக ஒடுக்கியவனே முதல் பொருள் என்பதை விளக்கினார். அவ்வாறு ஒடுக்கியவனால் ஒடுக்கப்பட்ட பொருளிலிருந்து தோற்றுவிக்கப்படக் காரணம் காட்சிப்படும் பொருள்களில் இணைக்கப்பட்டுள்ள வித்தகம் (ஆன்மா) என்றார். அறிவில்லாத காட்சிப்படும் பொருள்களின் வேறான அறிவுப்பொருளை இணைத்தற்குக் காரணம் ஆன்மாவின் (வித்தகப் பொருளின்) வினை காரணம் என்றார். இந்த 'வினை' என்பது சாதாரண செயல்பாட்டை / இயக்கத்தைக் குறிப்பதே. இதை மதிப்பிட வேண்டிய கட்டாயம் வருகிறது. ஆன்மா பலவாக இருப்பதால் எல்லாவற்றுக்குமாக படைக்கப்பட்ட உலகத் தொகுதியிலிருந்து ஆன்மாவின் தனிநிலையைக் கணக்கில் எடுத்து அதன் சுதந்திரத்தை எல்லைப்படுத்த வேண்டும். இத்தகு கட்டாயத்தில் செயல்பாடு மதிப்பிடப்படுகிறது. இதனால் 'வினை' என்பது நல்வினை, தீவினை

என்ற அடையாளங்களைப் பெறுகிறது. நல்வினை, தீவினை அடையாளம் கருதியே உலகத்தை வகை செய்த போது ஆண், பெண், அது என்று உலகைப் பிரித்தார்.

ஆண், ணெ், அது எனப் பிரித்த வகையில்தான் செயல்பாட்டின் தகவு தனிநிலைப்படுகின்றன. ஆணாகவும் பெண்ணாகவும் நிறுத்தியதில் 'மதிப்பீடு' தத்தம் எல்லைகளில் விளைவாகின்றன. 'அது' என்பதன் மதிப்பீட்டில் ஆண், பெண் இருந்தாலும் செயல்பாட்டில் தத்தம் எல்லைகளை தனிப்படுத்திக் கொள்ளும் நிலை அவற்றில் (அஃறிணையில்) இல்லை. எனவே 'அது' முழுமையும் தொகுக்கப்பட்டு பொதுவாக்கப் பட்டன.

அவன், அவள், அது என்பனவற்றால் காட்சிப்பட்ட உலகத்தை விவரித்ததன் நோக்கம் செயல்பாட்டு முறையிலிருந்து வகை செய்தற்காகும். அதனடிப்படையில் மெய்பொருள் முடிவுகளை முதல் நூற்பாவில் வழங்கிய மெய்கண்டார்,

இரண்டாம் நூற்பாவில் பொருள்களின் இயக்கப்பாட்டை ஆராய்கிறார். அதன் வகையில் அமையும் முடிவுகளை இனி விளங்கிக் கொள்வோம்.

# இரண்டாம் நூற்பா

## அவையே தானே ஆய், இரு வினையிற் போக்கு வரவு புரிய ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

**வார்த்திகம் : என் நுதலிற்றோ எனின், புனர்உற்பவம் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.**

வார்த்திக விளக்கம் : புனர் உற்பவம் எப்படி என்பதை விளக்குவது.

புனர் உற்பவம் என்பது புணர் உற்பவம் என்பதாகலாம். நூற்பாவிலும் எடுத்துக்காட்டு வெண்பாக்களிலும் பொருள் இணைப்புகளையே விவரிக்கிறார். புணர்ச்சிப்பட்டு இருக்கிற பொருள்களின் 'இயக்கம்' குறித்து இதில் விளக்கப்படுவதாக எல்லாம் அமைந்திருக்கின்றன. புணர்ச்சிப்படுத்தி ஆன்மாவால் படைத்தலையும் விளக்குகிறார்.

மறுதோற்றம் என்பதாகப் புனர் உற்பவம் என விளக்குகின்றனர். இதன் மூலம் இயங்குதற்கான அடிப்படைகளில் எப்படிப் படைத்தல் நிகழ்ந்திருக்கிறது என்பதை விவரித்ததாகலாம். இயங்குதற்கான படைத்தலில் பொருள் கூட்டின் இயக்க இணைப்பையும் தனி அளவையும் தெளிவுபடுத்துவன இரண்டாம் நூற்பாவும் வெண்பாக்களும்.

### விளக்கம்

அவன், அவள், அது எனும் அவைதான் காட்சிப்படும் பொருள்கள். அவை எனப் பார்க்கப்பட்ட அவற்றின் தன்மை அறிவில்லாத்தன்மை. அறிவில்லாப் பொருளை ஒடுக்கத்தினின்று ஆக்கி இருக்க வைத்துள்ளான். இந்த அறிவில்லாப் பொருளில் அறிவுப் பொருளைக் கூட்டி (இணைந்து) வைத்துள்ளான். இவ்வாறு கூட்டி வைத்துள்ள நிலையில் அவற்றின் இயக்கம் நடைபெறுவது நிகழ்கிறது.

அவற்றின் இயக்கத்திற்கு அடிப்படையான செயல்களைச் செய்த இறைவன் நிலை என்ன என்பதை இந்நூற்பாவில் விளக்கி பொருள்கள் அவ்வவற்றின் இயக்கத்தையும் தனிநிலைப் படுத்துகிறார்.

அவன், அவள், அது எனும் அவை ஆகிய இவைகளில் அப்பொருள்களாகவே இணைந்து, இரு வினையினால் ஆன அவை போகவும் வரவும் செய்ய தொடக்கத்திலிருந்தே (அன்றே) பணியாற்றுகிறான். அவ்வாறு அவ்வப் பொருள்களில் இணைந்து இருக்கிற இறைவன் தன் இயக்குதலிலிருந்து (ஆணையின்) அவை நீங்காது நிற்கின்றன.

### (ii)

### புனர் உற்பவமான போக்குவரவு

காட்சிப்படுகின்ற உலகப் பொருள்களின் இயக்கத்தைப் பார்த்தால் 'இயங்குதல்' என்பது இயக்க இயங்குதலாக இருப்பதை உணரலாம். இயக்க இயங்குதல் என்பதில் காரணமாக இருந்து இயக்குகிற கூறு வேறு வேறாக இருக்கலாம். ஆனால் எல்லாவற்றின் இயக்கத்திற்கும் இயக்கப்படுத்துகிற ஒன்று இல்லாமல் இல்லை.

அறிவில்லாத கல்லைத் தூக்கி வைக்கிறோம்; என்ன வேண்டுமோ செய்கிறோம். விலங்குகள் இயங்குகின்றன. பசியினாலும் வேட்கையினாலும் பதிவின்படி (Pre establishment) அவை இயங்குகின்றன. செய்து வைக்கப்பட்ட கடிகாரம் காலம் காட்டுவது போல இயக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நாமும் பசியால் இயங்கி போகத்தால் மூப்புக்குள் புகுகிறோம். இந்த முறையில் செல்லும் இயக்கங்களால் தெரிந்து கொள்ள வேண்டியன இரண்டு.



அ. இயங்குகிற ஒன்று இயக்கத்தின் முறையை அறிவது.

ஆ. இயங்குகிற ஒன்று இயக்கத்தின் ஆதாரத்தை அறிவது.

முதலாவதாக அறியப்படும் 'முறை அறிதலில்' கிட்டும் தெளிவு இயங்குபவனைத் தற்காலிகச் சிக்கலிலிருந்து விடுவிக்கும்.

இரண்டாவதாக அறியப்படும் 'ஆதார அறிவில்' கிட்டும் தெளிவு மொத்தச் சிக்கலிலிருந்தும் விடுவிப்பதாக அமையும்.

காட்சிப்படு பொருள்களின் இயக்கத்தை அறிகிறவன் இயக்க இயங்காத் தன்மையில் பூதங்களை முடிவு செய்கிறான். இது பிழையான அறிவாகும். அறிவு உள்ள பொருள்கள் சார்பினால் இயங்குவதையும் அறிவுள்ள பொருளால் பெரும்பாலான சடப்பொருள்களும் இயங்குவனவாக உளதால் காற்று முதலான ஐம்பூதங்களையும் இயக்கும் பொருள் உண்டு எனும் உண்மையைத் தெரிய வேண்டும்.

ஐம்பூதங்களின் இயக்கம் பூதத் தன்மையிலிருந்து (காட்சிப்பாட்டிலிருந்து) மூலத்தை அருவமாக நோக்குவன ஆதலால் அவற்றின் இயக்கம் என்பது அவைகளாலேயே நிகழ்த்திக் கொள்ளப்படுவதன்று. முக்கியமாக அவன், அவள், அது எனக் காட்சிப் படுவனவற்றுள் இணைக்கப்பட்டுள்ள அறிவுப்பொருளே முறையாகத் தன்னை ஒடுக்கித் தோற்றுவித்துக் கொள்வதாக இல்லை. இதன் மூலமான தோற்றங்கள் இதன் விளக்கமாக இருந்தாலும் அவற்றின் ஒடுக்கத்தின் தோற்றமல்ல.

அதாவது ஒருவருக்குப் பிறக்கும் குழந்தை அவரே அல்ல. அவர் ஒடுங்கித் தோன்றவில்லை. அப்படி ஒடுங்கித் தோன்றுகிற ஆற்றலுடைய பொருளாகக் கூறப்படுவது பரம்பொருள் மட்டுமே. அதுவே சிவம் முருகனாக வெளிப்பட்டது போன்ற வரலாறுகளுக்குரியது. (மும்முகம் சிவமாக ஒடுங்கிக் கொண்டு பின் அறுமுகச் சிவமாக வெளிப்பட்டது).

அறிவுள்ள பொருள்களின் இயக்கத்திலேயே ஒடுங்கித் தோன்றுதல் இயலாத போது அறிவில்லா பூதங்களின் இயக்கத்தில் ஒடுங்கித் தோன்றுதல் எந்த வகையிலும் அமையாது.

அறிவுள்ள பொருள்களின் மூலமாகவும் அறிவில்லா பொருள்களின் மூலமாகவும் ஒடுக்கத் தோற்றத்திற்கு செயல்கள் ஆற்றப்படுகின்றன. கடல் நீரால் பூமி விழுங்கப்படலாம். காற்றால் நீர் அழியலாம். தீயால் பிற அழியலாம். இப்படிப்பட்ட ஒடுக்கங்கள் உருவத்திலிருந்து அருவமாற்றத்திற்கான இணைப்பில் நிகழும் ஒடுக்கத் தொடர்ச்சிகள். இந்த முறையில் இவற்றின் ஒடுக்கம் நிகழ்த்தப்படுவதாலேயே 'ஒடுக்கமுறை' அறிந்தவனே தோற்றுவிக்கிறான் என்ற முடிவு உறுதியாகிறது. ஒடுக்கத் தோற்ற விளைவுகளை இடையில் அறியும் மனிதர் மூலமாக நிகழ்த்தப்படுவனவும் 'புனர் உற்பவம்' ஆகும். இவர்கள் உண்டாக்கும் குழந்தை, பயன்பொருள்கள் யாவுமே புனர் உற்பவங்கள். இந்த புனர் உற்பவங்கள் நிகழ்த்தப்படுகிற வகையிலும் தோற்றி இருத்தி ஒடுக்கும் அந்தாதிப் பொருள் இணைந்து துணை செய்கிறது. அவன், அவள், அது காரணமாக நிகழும் 'புனர் உற்பவங்கள்' யாவும் 'வினை' எனும் மதிப்பீட்டிற்கு உட்படுகின்றன. இவை நிகழ இப்பொருள்களிலேயே இணைந்து இறைவன் இயக்கி இயங்குகின்றான். அவன் இதைச் செய்யும் முறையில் இவனிடமிருந்து இவன் எல்லையை அவை நீங்க முடியாது. இவன் இயக்கத்தின் பிரியாதனவாக நின்று அவை இயங்கும் என்பதுதான் கருத்து.



காட்சிப்படும் உலகை அறிவுள்ளன, அறிவில்லன என்று மெய்கண்டார் சுட்டவில்லை. அஃறிணையில் உள்ள ஆண், பெண்ணைக் கணக்கிடவில்லை. அவன், அவள், அது எனப் பிரித்ததன் நோக்கம் இயக்கத்தில் இவற்றின் மூலமாகவும் படைப்பு முதலானவை தனிநிலையில் மதிப்பீட்டிற்குரியன என்பதை நிலைநிறுத்துவதாகும். அந்த மதிப்பீட்டினை விளக்கியே இரண்டாம் நூற்பாவை அமைத்தார்.

ஆண் சமூகத்தையும் பெண் சமூகத்தையும் சார்பில் விளக்காமல் தனித்தனி நிலைப்பாட்டில் அமைக்கிறார். ஆண் தன்மையிலும் பெண் தன்மையிலும் தனித்தன்மைகள் உண்டு. ஏதேனும் ஒரு கூறு இதில் இல்லாதது அதில் உண்டு. அதில் இல்லாதது இதில் உண்டு. படைப்புத் தன்மைகள் இவற்றின் வேறாக உள்ள அனைத்தும் அதுவே. (அலி, அஃறிணையில் உள்ள உயிர் உள்ளன, உயிர் இல்லாதன). இவற்றின் இயக்கம் ஆண், பெண் படைப்புத்தன்மை போன்றதன்று. இவை யாவும் ஆற்றல் நிலைமைகளாகவே அமைகின்றன. இவற்றின் இயக்கத்திலும் மதிப்பிடல் உண்டு. இம் மதிப்பிடல் இவற்றின் தன்மையை உயர்த்துவதற்கு உதவுவதாகும்.

காட்சிப்படுகின்ற உலகின் ஒடுக்கத்தை நிகழ்த்தும் அந்தாதிப் பொருள், உலகில் போக்குவரவாக நிகழும் அறிவையும் தோற்றத்தையும் அவன், அவள், அது என்ற மூன்றை வைத்தே நிகழ்த்துகிறது. 'அன்றே' எல்லாப் பொருள்களிலும் தானே இணைந்திருந்த பரம்பொருள் அவைகளின் மூலமாகவே செய்யும் அழிவும் தோற்றமும் (போக்கு வரவு) புனர் உற்பவமாக (மீளப் பிறத்தல் அல்லது மறு தோற்றம்) நிகழ்த்தப்படுகின்றன.

இறைவன் நிகழ்த்தும் அந்தப்படுத்தி ஆதிப்படுத்தும் செயலுக்குப் பிறகு உயிர்ப்பொருள்கள் காரணமாக நிகழ்த்தும் தோற்ற அழிவைப் போக்கு, வரவு என்றார் மெய்கண்டார். இது உயிர்களையும் இணைத்துக் கொண்டு இணைந்து நின்று பரம்பொருளே செய்தாலும் இறைவனின் இயக்கத்தில் பிரியாது

நின்ற உயிர்கள் காரணமாக நிகழும் போக்கு வரவாக இது அமைகிறது. இந்த நிகழ்ச்சிக்குரிய மூலம் 'இருவினை' என்பதே மெய்கண்டார் இரண்டாம் நூற்பாவில் தரும் முடிவு.

(iii)

### அன்றே அவையே தானேயாய்

அவன், அவள், அது என்று காட்சிப்படும் உலகத்தின் மூலமாக முடிவு காணப்பட்ட பொருள்களில் அன்றே இணைந்து நின்ற பொருளே 'அந்தாதி' (இறைவன்). அது இணைந்து நின்ற தன்மை எவ்வாறெனில் பொருள்களுக்கும் தனக்கும் வேற்றுமை இன்றி இணைந்து இருக்கின்றது. தண்ணீராக இருந்து உப்பு கரைத்து தன்னில் இருக்க வைப்பது போல அனைத்திலும் தான் இணைந்து அவற்றை உடைமையாகக் கொண்டு அவற்றை இருக்க வைக்கிறான்.

### இருவினையின் போக்குவரவு

இறைவனுடைய இயக்கம் (தாள் – முயற்சி) வித்தகன் வினை காரணமாக நிகழ்வதை முதல் நூற்பா வெண்பாவால் விளக்கினார். இங்கே போக்குவரவு புரிய அமைந்த வினையை 'இருவினை' என்று கூறுகின்றார். வினையை நல்லது தீயது என்று மதிப்பிடுவது என்பது மதிப்பீட்டு வகை. இதுபோலவே மாயையும் சுத்தம், அசுத்தம் எனச் செயல்மூலங்களாக இருவகைப்பட்டு இருக்க வேண்டிய தேவையில் இரண்டாக வலியுறுத்தப்பட்டன.

இயக்கத்தில் இறைவன் தானே இயங்கும் போது 'அந்தாதி' என அமைந்தான். அவனே ஒடுக்கித் தோற்றித் திதி செய்தது. அதன் பின்னர் அமையும் அழிவு முதலான இயக்கங்கள் போக்குவரவாகும். இவற்றை இறைவன் 'இயக்கத்தில் (ஆணையில்) நீங்காது நின்ற செயலனவாக உயிர்கள்' அமைகின்றன.



இறைவன் இயக்கமும் உயிர்கள் இயக்கமுமாக இரண்டு வினைகள் இணைந்து அமையும் இயங்குதலாக போக்கு வரவு அமைகின்றன.

உயிர்கள் காரணமாக இறைவன் இயங்கும் இயக்கம் இரண்டு நிலைகளில் அமைகிறது.

அ. உயிர்கள் இயங்க தான் மட்டுமே இயக்கி இயங்குதல்.

ஆ. உயிர்கள் இயங்குதலில் இணைவது. இயங்கி இயக்கிய பின் உயிர்களே இயக்குமாறு அதில் தான் இணைந்து இயங்குதல்.

இந்த இரண்டாவது வகையில் இயற்றப்படுவதுதான் 'இருவினை' இருவினையால் அமைவதே போக்கு வரவு. இதுவே மீளச் செய்யப்படுவது. உயிர்களோடு இணைந்து அவை செய்யுமாறு தான் செய்வது ஆகையால் இது புனர் உற்பவம். இதற்காகவே அவற்றில் அவைகளாகத் தானே ஆகி நிற்கிறான். ஆனால் இயங்குகிற வகையில் அதன் தன்மை என்ன என்பதை அடுத்து விளக்குகிறார்.

### (போக்குவரவு) புரிய ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும்

ஆணை என்பது ஒழுங்கு. அந்த ஒழுங்கை அமைக்கும் ஆற்றல் இறைவனின் அறிவு ஆற்றல் (சித் சத்தி) என்பர். இறைவனின் அறிவு ஆற்றலை இங்கே தலைமைபடுத்துவதன் நோக்கம் யாதெனில், அந்த அறிவே தெரிந்து செய்வது. அதைத் துணையாக வைத்துக் கொண்டு தெரிந்துகொள்ள தெரியாமல் செயல்படுவன உயிர்கள். இந்த நிலைமையில் நிகழ்த்தப்படுவதே புனர் உற்பவம். இதில் காரியத்தலைமை உயிர்களுக்கே. காரணத் தலைமையில் இறைவன் இருப்பதால் அவனுடைய அறிவு ஒழுங்கில் உயிர்கள் நீங்கமுடியாதன என்பதை விளக்குவது மேல் உள்ள தொடர்.

போக்குவரவு படும் உயிர்கள் தனி உரிமை உடையன. அவை அவைகளுக்காகவே முயற்சி செய்வன. இதில் மற்றவற்றின் உதவி என்பது உதவியாக அமையாது. உதவி செய்யும் ஒன்று உடனிருந்து வழங்கினாலும் தனியாகவே நிற்பதாகவே வழங்கினால்தான் உதவி. அந்த வகையில் 'தனி' என்பதான தனிப்பொருள் இறைவன். அவன் செய்தது உதவி. அந்த நன்றியால்தான் உயிர் வாழ வேண்டும். ஆனால் இறைவன் அதை உதவியாக வழங்கித் தன்னைத் தனியே நிறுத்திக் கொண்டு உயிர்களைக் கடன் பெற்றவர்களாக ஆக்கவில்லை. உடனிருந்து அவைகளுக்காக அவைகளைப் போக்குவரவு படுத்துகிறான். அவனைத் தனியாக உயிர்கள் உணர்ந்தால் உயிர்கள் தன்னைத் தொழும்பாக நிறுத்திக் கொள்ளும் என்பதை முதல் நூற்பாவில் கூறினார். இங்கே உடனிருந்து செய்யும் தன்மையில் உயிர்களின் எல்லையற்ற தன்மை உண்டு என்பதை விளக்குகிறார். இதனால்தான் இறைவனிடமிருந்து நீங்கியது போல போக்குவரவுபடும் உயிர்கள் ஆணையின் நீக்கமின்றியே நிற்கும் என்ற அடிப்படையைக் கவனப்படுத்துகிறார். உயிர்களுக்குச் செயலுரிமையை முழுமையாக வழங்கித் தன் இயக்கத்தை மூலமாக வைத்து இறைவன் இயக்குந் தன்மையை விளக்கி 'போக்கு வரவு புரிய ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும்' என்றார்.

## முதல் அதிகரணம்

**மேற்கோள் : ஈண்டு, இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்தானே யாய் நிற்கும் என்றது.**

**ஏது : அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னில், ஏகம் என்று சுட்டுவது உண்மையின் அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு.**

**மேற்கோள் விளக்கம் :** ஆன்மாக்களான அறிவுப் பொருள்கள் பல. அறிவற்ற உருவப் பொருள்களில் கூட்டி



வைத்தவன் இறைவன். அவ் ஆன்மாக்கள் எல்லாம் முதல்வனான இறைவனாகவே நிற்கும்.

முதல்வன் நீராக இருக்கிறான். இவைகள் அவனில் கரைந்து நிற்கும். ஆனால் நீருக்கு உப்பு நீர் என்ற பெயரே உண்டு. அதுபோல ஆன்மாக்களுக்கு உரிமை தந்து முதல்வனான இறைவன் தன்னில் இணைத்து வைத்திருக்கிறான். இந்த இணைப்பில் உயிர்கள் முதல்வனாகவே நிற்கின்றன. நீரானது நீர் எனவே பெயர் பெறாமல் 'உப்பு நீர்' எனவே பெயர் பெற விட்டு இருக்கிறது. (ஆனால் நீர் நீராக மாறும் தனித்தன்மை உடையது). இத்தன்மையில் ஆன்மா முதல்வனாகத் தன்னை நிறுத்திக் கொள்ளுமாறு இறைவன் தன்னை ஆன்மாக்களில் இணைத்துக் கொள்கிறான் என்பது. இவ்வாறே மற்ற பொருள்களிலும் இணைந்துள்ளான்.

**ஏது விளக்கம் :** 'அத்துவிதம்' என்ற சொல்லால் சொல்லப்படுவது 'ஏகம்' என்றால், 'ஏகம்' என்று சுட்டுவதுதான் உண்மையான நடைமுறை. ஆனால் அத்துவிதம் என்ற சொல்லால் 'அந்நிய நாத்தி'யே உணர்த்தப்படுகிறது.

ஏகத்தை ஏகம் என்று சொல்ல வேண்டுமேயன்றி 'அத்துவிதம்' என்ற சொல்லால் சொல்லத் தேவையில்லை. அத்துவிதம் என்பதைக் குறிப்பிடுவதன் நோக்கம் வேறு.

'அந்நிய நாத்தி' என்பதைக் குறித்தே 'அத்துவிதம்' என்ற சொல்லைப் பயன்படுத்துவர்.

நாத்தி – அழிவு (நாஸ்தி). அழிவு என்பது இல்லாத தன்மை.

அந்நியம் – வேறு.

வேறு இல்லாத தன்மையைக் குறிக்கவே 'அத்துவிதம்' என்ற சொல் பயன்படுகிறது.

வேறுபட்ட பொருள்களில் முதல்வன் வேறு இன்றிக்

கலந்திருக்கும் தன்மையை விளக்குவது 'அத்துவிதம்' என்பது. இதனை விளங்கிக்கொள்ள எடுத்துக்காட்டு வெண்பாக்கள் நான்கை அமைக்கிறார்.

எடுத்துக்காட்டு வெண்பா 2-1-1

**கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டுஉள்ளம்**
**இட்டதுஒரு பேர்அழைக்க என்என்றாங்கு - ஒட்டி**
**அவன்உளம்ஆ கில்லான் உளம்அவன்ஆ மாட்டாது**
**அவன்உளமாய் அல்லனுமாம் அங்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** உள்ளம் கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டு இட்டது ஒரு பேர் அழைக்க என் என்றாங்கு; அங்கு அவன் உளம் ஆகில்லான், உளம் அவன் ஆமாட்டாது. அவன் ஒட்டி உளமாய் அல்லனும் ஆம்.

**விளக்கம்**

உண்மையானது எல்லைப்பட்டு விட்டதாய் இருந்து உறுப்புகளையும் கருவிகளையும் பெற்று வைக்கப்பட்ட ஒரு பெயரால் அழைக்கப்பட்ட போது என்ன? என்று கேட்பதாகச் செயல்படுகிறது. கூப்பிடும் போதும் என்ன? என்று கேட்டும் அங்கே, இணைந்து செயலாற்றுகிறான் இறைவன். அச்செயலில் அவன் உளமாக ஆகவில்லை; உளமும் அவனாக ஆகாது. இச்செயலில் அவன் 'ஒட்டி' உண்மையாக இருக்கின்றான். அல்லாதவனாகவும் இருக்கின்றான்.

(i)

**உள்ளமும் உளமும்**

உயிர், ஜீவன், ஆன்மா என்றெல்லாம் அழைக்கப்படுகிற அறிவுப்பொருளை 'உள்ளம்' என்று கூறுகிறார் மெய்கண்டார். 'உள்ளது' என்பதன் பன்மைச் சுட்டே 'உள்ளம்' என்பது.



காட்சிப்படுகின்ற ஆண், பெண்ணில் உள்ளே 'உள்ளது' என்பதாகத் தனிப்பொருளாக இறுதி செய்து 'உள்ளம்' என அதற்குப் பெயரை அமைத்தார்.

'உள்ளம்' என்று பெயர் இயக்க வகையில் வைக்கப்பட்டது. அருவப் பொருளான அது எல்லைப்பட்டதாக இருந்து உறுப்பு, கருவிகளுடன் கூட்டி வைக்கப்பட்டு ஆணாகவோ பெண்ணாகவோ இயங்குகிறது. அப்படி இயங்கும் போது 'பெயர்' அடையாளத்தில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு கூப்பிட்டவுடன் என்ன? என்று கேட்டு இயங்குவதாக இருக்கிறது.

அறிவுப்பொருளான ஒன்று உறுப்பு, கருவிகள், பெயர் ஆகியவற்றோடு கூட்டுப்பொருளாக இருந்து செயல்படுவதால் 'உள்ளம்' என்ற சொல்லே அதற்கு உரியது.

உள்ளதாகப் பலபொருள் இயக்கமாகச் செயல்படும் ஆன்மா 'உள்ளம்' எனப்பட்டது. இந்த ஆன்மாவானது அறிவுத் தன்மையில் தன்னை 'உளோம்' எனப் பன்மை இருப்பாகவே அமையுமாறு 'உளம்' என்ற சொல் அமைகிறது. இறைவன் ஆன்மாவுடன் சேர்ந்தே (ஒட்டி) இருக்கின்றான். அறிவுப் பொருளான இறைவன் ஒளி போல அமைகிறான். அதை உள்வாங்கிக் கொள். ரசம் இல்லாக் கண்ணாடி போல ஆன்மா இருக்கிறது. ஒளி உள்புகுந்த கண்ணாடி போல இறைவனும் ஆன்மாவும் ஒட்டி இருக்கின்ற நிலையே 'உளம்' எனும் சொல்லால் உணரப்படுவது. பின் உறுப்பு, கருவிகளால் ஆன 'மெய்' சேர்ந்த வகையில் அது 'உள்ளம்' எனப்படுகிறது. இதுதான் பெயரிட்டு அழைத்த போது பெயரால் செயல்படுவதாக இருக்கிறது.

**ஒட்டியும் ஒட்டாமலும் அவன்**

பெயரிட்டழைக்கும் போது, என்ன? என்று கேட்பது உள்ளது. இந்நிகழ்ச்சியில் இறைவனும் ஆன்மாவில் ஒட்டியிருக்கின்ற நிலையில் 'ஏன்?' என்று கேட்பவனாகத் தானும் இருக்கின்றான்.

அவன் உடனிருந்து செய்து காட்டாமல் ஒட்டியிருந்தே தானும் செய்கிறான்.

ஆன்மாவுடன் இறைவன் 'ஒட்டி' இருப்பது என்பது பசை போன்ற ஒன்றாக அன்று. பசை இரண்டை ஒட்டப் பயன்படுவது. இணையாதவற்றை இணைப்பது 'ஊக்கி' எனப்படும். இறைவன் ஒரு பொருளாக ஆன்மா ஒரு பொருளாக இருந்து இரண்டும் ஒட்டப்படவில்லை. இறைவனே ஊக்கியாக இருந்து விளைவுக்குட்படுத்துகிறான். ஆன்மா செயல்படுகிறது. இறைவன் அதற்கு இணைந்திருந்து ஊக்கித் தன்மையில் உதவுகின்றான். 'ஊக்கித் தன்மையில்' இறைவன் ஆன்மாவைச் செயற்படுத்துவது என்பது ஊக்கிவிட்டுத் தான் நின்று விடுவதில்லை. ஒவ்வொரு விளைவிலும் பணியாற்றுகின்றான். இணைந்தே பணியாற்றுவதுதான் அவன் செய்வது. ஆனால் அதன் பயனை ஏற்றுக் கொள்ளாத வகையில் அவன் நிற்கும் தன்மைதான் 'ஊக்கி'யாகவே உள்ள நிலை.

ஆன்மாவின் செயலில் முழுமையாக இருக்கிறவன் செயல் தன்மையால் ஊக்கித் தன்மையனாகத் தன்னை நிறுத்திக் கொள்கிறான். இந்நிலையே அவன் உளமாக ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கும் நிலை.

ஒட்டி இருப்பதனால் அவன் என்றும் ஆன்மாவாக ஆகிவிடமாட்டான். அவன் தன்னில் ஒட்டிக் கொண்டு இருப்பதால் ஆன்மா என்றைக்கும் அவனாக ஆக முடியாது.

ஆனால் அவன் உளமாகவே தன்னை ஒட்ட வைத்துக் கொண்டு உதவுகிறான்.

(ii)

காட்சிப்படும் பொருள்களின் மூலமான அருவப் பொருளுக்கு வேறாக பொருள் காட்சிப்படுகிற போதே பொருளின் இயக்கத்தில் உணரப்படுகிற அருவமான அறிவுப்பொருள் இருப்பு



உறுதிப்பட்டது. இந்த அறிவுப் பொருள் எல்லைப்பட்டதால் உறுப்பு, கருவிகளோடு செயல்படுவது இயக்கத்தால் முடிவு செய்யப்பட்டது. இந்த இயக்கம் அறிவுப் பொருளின் தலைமையில் நிகழவில்லை. ஆனால் அறிவுப்பொருள் நிகழ்ச்சியின் பயனுக்கு தலைமை ஏற்றுக்கொள்கிறது. பயன் அதற்குரியதாக ஆவதால் பயனானது திணிப்பாக இல்லாமல் அதனுடைய செயலுக்குரிய விளைவாகவே அமையுமாறு தான் ஒட்டியிருந்து தந்து இயக்குகிறான் இறைவன்.

தூங்குகிறபோது காது, கண் எதுவும் வேலை செய்யவில்லை. அறிவில்லாத மூச்சுக்காற்று மட்டுமே போய் வந்து கொண்டிருக்கிறது. இந்த நல்ல உறக்கத்தின் போது பெயரிட்டழைத்தால் ஆன்மா என்ன? என்று கேட்பது எப்படி நிகழும்! தூங்காமல் ஆன்மாவில் இணைந்து இருக்கிற இறைவன்தான் செயல்பட வைக்கிறான். தூங்காமல் இறைவன் இருப்பது என்பது கருவி கரணப் பயனை அவன் கொள்ளாமல் தன்னளவில் அறிவால் இயங்கும் தன்மை.

தன்னளவில் அறிவால் இயங்கும் தன்மை உடைய இறைவனை, தன்னளவில் இயங்காமல் கருவிகள் இணைப்பில் இயங்கும் ஆன்மாவில் முடிவு செய்கிறார். தன்னளவில் அறிவுக்குரிய தன்மை இருந்தாலும் அறிவு இயக்கம் இல்லாதது ஆன்மா. இதன் தன்மையில் அறிவு இயக்கத்தைத் தன்னளவில் உடைய இறைவன் கலப்பு உண்மையை இவ் வெண்பாவில் தெளிவாக்கினார். இனி ஒட்டிக் கலந்த அவன் தலைமைத் தன்மையை அடுத்த வெண்பாவில் விவரிக்கிறார்.

எடுத்துக்காட்டு வெண்பா 2-1-2

**ஒன்றுஎன்றது ஒன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்**
**ஒன்றுஎன்ற நீபாசத் தோடுஉளைகாண் - ஒன்றுஇன்றால்**
**அக்கரங்கள் இன்றாம் அகர உயிர்இன்றேல்**
**இக்கிரமத்து என்னும் இருக்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** இருக்கு ஒன்று என்றது ; ஒன்றே காண் ஒன்று இன்றால் ; ஒன்று என்ற பசுவாம் நீ பாசத்தோடு உறை காண் ; அகர உயிர் இன்றேல் அக்கரங்கள் இன்றாம் ; இக்கிரமத்து ஒன்றே பதி என்னும்.

**விளக்கம்**

தத்துவ விளக்கம் செய்வோர் வேதங்களிலிருந்து மேற்கோளை விவாதித்து விளக்குவது இந்திய மரபு ஊறல். இப்படித்தான் திருஞானசம்பந்தரிடம் எதிர்பார்த்த போது அவர் வேதங்களில் உணரப்பட வேண்டியதும் வேதங்களினும் மெய்ப்பொருளாவதும் நமச்சிவாயமே என்றார். மெய்கண்டாரும் அப்படி ஒரு சிக்கலை எதிர்கொள்கிறார்.

(i)

இருக்கு வேதம் பொருளை 'ஒன்று' என்று கூறியது. ('ஏகம் சத்' என்பதாகலாம்) அதனை எடுத்துக் கொண்டு அதை எப்படி விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதை மெய்கண்டார் இவ்வெண்பாவில் விளக்குகிறார். அடுத்த வெண்பாவில் இரண்டல்ல (அத்துவிதம்) என்பதன் பொருளை விளக்கியமைக்கிறார்.

'ஒன்று' என்று பொருளை 'இருக்கு' முடிவு செய்தது. ஒன்று தான் பொருள் என்றால்,

**'ஒன்றே காண் ஒன்று இன்றால்'**

என்று முதலில் விடை அளிக்கின்றார் மெய்கண்டார்.

'ஒன்று இல்லையென்றால் ஒன்றே காண வேண்டும்'. ஒன்றே எனக் காண்பது எப்படி. வேறு ஒன்று இருந்தால்தான் ஒன்று என்பது காணப்படும். ஒன்று என்று சொல்ல வேறு ஒன்று தேவை.

'ஒன்று' என்று அந்த ஒன்றைச் சொல்லுந் தகுதி உடைய ஒன்றை உணராததால்தான் 'ஒன்று' என்பதை உயர்த்தும்



நோக்கமுடையவர்கள் ஒன்றுக்குமேல் வேறுபொருளை ஒத்துக் கொள்ள மறுக்கிறார்கள். அதாவது 'ஒன்று' எனப்படும் 'தன்' நிலைத் தனிப்பொருள் பிரமம் (கடவுள்). அதனைச் சுட்டுவது இன்னொரு பொருள் என்றால் அது அதைவிடத் தகுதியுடையதாகி விடுமே என்ற கவலை அதில் உண்டு.

தந்தையை 'ஒருவன்' என்று தான் சொல்ல முடியும். பிள்ளைகள் பல அமைந்து தந்தையை ஒருவன் என்று காட்டுவது போல அதை விளங்கிக் கொள்ள வேண்டுமேயொழிய தந்தையே தன்னைத் தந்தை என்று தனி ஒருவனாக அடையாளப்படுத்திக் கொள்ள முடியாது. 'ஒன்று' என்பதைக் காண வேறு ஒன்று இல்லையென்றால் 'முடியாது' என்பது அதன் விளக்கம்.

(ii)

இறைவனை ஒன்று என்று சொல்லுகின்ற ஒன்றிற்குப் பெயர் பசு. நீ தான் அந்தப் பசு. நீ எப்படிப்பட்டவன் என்றால் பாச இழுப்பில் இருப்பவன் என்பதை,

**"ஒன்று என்ற பசுவாம் நீ, பாசத்தோடு உளை காண்"**

என்பதால் விளக்கினார்.

கட்டு, உறுப்பு, கரணம் கொண்டு எல்லைப்பட்ட வகையில் உடம்பில் நின்ற உயிருக்குப் பெயர் 'பசு'. பசுவான நீதான் இறைவனை ஒன்று என்று சொல்லுபவன். கட்டுகளில் நின்ற அறிவுப்பொருள் நீ. கட்டுகளின் கட்டில் இல்லாத 'தானே' யான பொருளை ஒன்று என்று கூறுபவன் நீதான். நீ 'ஒன்று' எனப்படும் தகுதியில்லாதவன். உன்னுடையது கூட்டு. உன் கூட்டு இயக்கம் உன்னை இழுத்து வைத்துக் கொண்டு இருக்கிற பாசத்திலிருந்து இயங்கிக் கொண்டிருப்பது.

'உளை' என்பது சேறு. அது அப்படியே மனிதரை உள்ளிழுப்பது. அதிலிருந்து மனிதர் அசைந்து நகர வேண்டும். இப்படி ஆன்மாவை இழுத்து நிறுத்தி வைத்திருப்பது பாசம்.

இந்நிலையில் உறுப்பு, கரணம் கொண்டு அதன் சுற்றில் இயங்குவது ஆன்மா.

ஒன்றே பதி

எழுத்துகள் (அக்கரங்கள்) அகர உயிரெழுத்து இல்லையாயின் இயங்கா. இதுபோல பொருள்களின் இயக்கத்திற்கு உள்பொருளாகப் பதிந்து, பொருள்களின் இயக்கத்தில் உடன் இயங்குவது 'பதி'. அது எல்லாவற்றிலும் இருந்து 'அகரம்' போல இயங்கும் ஒரே பொருளே (ஒன்றே பதி).

பொருள் எத்தனை இருந்தாலும் அவற்றில் பலவாக இல்லாமல், ஒரு பொருளாக இருந்து எல்லாவற்றிலும் பதிந்து இயக்கும் பதி ஒன்றே. இம்முறையையே (இக்கிரமத்தை) இருக்கு கூறியது என உணர்க.

எடுத்துக்காட்டு வெண்பா 2-1-3

**பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்**
**எண்ணுஞ் சுவையும்போல் எங்குமாம் – அண்ணல்தான்**
**அத்துவிதம் ஆதல் அருமறைகள் ஒன்றுஎன்னாது**
**அத்துவிதம் என்ற அறையும் ஆங்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** அருமறைகள் ஒன்று என்னாது அத்துவிதம் என்று அறையும் ஆங்கு ; எங்கும் ஆம் அண்ணல் தான் அத்துவிதம் ஆதல் பண்ணையும் ஓசையும் போல, பழமதுவும் எண்ணுஞ் சுவையும் போல் அத்துவிதம் ஆதல்.

**விளக்கம்**

(i)

இருக்கு (ரிக் வேதம்) பொருள் 'ஒன்றே' என்று சொன்னதன் விளக்கத்தை மேல் வெண்பாவில் விளக்கியவர், பல பொருள்கள் இணைப்பில் ஒன்றான பதிப்பொருள் இணைந்து நிற்கும் தன்மையை விளக்குகிறார்.



அரிய அனுபவ நூல்களான மறை நூல்கள் 'அத்துவிதம்' என்ற சொல்லால் பரம்பொருளைச் சொல்லின. 'ஒன்று' என்று சொல்லாமல் 'அத்துவிதம்' என்ற சொல்லால் குறிப்பிட்டதன் காரணம், வேறு வேறு பொருள்களில் நிறைவாகக் கலந்திருக்கிற பொருள் போல இறைவன் கலந்த தன்மையின் 'வேறில்லா நிலை'யைப் புலப்படுத்தவே என்பதைப் பல எடுத்துக்காட்டுகளால் விளக்குகிறார் மெய்கண்டார்.

'அத்துவிதம்' என்று மறைகள் சொன்ன இடத்தைப் பின்வருமாறு விளங்கிக் கொள்ள வேண்டும் என்கிறார்.

எங்கும் ஆகி நின்ற பரம்பொருள் எல்லாப் பொருள்களிலும் நிறைந்து இருக்கிறது. அண்ணல் என்றால் நெருங்கியிருப்பவன். நள்இருள் என்றால் நெருக்கிய (அடர்த்தி) இருள் என்பது பொருள். எல்லாவற்றிலும் அடர்த்திப்பாடாய் நிறைந்த பரம்பொருளை 'அண்ணல்' என்றார். அது அனைத்தின் இயக்கப்பாட்டிற்கான மூலமுயற்சியாய் அமைதலை விளக்க 'தாள்' என்ற சொல்லை அமைத்தார்.

எங்குமாகி நின்ற பொருள் 'சிகரம்'. அது எல்லாவற்றிலும் அடர்ந்த போது 'வகரம்' வியாபக வியாப்பியமாய் நின்ற அப்பொருள் 'சிவ'ம் ஆகும். அதுவே 'அண்ணல்'. அது இயக்கப்பாட்டிற்கு 'தாளை' முன் வைத்தது.

'அண்ணல்' தாளின் மூலம் (இயக்கப்படுத்துவதாக) எல்லாப் பொருள்களிலும் இணைந்த வகையில் கூறப்படுவது 'அத்துவிதம்'.

(ii)

**பண்ணும் ஓசையும் போல**

'பண்ணோசை' கேட்கப்படுவது. 'பண்' என்பது பண்ணப்பட்ட ஒன்று. பண்ணப்பட்டது என்பது இன்ன முறையில் பாட வேண்டும் என அடிப்படையில் விதியில் எழுத்தால் நிலை நிறுத்தப்பட்டது.

அது இயக்கப்படும் போது ஓசையைப் பெறுகிறது. நிலைநிறுத்தப் பட்டது இயக்கமாக வருகிறது. நிலைநிறுத்தப்பட்ட எழுத்தில் இசை இருக்கிறது. இதில் வேறு பிரிக்கப்படுகிற நிலை இல்லாத இணைப்புத் தன்மை உணரப்படும். இப்படி மற்ற பொருள்களில் சிறிதும் வேற்றுமையின்றி கலந்திருக்கிறான்.

### பழமதுவும் எண்ணுஞ்சுவையும் போல்

பழமும் அதன் மதுவும் இணைந்து இருப்பது 'பழமது'. இது உண்ணப்பட்டபின் சுவையாக எண்ணப்படுகிறது. இப்படி சுவையும் பழமுமாக இணைந்திருந்த இரு பொருள்களின் ஒன்றின் தன்மை நிலைபடுமாறு போல இறைவன் இணைந்திருந்தாலும் ஆன்மாவையே முன்னிலைப்படுத்துகிறான். செயலில் உடன் இருக்கிறவன் செயல் உரிமையை பொருளுக்கே (ஆன்மாவுக்கு) வழங்க இணைந்து நிற்கிறான். செயற்படவும் செயற்பட்டு செயலை ஆன்மாவுக்கு ஆக்கவும் அவன் அத்துவிதக் கலப்பாக இருக்கிறான் என்பதை விளக்கினார்.

### எடுத்துக்காட்டு வெண்பா 2-1-4

**அரக்கொடு சேர்த்தி அணைத்தஅக் கற்போல்**
**உருக்கி உடங்குஇயைந்து நின்று – பிரிப்புஇன்றித்**
**தானே உலகாம் தமியேன் உளம்புகுதல்**
**யானே உலகுஎன்பன் இன்று.**

**வெண்பா உரைத்தொடர் :** உருக்கி அரக்கொடு சேர்த்தி அணைத்த அக்கல்போல் உடங்கு இயைந்து பிரிப்பு இன்றி நின்று ; தமியேன் உளம் புகுதல், தானே உலகு ஆம் ; உலகு என்பன், யானே இன்று.

### விளக்கம்

'சாணை'க் கல் எனப்படும் கல் உராய்வைச் செய்யப் பயன்படும். அரக்கை உருக்கி அதனோடு நன்றாகச் சேரும்படிப்



பொடித்த கல் துகளை இட்டு வார்த்து எடுக்கப்பட்டது சாணைக்கல். இந்தக் 'கல்' பொருளளவில் ஒன்றே. ஆனால் அது மூலப் பொருளளவில் இரண்டு பொருள்களால் ஆனது. அந்த இரண்டு பொருள்களும் இணைந்திருக்கின்றன. இந்தக் கல் மூலம் பொன் உரசிப் பார்க்கப்படுகிறது.

பொன்னை உரசிப் பார்க்கப் பயன்படும் அந்தக் கல்லை 'அத்துவிதக் கலப்பு' உறவுக்கு எடுத்துக்காட்டாக அமைத்தார் மெய்கண்டார்.

பொன் உரசப்படுகின்ற செயலுக்கு 'கல்'லானது தேய்க்கவும் மெழுகானது துகள் ஒட்டவும் பயனாகின்றன. இந்தச் செயல் தன்மையை 'உடனாதல்' தன்மை என்பர்.

இறைவனும் பொருள்களும் வேறு வேறு தான் (உடங்கி) பொருள்களில் அப்பொருளாகவே 'ஒன்றாகவே' (இயைந்து) நிற்கிறது பரம்பொருள். ஆனால் தன்மையால் தனிப்பொருளானது பரம்பொருள். அது பொருளை இயக்குவதில் உடனாக (பிரிப்பு இன்றி) நிற்கிறது. சாணைக் கல்லில் உரசும் கல் போல அடிப்படையில் இயக்கிடும் (தாள்) இறைவன், அரக்கு துகளை ஒட்டிக் கொள்வது போல ஆன்மாவுக்கே பயனை உரியதாக்குகிறான். இக்காரணம் பற்றி அவன் உயிர்களிலும் உலகிலும் தன்னை ஒட்ட வைத்துக் கொன்டான்.

அ உயிரின் உள்ளே புகுந்தான் (தமியேன் உளம் புகுதல்)

ஆ உலகப் பொருள்களில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டான் (தானே உலகு ஆம்).

இவ்வாறு இரு முறைகளில் அவன் அத்துவிதக் கலப்பை அமைத்துக் கொண்டதற்குக் காரணம் அறிவுப் பொருளில் அதன் அறிவு விளைவுக்கு ஆதாரமாக்கிக் கொள்ளுதல். காட்சிப்படும் தனு, கரண, புவன, போகங்களில் அவையாகவே இணைந்து கொள்ளுதல். இத்தன்மையினாலே 'அருளே உலகம்' எனப்பட்டது.

அத்துவிதக் கலப்பால் அமையும் பயன் யாதென்பதை, ‘உலகு என்பேன்’, ‘யானே இன்று’ என்றார். உலகமாக இறைவனே இருக்கிறான் என அனுபவப்படல். ஆன்மா செயலால் தான் முதன்மை இல்லை என்பதை உணர்ந்து ‘யான் என்பதாக இருந்து எதுவும் என்னால் செய்யப்படவில்லை’ எனத் தொழும்பு ஆகும்.

இந்நிலையில் செய்யப்பட்ட எல்லாம், எனக்கே ஆன வினை (நல்வினை, தீவினை) எப்படி ஆயின என்பதை விளக்குமாறு இரண்டாம் அதிகரணத்தை அமைக்கிறார்.

## இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : **இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வரும்என்றது.**

ஏது : **ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவல் இட்டாங்கு அவை அவனது ஆக்கினை ஆகலான்.**

**மேற்கோள் விளக்கம் :** ‘ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும்’ என்று நூற்பாவில் கூறினார். அங்கு, முதல்வன் இயக்கத்தினால் செயல்படும் உயிர்கள் இறைவன் இயக்கத்தில் நீங்கியது போல சுதந்திரத் தன்மையில் செயல்பட்டாலும் இயக்கத்தின் நீக்கமிலாது நிற்பனவே என்றார். இதன் காரணமாக அத்துவித உறவை விரிவாக மேலே விளக்கியவர்;

உயிர்களைச் சுதந்திரத் தன்மையில் செயல்பட வைத்து (தான் ஆணையின் இணைந்திருந்த தன்மையை விளக்கிய பின்) அவைகளின் செயல்பாட்டிற்கான புண்ணிய பாவத்தைத் (இருவினை) தருபவனாக ஆணையின் நிற்கிறான் இறைவன் என்றார்.

ஏது விளக்கம் : நகரத்தைப் பாதுகாக்கும் தலைவன் அமைச்சர் காவல் படை மூலம் ஆணையிட்டுச் செயலை நிறைவேற்றுவது போல ஆணையால் செயல்படுத்தி வினைப் பயனை அவ்வவ் உயிர்க்கு அமைக்கின்றான்.



எடுத்துக்காட்டு வெண்பா 2-2-1

**உள்ளதே தோற்ற உயிர்அணையும் அவ்வுடலின்**
**உள்ளதாம் முற்செய்வினை உள்அடையே - வள்ளலவன்**
**செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செய்யேபோல்**
**செய்வன், செயல்அணையா சென்று.**

**வெண்பா உரைத்தொடர் :** முற்செய்வினை உள்ளடைவே உள்ளதாம்; செயல் சென்று அணையா; உள்ளதே தோற்ற உயிர் அவ்வுடலின் அணையும்; செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செய்யே போல்; வள்ளல் அவன் செய்வன்.

### விளக்கம்

முன் செய்த செயல்களின் தொகுதியானது இருக்கிறது. அந்தச் செயல் தொகுதியே (வினை) செய்த உயிரைச் சென்று சேராது. இருக்கிற வினையை அனுபவிக்க அதற்குரிய உடம்பில் உயிர் சேரும். உழுது நெல் விதைத்து விளைவிக்க வயலை உழவன் பயன்படுத்துவது போல கருணையாளனான இறைவன் வினையைப் பயன்படுத்தி உயிர்களை உடம்பில் இணைத்து இயங்க வைக்கிறான்.

(i)

முற்செய்வினை உள்ளடைவு

‘முதலில் செய்த வினை’ எனவும் ‘முன்பு செய்த வினை’ எனவும் முற்செய்வினை என்பதற்குப் பொருள் உண்டு.

முதலில் செய்த வினைதான் முதல் பிறவிக்குக் காரணம். அதனைத் தொடர்ந்து வினையானது கழிந்தவை போக தொகுதிப்பட்டுக் கொண்டே வரும். அவ்வாறு பிறவிக்குக் காரணமாகத் தொகுதிப்பட்டு இருக்கிற வினைக்குப் பெயர் ‘சஞ்சிதம்’ என்பது.

பிறவி எடுத்து 'சஞ்சித வினை'யை அனுபவிக்கும் போது முறையாக வினைப்பயன் தரப்படும். இப்படித் தரப்படுகின்ற வினையைப் 'பிராரத்தம்' என்ற சொல்லால் விளக்குவர்.

பிறவியில் அனுபவிக்கும் போதே அந்த அனுபவ எண்ணத்தால் விளையும் புதிய வினை 'ஆகாமியம்' ஆகும்.

இப்படி வினை கழிந்தும் தொகுதிப்பட்டும் தொடர்ச்சியாக ஆன்மாவின் புத்தி தத்துவத்தில் இணைத்து வைக்கப்படுகிறது. 'கலை, வித்தை, அராகம், காலம், நியதி' ஆகிய ஐந்தும் சேர்ந்து கட்டுப்பட்டு அணுவாய்ச் செயல்படத் தயாராக்கப்பட்டு உள்ளது (பஞ்ச கஞ்சுகன்) ஆன்மா.

இதன்பின் அனுபவக்கட்டாக மனம், புத்தி, ஆங்காரம், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய எட்டின் கூட்டில் (புரியட்ட காயம்) செயல்படும். இதில் உள்ள புத்தி தத்துவமே உயிர் செய்த வினைத் தொகுதிக்கு உரிய இடம். தெரிந்து செய்யுமாறும் தெரியாமல் செய்யுமாறும் வினையை ஊட்டிக் கழிக்க புத்தியை இயக்கப்படுத்துதல் அமைகிறது (இறைவனை புத்தியில் நாம் இயக்கி இயங்கினால் வினையை வெல்லலாம்).

### முதல் வினை

'மூலகன்மம்' எனப்படும் முதல்வினை ஒன்று உண்டு. 'வினை' என்ற ஒரு தனிப்பொருள் அறிவில்லாத அருவப் பொருளாக இருப்பது. அதன் செயல்பாடு நன்மை, தீமை அடிப்படையில் அமையும். இதற்குரிய வகையில் மாயையிலிருந்து உலகப் பொருள்களைப் போல இறைவன் ஆணையால் வினையைக் காரியப்படுத்துகிறான்.

வினை எனும் அருவப் பொருளில் உயிர்களின் எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு செயல் எனும் பருமையைத் தருபவனாக இறைவன் இருக்கிறான். இந்தச் செயல் பருமை என்பது செயல்படுவதன் வழி விளங்கிக் கொள்ளப்படுவதே.



ஆன்ம எண்ணத்தை முதலில் இயக்கிய வகையில் ஆன்மாவின் முதல் எண்ணமாக அமைந்ததே மூல கன்மம். ஆன்மாவானது இயங்குவதற்கு உடம்பைப் பெற்றது. இயங்க உடம்பைத் தரும் இறைவன் முதலில் சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், வித்தை என ஞான வகையாலும் செயல் வகையாலும் ஆன்மாக்களில் நிறுத்திக் கொள்ள சுத்த மாயையால் களங்களை ஏற்படுத்திக் கொண்டு நிற்கிறான்.

தனு, கரண, புவன, போக இணைப்பில் ஆன்மாக்களுக்கு உரிய களங்களாக 'கலை' முதலான தத்துவங்களை அசுத்த மாயையிலிருந்து தோற்றுவிக்கிறான்.

அருவ அறிவுப் பொருளான ஆன்மாவுக்கு ஐந்து பொருள்களால் இணைப்பு (பஞ்ச கஞ்சுகம்) தருகிறான். முதலில் 'கலை' எனும் பொருளால் ஆன்மச் செயலை எழுப்புகிறான். பின் இரண்டாவது 'வித்தை'யால் அறிவை எழுப்புகிறான்.

செயலும், அறிவும் செயல்படத் தொடங்கிய பின் 'அராகம்' என்பதால் ஆன்ம இச்சை எனும் விருப்ப ஆற்றலை எழுப்புகிறான். எழுப்பியவுடன் முதலில் தோன்றிய எண்ணம்தான் மூல கன்மம். இதை வைத்துத்தான் ஆன்மாவின் அறிவை வெளிக்கொணரும் திட்டத்தைச் செயல்படுத்துகிறான். அந்த அந்த ஆன்மாவுக்கும் அதனுள் இணைந்து நின்று செயல்படுத்துவன்.

'மூலகன்ம' ஆக்கத்தின்பின் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் அறிவு ஐந்தை நிறைவுபடுத்தப் பிறவி தருகின்றான்.

### முதல் வினை உள்ளடைவு

நன்மை, தீமை மதிப்பிடும் வினையாக ஆன்மா செய்த வினையைக் கொள்வது மனிதப்பிறவி நிலையிலேயே. மனிதப் பிறவிக்கு முன் உள்ள ஐந்தறிவுச் செயல்பாட்டுப் பிறவிகள் அனைத்திலும் நன்மை, தீமை மதிப்பீட்டு வினை இல்லை.

இக்காரணம் பற்றியும் உலகக் காட்சியை விடுத்த போது ஆண், பெண், அது என்றார்.

(ஆண், பெண் வினையாக்கத்திற்குக் களமாகும் தனித்தனி நிலையில் ஆண் தனி, பெண் தனி). ஓர் அறிவு உயிராக முதலில் பிறவியை அமைக்கிறான். 'உற்று' அறியும் அந்தப் பிறவியின் முழுமை என்பது 'தொடுதல் அறிவில்' முழுமையடைதல்.

தொடுதல் என்பது அறிவுச் செய்கை. அதன் மூலமான 'ஊறு' என்று அறிவு முழுமை பெறுமானால் அது 'ஊறு ஞானம்'. இப்படி ஒவ்வொரு அறிவும் முழுமை அடைகிற வகையில் அந்த அந்த பிறவிகளிலும் பலப்பல பிறவிகளைத் தடையில்லாமல் வழங்குகிறான். இந்த வகையில்தான்,

**"எழுகடல் மணலை அளவிடினும்**
**எனது இடர் பிறவி அதிகம்"**

என்றார் அருணகிரிநாதர்.

ஐந்து அறிவும் நிறைவான பின் ஐந்தையும் இணைப்படுத்தி செயலாக இல்லாமல் சோதனையாகப் படைத்துப் பார்ப்பது 'கல்' பிறவி. இது கருங்கல் போல்வதன்ற. நடமாடாமல் இயக்கிப் பார்க்கப்பட்ட உடம்பு. (மணிவாசகர் 'கல்' பிறவி சொன்ன வகையில் அறிக).

ஐந்தறிவின் நிறைவின் பின் ஐந்தை வகை தொகை செய்து தானும் படைப்பாளியாக வினைப்படும் தகுதியில் படைக்கப்பட்டது மனிதப்பிறவி. இந்நிலையில் உருவாவதே புனர் உற்பவம். இதன் நிலையில்தான் இறைவன் வினையின் மேலும் ஆன்மாவின் வினை உலகில் விளைகிறது. இதில் இறைவன் செயல் எல்லையில் நீங்காமை என்பது உண்டு. இந்நிலை இறைவன் இயக்க ஆற்றல் (ஆணை) துணை நிற்கிறது என்ற வகையிலேயே. மற்றபடி ஆன்மா சுதந்திரமாகத் தன்னைத் தானே படைத்துக் கொள்ள வினைப்படுகிறது. அதன் போக்கில்



அதனை விட்டு, பயனால் பிடிப்பவனாக விட்டுப் பிடிக்கும் நிலையில் இறைவன் பணியாற்றுகிறான். இவ்வகையில் அவன் செயல் உழவன் செயலாகிறது; வினை வயல் நிலமாகிறது; ஆன்மா விளைகிறது.

**முன்வினை உள்ளடைவு**

மனிதராகப் பிறந்து நன்மை, தீமை மதிப்பீட்டு வினை செய்யும் ஆன்மாவின் வினைகள் யாவும் தொகுக்கப்படுகின்றன. தொகுக்கப்படுகின்ற பணியும் தருகின்ற பணியும் இறைவனுடையதே. தருவதற்குத் தயாராக இறைவன் தொகுத்துத் தருகின்ற வினைகளே 'முன்வினை'யாம்.

முன்வினையின் உள்ளடக்கத்தை வைத்தே தோற்றுவிக்கப்பட்ட பிறவி அமைகிறது. 'உள்ளதாக' இருக்கிற பிறவி முன்செய்த வினையின் உள்ளடைவின் விளைவு என்பதைச் சுட்டி "முற்செய்வினை உள்ளடைவே உள்ளதாம்" என்றார். முற்செய்வினையின் உள்ளடைவை பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என ஆறாக வகுத்து உள்ளதாக ஆக்கித் திட்டமிட்டுள்ளான் என்பர். பெற வேண்டியவை, இழக்க வேண்டியவை, இன்ப ஆக்கம், நோய், இயலாமை எனும் மூப்பு, இறப்பு என இவற்றை 'முன்வினை'யை ஒட்டி 'உள்ளதாக' ஆக்கியுள்ளான்.

(ii)

முன்செய்வினையால் திட்டமிடப்பட்டது என்றே பிறவியை நிறுத்த வேண்டும். பேறு முதலானவை தரப்படும் முறையில் இறைவனின் வள்ளல் தன்மை தெரிய வரும். அதுதான் பேராமல் ஊட்டும் பிரானின் உயர்ந்த பணி.

பேராமல் ஊட்டுகிறான் என்றால் முடிந்தவரை வினையை மென்மையாக்கித் தருகிறான். நாம் வலிமையாக ஆக்கிக் கொள்ளாமல் இருந்தால் சரி.

அடுத்து அவன் தருகிற முறையில் ஒன்றைக் கையாளுகிறான். இறந்த வினையை நிகழ்காலப்படுத்தித் தருகிறான். ஒருவனுக்குத் தண்டனை தர வேண்டுமென்றால் நல்லவனுக்குத் தீமை செய்ய வைத்துத் தண்டனை தருவது. இதில் வினை இணைப்பு இருவருக்கும் உண்டு. ஆனால் இருவர் வினையும் தனித்தனி இப்படி எல்லா வினைகளையுமே நிகழ்காலப்படுத்தித் தருகிறான். புதிய வினை என்பதாக நாம் செய்வது என்பது இல்லை என்றே சொல்லலாம்.

### வினையைக் கழிக்கவும்

வினையிலிருந்து விடுதலை பெறவும் பிறவி தந்திருப்பதால் உள்ளதாக அமைந்த வினைகளில் எதுவுமே புதியது இல்லை எனலாம். திடீரென்று ஒருவன் செய்யும் 'கொலை' அவனுக்கு இனி பாலமாகிற புதிய வினை என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனால் இதை முற்றிலும் புதிய வினை என்று சொல்லத் தேவையில்லை. அருளாளர் காண்கின்ற போது நிகழ்கின்ற எல்லாவற்றையும் அமைதியுடன் ஏற்பதற்கான காரணம் இதில் உள்ளடங்கியிருக்கிறது.

புதிய வினையாக இறைவன் முன்செய்த . வினையை அனுபவிக்கும் எண்ணத்திலிருந்து தொகுப்பது. இதன் மூலம் இனி பிறவி தருவான் என்பது. முன் செய்த வினையால் உள்ளதான இப்பிறவியில் வினை அனுபவம் நேர்ப்படுமானால் இறப்பு அறும். வினை கழியக் கழிய இறப்பு உண்டாகும். அதில் சேர்ந்து இனி பிறப்புக்கு இறப்பாக உண்டு. வினை சேராமல் கழிந்தால் பிறப்பு இல்லையாதலாம் இறப்புக்கு வழி இல்லை. இவ்வகையில் மரணத்தை வெல்லவே பிறவி.

வினைக் கழிவை நேராகக் கணக்கிட வேண்டாம். சிறு தீக்குச்சி காட்டை வேக வைப்பது போல ஏதோ ஒரு தன்மையில் விளைவாகும் மொத்த வினையையும் கழிய வைக்கலாம். அந்த ஒன்றற்கான 'வார்த்தை ஊட்டுவது' வாய்க்கத் தயாராக வேண்டும் என்பது தான் பிறவி ஆணை.



## (iii)

### செயல் சென்று அணையா

காட்சியுலகில் எந்தப் பொருளின் இயக்கமும் பொருளாலேயே நிகழ்த்தப்படவில்லை. ஒன்றை இயக்குவதாக இன்னொன்று உள்ளது. அறிவுப் பொருளின் இயக்கமும் சார்ந்த உடலை ஒட்டி தேவையாக்கப்பட்டவைகளைப் (பசி, காமம் முதலியன) பெறும் வகையில் இயங்குகின்றன. இந்நிலையில் வினை எனப்படுவதான செயலின் மூலமானது தானே இயங்காது. உலகில் காணப்படும் சடப்பொருள் போலவும் இன்னொரு சடப்பொருளால் இயங்குவது. மூலப்பொருளாக நிற்கும் எந்த ஒன்றும் தன்நிலையில் அறிவியம்சமான பரம்பொருளாலேயே இயங்குவதாகின்றன. செயல் இயக்கத்தாலும் தானே இயங்காது. அதற்கு மேலும் செயல் தரப்பட வேண்டிய முறையால் எப்படி இயங்குவதாகும்.

### உள்ளதே தோற்ற உயிர் அவ்வுடலின் அணையும்

சொல்லப்பட்ட செயல்களின் தொகுதி முன்வினையாக உள்ளது. அது விளைவாகத் தோற்றுவிக்கப்பட உயிர் அதற்குரிய உடலினைச் சேரும். அவ்வாறு சேர்ப்பவனை 'வள்ளல்' என்றார். அவன், 'செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செயலே போல்' செய்கிறான் என்றும் கூறினார்.

உற்பத்திப்படுகின்ற பயனைத் தரும் விளைநிலம் மூலம் பயிரை உற்பத்தி செய்பவர் உழவர். உழவரைப் போல வினையாகிய விளைநிலத்தை அடிப்படையாகக் கொண்டு உடம்பாகிய பயிரை உருவாக்கி பயன் நிகழ்த்துமாறு ஆக்குபவன் இறைவன் என்றார். இதை அவன் தன் அனுபவத்திற்காகச் செய்யாமல், உயிருக்காகவே செய்வதால் வள்ளல் (பயிருக்காகவன்றி தனக்காகப் பயிரிடுபவன் உழவன்) என்றார்.

எடுத்துக்காட்டு வெண்பா 2-2-2

**அவ்வினையைச் செய்வதனில் அவ்வினைஞர் தாம் சென்றுஅங்கு**
**அவ்வினையைக் காந்த பசாசம்போல் - அவ்வினையைப்**
**பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்**
**ஆர்தான் அறிந்து அணைப்பார் ஆங்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** அவ்வினைஞர், தாம் சென்று அங்கு அவ்வினையைக் காந்த பசாசம் போல் செய்வதனில், அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல், அவ்வினையை ஆர்தாம் அறிந்து அணைப்பார் ஆங்கு.

**விளக்கம்**

வினைகளைச் செய்தவர் வினைஞர். 'அவ்' எனச் சுட்டு அமைப்பதற்குக் காரணம் எவை எவையாக நிகழ்த்தப்பட்டனவோ அவை என்பதை கருதவே 'அவ்' சுட்டை அமைக்கின்றார்.

வினைகள் தாமே சேராது என்று மேல் வெண்பாவில் தெரிவித்தவர், வினையை அறிவுப் பொருளான உயிரே எடுத்துக் கொள்ளுமா என்று கேட்டால் இறைவன்தான் சேர்ப்பான் என்றும், எப்படிச் சேர்ப்பான் என்பதையும் விளக்குவதாக அமைத்த வெண்பா.

சடப்பொருளை வினையே சென்று சேராது. இது இரும்பு போல வார்க்கப்பட்டு மொத்தமாகக் (சஞ்சிதம்) கிடக்கிறது. உயிர்ப் பொருளான ஆன்மாவானது 'இயக்கம் உள்ள இரும்புத் துண்டான காந்தம்' போன்றது. இதுவே சென்று இரும்புத் துண்டை இழுக்குமா என்றால் இல்லை. இரண்டையும் அருகருகே கொண்டு வருபவன் ஒருவன் வேண்டும். அவனே இரும்புத் துண்டான வினைக்கும் காந்தமமான ஆன்மாவிற்கும் வேறான 'பிரான்'. அவன்தான் இரண்டையும் இணைக்கிறான். இணைப்பதில் ஒரு நுட்பம் உண்டு. அதனை விளக்க, 'பேராமல் ஊட்டும் பிரான்' என்றார்.



உருக்கி வார்க்கப்பட்ட இரும்புத் துண்டின் அருகே காந்தம் வந்தால் காந்தம் இரும்பை இழுக்காது. காந்தம் இரும்பின் மீது தாக்குண்டு கிடக்கும். ஆனால் காந்தத்திடம் இரும்பைக் கொண்டு சென்றால் காந்தமே இழுக்கும் அமைப்பு வர வேண்டும். அதற்காக இரும்பைப் பகுதிகளாக்குகிறான் இறைவன். எப்படி காந்தம் இழுக்குமோ அப்படி இரும்புத் துண்டுகளை ஒவ்வொன்றாக ஆக்கி காந்தத்தின் அருகில் கொண்டு செல்கின்றான். இம்முறையில்தான் சஞ்சித வினையைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆன்மாவின் தகுதிக்கேற்ப ஊட்டுகின்றான் பெருமான். இதனால்தான் அவனைப் 'பேராமல் ஊட்டும் பிரான்' என்றார். இப்படிப் பெருமான் செய்யவில்லையென்றால் உயிர்கள் பாழில் வீழ்ந்து போயிருக்கும். வாழ வைக்க இறைவன் பேராமல் ஊட்டினான்.

எடுத்துக்காட்டு வெண்பா 2-2-3

**நெல்லிற்கு உமியும் நிகழ்செம்பி னில்களிம்பும்**
**சொல்லில் புதிதன்று தொன்மையே - வல்லி**
**மலகன்மம் அன்றுஉளவாம் வள்ளலால் பொன்வாள்**
**அலர்சோகம் செய்கமலத்து ஆம்.**

**வெண்பா உரைத்தொடர் :** நெல்லுக்கு உமியும் செம்பினில் களிம்பும் சொல்லில் புதிது அன்று, நிகழ் தொன்மையே; வல்லி மல கன்மம் அன்று உளவாம்; பொன் வாள் வள்ளலார் கமலத்து அலர் சோகம் ஆம்.

**விளக்கம்**

'நெல்' என்பது அரிசியும் உமியும் சேர்ந்தது. அரிசியை நெல் என்றார். இது உமியுடனேயே தோற்றமளித்தது. உமி புதிதாக வந்த ஒன்று அன்று.

செம்பில் இரண்டு விதமான களிம்பு உண்டு. செம்பில் இருக்கிற களிம்பை நீக்கினால் பொன். செம்பு என்றாலே

களிம்புடனான பொன். இதற்கு மேலும் செம்பின் மேல் வெளிப்படும் அழுக்கு - கருப்பு ஒன்று உண்டு. இதைத் துலக்கினால் செம்பு பளிச்சிடும்; ஆனால் பொன் ஆகாது.

நெல், உமி இரண்டின் தொடர்பில் முதலில் பார்க்கப்பட்டது உமியே. ஆணவத்தின் மறைப்பால் உள் விளங்குவது உயிர். இதனைக் காட்ட நெல், உமி எடுத்துக்காட்டை அமைத்தார்.

செம்பின் பொன்னும் களிம்பும் போல நீக்கமறக் கலந்த ஒரு நிலை காட்டினார். இது ஆணவம் ஆன்மாவை முழுதும் மறைத்த கலப்பு. இதற்குமேல் படரும் களிம்புதான் கன்மம். இது துலக்கத்திற்கானது.

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் ஆணவம், கன்மம் எனும் இரண்டு பொருள்களை விளக்கினார். இவை இரண்டும் "புதிது அன்று, நிகழ் தொன்மை" என்றார்.

காட்சிப்படும் உலகின் மூலப்பொருளான 'மாயை'யை முதலிலேயே முடிவு செய்ததால் அதுதான் தொன்மைப் பொருள் என்பதில்லை. அதனுடைய ஆராய்ச்சியில் தெளியப்பட்ட அறிவுப் பொருளான உயிருக்குத் தொடர்புடையனவான ஆணவம், கன்மம் இரண்டும் நிகழ்ச்சிகளால் 'நிகழ்'வதாகப் பின்னாக விளங்கிக் கொள்ளப்பட்டாலும் 'தொன்மை'யே என்கிறார். விளைவு வகையில் முன்னதாக உணரப்படுமாறும் இவை அமையாமையும் உணர்த்தினார்.

இரண்டாம் நூற்பா விளக்கத்தின் இறுதிப் பகுதியில் பொருள் சார்புகளில் பல்பொருள் முடிவுகளை அறிவிக்கிறார் மெய்கண்டார். அதற்கு இரண்டு மேற்கோள்களைக் கூறினார். முடிவாக 'வல்லி - மாயை, மலம் - ஆணவம், கன்மம் - வினை' ஆகிய மூன்று அறிவிலாப் பொருள் மூலங்களைச் சுட்டுகிறார்.

அடுத்து, சூரியன் ஒரு பொருளாக இருந்து கதிரொளியால் உலகப் பொருள்களில் தொடர்புபட்டு இயக்குவது போல இறைவன் இயங்குகிறான் என்றார். கதிரவன் இயக்கத்தில் தாமரை மலர்ந்தும் கூம்பியும் அமைவது போல ஆன்மா நல்வினை, தீவினைப் பயன்களை இறைவன் ஊட்ட நுகர்கின்றன என்றார்.



'பொன்வாள் வள்ளலால், கமலத்து அலர் சோகம் ஆம்' என இறுதியாக கதிரவனால் தாமரை மலர்ந்தும் கூம்பியும் அமைவது போல ஆன்மா நல்லது, கெட்டது கொள்கிறது என்று 'மும்மல காரியப்பாட்டின்' கருத்தொருமை காட்டினார்.

## மூன்றாம் அதிகரணம்

**மேற்கோள் : இனி, இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்துவரும் என்றது.**

**ஏது : தோற்றமும் ஈறும் உள்ளதற்கு அல்லது உளதாதல் இன்மை யான்.**

**மேற்கோள் விளக்கம் :** ஆன்மா அறிவு துலங்க கன்மத்தை அடிப்படையாகக் கொண்டு மாறி மாறிப் பிறந்து வரும்.

**ஏது விளக்கம் :** தோன்றுவதும் அழிவதும் உள்ளதற்கு எனப்பட்டதால், உள்ளதாக வரும் வினையடிப்படையே பிறப்பதற்கும் இறப்பதற்கும் காரணமாகிறது.

எடுத்துக்காட்டு வெண்பா 2-3-1

**கண்ட நனவைக் கனவுஉணர்வில் தான்மறந்து**
**விண்படர்ந்துஅத்தூடு வினையினால் - கண்செவிகெட்டு**
**உள்ளதே தோற்ற உளம் அணுவாய்ச் சென்றுமனம்**
**தள்ள விழும்கருவில் தான்.**

**வெண்பா உரைத்தொடர் :** தான் கண்ட நனவை கனவு உணர்வின் மறந்து உளம்தான் வினையினால் கண் செவி கெட்டு மனம் தள்ள உள்ளதே தோற்ற அத்தூடு அணுவாய்ச் சென்று விண்படர்ந்து கருவில் விழும்.

**விளக்கம்**

தான் அனுபவிக்கும் நனவு வாழ்க்கையை கனவு உணர்வின் போது மறந்து இருப்பர். கனவு வாழ்க்கை நனவில் உணரப்படும். ஆனால் நனவு வாழ்க்கை கனவில் உணரப்படாது. அதாவது நனவில் உள்ளமானது தனி நின்று நனவை நினைப்பதாக ஆகாது. அப்படி நினைத்தால் கனவில் தோன்றும் கருவிகள் உயிர்ப்புடையனவாக அதற்கு உயிர்தர இன்னொரு உயிர் என முடிவு வரும்.

கனவில் நனவு அனுபவம் மறக்கப்படுவது போல முற்றாக புதிய உருவை உளம் (ஆன்மா) பெறும்.

நனவு அனுபவத்தைக் கனவில் உணரமாட்டான் என்று கூறியதற்குக் காரணம் நனவில் செய்யப்பட்ட பொருள்கள் அதற்கு உதவுகின்றன என்பதை உணர்த்தவே. இதன் மூலம் விளக்கப்படுவது யாதெனில் நனவாக - வாழ்ந்த வாழ்க்கையின் வினை அடுத்த பிறவிக்குக் காரணமாகிறது என்பது.

ஆக, மறுபிறவி என்பது இருந்த பிறவியின் வினையால் வருவது. அது நனவை மறந்த கனவு போல (தொடர்புடைய) புதியது.

(ii)

இருந்த பிறவி வந்த பிறவிக்கு வினையால் தொடர்புடைய தாகிறது. மேலும் வினைதான் இருந்த பிறவியில் இருந்த கண்ணைச் செவியைக் கெட வைத்தது.

இருந்த பிறவியில் முயற்சி செய்த ஆன்மாவின் அடிப்படை எண்ணம் விளைவாக ஆக வருவது பிறவி. இதை விளக்க "மனம் தள்ள உள்ளதே தோற்ற" என்றார். 'மனம்' எண்ணத்தின் நுழைவிடக் கருவி. இதன் மூலம் தான் வாழ்க்கைப் போராட்டம். இருந்த பிறவியின் 'அடிப்படையாக இருந்த எண்ணம்' அடுத்த



பிறவிக்கு வாயிலாக அமைகிறது. அதே சமயத்தில் இந்த 'எண்ணத்தை' நிறைவேற்ற நல்வினை, தீவினைச் சார்பில் பிறவி வருகிறது.

இந்த பிறவி எண்ணம் உள்ளீடாக (அத்தூடு) அமைய உடம்பிலிருந்து நீக்கப்படும் ஆன்மா அணுவாக (பஞ்ச கஞ்சுகத்துடன் புரியட்ட காயத்துடன்) செலவு மேற்கொள்ள வைக்கப்படுகிறது. விண்ணில் படரவிட்டு மழையின் மூலம் நிலத்தில் விழுந்து பின் ஆணிலும் பின் பெண்ணிலும் இருந்து பிறக்கிறது. விண், மழை, நிலம், ஆண், பெண் என ஐந்தின் சார்பில் இருந்து உருவில் கூடும் முறையை 'பஞ்சாக்கினி வித்தை' என்பர்.

எடுத்துக்காட்டு வெண்பா 2-3-2

**அரவுதன் தோல்உரிவும் அக்கனவும் வேறு**
**பரகாயம் போய்வரும்அப் பண்பும் - பரவில்**
**குடாகாய ஆகாயக் கூத்தாட்டாம் என்பது**
**அடாதுஉள்ளம் போமாறு அது.**

**வெண்பா உரைத்தொடர் :** குடாகாய ஆகாயக் கூடத்தாட்டாம் என்பது அடாது; அரவு தன் தோல் உரிவும், அக் கனவும், வேறு பரகாயம் போய்வரும் அப்பண்பும் பரவில் உள்ளம் போம் ஆறு அது.

**விளக்கம்**

உள்ளம் (ஆன்மா) எப்படிப் போய் (பிறந்து) வருகிறது என்பதை விளக்குவது.

குடம் உடைந்தால் குடத்துக்கு உள்ளே இருந்த வெளியானது வெளியே இருந்த வெளியில் இணைந்து விடுகிறது. இது போல உள்ளம் உடம்பை விடும் நிலை என்பது ஒத்துவராத கருத்து.

பாம்பின்தோல் உரிகிறது. பாம்பு இன்னொரு தோலில் இருக்கிறது;

நனவு உடம்பு செயலற்று இருக்கிறது. கனவில் இன்னொரு உடம்பு செயல்படுகிறது;

யோகியர் இருக்கிற உடம்பை வைத்து வித்து இன்னொரு உடம்புக்குச் சென்று வருகின்றனர்;

இந்த மூன்று எடுத்துக்காட்டுகளிலும் உணர வேண்டியது ஒன்றை விட்டு இன்னொன்றைப் பெறுதல் உண்டேயன்றி இல்லாமற் போதல் இல்லை என்பது.

அவற்றை எண்ணிப் பார்த்தால் ஆன்மா போய்வரும் வழிமுறை அம்முறை போன்றதே என்பது தெரியவரும்.

## நான்காம் அதிகரணம்

**மேற்கோள் : இனி, நீக்கமின்றி நிற்குமன்றே என்றது.**

**ஏது : அவன் ஏக அநேகம் இரண்டும்இன்றிச் சருவவியாபியாய் நிற்றலான்.**

**மேற்கோள் விளக்கம் :** இறைவன் ஆன்மா போய்வரும் போதும் சரி உலகப் பொருள்களிலும் சரி எல்லாவற்றிலும் எல்லாக் காலத்திலும் நீங்காது இணைந்தே இருப்பான் என்பது.

**ஏது விளக்கம் :** இறைவன் ஒன்று எனத் தன்னைத் தனி நிறுத்திக் கொண்டோ, பலவற்றில் இணைந்து பலவாக மாறியோ விடாமல் எல்லாவற்றிலும் முழுமையாக இணைந்த நிலையினனாக உளான்.

வியாப்பியம் - உள் அடங்குவது. வியாபகம் உள்ளடக்கி இருப்பது. எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கொண்டவனாக இருக்கிறான் என்பது.



எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கொண்டிருப்பதில் ஒரு நுட்பம் உண்டு. உள்ளும் புறம்புமாக எல்லாவற்றிலும் இருந்து நிறைந்தவன் என்பதைக் கூறுவது. இதை உலகில் விளங்கிக் கொள்ள வேண்டுமானால் சர்க்கரைப் பாகின் உள் உள்ள இனிப்புண்ட உருண்டை (குலாப் ஜாமூன்) போல உணர வேண்டும்.

எடுத்துக்காட்டு வெண்பா 2-4-1

**எங்குமுளன் என்றஅளவை ஒன்றுஅன்று இரண்டென்னில்
எங்கும் உளன்அன்று எவற்றுஎவனும் - அங்கண்
அவைஅவன் அன்றுஇல்லை பொன்னொளிபோல் ஈசன்
அவையுடைமை ஆள் ஆம்நாம் அங்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** எங்கும் உளன் என்ற அளவை ஒன்று அன்று; இரண்டு என்னில் எங்கும் உளன் அன்று; எவற்று எவனும் அங்கண் அவை அவன் அன்று இல்லை; பொன் ஒளி போல் எங்கும் உளன் ஈசன். அங்கு அவை உடைமை; நாம் ஆள் ஆம்.

### விளக்கம்

(i)

### எங்கும் உளன் என்ற அளவை ஒன்று அன்று

'இறைவன் எங்கும் இருக்கிறான்' என்று சொல்வது அவன் ஒரு பொருளாகவே இருக்கிறான், மற்றவை இல்லாத ஒரு நிலை என்பதன்று. இறைவன் ஒருவனே பொருள் என்றும் இறைவனைத் தவிர வேறு பொருள் இல்லை என்றும் முடிவுக்கு வரக்கூடாது. மற்ற பொருள்களும் உண்டு. அப்பொருளாக இவன் மாறி இரண்டாவது அப்பொருளாக ஆகின்றான் என்பதுமன்று.

இரண்டு என்னில் எங்கும் உளன் அன்று' என்பதால், இரண்டு பொருளாக இறைவனே ஆகின்றான் என்று சொல்லி விட்டால் இறைவன் எங்கும் உள்ளான் என்பதில்லை. இரண்டுபடும் நிலையில் 'எங்கும் நிறைந்த தன்மை' என்பதில் குறை வரும். இரண்டாகப் பிரிந்து விட்ட நிலையில் எங்கும் உள்ளதான முழுமைத் தன்மைக்குப் பங்கம் வரும். இரண்டைப் பிரிக்கின்ற கோடு போல முழுமையில் இடைவெளி அமைந்துவிடும். இப்படி இரண்டாவதன்றி இறைவன் எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கொண்ட வியாபியாய் இருக்கின்றான்.

**'பொன் ஒளி போல் எங்கும் உளன் ஈசன்'** என்ற தொடரால் இறைவனின் எங்கும் நிறைந்த தன்மையினைக் குறிப்பிடு கின்றார். இதில் இறைவனின் பெயரை 'ஈசன்' என்று அறிமுகம் செய்கின்றார்.

கதிரவன் இருந்து ஒளியால் பொருள்களில் நிறைதல் போல இறைவன் ஒரு பொருளாக இருந்து எல்லாவற்றிலும் நிறைந்து நிற்கிறான் என்கிறார்.

கதிரவன் ஒளி படர்கிற வகையில் ஒரு குறை உண்டு. கதிரவன் சடம் ஆனாலும் அதன் கதிர் படுமாறு நின்ற வகையில் பொருள்கள் ஒளி பெறுகின்றன. இங்குக் காட்டப்படும் எடுத்துக்காட்டின் நுட்பம் என்னவெனில், கதிரவன் ஒரு இடத்தில் இருக்கவும் அதன் ஒளி படரும் தன்மை போல இறைவன் ஒரு பொருளாக இருந்து அவனுடைய இயக்கத் தன்மையால் எல்லாவற்றிலும் தன்னை இணைத்துக் கொள்கிறான். அப்படி இணைத்துக் கொள்கிற இறைவன் தன் அளவில் அறிவும் இயக்கமும் உடையவனாகையால் எதையும் விட்டுவிடாமல் எங்கும் நிறைந்து இருக்கிறான். எங்கும் நிறைந்த அவன், அவனில் எல்லாம் இருக்கின்றன. அறிவில்லாத (சடம்) பொருள்கள் உடைமையாயும் உயிர்கள் (நாம்) ஆளாகவும் இருக்கின்றன என்றார்.



உயிருக்கு உடம்பும் வீடும் உடைமைதான். ஆனால் உடம்பு உயிர்த்தன்மை உடையதாக உயிருடன் இணைந்தது. வீடு அயலாக எடுத்துப் பயன் கொள்வனவாக உள்ளது. இந்த இரண்டு உடைமையில் நமக்கு ஆளாக அமைவது நம் உடம்பு. உடைமையாவன வீடு முதலியன.

இவ்வாறே, தன்னளவில் அறிவுடையது போல இயங்கும் சார்ந்தறியும் ஆன்மா தன்னளவில் அறிவுடைய பரம் பொருளினால் இணைந்துள்ளது. இது அவனை அறிகிற காலத்தில் தன்னை ஆளாக நிறுத்திக் கொள்ளும். மற்ற பொருள்கள் அவன் உடைமையாக இருப்பனவே.

**கருத்து**

முதல் நூற்பாவில் காட்சிப்படும் உலகின் காரிய மூலத்தைக் கூறினார். அதில் காரண மூலத்தை காரியமாற்றும் வகையில் கடவளைக் (அந்தாதி) காட்டினார்.

இரண்டாம் நூற்பாவில் காரியம் நிகழும் தன்மையையும் நிகழ்ச்சிக்குரிய பொருளையும் (வினை) விவரித்தார். இந்த வினை இறைவனின் படைப்புக்குப் பிறகான உயிர் சார்ந்த மறு படைப்பாக நிகழ்த்தப்படுதலை விளக்கினார். வினை சார்ந்து உயிர் படைப்பும், வினையை உயிர் படைப்பதுவுமாக இரு வினையை விவரித்தார்.

இயக்கத்தால் பொருளை ஆராய்ந்த வகையில் இயக்கத்திற்குரிய காரணப் பொருளாக ஆணவத்தையும் அடையாளப்படுத்தி இருக்கிறார். அடுத்த இயக்கத்தைச் செய்வோனை (ஆன்மாவை) மூன்றாம் நூற்பாவில் தெளிவு பெற விளக்கியமைகிறார்.

# மூன்றாம் நூற்பா

**உளதுஇலது என்றலின் எனதுடல் என்றலின்**
**ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படின்**
**உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்**
**மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா**

வார்த்திகம் : என் நுதலிற்றோ எனின், ஆன்மப் பிரகாசம் உணர்த்துதல் நுதலிற்று.

**நூற்பா உரைத்தொடர் :** மாயா இயந்திர தனுவின் உள் ஆன்மா ; இலது என்றலின், எனது உடல் என்றலின், ஐம்புலன் (அறிதலின்), ஒடுக்கம் அறிதலின், கண்படில் உண்டிவினை இன்மையின், உணர்த்த உணர்தலின் உளது.

**விளக்கம்**

ஒடுங்கவும் தோன்றவும் களமான மூலப் பொருள்தான் மாயா. மாயையிலிருந்து ஒடுக்கித் தோற்றுவிக்கப்பட்ட பொருள்கள் தான் காட்சிப்படும் உலகப் பொருள்கள். இயந்திரம் போன்று உறுப்புகளினால் இணைக்கப்பட்டதாக உடம்பு (தனு) உள்ளது.

இயந்திரம் போல உறுப்புகளால் இணைக்கப்பட்டது இந்த உடம்பு. இயந்திரத்தன்மை என்பது உறுப்புகளால் இணைக்கப் பட்டு முழுமையாகத் தோற்றப்படுவது. இந்த உறுப்புத் தன்மை இணைக்கப்பட்ட முறைமையில் இயங்குவது. இயங்க



இணைக்கப்பட்ட பொருளாக ஆன்மா உள்ளது. இயந்திரங்களின் இணைப்பால் சாதனம் இயங்குவது போலன்றி உடம்புக்கு உள்ளே உடம்பை இயக்க இணைக்கப்பட்டதாக 'ஆன்மா' இருக்கிறது என்பதை இந்நூற்பாவில் விளக்குகிறார்.

காட்சித்தன்மை, இயக்கத்தன்மை, இயங்கு தன்மை மூன்றாலும் ஆராய்ந்து ஆன்மா தனிப்பொருள் எனும் ஆன்ம விளக்கத்தைத் தருகிறார். ஒவ்வொன்றிற்கும் இரண்டு மேற்கோள்களை அமைத்துள்ளார்.

**'இலது என்றலின்' ஆன்மா உளது**

'இல்லை' என்று கூறும் ஒருவர் கை போன்ற உறுப்புகள் ஆன்மா இல்லை என்று ஒவ்வொன்றாக மறுப்பர். அவனும் மூளை சிந்திக்கிறது எனவே ஆன்மா இல்லை என்று சொல்வானேயொழிய 'மூளையே' ஆன்மா என்று சொல்ல மாட்டான். இப்படி 'ஆன்மா' என்ற அறிவுப்பொருள் தனியாக இல்லை என்று சொல்வான். இவையெல்லாம் ஆன்மா இல்லை என்று சொல்லும் அவனே தெளிவுக்கு உரியவன். அதாவது இவையெல்லாம் 'ஆன்மா' இல்லை என்று உடம்பில் உள்ள எல்லாவற்றையும் கூறிவிடுவான். அப்படிக் கூறுவதால் ஆன்மா எது என்ற சொல் வரவில்லையே ஒழிய ஆன்மாவே இல்லை என்பதன்று. ஆன்மா இது என்று சொல்ல முடியாமல் 'இல்லை' சொல்பவனால் இவையெல்லாம் இல்லாத ஒன்றைக் கூறும் நிலைக்குத் தெளிவான பாதை கிடைக்கிறது. அதன் முடிவிடம் என்ன என்றால் 'இல்லை' என்று தெளிவாகச் சொல்லப்பட்டால் இவையெல்லாம் இல்லாமல் வேறு ஒன்றாக ஆன்மா உண்டு என்பதே. 'இவையெல்லாம் இல்லை' என்று சொன்னால் மட்டுமன்றி 'இல்லை' என்று சொல்லுகிற ஒன்றாக இருக்கிறது என்பது ஆகும்.

**'எனது உடல் என்றலின்' ஆன்மா உளது**

காட்சிப்படுகிற பொருள் எதுவும் ஆன்மா இல்லை என்று சொல்லிவிட்ட பிறகு ஆன்மாவை உறுதி செய்யத்

தொடங்குமிடத்தில் கிடைக்கும் விடை 'எனது உடல்' என்று சொல்லுவதான ஆன்மா.

காட்சிப்படுகின்ற உடல் உறுப்புகளை என்னுடையது என்று சொல்லுவதான ஒன்றுதான் 'ஆன்மா' என்று முதலில் விளக்குகின்றார்.

**'ஐம்புலன் அறிதலின்' ஆன்மா உளது**

உடம்பை வைத்து இயங்குகிற வகையில் ஆன்மாவை உறுதி செய்கிறார். உடம்பின் இயக்கத்தில் ஆற்றல் வரவு செலவு உண்டு. இதுவும் பொருளியக்கமாகிறது. பொருளியக்கம் தாண்டி பெறப்படும் அருவான 'அறிவை' அடையாளப்படுத்தி ஆன்மாவை உறுதி செய்ய முற்படுகிறார்.

நாவைப் பயன்படுத்தி 'சுவை' அறிவும்; கண்ணைப் பயன்படுத்தி உரு, வடிவு, நிறம் முதலான 'ஒளி' அறிவும்; தோலைப் பயன்படுத்தி தொடுவதாம் 'ஊறு' அறிவும்; செவியைப் பயன்படுத்தி சொல், பொருள் உணரும் 'ஓசை' அறிவும், மூக்கைப் பயன்படுத்தி 'நாற்றம்' (உணரும்) அறிவும் உடம்பால் பெறப்படுகின்றன. உடம்பால் இந்த 'ஐம்புலன்' அறிவுகளைப் பெறுவதாக உள்ளது 'ஆன்மா'.

**'ஒடுக்கம் அறிதலின்' ஆன்மா உளது**

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப்படும் ஐந்து அறிவையும் ஒருங்குபடுத்துவது தான் 'ஞானம்'. இவ்வாறு ஒடுங்கிப் பொருந்தி இன்ன சுவை, இன்ன உருவம் என ஞானமாக அறிவது ஆன்மா என்றார்.

நாவால் உருவம் பார்க்க முடியாது. இப்படி ஒன்றால் வேறொன்று நிகழாது. இவற்றை முறையாக இணைத்து ஒடுக்கிய நிலைதான் ஒடுக்கம். இதை 'கனவு' நிலையில் தெளிவாக உணரலாம். சுவைபடுதலோ, நாற்றம் நுகர்தலோ பொருளால் பெறப்படாமல் உணரப்படுவதாகவே இருப்பது 'கனவு'. இதன்



மூலம் ஒருங்கு வைத்துச் செயல்படுகிற ஆன்மா ஐம்புலன்கட்கு வேறாக ஐம்புலன் ஒருங்கில் செயல்படுவதாகத் தெளியலாம் என்பது.

**'கண்படில் உண்டிவினை இன்னமயின்' ஆன்மா உளது**

கண்படுதல் என்பது உறங்குதல். உறங்குகிற நிலை என்பது உடலின் இயக்கம் மெய், வாய், கண், மூக்கு, செவிகளால் அமையவில்லை. மூச்சுக்காற்று மூக்கின் வழியாக நிகழ்கிறது. ஆனால் மூக்கால் நிகழ்த்தப்படவில்லை. மூச்சுக் காற்றுக்கும் அறிவு இல்லை. அதை போகும் போது போனால் அறிவு போய் அறிவு வருகிறது என்பதாகும். இதுவன்றி மூச்சுக் காற்று இயங்குமாறு மற்ற வினைகள் ஏதும் நிகழாத நிலையில் இயக்கப் பொருள்களைத் தாண்டி இயங்குவதாக 'ஆன்மா' உளது.

**'உணர்த்த உணர்தலின்' ஆன்மா உளது**

ஐம்புலனையும் ஒடுக்கியும் உணரும் ஆன்மா, உடம்பில் எல்லாவற்றையும் இயக்கும் 'இயங்கு பொருளாக' உள்ளது என்று கூறியவர் அது 'உணர்த்த உணர்வதாக' உள்ளது என்கிறார்.

கண்ணானது பார்க்கும் வகையில் உருவம் அறிவாகிறது. ஆனால் கண் பயன்படுகிறதேயொழிய கண்ணே உணர்த்தவில்லை. கண்ணுக்கு அறிவு என்பது இருந்தால் அது கேட்கவும் செய்ய வேண்டும். கண் மூலம் உணரும் ஆன்மா கண் காட்ட உணர்கின்றதேயொழிய கண் உணர்த்த உணரவில்லை. அதையும் கண்ணால் காணுகிறது எனலாமேயொழிய, கண்ணே காட்டுகிறது எனல் தவறு. கண்ணால் காணும் ஆன்மா தானே உணர்கிறது எனலாம். இதில் ஒரு குறை உண்டு. 'கண்' இல்லாமல் பார்க்க முடியாதது ஆன்மா. பார்த்தல் தொழிலைத் தானே நடத்தாதது கண். தகுதியில்லாத ஒன்றால் செயல்படுகின்ற ஒன்று; தகுதியில்லாத ஒன்று இல்லையானால் செயல்படாத ஒன்றாக ஆன்மா இருக்கிறது. அது இதன் மூலமாகப் பார்க்கிறது என்பதேயொழிய தலைமை உடையதல்ல.

பார்க்கிற வகையில் தலைமை உடையதேயொழிய பார்க்கிற நிலையில் பொருள் சார்பின்றிப் பார்க்க முடியாமையால் தலைமை உடையதல்ல. அடுத்த ஆன்மா உணர்த்த கண் உணர்கிறது என்பதும் இல்லை.

எனவே தகுதியுடைய ஒன்றால் உணர்கிற ஒன்றாக ஆன்மா இருக்கிறது. அந்த ஒன்று உணர்த்த ஆன்மா உணர்கிறது என்றார்.

உடம்பில் இயங்கும் பொருளான ஆன்மா இயக்கும் இறைவனால் இயங்குவதாகிறது என்றார். இப்படி உடம்பில் இருந்து இறைவன் ஆதாரத்தில் இயக்குவதாக ஆன்மா இருப்பதை மூன்றாம் நூற்பாவில் தொகை விளக்கமாக்கினார்.

இனி மேற்கோள், ஏது, வெண்பாக்களைக் காண்போம்.

குறிப்பு : மேற்கோள், ஏது பொழிப்பு விளக்கங்களாக மேலே நூற்பா விளக்கமாக எழுதப் பெற்றவை மூலம் விளங்கிக் கொள்க.

## முதல் அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் : ஈண்டு, இலது என்றலின் ஆன்மா உளது என்றது.

பொழிப்புரை : எவற்றினையும் அன்றுஅன்று எனவிட்டு, ஆன்மா இலது என்று நிற்பது உளதாகலின் அதுவே அவ் ஆன்மாவாம் என்றது.

எடுத்துக்காட்டு வெண்பா 3-1-1

**அன்றுஅன்று எனநின்று அனைத்தும்விட்டு அஞ்செழுத்தாய்**
**நின்றஒன்று உளதுஅதுவே நீ அனைத்தும் – நின்றுஇன்று**
**தர்ப்பணம்போல் காட்டலால் சார்மாயை நீயல்லை**
**தற்பரமும் அல்லை தனி.**



**வெண்பா உரைத்தொடர் :** தற்பணம் போல் காட்டலால் அனைத்தும் நீ இன்று சார்மாயை நீ அல்லை; தற்பரமும் அல்லை; நின்று தனி; அன்று அன்று என நின்று, அனைத்தும் விட்டு அஞ்செழுத்தாய் நின்று, உளது ஒன்று, அதுவே நீ.

### விளக்கம்

கண்ணாடி (தற்பணம்) காட்டுவது போல அமைவன அனைத்து உடல் கருவிகளும். கண்ணாடி எதிரே இருப்பதைக் காட்டுவது போல கருவிகள் என்ன வேலை செய்யப் பயன்படுமோ அதை மட்டும் செய்யும். அந்தக் கருவிகள் அனைத்துமாகக் கூட நீ இல்லை. அந்தக் கருவிகள் எதுவுமாக நீ இல்லை.

கருவிகள் ஒடுங்கும் அருவப் பொருளான 'மாயை' தான் ஆன்மாவா என்று கேட்டால் அதுவும் ஆன்மா அன்று. மாயை அருவமானாலும் அறிவாளி ஆகாதது.

பரம் – மேலான நிலை. மேலான நிலை என்பது தன் அளவில் தனித்து அறிவு, இச்சை, செயல் தகுதி உடைமை. இது தன் அளவில் தன்னாலேயே அமைத்துக் கொள்ளப்படுமானால் அது 'தற்பரம்'. ஆன்மா தானே அறிவிச்சை செயலாளியாக இல்லை. இதனால் ஆன்மா தற்பரமும் அன்று.

ஆனால் உடம்பில் இருக்கிற தனிப்பொருள்தான் ஆன்மா (நின்று தனி).

இந்தக் கருவி இல்லை; •இந்தக் கருவி இல்லை என எந்த உறுப்பாகவும் இல்லாமல் இருக்கிற ஒன்றாக இருப்பது ஆன்மா.

அனைத்தும் விட்ட அஞ்செழுத்தாக இருப்பது. அப்படி உள்ள ஒன்றுதான் நான், நீ எனலாகும் ஆன்மா என்றார்.

### அனைத்தும் விட்ட அஞ்செழுத்து

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்து அறிவையும் பெற்றுக் கொண்டிருப்பதாக மற்றவற்றை விட்டுவிட்டதான ஒன்று ஆன்மா என்றார்.

**மேலும் ஒரு நுண்விளக்கம் :** அனைத்து உறுப்புகளும் இன்றி அதை அடையாளமாகப் பார்க்கும் முறை ஒன்று உண்டு. அதுதான் 'நமசிவாய' என்பது. உடம்பை நடராசப் பெருமானுக்குச் சொல்லும் போது திருவடி நகரம், உதரம் மகரம், தோள் சிகரம், முகம் வகரம், முடி யகரம் என விளக்கும் 'உண்மை விளக்கம்'. இறைவன் ஆடும் ஆட்டம் ஊன நடனம், ஞான நடனம், நடு நடனம் என்று உண்டு. இதைத் திருவருட்பயனும் கூறும். சொல்லைச் சொல்லிப் பொருளாக உணர்வது போலன்றி, 'எழுத்தாகவே உணரப்படும் பொருள்' அனுபவம் உண்டு. இதில் உச்சரிப்பு முதலியன கிடையாது. 'நமசிவாய' என்பது ஆன்மா. உடம்பும் இறைவனும் கொண்டு இருத்தலுக்கான பொருட்படிவம். 'சிவயநம' என்பது இறைவன் ஆன்மாவையும் உலகையும் (உடம்பையும்) கொண்டிருப்பதன் படிவம். 'நமசிவய' ஊன நடனம். ஆன்மாவுக்குரிய வகையில் ஆன்மா இறைவனைப் பெற்ற வகையில் ஞான நடனம் இது சிவயநம். இதற்கு மேல் இறைவன் மெய், உயிர் இன்றி மூல 'அ'கரம் எனவே இருப்பன். அது நடு. (அகர உயிரை இயக்கும் அகரமே மூல அகரம்).

அனைத்தும் விட்ட 'அஞ்செழுத்து' என்பது சொல் பொருள் அடையாளமின்றி உடம்பின் இணைப்பில் இறைவனை அகத்துக் கொண்ட ஆன்ம வடிவம். இதுதான் ஆன்மா என்று விளக்கப் படுத்தினார். இதுவாகத்தான் ஆன்மா அடையாளப்படும் என்றார்.

## இரண்டாம் அதிகரணம்

**மேற்கோளும் ஏதுவும் : இனி, எனது உடல் என்றலின் ஆன்மா உளது என்றது.**

பொழிப்புரை : **என்பதி என்மனை என்றாற்போல என்கை என் கால் என நிற்பது உளதாகலின் அதுவே அவ் ஆன்மாவாம் என்றது.**



எடுத்துக்காட்டு வெண்பா 3-2-1

**எனதுஎன்ற மாட்டின் எனதுஅலாது என்னாது**
**உனதலாது உன்கைகால் யாக்கை - என்தென்றும்**
**என்னறிவது என்றும் உரைத்துநீ நிற்றிகாண்**
**உன்னில்அவை வேறாம் உணர்.**

**வெண்பா உரைத்தொடர் :** எனது அலாது என்னாது எனது என்ற மாட்டின், உன் கை கால் யாக்கை உனது அலாது உன்னில் அவை வேறு ஆம் உணர். எனது என்றும் என் அறிவு அது என்றும் உரைத்து நீ நிற்றி காண்.

### விளக்கம்

பொருள்களைப் பயன்படுத்தும் உரிமையில் 'எனதில்லை' என்று சொல்லாமல் அவற்றை 'எனது' என்று சொல்லுவதால் அவற்றை உடைமை உரிமையில் கொள்கின்ற நீ உண்டு.

உறுப்பான கை கால் முதலியனவும் உன்னுடையனவே. உனது கை, கால் முதலியன உன்னில் வேறானவை. அவற்றை உன்னில் வேறு என்று உணரவேண்டும். 'உனது' என்பதற்கும் 'உன்' என்பதற்கும் வேறுபாடு உண்டு. 'நீ' கருவிகளுக்கு வேறான ஒன்று.

'எனது' என்று பொருள்களையும் உறுப்புகளையும் உரைக்கும் ஆன்மா அறிவால் வேறுபடுவது. எனது என நிற்றல்களைப் பயன்படுத்தி அறிவைப் பெற்று 'என் அறிவு' என்று சொல்வதாக இருப்பதுதான் நீ (ஆன்மா) என்றார்.

## மூன்றாம் அதிகரணம்

**இனி, ஐம்புலன்கள் அறிதலின் ஆன்மா உளது என்றது.**

பொழிப்புரை : **ஐம்புலனாகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்று அறிந்தது ஒன்று அறியாமையின் இவ் ஐந்தினாலும் ஐம்பயனும் அறிவது உளதாகலின், அதுவே அவ் ஆன்மாவாம் என்றது.**

எடுத்துக்காட்டு வெண்பா 3-3-1

**ஒன்றுஅறிந்தது ஒன்றுஅறியா தாகி உடல்மன்னி**
**அன்றும் புலனாய் அவ்அஞ்செழுத்தை - ஒன்றுஅறிதல்**
**உள்ளதே ஆகில் அதுநீ தனித்தனி கண்டு**
**உள்ளல்அவை ஒன்றல்லை ஓர்.**

**வெண்பா உரைத்தொடர் :** ஒன்று அறியாதாகி ஒன்று அறிந்தது; உடல் மன்னி புலனாய் அன்றும் ஒன்று அறிதல்; தனித்தனி கண்டு உள்ளல் உள்ளதே ஆகில் அதுநீ; அவை ஒன்றல்லை; அவ் அஞ்செழுத்தை ஓர்.

**விளக்கம்**

ஆன்மாவே கண்ணில் பொருந்திப் பார்க்கும் போது உருவம் பார்க்கும். கண் கேட்காது. ஒவ்வொரு புலனாக இருந்து ஒவ்வொரு அறிவு பெறுகிறது. புனலாக இல்லாமலும் ஐந்தையும் இணைத்து அறிகிறது. அல்லது தனித்தனியே கண்டு நினைத்துப் பார்ப்பதாக 'உள்ளது' எதுவோ அது நீ 'ஆன்மா'. ஐந்து புலன்களுமாக இணைந்த ஒன்று அல்ல நீ. நீ வேறு. அந்த ஐந்து புலன்களை ஆராய்ந்து பார்த்தால் நீ வேறு என்பது தெரியும்.

ஐம்புலன்களின் அனுபவ முடிவில் அஞ்செழுத்தால் கருவிகளுடன் இறைவனுடன் இணைந்த வகையில் பார்க்கிற உன்னை உணர்வாய்.

## நான்காம் அதிகரணம்

மேற்கோளும் ஏதுவும் : **இனி, ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது என்றது.**

பொழிப்புரை : **நனவின்கண் கனவு கண்டாம் என்றும் கண்டிலம் என்றும் நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.**



எடுத்துக்காட்டு வெண்பா 3-4-1

**அவ்உடலின் நின்றுயிர்ப்ப ஐம்பொறிகள் தாம்கிடப்பச்**
**செவ்விதின் அவ்வுடலிற் சென்றுஅடங்கி - அவ்வுடலின்**
**வேறொன்று கொண்டு விளையாடி மீண்டுஅதனை**
**மாறல், உடல் நீ அல்லை மற்று.**

**வெண்பா உரைத்தொடர் :** ஐம்பொறிகள் தாம், அவ் உடலின் உயிர்ப்ப நின்று; அவ் உடலின் கிடப்ப அடங்கி, அவ் உடலின் வேறு ஒன்று கொண்டு விளையாடி மீண்டு அதனை செவ்விதின் மாறல் உடல் அல்லை, மற்று நீ.

**விளக்கம்**

ஐம்பொறிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி யாவும் உடலில் இயங்குகிறது என்றால் நின்று செயலாற்றுவது உயிர். அப்பொறிகள் கிடக்கின்றன என்றால் அடங்கி இருக்கிறது உயிர். இப்படி, பொறிகள் அடங்கியிருக்கும் போது வேறு ஒரு உடலில் அனுபவங்களைக் கொண்டு விளையாடி (கனவில்) மீள ஐம்பொறி உடம்பில் சிதையாமல் மாறி அமைகிற ஒன்று உடல் இல்லை; உடலுக்கு வேறான ஆன்மாவான நீ.

## ஐந்தாம் அதிகரணம்

**மேற்கோளும் ஏதுவும் : இனிக் கண்படில் உண்டிவினை இன்மையின் ஆன்மா உளது என்றது.**

பொழிப்புரை : **ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பஞ் சீவனம் பிரகிருதிக்கு இன்மையின், ஒடுங்காதவிடத்து இன்பத்துன்பஞ் சீவியா நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.**

எடுத்துக்காட்டு வெண்பா 3-5-1

**கண்டறியும் இவ்வுடலே காட்டு ஒடுங்கக் காணாதே**
**உண்டிவினை இன்றி உயிர்த்தலால் - கண்டறியும்**
**உள்ளம்வேறு உண்டுஆய் ஒடுங்காது உடல்நண்ணில்**
**உள்ளதாம் உண்டிவினை ஊன்.**

**வெண்பா உரைத்தொடர் :** இவ்வுடலே கண்டு அறியும் காட்டு; உடல் ஒடுங்காது நண்ணின் உள்ளதாம் ஊன் உண்டி வினை; ஒடுங்க உண்டி வினை இன்றி காணாதே, உயிர்த்தலால் கண்டு அறியும் உள்ளம் வேறு உண்டு ஆய்.

**விளக்கம்**

கண்டு அறியும் தொழில் இவ்வுடலில் நடைபெறுகிறது. 'கண் அறியும்' என்பது பிழையான கூற்றாக இருந்தாலும் சொல்லப்படும் நடைமுறை அது. அதனை உடல் மூலமாக ஆன்மா அறிந்தது என விளங்கிக் கொள்ள விளக்குகிறார்.

இவ்வுடல்தான் கண்டு அறிவதற்குப் பயன்படுவது. (அதுவே கண்டு அறிவதன்று).

உடலில் கருவிகள் பழுதின்றி வேலை செய்யப் பொருந்தி இருந்தால் ஊன் உண்ணும் செயல் நிகழும். கருவிகள் பழுதின்றி வேலை செய்யாமல் இருக்கும் உறக்கத்தில் உண்ணும் செயல் முதலியன (நனவு) இல்லை. ஆனால் உயிர்த்தலான காற்று வந்து போய்க் கொண்டிருக்கிறது. எனவே எல்லாக் கருவி, காற்றுக்கும் வேறாக 'ஆன்மா' உண்டு என்பதைத் தெளிவாகப் பெறலாம்.

## ஆறாம் அதிகரணம்

**மேற்கோளும் ஏதுவும் : இனி, உணர்த்தஉணர்தலின் ஆன்மா உளது என்றது.**



பொழிப்புரை : அவன் அறிந்தாங்கு அறிவன் என்று அறிவிக்க அறிந்து உபதேசியாய் நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

எடுத்துக்காட்டு வெண்பா 3-6-1

**அறிந்தும் அறிவதேஆயும் அறியாது**
**அறிந்ததையும் விட்டுஅங்கு அடங்கி - அறிந்தது**
**எது? அறிவும் அன்றுஆகும் மெய்கண்டான் ஒன்றின்**
**அதுஅதுதான் என்னும் அகம்.**

**வெண்பா உரைத்தொடர் :** அறியாது அறிந்தும் அங்கு அடங்கி அறிவதேயாயும் அறிந்ததையும் விட்டு அறிந்தது எது? அறிவும் அன்று. ஒன்றின் அது அகம்; அதுதான் ஆகும் மெய்கண்டான்.

**விளக்கம்**

ஆன்மா அறியாது அறிவது. ஆன்மாவின் 'அறிவு' என்பது பொருள் உறவில் அமைவது. அது புதிய பொருளாலும், பழைய பொருளின் புதுப்புதுப் பழக்கத்தாலும் அறிவு பெறும். அது பல்வேறு பொருளின் ஒற்றுமை வேற்றுமைகளில் விரியும். இது தொடர்பினால் அமைவதாம் அறிவு.

அடுத்து தொடர்பால் பெற்றதை உள்நோக்கிப் பரப்பி உயர்வதாம் ஆராய்ச்சி. இதில் தன்னை அப்பொருளில் அடக்கிக் கொள்கிறது. இது 'அங்கு அடங்கி அறிவதாக ஆயும் நிலை'.

அறிந்ததை அப்படியே அடர்த்திப்படுத்தாமல் மறந்தும் நினைந்தும் ஒழுங்குபடுத்திக் கொண்டிருப்பது. மறத்தல் தொடர்வதாலோ நினைத்தல் தொடர்வதாலோ ஒழுங்கில்லை. அறிவை ஒழுங்குப்படுத்திக் கொள்ளத் துணை போவதே அறிந்ததை விடுதல்.

இப்படி மூவகைப்பாட்டில் 'அறிவு' கொண்டது ஆன்மா. அந்த அறிவாக நின்றதே ஆன்மா அன்று. அந்த அறிவைக் கொண்ட

ஒன்றே ஆன்மா. இயங்கு அறிவாக / அறிவு இயங்கு நிலையாக இருப்பது ஆன்மா. அது உடம்பின் அகத்தில் அறிவை அகப்படுத்திக் கொண்ட ஒன்றாக இருப்பது. அவ்வாறு 'தான்' என அறிவாக ஆன்மா ஆகும். அந்த ஆக்கம் பொருள் தொடர்பால் அமைந்தாலும் மெய்யால் காண இவன் இயங்கினான் என்பதும் இவன் இயங்க இன்னொரு மெய்மைப் பொருள் இருந்தது என்பதும் புலப்படும்.

தான் கருவிகளைப் பயன்படுத்தி உணர்ந்தோம் என்பது உணரப்படும்போது கருவிகள் இல்லாமல் உணரமுடியாத நமக்கு கருவிகளால் உணரும் தலைமை இன்மைக்கான ஆதாரம் தெரியும். அது நமக்கு உணர்த்தி நிற்கும் இறைவனை உணர வைக்கும். இது 'மெய்கண்டான்' என்ற பெயரை ஆன்மாவிற்குத் தரும் அனுபவம்.

## ஏழாம் அதிகரணம்

**மேற்கோளும் ஏதுவும் : இனி, மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது என்றது.**

**வேறும் ஓர் ஏது : அவைதாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலான்.**

எடுத்துக்காட்டு வெண்பா 3-7-1

**கலைஆதி மண்அந்தம் காணில் அவை மாயை,**
**நிலையாவாம், தீபமே போல - அலையாமல்**
**ஞானத்தை முன்னுணர்ந்து நாடில் அதுதனுவாம்**
**தானத்தின் வேறாகும் தான்.**

**வெண்பா உரைத்தொடர் :** கலை ஆதி மண் அந்தம் காணில் நிலையாவாம் அவை மாயை; தீபமே போல அது தனு ஆம்; அலையாமல் ஞானத்தை முன் உணர்ந்து தானத்தின் நாடில் தான் வேறு ஆகும்.



கலை முதலாக மண் ஈறாகக் காணப்படுகின்ற உலகப் பொருள்கள் நிலையில்லாதவை. அவை மாயையிலிருந்து உண்டாக்கப்பட்டவை. உண்டாக்கப்பட்ட உடம்பு நமக்கு விளக்கைப் போல பயன்படுவது. நாம் அத்தீபத்தை அலைய விடாமல் அனுபவ முழுமையை தானமாகிய நிலையிடத்தை (ஆதாரத்தை) அடிப்படையாக முன் வைத்து நேர்ப்பட்டால் நாம் மாயையின் வேறு என்பதை உணர்வதோடு அவற்றின் மயக்கிலிருந்தும் தனித்து நிற்கலாம்.

### கருத்து

மூன்றாம் நூற்பாவில் ஆன்ம விளக்கம் செய்த மெய்கண்டார் ஆன்மா மெய் காணுதலை 'உணர்த்த உணர்தலுக்கும்' மாயையின் நீங்குதலை மாயா இயந்திர அனுபவ ஞானமாகவும் அறிவுறுத்தியுள்ளார். பொருள் நிச்சயத்தோடு நோக்கத்தையும் இணைத்து விளக்கப்படுத்தியுள்ளார்.

# நான்காம் நூற்பா

**அந்தக் கரணம் அவற்றின்ஒன்று அன்றுஅவை**
**சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணராது**
**அமைச்சுஅரசு ஏய்ப்பநின்று அஞ்சு அவத்தைத்தே**

வார்த்திகம் : என் நுதலிற்றோ எனின், இதுவும் அது.

மேல்நூற்பாவில் உள்ள பொருளாக ஆன்மாவை விளக்கியவர் ஆன்மாவின் உள்ள தன்மையை இன்னும் தெளிவாக்கும் நூற்பா.

**நூற்பா உரைத்தொடர் :** ஆன்மா அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்று; சகச மலத்து உணராது நின்று அவை சந்தித்தது, அரசு அமைச்சு ஏய்ப்ப அஞ்சு அவத்தைத்தே.

**விளக்கம்**

**அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்று**

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் நான்கும் ஆன்மா அறிதல் தொழில் நிகழ்த்தச் செயல்படுத்தப்படுபவை.

கலை, வித்தை, அராகம் முதலியன ஆன்மாவின் செயல், அறிவு, விருப்ப ஆற்றல்களில் இணைந்து இயங்கத் துணை நிற்பவை. அந்தக்கரணங்களை உலக அனுபவம் அறிவதற்குத் தொழிற்படுத்துவது ஆன்மா.



ஆன்மா காண வேண்டுமென்றால், வித்தையால் இயங்கிய ஆன்மாவின் அறிவாற்றல் புத்தியிலிருக்கிற வினைத் தாக்கத்தோடு கூட மனத்துடன் கண்ணில் பொருந்த வேண்டும். கண்ணொளியான பொருள் ஒளியில் இணைந்து பொருளைக் காண கதிரவன் ஒளி துணை செய்ய வேண்டும். இவ்வாறே சுவைக்க மனத்துடன் நாவில் பொருந்திச் சுவைக்கும். இப்படி ஐம்புலன்களால் ஐம்பொறிகளை ஆண்டு ஆன்மா அறிவு பெறுகிறது. இப்படி ஆன்மா அறிவு பெறுவதற்கு அந்தக் கரணங்களில் இணைந்து செயல்படுகின்றது. இணைந்து செயல்படுகின்ற ஆன்மா அந்தக்கரணங்களில் ஒன்றானது அன்று. அந்தக்கரணங்களைப் போன்றதும் அன்று.

**சகச மலத்து உணராது நின்று அவை சந்தித்தது**

ஆன்மா அந்தக்கரணங்களுடன் இணைந்ததற்குக் காரணம் சகச மலம். சகச மலத்தால் ஆன்மா உணராது இருந்தது.

**சகச மலத்து உணராமை**

'சகச மலம்' என்பது 'உடனிருந்த மலம்'. ஆன்மா என்ற அறிவுப் பொருளானது பொருளாக இருக்கும் போதே தனித்து இல்லை. 'ஆணவ மலம்' என்ற ஒரு பொருளுடன் இணைந்தே இருந்தது. தனித்தனிப் பொருள்களாக இருந்தாலும் இணைந்தே இருந்தன. இருந்த நிலையைத்தான் முன்னர் நெல்லின் 'உமி' போலவும் செம்பின் 'களிம்பு' போலவும் என்றார்.

ஆணவம் சேர்ந்து இருந்த அந்நிலையில் 'ஆன்மா' என்ற ஒளிப்பொருள் இருட்டின் உள்ளே இருந்தது என்பர். இருட்டின் உள்ளே இருந்து தன்னைக் காட்டிக் கொள்கிற ஒளியாகக் கூட இல்லாமல் ஆன்மா இருட்டடிக்கப்பட்டு இருந்த அந்த நிலைதான் 'கேவல நிலை' என்பர்.

"காரிட்ட ஆணவக் கரு அறையில்
கண் இலாக் குழவி போல்"

இருந்ததாகக் கேவல அனுபவத்தைக் குறிப்பிடுவர். இருட்டறையில் பொருள் தெரியாது. அதில் கண் இல்லாத குழந்தை இருந்தால் இருட்டும் தெரியாது. அறிவும் வர ஒட்டாது. மறைந்த பொருளாகவும் அறிவை வரஒட்டாமல் மறைத்துக் கொண்டிருக்கிற பொருளாகவும் தன்னைக் காட்டிக் கொள்ளாத பொருளாகவும் ஆன்மா உடன் இருக்கின்ற பொருளைத்தான் 'ஆணவம்' என்பர். அதனுடன் ஆணவம் மட்டும் இருந்தவகையில் ஆணவத்தைச் 'சகச மலம்' என்பர். அந்த நிலை எதையும் உணராத 'கேவல நிலை' என்பர்.

### அந்தக்கரணம் சந்தித்தல்

கேவல நிலையில் மறைக்கப்பட்ட பொருளையும் மறைத்த பொருளையும் தெரியாமல் அறிவு இயக்கம் இல்லாத ஆன்மா அறிவு பெற, இறைவன் மாயை மூலமாகக் கருவிகளை இணைக்கின்றான்.

இறைவன் ஆன்மாவின் உள்ளேயும் ஆணவத்தின் உள்ளேயும் சருவ வியாபியாய் இருந்தாலும் ஆணவத்தை நீங்குமாறு செய்தோ ஆன்மாவின் ஞானத்தைத் தானே பெருக்கியோ அனுபவம் தரமாட்டான். உயிர் தானே தன் அறிவைப் பெறும்படிச் செய்வதே அவன் தன் உரிமையாக எடுத்துக் கொண்டது. அதற்கு அவன் உபகாரியாய் முதல் உதவி செய்கிறான். ஆயினும் அந்த உதவியை ஆன்மாவின் கையாலாகாத் தனமாய்க் காட்ட அவன் விரும்பவில்லை. ஆன்மாவை உயர்த்தும் எண்ணம் உடையவனாக அதைச் செய்கிறான். செய்வதை ஆன்மாவின் கையாலாகாத்தனம் எனக் காட்டி உதவி, ஆன்மாவை எவ்வளவு உயர்த்தினாலும் உயர்வு ஆகாது. எனவே ஆன்மா செயல்படாமல் இருந்த கேவல நிலையை அதன் குறையாகக் கூட காட்டாமல் குறைபட்டு விட்டிருந்த இருப்பைக் கண்ட வகையில் இறைவன் தனி ஆளாக இருக்கிறான். பின் ஆன்மாவின் செயல், அறிவு, விருப்ப ஆற்றலை எழுப்பி ஆன்ம எண்ணத்திற்கேற்பப் பிறவி தருகிறான்.



கருவிகளை ஐந்தறிவின் நிறைவாக அமைத்துச் செயல்படுத்திய பின் வினையடிப்படையில் கருவிகளை இணைக்கிறான். இப்படி அவனால் இணைக்கப்பெற்ற அறிவுக் கருவிகளான மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியனவற்றை ஆன்மா சந்தித்த வகையில் தன்னை உயர்த்திக் கொள்கிறது.

### அரசு அமைச்சு ஏய்ப்ப அஞ்சு அவத்தை

நிர்வகிக்கும் மன்னன் அமைச்சர் மூலம் பணி கொள்வதைப் போல ஆன்மா அந்தக்கரணங்களோடு அனைத்துக் கருவிகளையும் பணி கொண்டு அனுபவம் உறுகிறது. இந்த அனுபவம் அஞ்சு படிகளாக அமைகிறது. இதனை ஐந்து அவத்தை என்பர்.

### சகச மலமும் அந்தக்கரண சந்திப்பும்

சகச மலமான ஆணவம் அறிவில்லாத அருவப் பொருள். ஆன்மாவின் அறிவு முழுவதையும் மறைத்தது. தன் சந்நிதியால் எல்லா ஆன்மாக்களையும் பிணித்துக் கொண்டுள்ளது.

அந்தக்கரணங்களான மாயா காரியங்களைப் பெற்று தனு, கரண, புவன, போகம் உடைய ஆன்மா உள்ள நிலை 'சகச நிலை'. இது ஆணவம், கன்மம், மாயை என அனைத்தாலும் கட்டப்பட்ட ஆன்ம நிலை. இந்நிலையில் ஆன்மாவின் அறிவு கருவிகளால் தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் ஆணவமானது ஆன்மாவின் அறிவை மறைப்பதுடன் (ஆவாரக சக்தி) கீழ்நோக்கிச் செலுத்துவதாகவும் (அதோநியமிகாசத்தி) இருக்கிறது.

'யான்' என்றும் 'எனது' என்றும் இரண்டாக உயிர்களின் அறிவை அமைத்துக் கொடுப்பது ஆணவம். அதற்கு, மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என ஏழு பிரிவில் செயல்படுகிறது.

**மோகம்** : பொருளில் மயங்குதல்.

**மதம்** : பொருளை மிக விரும்பி அதைத் தனக்கே கொண்டாடி அந்தப் பொருளைவிட உயர்ந்தது எதுவும் இல்லை என்பது.

**அராகம்** : அப்பொருளின் மீது ஏற்படும் ஆசை மிகுதி.

**கவலை** : அப்பொருளை (வினை காரணமாக) இழத்தல் தடையின் போது கண்ணீர் விட்டு அழுது பெரிய அளவில் துன்பமடைவது.

**தாபம்** : அதன் தொடர்ச்சியாக உள் வெதும்பித் தவிப்பது.

**வாட்டம்** : அலறி, அரற்றி, மூச்சற்று உள்ளமும் உடம்பும் வாடுதல்.

இந்த ஆறும் பொருள் மயக்கமாக ஆணவத்தால் அமைவன. ஆறும் 'எனது' என்பதன் விளக்கமானவை.

'விசித்திரம்' என்பது ஆணவ காரியம். இது 'யான்' என்பதன் விளக்கமாக அமைவது. தான் அடைந்த உலக வாழ்க்கையை எண்ணி, எம் உறவினர் இப்படி, என் மனைவி, ஆடை போகத்தில் குறைவில்லை, நில புலங்களில் குறைவில்லை, இதற்கு மேல் ஒன்றும் இல்லை, என்னையும் குடும்பத்தையும் இப்படிக் காத்திட யாரும் தேவையில்லை என்பது போல் சிந்திக்கக் காரணமாவது 'விசித்திரம்'.

அந்தக்கரணங்கள் தொடர்பில் மேற்கண்டவாறு ஆணவம் காரியப்படும். அறிகருவிகளான அந்தக்கரணங்களில் புத்தியினிடமாக 'வினை' உண்டு. புத்தி தான் முடிவு பட்ட அறிவைத் தொகுக்குமிடம். 'வினை' இணைப்பில், இறைவன் ஆன்ம அறிவை இயக்கித் துலக்கவும் புத்தியை வினைவழிப்படுத்துவன்.



புத்தியின் மூலம் வினையனுபவம் செயல்படுவதால் புத்தியில் எட்டு குணபாவகங்கள் (காரணங்கள்) உள்ளன.

தர்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம் ஆகியன எட்டு குண பாவகங்கள்.

சத்துவ குணத்தால் புத்தியில் உண்டாவன தர்மம் முதலான நான்கு. அதர்மம், அஞ்ஞானம், அநைசுவரியம் ஆகிய மூன்று தாமத குணத்தால் உண்டாவன. அவைராக்கியம் இராசத குணத்தால் உண்டாவது.

1. **தர்மம்** - இயமம், நியமம்

    **இயமம்** - கொல்லாமை, மெய்ம்மை, கள்ளாமை, பிரமசரியம், அகத்தூய்மை

    **நியமம்** - வெகுளாமை, வழிபாடு, புறந்தூய்மை, உவகை, செப்பம்.

2. **ஞானம்** - 8 **வகை.**

    அ - முன்பிறப்பு காரணமாக முரணின்று பெறுவனவற்றை பொருந்திப் பெறுவது.

    ஆ, இ, ஈ - ஆதியான்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் ஆகிய மூன்று வினைகளால் வரும் துன்பத்தால் அறிவின் போது வரும் ஞானம்.

    உ - நண்பர் கூறும் இன்மொழியால் வரும் ஞானம்.

    ஊ - சாத்திரம் ஓதி உணர்வதால் வரும் ஞானம்.

    எ - ஆசிரிய வழிபாட்டால் வரும் ஞானம்.

    ஏ - தானத்தால் வரும் ஞானம்.

இந்த எட்டால் வரும் சித்தி (முத்தி) எட்டு. சித்தி மதங்களுக்கேற்ப மதத்திற்குப் பத்து பத்தாக எண்பது வகைகளில் சொல்லப்படும்.

**3. வைராக்கியம் - 10 வகை**

நோய் கண்டு வருவது.

ஆதியான்மிகக் காட்சியால் வெறுப்பு காரணமாக.

ஆதி தைவிதக காட்சியால் வெறுப்பு காரணமாக.

ஆதி பௌதிக காட்சியால் வெறுப்பு காரணமாக.

பொருளீட்டல் காத்தலால் வரும் வெறுப்பு காரணமாக.

நட்டார் முதலியோர் இழப்பில் வெறுப்பு காரணமாக.

காமுகன் மனையாட்டியால் பெறும் வெறுப்பு காரணமாக.

உண்டி வாட்டத்தால் வரும் வெறுப்பு காரணமாக.

இழிந்தோரிடம் இரந்து வரும் வெறுப்பு காரணமாக.

முன்பிறவித் தவத்தால் வரும் வெறுப்பு காரணமாக.

**4. ஐசுவரியம்**

அணிமா - அணுவிலும் சூக்கும வடிவு பெறல் (பெரு வடிவும் பெறல்).

இலகிமா - சேறு, நீரில் அமுந்தாது இயங்குதல்.

பிராத்தி - மனத்தால் விழைந்தன பெறுதல்.

பிராகாமியம் - ஆயிரம் பெண்ணாயினும் புணரும் வலிமை

ஈசத்துவம் - பிரமன் முதலியோர் வழிபட நிற்றல்

வசித்துவம் - உலகைத் தன்வயமாக்கல்

கரிமா - விடய நுகர்ச்சியில் தொடக்கு இல்லாமை.



**5. அதன்மம்** - கொலை, பொய், களவு, பிறர்மனை நயத்தல், அழுக்காறு, வெகுளி, வழிபடாமை, மாசுண்டல், செற்றம், கோட்டம்.

**6. அஞ்ஞானம்**

தமம் - ஆன்மா அல்லாததை ஆன்மா எனல்

மோசம் - அணிமா முதலியனவே உறுதிப்பயன் எனல்

மாமோகம் - விருப்பு வெறுப்பில் பொருளென மயங்கல்

தாமிசிரம் - சாதனத்தால் பெறாமை பெற்றிழத்தல் வருத்தம்

அந்தாமிசிரம் - இலகிமா முதலியன பெறும் யோகியின் மேற்பட்ட ஒருவனைக் கண்ட வருத்தம்.

(இவை 64 ஆக விரியும்.)

**7. அவைராக்கியம்** - அஞ்ஞான விளைவாக வரும் ஆசையே அவைராக்கியம். இது 100.

**8. அநைசுவரியம்** - 64 அஞ்ஞானம், 100 அவைராக்கியம், மனம், ஆங்காரம், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம், மெய், வாய், மூக்கு, செவி முதலிய 12 ஆக 176ம் அநைசுவரியத்திற்கு ஏதுவான 'அசத்தி' என்னும் 'வலியின்மை' தோன்றக் காரணமாவன இது176லும் விளையும். இதனால் உண்டானது 'வறுமை'. இது 'அணிமா' முதுலிய எட்டுக்கு மாறாக ஆகும்.

மேலே கண்டவாறு 612 வகைகளில் புத்தி முதலான அந்தக்கரணங்களால் ஆன்மா உடம்பில் அனுபவம் கொள்கிறது. அடிப்படையாக நிற்பது ஆணவம்.

ஆணவ, மாயா காரிய இணைப்பில் ஆன்மாவின் நனவு அனுபவம் 'சகல நிலை' எனப்படும். இதில் உயிர் உடலில் அனுபவத்தின் நின்று செயல்படும் இடத்தை ஒட்டியும் பயன்படுத்தும் கருவிகளையொட்டியும் ஐந்து நிலைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவையே 'ஐந்தவத்தை' எனப்பட்டன.

## முதல் அதிகரணம்

**மேற்கோள் : ஈண்டு, இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாய் உள்ள மனோ புத்தி அகங்கார சித்தங்களில் ஒன்றன்று என்றது.**

**ஏது : அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.**

**மேற்கோள் விளக்கம் :** ஆன்மாவானது உள்முகமாக நின்ற அறிதற்குப் பயன்படும் கருவிகளான மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகியவற்றின் வேறான அறிவுப்பொருள் என்பது.

**ஏது விளக்கம் :** அந்தக்கரணங்கள் அறிவுடையன போல தொழிற்படும். ஆன்மா தொழிற்படுத்தாத போதும் தமக்கியல்பிலேயும் அறிவு இல்லாதனவே அந்தக்கரணங்கள்.

எடுத்துக்காட்டு வெண்பா 4-1-1

**மனம்ஆதி யால்உணர்தல் மன்னு புலன்கள்**
**மனம்ஆதி மன்புலனின் அல்லன் - மனமேல்**
**உதித்து ஒன்றை உள்ளம் உணர்தல் அதனில்**
**உதிக்கும் கடல்திரையை ஒத்து.**

**வெண்பா உரைத்தொடர் :** மனம் ஆதியால் மன்னு புலன்கள் உணர்தல்; அதனின் கடல் திரையே ஒத்து உதிக்கும்; மனமேல் உதித்த ஒன்றை உணர்தல் உள்ளம்; மனம் ஆதி மன்புலனின் அல்லன்.



### விளக்கம்

மனத்தை முதலாகக் கொண்டு சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய புலன்கள் உணரப்படும். மனத்தின் வழியாக அவை தொடர்ந்து முறையாக வந்து கொண்டிருக்கும். மனம் வழியாகத் தொடர்ந்து வரும் ஒவ்வொன்றையும் உணர்வது என்பது உள்ளம் (ஆன்மா).

'உணர்தல்' என்ற சொல்லே 'மனம் உணர்ந்தது' என்பது போல வராது. இது பிழை. 'உணர்தல்' என்றால் 'மனம்' வழியாக 'உள்ளம் உணர்ந்தது' என்பதே சரியானது.

எனவே, மனம் முதலியன ஆன்மா அல்ல. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என அறிவில் நிலைபெறும் புலன்களும் ஆன்மா அல்ல. நிலைபெறும் புலனறிவு மனம் முதலியனவற்றின் வழியாக முறையாக அமையுமேயன்றி அவையே அறிவு அமைவிடமான ஆன்மா அன்று.

எடுத்துக்காட்டு வெண்பா 4-1-2

**சிந்தித்துஆய்ச் சித்தம் தெளியாதாய் ஆங்காரம்**
**புந்தியாய் ஆய்ந்து மனமாகிப் - பந்தித்து**
**வெவ்வேறு தானே துணிந்துஉள்ளம் இவ்வேறாம்**
**அவ்வேறாம் போதுபோல் ஆங்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** உள்ளம், மனம் ஆகிப் பந்தித்து; சித்தம் ஆய்ச் சிந்தித்து; ஆங்காரம் ஆய்த் தெளியாது; புத்தியால் துணிந்து; ஆங்கு வெவ்வேறு தானே ஆய்ந்து இவ்வேறாம்; போது அவ்வேறாம் போல்.

### விளக்கம்

ஆன்மாவிற்கு அறிவு நிகழும் முறையை அந்தக் கரணங்களின் தொடர்பில் விவரிக்கின்றார்.

உள்ளமானது அறிவாற்றலால் மனத்தில் பொருந்தி மனமாக மாறி பொருளைப் 'பற்றுகிறது'. பின் 'சித்தத்தில்' இணைந்து சிந்திக்கிறது. பின் பொருள் இதுவா, அதுவா என்பது போன்ற ஐயங்களில் இது என முடிவுக்கு வராமல் இதுவாக இருக்கலாம் என தெளிவுக்கு வந்துவிடாமல் ஒன்றை ஏற்க ஆன்மா பொருந்திய கருவி 'ஆங்காரம்'. பின் புத்தியில் இணைந்து முடிவு செய்கிறது.

இப்படி தொடர்ந்து ஒவ்வொரு பொருளிலும் இணைந்து ஆன்மா 'அறிவாக' பொருள் தொடர்பை முடிவு செய்கிறது. பின் வெவ்வேறாகப் பெற்ற அவற்றை தானே ஆராயும் தன்மையுடையது. ஒவ்வொரு வேலையையும் ஒவ்வொன்றில் இணைந்து பெற்று மீள ஆய்வதாக அந்தக்கரணங்களின் வேறாக இருப்பது 'ஆன்மா'.

அந்தக்கரணங்களின் மூலம் பற்றி (மனம்), சிந்தித்து (சித்தம்), முடிக்க ஒருப்பட்டு (ஆங்காரம்), முடிவு (புத்தி செய்கிறது ஆன்மா. கதிரவன் ஒளியை வைத்து காலை பகல் என்பனவும், அது சென்று வருவதாக நாளையும் வைத்துக் கணக்கிடும் பொழுது - போது முறை போல ஆன்மா அறிவை அந்தக்கரணங்களின் மூலம் முறைப்படி பெறுகிறது. கதிரவனுக்கு வேறாக காலத்தை அமைப்பது போல, ஆன்ம அறிவு பற்றி, சிந்தித்து, முடிவு செய்தாலும் அவற்றிற்கு உரிய கருவிகள் தனித்தனி அமைந்தன என விளக்கினார்.

எடுத்துக்காட்டு வெண்பா 4-1-3

**அகாரம் உகாரம் அகங்காரம் புத்தி**
**மகாரம் மனம்சித்தம் விந்து - பகாதுஇவற்றை**
**நாதம் உளவடிவாம் நாடில் பிரணவமாம்**
**போதம் கடற்றிரையே போன்று.**



**வெண்பா உரைத்தொடர் :** அகாரம் அகங்காரம், உகாரம் புத்தி, மகாரம் மனம், விந்து சித்தம் இவற்றைப் பகாது நாடிப் பிரணவம் ஆம்; கடல் திரையே போன்று போதம்.

**விளக்கம்**

'ஓங்காரம்' எனும் மந்திர இலக்கத்தில் அந்தக்கரணங்களைக் கூறுகிறார். ஓங்காரம் அ, உ, ம, (விந்து) என அமையும். நான்கை அகங்காரம், புத்தி, மனம், சித்தம் ஆகியவற்றின் இயக்கத்தில் உணரப்பட வேண்டியன என்றார். இவற்றின் தொகுப்பான பிரணவம் போன்றது அறிவு. அது கடல் அவை ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்வது போல அந்தக்கரணங்களால் விளைவது.

அந்த அறிவு பிரணவ அனுபவமாகவே அந்தக்கரணங்களின் மூலம் அருளால் அமையும் காலம் விளைவது போதம் என்பது நுண்பொருள்.

எடுத்துக்காட்டு வெண்பா 4-1-4

**எண்நிலவு ஓங்காரத்து ஈசர் சதாசிவமாம்**
**நண்ணிய விந்துவொடு நாதத்து, - கண்ணில்**
**பகர்அயன்மா லோடு பரமன்அதிதெய்வம்**
**அகரஉக ரம்மகரத் தாம்.**

**வெண்பா உரைத்தொடர் :** ஓங்காரத்து நண்ணிய எண்ணிலவு அதி தெய்வம்; விந்துவொடு ஈசர்; நாதத்துச் சதாசிவமாம்; அகரம் கண்ணில் அயன்; உகரம் பகர் மாலோடு; மகரத்தாம் பரமன்.

**விளக்கம்**

ஓங்காரத்தை அடிப்படையாகக் கொண்டு எண்ணிக்கையற்ற தெய்வங்கள் அதிதெய்வங்களாக இருக்கும். அதில் அந்தக்கரணங்களுக்குரிய அதிதெய்வங்கள் பின்வருமாறு :

ஈசன் - விந்து, சதாசிவர் - நாதம், அயன் - அகரம், மால் - உகரம், பரமன் - மகரம் என ஓங்கார விரிவான 'நாதம், விந்து, அ, உ, ம' ஆகிய ஐந்தின் அதிதெய்வங்களை விளக்கினார்.

## இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : **இனி, இவ்வான்மாச் சகச மலத்தினால் உணர்வு இன்று என்றது.**

ஏது : **அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக்கொடு நிற்றலான்.**

**மேற்கோள் விளக்கம் :** உடனிருக்கும் மலமான ஆணவத்தால் ஆன்மாவின் அறிவு உணரப்படாமை.

**ஏது விளக்கம் :** ஞான மறைப்பாகத் தன்னையும் ஆன்ம அறிவையும் மறைத்து இருப்பது ஆணவம்.

எடுத்துக்காட்டு வெண்பா 4-2-1

**மாயா தனுவிளக்கா மற்றுஉள்ளம் காணாதேல்**
**ஆயாதாம் ஒன்றை அதுவதுவாய் - வீயாத**
**வன்னிதனைத் தன்னுள் மறைத்துஒன்றாம் காட்டம்போல்**
**தன்னைமலம் அன்றணைதல் தான்.**

**வெண்பா உரைத்தொடர் :** வீயாத வன்னி தனைத் தன்னுள் மறைத்து ஒன்று ஆம் காட்டம் போல் அன்று அணைதல் தன்னை மலம்தான். மற்று மாயா தனு விளக்கா காரணமாதல் உள்ளம் ஒன்றை ஆயாதாம்.

**விளக்கம்**

நெருப்பு என்ற ஒன்று அழியாதது. பொருளில் இருப்பது, பின் வெளிப்படுவது. பகுதிபடக் காட்சி தராமல் பொருளுடன் இணைந்து வெளிப்படும் வகையில் நெருப்பை 'வீயாத வன்னி' என்றார்.



நெருப்பைத் தன்னுள் மறைத்து அதைக் காட்சியில் காட்டிக் கொண்டிராத விறகு போல 'ஆன்மா' என்ற பொருளில் உடனாகவே இருந்து ஆன்மா என்ற நெருப்பைத் தன்னுள் மறைத்துக் கொண்ட விறகாக அமைந்தது ஆணவம். பின் மாயையின் காரியமான உடம்பு போன்றவை விளக்குபோல அமைந்திட ஆன்மா அறிவுக்குத் தொழிற்படுகிறது.

## மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் : **இனி, இவ்வான்மா, சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதமாயுள்ள பஞ்ச அவத்திதனாய் நிற்கும் என்றது.**

ஏது : **அதுதான் மல சொரூபத்தின் மறைந்து அரூப சொரூபியாய் நிற்றலான்.**

**மேற்கோள் விளக்கம் :** மாயை காரியமான உடம்புக் கருவிகளோடு ஆன்மா இணைந்து பணியாற்றுவதையும் இருக்கும் இடத்தையும் ஐந்து நிலைகளாகக் குறிப்பிடும் 'அஞ்சு அவத்தை' விளக்குகிறார்.

**ஏது விளக்கம் :** அஞ்சு அவத்தையில் ஆணவ காரியப்பாட்டிலும் மாயா கருவிகளின் காரியப்பாட்டிலும் இணைந்து நின்று செயல்படும் அருவப் பொருளான ஆன்மாவை அடையாளப்படுத்திக் காட்டுவது.

எடுத்துக்காட்டு வெண்பா 4-3-1

**ஒன்றுஅணையா மூலத்து உயிர்அணையும் நாபியினில்**
**சென்றணையும் சித்தம் இதயத்து - மன்றஏய்**
**ஐயைந்தாம் நல்நுதலில் கண்டத்தின் வாக்காதி**
**மெய்யாதி விட்டுஅகன்று வேறு.**

**வெண்பா உரைத்தொடர் :** நல் நுதலில் வாக்காதி மெய்யாதி மன்ற ஏய் ஐயைந்தாம்; கண்டத்து வாக்காதி மெய்யாதி விட்டகன்று வேறு (ஐயைந்தாம்), இதயத்து சித்தம் சென்று அணையும்; நாபியினில் உயிர் அணையும்; மூலத்து ஒன்று அணையா.

**விளக்கம்**

நனவுக்குரிய இடமும் நனவாம் பிறப்பால் நன்மையும் நன்மையால் அருளும் அனுபவப்படும் இடமே நெற்றி. புருவ நடுவான அது நுதுல் எனப்படுவது. நுதலில் அமைவது நனவு நிலை (ஜாக்ரதா)- இங்கு புருடனான ஆன்மா 35 கருவிகளை ஏய்த்து (பணி கொண்டு) நிற்கும்.

அறிவுக் கருவிகளான 5 (ஞானேந்திரியம்), செயல் கருவிகளான வாக்கு, கால், கை, எருவாய், கருவாய் - 5 (கன்மேந்திரியம்), சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் தன்மாத்திரைகள் 5 (ஐம்புலன்கள்), பேசுதல், நடத்தல், கொடுத்தல், மலம் நீர்விடல், விந்து விடலும், கரு தாங்கலும் ஆகிய 5; பிராணன், அபாணன், உதானன், விபானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் ஆகிய வாயுக்கள் 10; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என அறிகருவிகள் (அந்தக்கரணங்கள்) 4; புருடன் - 1 அக 35 கருவிகள்.

செயல் கருவிகள் (கன்மேந்திரியங்கள் 5), அறிதல் கருவிகள் (ஞானேந்திரியங்கள் 5) ஆகிய பத்து தவிர்ந்த 25 கருவிகள் தொழிற்படுவது கனவு நிலை. சொப்பனம், (ஸ்வப்னா). இது ஆன்மா கண்டத்தில் இருந்து செயல்படுவதாகும்.

பிராணன், சித்தம், புருடன் மூன்று மட்டும் செயல்படுவது உறக்க நிலை (சுழுத்தி) (சுசுப்தி) இதற்குரிய இடம் இதயம்.



பிராண வாயுவும் புருடனும் உந்தியில் நின்ற நிலை பேருறக்க நிலை (துரியம்).

பிராண வாயுவும் இன்றி புருடன் மட்டுமே மூலாதாரத்தில் இருப்பது உயிர்ப்படங்கல் நிலை (துரியாதீதம்). (இங்கே ஆன்மா தன்னில் நின்ற இறைவனுடன் மட்டுமே இளைப்பாறுகிறது).

எடுத்துக்காட்டு வெண்பா 4-3-2

**இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்**
**இலாடத்தே ஐந்தவத்தை எய்தும் - இலாடத்தே**
**அவ்வவ இந்திரியத்து அத்துறைகள் கண்டுஅதுவே**
**அவ்வவற்றின் நீங்கல்அது ஆங்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம், இலாடத்தே ஐந்து அவத்தை எய்தும்; இலாடத்தே அவ்வவ இந்திரியத்து அத்துறைகள் கண்டு அதுவே அவ்வவற்றின் நீங்கல் ஆங்கு அது.

**விளக்கம்**

இலாடம் - புருவ நடு. உடம்பில் கருவிகளோடு பொருந்தியும் விடுவதாயும் அவத்தை ஐந்து அடைவது ஆன்மா. அது நனவு நிலையிலேயே 'தான் பொருந்துவதாயும் தான் விடுவதாயும்' கருவிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றலில் உயர்வதை எடுத்துக்காட்டி விளங்கியது இவ் வெண்பா.

புருவ நடுவில் சாக்கிரத்தை அடைந்த உள்ளம் புருவ நடுவிலேயே ஐந்து அவத்தையையும் பெறும்.

புருவ நடுவிலேயே 35 கருவி தொழிற்பட்டு பின் தானே பத்தை நீக்கி, பின் இறுதியில் தான் மட்டும் புருவ நடுவில் நின்று செயல்படும் நிலை எய்தும். இதில் உடம்பு விழுதல் போன்ற நிலை இல்லை. உடம்பை நிற்க வைத்த கருவிகளின் தாக்கத்திலிருந்து நீங்கி உடம்பு, பிற கருவிகள் எதுவும் தாக்காத வகையில் நிற்றல்

பெறுவதுதான் சாக்கிரத்திலே அதீதம் பெறும் நிலை. புருவ நடுவில் அமையும் ஐந்து அவத்தையை சாக்கிர சாக்கிரம், சாக்கிர சொப்பனம், சாக்கிர சுழுத்தி, சாக்கிர துரியம், சாக்கிர துரியாதீதம் என விளக்குவர். இவற்றைப் பெறுவதுதான், கருவிகளை தமக்கு ஆளாக ஆக்கிக் கொண்டு தாம் அவற்றின் தாக்கத்தில் நீங்கி நிற்பதாம் 'இலாடத்தே ஐந்து அவத்தை எய்தும்' அனுபவம்.

புருவ நடுவில் இந்திரியங்கள் ஒவ்வொன்றின் தன்மையையும் அவற்றின் மூலமாகப் பெற வேண்டியதையும் அறிவது அவற்றை நிறுத்த வேண்டிய கட்டுப்பாட்டில் நிறுத்தி அவற்றில் இருந்து நீங்குவதுதான் அவத்தை அனுபவ முடிவு.

**கருத்து**

அறிகருவிகளைப் பயன்படுத்தி வரும் சகல நிலையில், உடன் இருப்பதான ஆணவ மலமும் காரியப்படுகிறது. இத்தன்மையில் புருவ நடுவில் கருவிகளைப் பயன் கொண்டு கருவிகள் விடுபடும் நிலையில் உள்ள ஆன்மா, பயிற்சிப்பட்டு புருவ நடுவிலேயே கனவில் இருந்து கருவித்தாக்கத்தில் நீங்கி நிற்கும் உபாயம் வலியுறுத்தப்பட்டது.

# ஐந்தாம் நூற்பா

**விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு**
**அளந்துஅறிந்து அறியா ஆங்குஅவை போலத்**
**தாம்தம் உணர்வின் தமியருள்**
**காந்தம் கண்ட பசாசத்து அவையே**

**வார்த்திகம்: என் நுதலிற்றோ எனின், இவ்வான்மாக்களிடத்துத் தமது முதல் உபகாரம் உணர்த்துதல் நுதலிற்று.**

**நூற்பா உரைத்தொடர் :** விளம்பிய உள்ளத்து மெய், வாய், கண், மூக்கு அளந்து அறிந்து அறியா; அவை காந்தம் கண்ட பசாசத்து; ஆங்கு அவை போலத் தாம் தம் உணர்வின் தமி அருள்.

**விளக்கம்**

சொல்லப்பட்டவாறு உள்ளத்தின் அறிவுக் கருவிகளான மெய், வாய், கண், மூக்கு ஆகியன தாமே அறியா; அளந்து அறியா; அறிந்து அறியா. அவை காந்தத்தின் முன் இரும்பு இழுக்கப்படுவது போல ஆன்மா பொருந்த வைக்கவே பொருந்தும். காந்தத்தைப் பிடித்திருப்பது ஆன்மா. காந்தமாக இருப்பன அறிவுக் கருவிகள். இதனை இரும்புத் துண்டுகளை நோக்கிப் பிடிப்பவன் ஆன்மா. இரும்புத் துண்டுகளானவை புறப்பொருள்கள். அவற்றின் தொடர்பால் வருவன **ஐந்தறிவும்.** அது போலத்தான் ஆன்மா காந்தமாக இருக்கவும் **அதை இயக்கி**

கருவிகளிடத்துச் செலுத்துபவன் இறைவன். தமியனாய் தன்னளவில் இருக்கும் அருள் ஆன்மாவின் உணர்வில் கலந்து இருந்து ஆன்மாவை இயக்குகிறது.

## முதல் அதிகரணம்

**மேற்கோள் : ஈண்டு, ஐஉணர்வுகள் ஆன்மாவால் உணரும் என்றது.**

**ஏது : அவற்றினான் ஆன்மா ஒற்றித்துக் காணின் அல்லது அவை ஒன்றையும் விடயியா ஆகலான்.**

**மேற்கோள் விளக்கம் :** ஐந்து உணர்வுகளும் ஐந்து கருவிகளிலேயே அமைவதன்று. ஐந்து உணர்வுகளும் ஆன்மாவிலேயே பெறப்படும். பெறுதல் முறை யாதெனில் ஐந்து உணர்வுகள் ஐந்து பொறிகளில் ஆன்மாவால் பெற்றுக் கொள்ளப்படும் என்பது.

**ஏது விளக்கம் :** ஆன்மா ஐந்து பொருள்களில் தான் இணைந்து அறிந்தாலே அவைகள் மூலமாக அறிதல் என்பதாகும். ஆன்மா அக்கருவிகளில் இணையாவிட்டால் அவை ஒன்றையும் அறியச் செயல்படா.

எடுத்துக்காட்டு வெண்பா 5-1-1

**ஐம்பொறியை ஆண்டுஅங்கு அரசாய் உளம்நிற்ப**
**ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம் - ஐம்பொறியில்**
**காணாதேல் காணாது காணும்உளம் காணாதேல்**
**காணாகண் கேளா செவி.**

**வெண்பா உரைத்தொடர் :** அங்கு உளம் அரசாய் ஐம்பொறியை ஆண்டு நிற்ப; உள்ளம் ஐம்பொறியின் காணாதேல் காணாது; ஐம்பொறிகள் அறியாவாம்; காணும் உளம் காணாதேல் கண் காணா, செவி கேளா.



### விளக்கம்

அரசன் போல உள்ளமானது ஐந்து பொறிகளை இயக்கி இருப்பது. ஐந்து பொறிகளை இயக்கி அதன் மூலமே உள்ளம் அறிகிறது. ஐம்பொறிகள் அப்படி அறிவதற்குப் பயன்படுகின்றன. அவ்வாறு அறிதல் என்பது ஆன்மாவுக்கு அமைகிறது. ஐம்பொறிகள் அப்படி அறிவதற்குப் பயன்படுகின்றன. அவ்வாறு அறிதல் என்பது ஆன்மாவுக்கு அமைகிறது. ஐம்பொறிகள் அறிவனவல்ல. அவை அறியும் தொழிலைத் தானே நிகழ்த்திக் கொள்ளா.

அறிகின்ற உள்ளம் அறிந்து கொள்ளாவிட்டால் கண் கண்டது என்றோ செவி கேட்டது என்றோ சொல்ல முடியாது.

அறிவதாக இருப்பதே உள்ளம். அது அறிகிறது என்றால் தான் கண்ணால் காணுதல் என்பதோ, செவியால் கேட்பது என்பதோ அமையும்.

## இரண்டாம் அதிகரணம்

**மேற்கோள் : இனி, இதுவும் தமது முதலாலே உணரும் என்றது.**

**ஏது : இவ் ஆன்மாத் தன்னாலே உணரும் இந்திரியங்களைப் போலத் தானும் தன்னை உணராது நிற்றலான்.**

**மேற்கோள் விளக்கம் :** தான் முதல்வனாக இருந்து கருவிகளால் உணருவது ஆன்மா. இதுவும் தானே உணராது. தன்னுடைய முதல்வனால் உணரும்.

ஆன்மா கருவிகளால்தான் உணர்கிறான். இறைவன் ஆன்மாவால் அறிவு பெறவில்லை. புறத்தே கருவிகள் துணையை ஆன்மா பெறுவதில் உள்ள முறை என்னவென்றால் ஆன்மா தானே பொருந்தி அவற்றை இயக்கி அவற்றின் துணையால் அறிவு பெறுகிறது.

ஆனால் அகத்தே இறைவன் துணையை ஆன்மா தானே பெறவில்லை. இறைவன் தானே அதற்குத் துணையாக இருக்கிறான். புறத்தே பொருளை கருவிகள் துணையால் அறிவது போல அகத்தே இறைவன் இயக்கிய துணையால் இயங்குவது ஆன்மா.

புறத்தே கருவிகளை இயங்குவது உணர்வதை முதலில் உணர்ந்து, அகத்தே இயக்கும் துணையை உணர வேண்டும். பின் புறத்தே கருவிகளை இயக்கும் நாம், அகத்தே இறைவன் இயக்கத்தை இயக்கிக் கொள்ள வேண்டும். அதாவது அவனே இயக்க நினைத்த அடிப்படையை அவனிடம் அறிய வேண்டும். ஆனால் அவன் இயக்கிக் கொண்டிருப்பது வினை கழிய, இதில் இயங்கும் ஆன்மா அவன் இயக்குந் தன்மையில் இணைந்து அவனையே மெய், வாய், கண்ணைப் போல இயக்கப் பயின்றால் அவனே தானே ஆகும் அந்நெறி வாய்க்கும்.

ஏது விளக்கம் : ஆன்மா கருவிகளை இயக்குகிறது. ஆன்மாதான் தன்னை இயக்குகிறது என்று கருவிகளுக்குத் தெரியாது. அதுபோல ஆன்மா தன்னை உணராமை கூறுகிறார். பின்னர்தான் தன்னை இயக்கும் இறைவனை உணர்வது.

எடுத்துக்காட்டு வெண்பா 5-2-1

**மன்னுசிவன் சந்நிதியில் மற்றுஉலகம் சேட்டித்தது**
**என்னும் மறையின் இயல்மறந்தாய் - சொன்னசிவன்**
**கண்ணா உளம்வினையால் கண்டுஅறிந்து நிற்கும்காண்**
**எண்ணான் சிவன்அசத்தை இன்று.**

**வெண்பா உரைத்தொடர் :** மன்னு சிவன் சந்நிதியில் உலகம் சேட்டித்தது என்னும் மறையின் இயல் மறந்தாய்; சொன்ன சிவன் கண்ணா உளம் வினையால் கண்டு அறிந்து நிற்கும் காண்; சிவன் எண்ணான் அசத்தை இன்று.



**விளக்கம்**

நிலைப்பொருளானவன் சிவன். அவன் முன்பாக உலக உருவாக்கம் நிகழ்ந்தது. இதனைச் சொல்லும் மறையின் உண்மைத் தன்மை என்ன என்பதை மறந்து விட்டிருக்கிறாய். நமக்குப் பலவகையானும் சொல்லுபவனாக இருப்பவன் சிவன். அவன் பொருந்திச் (கண்ணா) சொன்ன வகையில்தான் ஆன்மாவானது வினை சார்பில் உலகைக் கண்டு பொருள்களை அறிந்து ஞானமாக நிற்பதைக் காணலாம்.

சிவன் ஆன்மாவிற்குச் சொல்லுபவனாக இருப்பதோடு கூட பொருந்தி வினையால் அனுபவப்படும் உயிருடன் கண்டு உயிரை அறிந்து நிற்பான். இவ்வகையில் அசத்துப் பொருள்களின் சார்பில் அனுபவம் என்பது சிவனுக்கு இல்லை.

எப்படி ஆன்மா மெய், வாய், மூக்கு மூலம் அறிந்தாலும் அவை அறியாதோ அது போல ஆன்மாவின் அறிவுத் துணையான இறைவனும் அவ்வனுபவத்தை ஏற்காமல் மெய், வாய், கண், செவித் தன்மையில் இருப்பன்.

ஆன்மாவில் அனுபவத்திற்குத் துணை செய்யும் பொருள்கள் இரண்டுமே அனுபவத்தைத் தாம் ஏற்கா. மெய், வாய், கண் முதலியன அறிவில்லாத வகையில் அவை அறியாதன. அறிவான இறைவன் அசத்துத் தன்மையில் அறியாதவனாக இல்லாமல் அறிவாலும் அதில் எனக்கு தனக்கு அறிவு பெறுபவனாக இல்லை.

எடுத்துக்காட்டு வெண்பா 5-2-2

**வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது**
**வெய்யோனை ஆகாத மீன்போல - மெய்யவனில்**
**கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனைக்**
**கண்டுஉடனாய் மன்னுதலைக் காண்.**

**வெண்பா உரைத்தொடர் :** வெய்யோன் ஒளியில் விளங்காது ஒடுங்கி வெய்யோனை ஆகாத மீன் போல, கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று ஐம்புலனை அறியும்; மெய் அவனின் கண்டு, உடனாய் மன்னு.

**விளக்கம்**

கதிரவன் ஒளியில் வெளிப்படாமல் ஒளி செய்யாதவாறு விண்மீன் உள்ளது. அது கதிரவனாகவும் ஆகிவிடவில்லை; இருக்கிறது.

ஆன்மா உடம்பில் கண்ணால் கண்டு காதால் கேட்டு வாயால் உண்டு மூச்சால் உயிர்த்து தோலால் தொட்டு ஐம்புலனை அறிகிறது.

உடம்பைப் போலத் தான் இருப்பதை உணர்ந்து தம்மை இயக்கும் இறைவனில் இணைந்து நிலை பெற வேண்டும் என்கிறார்.

நம்முடைய இயக்கத்தால் விட்டுவிட்டு பொறிகளில் இணைந்து அறிவு பெறுதலை உணர வேண்டும். விடாமல் நம்மைக் கதிரவன் போல இயக்கும் இறைவனை உணர வேண்டும். அவன் ஒளியில் இருந்தால் விட்டுப் பிரகாசித்தல் போல் இன்றி ஒளிப் பொருளாகவே நிலைத்து அவனில் இருக்கலாம் என்பது விளக்கினார்.

எடுத்துக்காட்டு வெண்பா 5-2-3

**அருளுண்டாம் ஈசற்கு அதுசத்தி அன்றே**
**அருளும் அவன் அன்றி இல்லை - அருளின்று**
**அவன் அன்றே இல்லை அருட்கண்ணார் கண்ணுக்கு**
**இரவிபோல் நிற்கும்அரன் ஏய்ந்து.**



**வெண்பா உரைத்தொடர் :** ஈசற்கு அன்றே உண்டாம் அருள், அது சத்தி, அவன் அருள் அன்றி இல்லை, இன்றி அவன் இல்லையன்றே, கண்ணுக்கு இரவி போல் அருட் கண்ணால் அரன் நிற்கும் ஏய்ந்து.

**விளக்கம்**

ஈசனாகிய இறைவனுக்கு அருள் உண்டு என்பது அவன் இயல்பிலேயே இருக்கும் உண்மை நிலை. அது அவன் ஆற்றலாகவும் இயங்குகிறது. அவன் இன்றி அவனும் இல்லை. அருளால் இயங்குபவன் அவன். அதன் இயக்கம் இன்றி எதன் இயக்கமும் இல்லை.

கண்ணுக்கு கதிரவன் உதவுவது போல் அவன் அருள் நிறைவது இருக்கிறது. அவன் அருளைக் கண்ணாகவும் அருளால் பொருந்தி நிறைந்தவனாகவும் இருக்கும் அரன்.

கண் திறந்த போது கதிரவன் வரவில்லை. கதிரவன் ஒளி இருக்கிறது. கண் திறந்தால் காணலாம். அப்படி அவன் அருள் நிறைந்து இருக்கிறது.

**கருத்து**

சத்து, அசத்து என இரு தன்மையில் பொருள்கள் இருந்து இயங்கும் தன்மை காட்டுவதன் முன் ‘அருள்’ இயக்குவதை விளக்கினார்.

# ஆறாம் நூற்பா

**உணர்உரு அசத்துஎனின் உணராது இன்மையின்**
**இருதிறன் அல்லது சிவசத் தாம் என**
**இரண்டு வகையின் இசைக்குமன் உலகே**

வார்த்திகம் : சத்தும் அசத்தும் வரைசெய்து உணர்த்துதல் நுதலிற்று.

வார்த்திக விளக்கம் : 'சத்து' என்றால் 'உள்பொருள்'. அசத்து என்றால் 'இல்பொருள்'. உள் பொருள் என்பதையும் இல்பொருள் என்பதையும் நாம் எப்படி வரைவு செய்கிறோம் என்பதை விளக்குகிறார்.

**நூற்பா உரைத்தொடர் :** உணர் உரு எனின் அசத்து உணராது எனின் இன்மையின் இருதிறன் அல்லது இரண்டு வகையில் சிவசத்தாம் என மன் உலகு இசைக்கும்.

### விளக்கம்

உணரப்படுகின்ற உருவங்கள் என்றால் அவை 'அசத்து'. உணரப்படாதன என்றால் இல்லாத பொருள். இந்த இரண்டு தன்மையும் இன்றி உணரப்படும் பொருளாகவும் உணரப்படாத பொருளாகவும் 'சிவசத்து' இருக்கிறது. நிலைத்தன்மை அறிந்த உலகு இதில் உடன்படும்.



(i)

### இருதிறன்

உணரப்படும் தன்மை, உணரப்படாத் தன்மை இந்த இரண்டும் ஆன்மாவை நோக்க அமைந்த இருதிறன்கள்.

ஆன்மா தான் உலகத்தில் பார்க்கின்ற பொருள்கள் யாவும் 'அசத்து'.

பார்க்கப்படாத ஒரு பொருள் இல்லாத பொருளே. இல்லாத பொருள் எந்த வகையிலும் உணர்வுக்கு வாராத ஒன்று.

இந்த இரண்டு திறன்களில் எந்த ஒன்றையும் கொண்டில்லாதது 'சிவசத்து'. அது இரண்டு வகையின் நின்ற ஒருபொருள். இரண்டாக இல்லாமல் இரண்டு வகையில் நின்ற பொருள் 'சிவசத்து'. அது காணப்படும் பொருளாகவும் அமையும். இல்லாத பொருள் போல காணப்படாத ஒன்று அல்ல. இருக்கிற பொருளின் காணப்படாத் தன்மையில் இருப்பது.

(ii)

### உணர்உரு அசத்துத் தன்மையும் உணரா சத்து உணரப்படலும்

உணரப்படுகின்ற உருவங்கள் யாவும் தோன்றி நின்று அழிவன. ஆனால் மூலத்தில் ஒடுங்கியிருப்பன. இவையும் அருவமாக இருக்கும் போது காணப்படாதனவே. இவையும் உணரப்படுதலில் அசத்தாகவும் உணரப்படா அருவத்தில் சத்தாகவும் இருப்பது என இரண்டு வகையில் சொல்ல முடியாது.

உணர்உரு தன்மை என்னவெனில் மாறிக் கொண்டிருக்கும் நிலைத்தன்மை. இதுதான் அசத்துத்தன்மை. மாறாமல் இல்லாத் தன்மை என்பது உண்டு என்பது உணரப்படவோ சொல்லப்படவோ முடியாதது. இல்லாத பொருளாக இறைவன் இல்லை. அசத்துத் தன்மையில் 'மாறும் உள்பொருளாகவும்' இல்லை.

மாறாத உள்பொருளாக அவன் இருக்கிறான் அவ்வகையில் 'சத்து'. அவன் தன்னைச் சிவமாகக் காட்டிக் கொள்கிறான். இவ்வகையில் 'சிவசத்து'. சத்தாகிய ஒரு மாறாத் தன்மையனான அவன் 'சிவம்' எனக் காட்டிக் கொள்ளும் போது உணரப்படுவன். அது காணாப் பொருளைக் காணும் நிலை. இந்த இரண்டு வகையின் இருப்பது சிவசத்து.

## முதல் அதிகரணம்

**மேற்கோள் : ஈண்டு, அறிவினால் அறியப்பட்ட சுட்டு அசத்து என்றது.**

**ஏது : அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.**

**மேற்கோள் விளக்கம் :** அறிவினால் அறியப்பட்டதான உலகப் பொருள் யாவும் 'அசத்து'. அதன் தன்மை தோன்றி இருந்து அழியும் மாற்றத் தன்மை. அவ்வகையில் அசத்து என்பது மாறும் உள்பொருள்.

**ஏது விளக்கம் :** அறிவுடையன போல இருக்கின்றன. ஆனால் அறிவில்லாதனவாக உள்ளன. இதுவே அவற்றின் சடப்பொருள் மூலமான மலத்திலிருந்து அவை தோற்றி உள்ளதாக்கப்பட்டவை என்பதை முடிவாக உடையவை.

'கண்' அறிவுடையது போல இருக்கும். ஆனால் கண் தானே கேட்காதபோது அறிவில்லாதது. எனவே அறிவு இல்லாதது கண். பார்க்கும் அறிவு வேறொன்றுக்கு (ஆன்மாவுக்கு) அமைகிறது. இப்படி அறிவுடையது போலத் தோன்றி அறிவில்லாததாக உண்மைத் தன்மை கொண்டனவே பார்க்கப்படுகிற பொருள்கள்.

அறிவில்லாத பார்க்கப்படுகிற அனைத்தும் அவ்வகையில் 'அசத்து' என முடிவு செய்யப்பட்டன.



எடுத்துக்காட்டு வெண்பா 6-1-1

**அசத்து அறியாய் கேள்நீ அறிவு அறிந்த எல்லாம்**
**அசத்தாகும் மெய்கண்டான் ஆயின் - அசத்துஅலாய்!**
**நீரில் எழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும்**
**ஓரின் அவை இன்று ஆம் ஆறு ஒப்பு.**

**வெண்பா உரைத்தொடர் :** அசத்து அறியாய் நீ கேள், அறிவு அறிந்த எல்லாம் அசத்து ஆகும்; மெய்கண்டான் ஆயின் அசத்து அலாய்; நிகழ் நீரில் எழுத்தும், நிகழ் கனவும், பேய்த் தேரும் அவை இன்று ஒப்பு ஓரின் ஆம் ஆறு.

### விளக்கம்

அசத்தில் இருந்து அறிவதனாலே ஆன்மாவை 'அசத்தை அறியாய்' என்கிறார். ஆன்மா அசத்தைத் தனியே நிறுத்தி அறியாதது.

அறிவார் நீ அறிந்த எல்லாப் புறப்பொருள்களும் 'அசத்து' ஆகும்.

நீ மெய் கண்டால் அசத்திலிருந்து நீங்குவாய். (மெய் கண்டாரைச் சாக்கிரத்தே 'சாக்கிர அதீதம்' கண்டவர் என மனவாசகம் கடந்தார் கூறுவார்).

நீரில் எழுத்து எழுதப்படுகிறது; பார்க்கப்பட முடியவில்லை. கனவு நிகழ்கிறது; நனவு போல இல்லை. கானல் நீர் பார்க்கப்படுகிறது; பொருள் இல்லை. அவற்றை எண்ணிப் பார்த்து ஒப்பு நோக்கினால் அவை எப்படி ஆக்கப்பட்டு இருந்தன என்பது புலனாகும்.

நீரெழுத்து, கனவு, கானல் நீர் இவை காணப்படுவனவே. ஆனால் காரியங்களைக் காண முடியவில்லை. எழுத்தும் கனவும் நீரும் அருவமாகவே நிகழ்த்தப்பட்டன. இதுபோல பார்க்கப்படாமல் போன காரியப் பொருள்கள் இவற்றின்

மூலமானது அருவமாக உண்டு. இத்தன்மைத்தான் 'அசத்துத்' தன்மை. காரியம் மாறுவதாய் / இல்லாததாய் காரணம் உள்பொருளாய் அருவமாய் அமைவது.

காரியத்தால் மாற்றங்களைக் கொண்டதாய் மாறாத உள்பொருள் மூலமாக இருக்கும் பொருளே அசத்துப் பொருள்.

அசத்துத் தன்மை ஆராய்ச்சி, காணப்பட்ட பொருள்களை நோக்கியது. இதன் காரியத்தில் உருவம் கருதப்படுகிறது. உருவ இன்மை அருவமாதலில் உள்பொருள் தன்மை ஏற்கப்பட்டு மாறும் உள்பொருள் என 'அசத்து' விளக்கம் அமைகிறது.

## இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : **இனி, இவ்விரண்டு தன்மையும் இன்றி வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவம் என்று உணரற்பாற்று.**

ஏது : **பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவது இன்மையானும் அப்பிரகாசத்திற்குப் பிரகாசம் இன்மையானும்.**

**மேற்கோள் விளக்கம் :** ஆன்மாவின் 'அறியும் தன்மை' காட்சிப்படுவதான 'அறியப்படும் தன்மை' இரண்டும் இன்றி வாக்கு, மனம், கடந்த பொருளாக உள்ளது சிவம். அதுவே 'சத்து' என்றார்.

**ஏது விளக்கம் :** அறிவுப் பொருள் அறிவைப் பெற வேண்டியது இல்லை; அறிவில்லாத பொருளுக்கு அறிவே உண்டாவது இல்லை.

அறிவுப் பொருளாக உள்ளது அறிவில்லாத பொருளைச் சார்ந்து அறியாது. அவ்வகையில் சிவம் ஆன்மாவையும் சார்ந்து அறிவு பெறாது. ஆன்மா சாரும் கருவிகளையும் சார்ந்து அறிவு பெறாது.



ஆன்மா போல அறிவதற்கு சார்ந்து காரியப்படுவதாகவோ, அறிவின் காரியப்பாட்டிற்கு உரிய அறிவு இல்லாத பொருளாகவோ இல்லாமல் 'சத்துப்பொருள்' என தன்னிலையில் உள்ளதே 'சிவம்' என்றார்.

எடுத்துக்காட்டு வெண்பா 6-2-1

**எண்ணிய சத்தன்று அசத்தன்று ஆம் என்றால் என்**
**கண்ணி உளது என்றல், மெய்கண்டான் - எண்ணி**
**அறிய இரண்டு ஆம் அசத்து ஆதல் சத்தாம்**
**அறிவு அறியா மெய்சிவன்தாள் ஆம்.**

**வெண்பா உரைத்தொடர் :** எண்ணிய சத்து அன்று அசத்து அன்று என்றால் உளது என்றல் என் கண்ணி; மெய்கண்டான் எண்ணி அறிய இரண்டு ஆம் அசத்து; சத்து ஆம் அறிவு அறியா மெய் சிவன் தாள் ஆம்.

### விளக்கம்

எண்ணுவதாகும் (அறிவதாகும்) 'சத்து' அல்ல இறைவன். பார்க்கப்படும் பொருளாக இருக்கும் அசத்து என்றால் அல்லன் அவனின் உள்ள தன்மை என்பது என்ன? அவன் உலகமாக உளதாக வேறு காரணம் வேண்டப்படும். அசத்தின் அறிவில்லாத் தன்மை அதற்கு மூலமாகாது. இல்லாத - அசத்து என்றால் எஞ்ஞான்றும் இல்லாததே.

உலக காரியத்தின் மூலப் பொருள் மாயை. இது அசத்து. இதைத் தோற்றுவிக்க எண்ணி அறிந்த வகையில் மெய்கண்டான் இரண்டாகச் செய்கிறான். சுத்தம், அசுத்தம் என இரண்டாகக் காரியப்படுத்துகிறான். மேலும் 'அசத்து' என்பதே காரணமாக அமைந்து காரியப்படுவதாக உள்ளது. காரணத்திலிருந்து காரியமாகின்ற வகையில் வினை நல்வினை, தீவினை எனப்படும் ஆணவமானது யான், எனது என்று காரியப்படும். இப்படிக் காரணம், காரியம் இரண்டாகின்ற நிலை இறைவனுக்கோ

ஆன்மாவுக்கோ இல்லை. சடப்பொருள்களான ஆணவம், கன்மம், மாயை மூன்றும் காரியப்படுவன. இவ்வகையாலும் 'அசத்து' இரண்டாகும் என்றார்.

'சத்து' என்பதால் சொல்லப்படுகின்ற ஒன்று 'அறிவு அறியாத மெய்'. அறிவினால் அறியப்பட முடியாத உண்மைப் பொருளாக உள்ளது. அது சிவன் திருவடியாம் என்றார்.

எடுத்துக்காட்டு வெண்பா 6-2-2

**உணர்ப அசத்தாதல் ஒன்று உணராது ஒன்றை**
**உணருநீ தான் உணராய் ஆயின் - உணரும் உனில்**
**தான்இரண்டாம் மெய்கண்டான் தன்னால் உணர்தலால்**
**தான்இரண்டாய்க் காணான் தமி.**

**வெண்பா உரைத்தொடர் :** உணர்ப அசத்து ஆதல் ஒன்று உணராது ஒன்றை உணரும் நீ தான் உணராய் ஆயின், உணரும் உனின் தான் இரண்டு ஆம்; தன்னால் மெய்கண்டான் உணர்தலால் இரண்டாய்த் தான் காணான் தமி.

**விளக்கம்**

உணர்வதற்குப் பயன்படுகின்ற பொருள்கள் யாவும் அசத்து. ஆதலினால் அவை ஒன்றும் உணரமாட்டா. கண் பயன்பட்டு நமக்கு காட்சி அறிவு தருகிறது. அதுவே காட்சி அறிவைப் பெற்றுக் கொள்ளாது. அறிவைப் பெறவோ அறிவாகவோ இல்லாத அவை யாவும் அசத்தே.

ஆனால், அவை இன்றி ஆன்மாவான நீ ஒன்றையும் உணரமாட்டாய்.

அசத்துப் பொருளின் துணை இல்லாமல் உணர மாட்டாத ஆன்மாவின் உணரும் முறை என்பது தனித்து இல்லை. அறிவு இல்லாமையால் அசத்துப் பொருள் என்றும் தானே காட்டாது.



ஆன்மா அதன் துணையால் அறிவதால் ஆன்மாவே முதல்வனாக இல்லை. ஆன்மா அசத்துப் பொருளை அறியத் துணையாகப் பெற்றது போல் தன் அறிவு இயங்கவும் ஒரு துணையைப் பெற்றிருக்கவே வேண்டும். அதுதான் முதல்பொருளான இறைவனின் துணை. ஆக ஆன்மாவான நீ அறிய உன்னில் இரண்டு பொருள்களின் இணைப்பு வேண்டும்.

இறைவனான மெய்கண்டான் தானே உணர்தலால் இரண்டாக அறிய மாட்டான். எல்லாவற்றையும் தன் வியாபகத்தில் கொண்டிருக்கும் 'தமி'யாக இருக்கிறான்.

'தமி' என்பது 'தம்' என்பதாக எல்லா பன்மைப் பொருள்களையும் இணைத்துக் கொண்ட ஒன்று.

எடுத்துக்காட்டு வெண்பா 6-2-3

**பாவகமேல் தான்அசத்தாம், பாவனா அதீதம் எனில்**
**பாவகமாம் அன்றென்னில் பாழ்அதுவாம் - பாவகத்தைப்**
**பாவித்தல் தான்என்னில் பாவகமாம் தன்னருளால்**
**பாவிப் பதுபரம் இல் பாழ்.**

**வெண்பா உரைத்தொடர் :** பாவகமேல் தான் அசத்தாம், பாவன அதீதம் எனில் பாவகம் ஆம்; அன்று என்னின் அது பாழ் ஆம்; பாவகமாம் என்னில் பாவகத்தைப் பாவித்தல் தான்; தன் அருளால் பாவிப்பது பரம் பாழ்இல்.

**விளக்கம்**

பாவகம் - பாவிக்கப்படும் பொருள். எண்ணத்தில் செய்யப்படுவது உன்னால் செய்யப்படுகின்ற பாவகம் எதுவாயினும் அது 'அசத்து' ஆகும். எப்படியெனில் உன்னால் சொல்லப்படுவன நீ துணையாகக் கொண்டு அனுபவித்த சடத்தின் காரியங்களே.

பாவனைகளாக உள்ள எல்லாவற்றையும் நீங்கிச் செய்யும் ஒன்று என்றாலும் அதுவும் பாவகமே. அது கருவிகளின்றி உன்னில் இணைந்துள்ள அறியாமை (ஆணவம்) யான பாவகம் ஆகும். இவை எதுவும் இல்லாத பாவனை என்றால் அது ஒன்றுமில்லாத பாழான ஒன்று.

பாவகம் என்று சொன்னால் பாவகத்தைப் பாவிப்பதாக இருக்க வேண்டும். பாவகம் - இயல்பு. எண்ணப்பட்ட ஒன்றன் இயல்புதான் அடையக்கூடியது. அவ்வகையில் பாவிக்கும் பாவகம் என்பது யாதேனும் ஒரு பாவகமாக இருக்க வேண்டும். அது மேலே சொன்னவாறு அசத்தாகவோ பாழாகவோ ஆதல் கூடாது.

அப்படி, ஆன்மாவின் பாவகமாக பாவித்தற்கு உரிய ஒன்று 'அருள்'. இது அசத்தும் அல்ல; பாழும் அல்ல. 'பரம்' ஆகும். மேலான ஒன்றான அருள் ஆன்மாவின் இயல்பில் இணைந்து நின்ற ஒன்று. இதன் மூலமாக இயங்குவதுதான் உயரும் வழி என்றார்.

எடுத்துக்காட்டு வெண்பா 6-2-4

**அறிய இரண்டுஅல்லன், ஆங்குஅறிவு தன்னால்**
**அறியப் படான், அறிவின் உள்ளான் - அறிவுக்குக்**
**காட்டு ஆகி நின்றானைக் கண்ணறியா மெய்யென்னக்**
**காட்டாது அறிவு அறிந்து கண்டு.**

**வெண்பா உரைத்தொடர் :** ஆங்கு அறிவுக்குக் காட்டாகி நின்றானை அறிய இரண்டு அல்லன் அறிவின் உள்ளான்; கண் அறியா மெய் என்ன; அறிவு கண்டு அறிந்து காட்டாது; அறிவு தன்னால் அறியப்படான்.



**விளக்கம்**

அறிவுப் பொருளான ஆன்மாவுக்குக் காட்டுபவனாக நின்றான் இறைவன். அவனை அறிய வேண்டுதற்கு அவனை வேறாக நிறுத்த வேண்டியது இல்லை. அவன் அறிவின் உள்ளேயே இயக்குபவனாக இருக்கிறான். உடம்பைப் போலவே கண்ணும் அறிவு இல்லாததே. 'அறிவு' என்ற ஒன்றுக்கும் அறிவு இல்லை. எனவே அறிவும் இறைவனைக் காட்டாது. 'அறிவு' என்ற ஒன்றாலும் அறியப்படமாட்டான். ஏனெனில் 'அறிவு' என்பது அசத்துச் செய்தியே. அடுத்து ஆன்மாவின் அறிவு என்று அடையாளங் காட்ட ஏதுமில்லை. இந்நிலையானது 'அறிவு' என்பதால் அறியப்படாதவன் இறைவன் என்றார்.

எடுத்துக்காட்டு வெண்பா 6-2-5

**அதுவென்னும் ஒன்றுஅன்று அதுவன்றி வேறே**
**அதுவென்று அறி, அறிவும் உண்டே - அதுவென்று**
**அறிய இரண்டல்லன் ஆங்கு அறிவுள் நிற்றல்**
**அறியும்அறி வேசிவமும் ஆம்.**

**வெண்பா உரைத்தொடர் :** அது என்றும் ஒன்று அன்று; அது அன்றி வேறு அது என்று அறி; அது என்று அறிய இரண்டு அல்லன்; அறிவுள் நிற்றல் ஆண்டு உண்டே அறிவும், அறிவே அறியும் சிவமும் ஆம்.

**விளக்கம்**

'அது' என்று சுட்டி அறியப்படும் ஒன்று அன்று. பார்க்கப்படுகின்ற பொருள்கள் இல்லாது வேறு ஒன்றாக இருப்பது பரம்பொருள் என்று அறிய வேண்டும். அதனை அது என்று அறிய வேண்டுமாயின் அது உன்னில் வேறாக இரண்டாவதாக இல்லாத தன்மையை உணர வேண்டும். உன் அறிவில் இணைந்து உள்ள அது ஒன்றே. உன்னில் இணைந்திருப்பதால் அதை நீங்கி நீ அதைக் காண முடியாது. உன்னுள் இணைந்து உள்ள அதன் மூலமே அதனைக் காணவேண்டும்.

ஆன்மாவின் அறிவுள் அது இருப்பதனாலேயே அறிவு ஆன்மாவுக்கு அமைந்தது. அந்த அறிவே அறிவது. அதுதான் சிவமாவது. ஆன்மாவில் இணைந்த இறை அறிவு மூலமே அவனைக் காண்க என்றது.

**கருத்து**

'சத்து' எனப்படும் பொருளான பரம்பொருள் தான் பொருள்களை சிவமாக இணைத்துக் கொண்டு இயங்கும் வகை சுட்டி 'சிவசத்து' விளக்கினார்.

உணரப்படுவதாகவும், உணரப்படாத இல்லாத ஒன்றாகவும் இல்லாதது 'சத்து'. பரம்பொருள் சிவசத்தாக இருப்பது. இது உணர்த்துவதாகவும் தன்னால் உணரப்படுவதாகவும் ஆகும்.

# ஏழாம் நூற்பா

**யாவையும் சூனியம் சத்துஎதிர் ஆகலின்**
**சத்தே யறியாது அசத்துஇலது அறியாது**
**இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா**

வார்த்திகம் : என் நுதலிற்றோ வெனின், மேலதற்கோர் புறன்நடை உணர்த்துதல் நுதலிற்று.

**நூற்பா உரைத்தொடர் :** சத்து எதிர் யாவையும் சூனியம் சத்தே அறியாது அசது இலது ஆகலின் அறியது இரண்டு அலா ஆன்மா இருதிறன் அறிவு உளது.

**முதல் அதிகரணம்**

மேற்கோள் : ஈண்டு, சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது என்றது.

ஏது : மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

**மேற்கோள் விளக்கம் :** சத்தின் முன்னர் அசத்து தன்னைத் தன்னியல்பில் நிறுத்திக் கொள்ளாது. சத்தின் முன் தன்னியல்பில் வெளிப்படாதது 'பிரகாசமின்மை' என்பது.

கண் பார்க்கிறது என்றால் பார்க்கத் துணையாக இருக்கிறது. அது பார்க்கத் துணையாவதில் ஆன்மாவின் ஞானம்தான் வேலை செய்கிறது என்றாலும் அது ஆளுமை ஞானமன்று; அறியும் ஞானம். அறியும் ஞானமாதலால் கண்ணின் இயல்பு

வழி அறியும். கண்ணில் இயல்பு 'சகசமலம் சந்தித்த நிலை'. இதில் மயக்கு உண்டு. ஆன்மா தன் ஞானத்தை உண்மை ஞானமாகக் கொண்டு அதிட்டித்தால் கண்ணின் மூலமாகப் பார்க்கப்படும். பொருளின் முழு நிலையும் காரண காரியத் தொடர்பில் புலப்படும். அதுவன்றி ஆன்மாவுக்கு என்று ஞானக் குணம் பற்றி சொல்லிக் கொள்ள ஏதும் இல்லை. எனவே கருவி (வினை ஆணவ சார்பிலான மாயாகாரியம்) வழிக் காண்கிறது. இது அசத்து அனுபவம். இந்த அனுபவமுறை வெளிப்படாமையே சத்தின் முன் அசத்து பிரகாசியாது என்றது.

வாசனைத் திரவியம் பூசிச் சென்றார் சென்ற போது நாற்றம் அங்கிருப்பாரைக் கவரும். இது அசத்தின் பிரகாசத் தன்மை. இது போலன்றி பொருளின் உண்மையிலோ தன் உண்மையிலோ அறியுமாறு நிற்றல் சத்தின் பிரகாசத் தன்மை. இது சிவசத்தான பரம்பொருளால் ஆன்மாவுக்குக் கூடுவது. இது வலியுறுத்தி அசத்தைப் பிரகாசிக்கச் செய்யாமைக்கு வலியுறுத்தி நூற்பா செய்தார்.

**ஏது விளக்கம் :** மெய் கண்ட போது பொய் தான் இல்லாமற் போகிறது. இந்த இல்லாமை என்பது மெய்யை மறுபடி மாற்றாது போவது.

எடுத்துக்காட்டு வெண்பா 7-1-1

**அன்னியம் இலாமை அரற்குஒன்று உணர்வு இன்றாம்**
**அன்னியமிலான் அசத்தைக் காண்குவனேல் –**
**அன்னியமாக்**
**காணான் அவன்முன், கதிர்முன் இருள்போல்**
**மாணா அசத்துஇன்மை மற்று.**

**வெண்பா உரைத்தொடர் :** அன்னியம் இலாமை அரற்கு ஒன்றுணர்வு இன்றாம்; மற்று அசத்தைக் காண்குவனேல் அன்னியமாக் காணான்; மாணா அசத்து அவன்முன் கதிர்முன் இருள் போல் இன்மை.



**விளக்கம்**

எந்தப் பொருள்களிலிருந்தும் நீங்காது எல்லாவற்றிலும் நிறைந்து இருப்பவன் இறைவன். பிரிப்பு இல்லாத அவன் புதியதாக ஞானத்தை பெறுபவனில்லை.

ஆன்மா உடம்பில் வியாபகப்பட்டாலும் அறிவை அவற்றின் மூலமாகவே பெறுவது. ஆனால் அரன் அப்படியன்று. அறிவாகவே வியாபித்தவன். எனவேதான் அவனை மேல் நூற்பாவில் 'சிவசத்து' என்றார். அவன் அசத்தைக் காணவேண்டியிருந்தால் ஞனமாக இணைந்திருக்கும் அவனுக்கு அசத்தின் வேறாக இருந்து அறியும் முறை இல்லை.

அசத்து அவன் முன் இருந்தாலும் கதிரொளியின் முன் இருள் போல் இல்லாதிருக்கும். இருள் இல்லாத தன்மை என்பது 'இது என்று அறிதற்கு இல்லாத தன்மை'. ஒளியில் இருட்டு அடங்கி இருந்தாலும் இது என்று சொல்லப்பட அது இருக்காது. இந்நிலை போலவே அரன் முன் 'அசத்து' இராது.

## இரண்டாம் அதிகரணம்

**மேற்கோள் : இனி, அசத்தினுக்கு உணர்வு இன்று என்றது.**

**ஏது : அதுதான் நிரூபிக்கில் இன்றாகலான்.**

**மேற்கோள் விளக்கம் :** 'அசத்து' அறிவு இல்லாதது ஆகும்.

**ஏது விளக்கம் :** அறிவின் மூலம் ஒன்றைச் செய்யாமையும் அறியும் போது அதன் செயல் இல்லாமையும் 'அசத்து'க்கு அறிவு இல்லை என்பதை முடிவு செய்ய வேண்டிய தேவை இல்லாமையைக் காட்டுகின்றன.

எடுத்துக்காட்டு வெண்பா 7-2-1

**பேய்த்தேர்நீர் என்றுவரும் பேதைக்கு மற்றுஅணைந்த**
**பேய்த்தேர் அசத்தாகும் பெற்றிமையின்**
**வாய்த்துஅதனைக்**
**கண்டுணர்வார் இல்வழியின் காணும் அசத்து இன்மை**
**கண்டுணர்வார் இல்லதுஎனக் காண்.**

**வெண்பா உரைத்தொடர் :** பேய்த்தேர் நீர் என்று வரும் பேதைக்கு அணைந்த பேய்த்தேர் அசத்து ஆகும்; வாய்த்ததனைக் கண்டு இவ்வழியின் காணும் அசத்து இன்மை உணர்வார். மற்று இல்லது எனப் பெற்றிமையின் கண்டு உணர்வார் காண்.

**விளக்கம்**

கானல்நீர் (பேய்த்தேர்) குடிக்கும் நீர் என்று அதைத் தேடி வருபவன் அறிவிலி. அவன் அது இருக்குமிடம் என்று நினைத்து அவ்விடத்தைச் சேர்ந்த போது அந்தக் கானல் நீர் 'அசத்து' ஆகும்.

இங்கே கானல் நீர் 'அசத்து' எனப்பட்டது இருப்பதாகத் தெரிந்த ஒன்று நிலையாக இல்லாமல் போனது என்பது. அதில் பொருள் உண்மை, அது நீ நினைப்பது போல பயனுக்கு உரியதும் அன்று என்பது.

கண் இருக்கிறது என்றால் அதன் மூலமே பயனை அடைந்து விடலாம் என்பது. அது வழியாக இருப்பது. பயன் என்பது பார்ப்பதன் மூலத்தைப் பார்ப்பது. கானல் நீரில் தேடிய நீர் கிடைத்தால் தான் பயன். அதில் நீர் வராது. ஆனால் நீர் உண்டு என்பதைத் தேட அது பயன்பட்டது. அப்படி உண்மையை உணரப் பயன்படுவது. அது 'தன் இல்லாத தன்மையைக் காட்டுவதை' நீ உணர வேண்டும். அது அசத்துத் தன்மை. இது முற்றாக இல்லாத தன்மை என்பதன்று. நாம் தேட வேண்டியதைப் பெற



வேண்டியதை உணர்த்தப் பயன்பட்ட காரியங்கள். அதன் 'நிலை மாற்றம்' என்பது 'நிலையான ஒன்றைப் பெற தன் அனுபவத்திலிருந்து மாற, தான் மாறிக் கொண்டிருப்பது' ஆகும்.

அசத்தின் அனுபவம் இப்படி அமைந்தது என்பதைக் கண்டு அசத்தின் இல்லாத தன்மையில் உண்மையை உணர்ந்தவர் அசத்துக்கு அறிவு இல்லாமையையும் உணர்வர். அறிவு இல்லாத தன்மையை உணர்ந்தால் இதுவரை பெற்ற அறிவின் அறிவில்லாத் தன்மையை உணர்வர். அறிவில்லாத அசத்தின் மூலம் பெற்ற 'அறிவை' 'அறிவு' என்று சொல்வது எப்படி என 'பெற்றதை' உணர்வார். அதன் மூலம் 'அறிவு' என்ற ஒன்றைப் பெற 'அறிவான' ஒன்றின் துணை உண்மையை ஆராய்வர்.

## மூன்றாம் அதிகரணம்

**மேற்கோள் : இனி, இருதிறன் அறிவு உளது இரண்டலா ஆன்மா என்றது.**

பொழிப்புரை : **இவ்விரண்டினையும் அறிவதாய் உபதேசியாய் நின்ற அவ்வறிவு இரண்டன்பாலும் உளதாயுள்ள அதுவே அவ் ஆன்மாவாம் என்றது.**

**மேற்கோள் விளக்கம் :** ஆன்மா இருதிறன் அறிவு உளது என்றார். சத்தைச் சார்ந்து அறிவு பெறுவது. இது அறிவிலாத் தன்மையின் பெற்ற அறிவு. இதன் மூலம் 'அறிவு' பற்றிய உண்மை தெளியும். தன்னில் இருக்கிற அறிவு கொளுத்தும் தன்மை அறிவில்லாப் பொருள்களால் நிறைந்ததை உணரும். தனக்கு இவை தவிர அறிவு இல்லாததை உணரும். அறிவு கொளுத்தும் தன்மை தனக்கு இருந்தாலும் 'அறிவு' என்பதன் மூலமாகவே ஒன்றும் கிடைக்காத இயல்பை உணரும். தன்னிலிருந்து அவ்வாறு அறிவு இதுவரை இல்லை. தன்னிலிருந்து தேடிய போது பெற்றதெல்லாம் அறிவில்லாதவற்றின் இயல்பு. ஆக அறிவின் தடம் இருந்தாலும் அறிவாக இல்லாத தன் தன்மையின் குறை உணரப்பட்ட போது

'அறிவு' எனும் இயக்கம் மூலமாக இருப்பதன் உண்மையை ஆராய்ந்து உறுதி செய்யும். இப்போது அதற்குரிய மூலப்பொருளான 'சிவசத்தை'ப் பற்றும். இவ்வகையில் 'அறிவு' என்பதாகவே தன் அறிவில் கொளுத்திக் கொள்ளும். இதனால் இதுவரை இருந்த அசித்துத் தன்மையின் வேறான சித்துத் தன்மை இயக்கம் நடைபெறும். அறிவே இல்லாத அசித்துத் தன்மையது அசத்து. தன் அறிவை அசத்தாகத்தான் பெற்ற வரையில் 'அறிவு' என்பதே இல்லை.

'அறிவு' எனும் பொருளில் இணைந்தால்தான் அறிவே அறிவாக ஆகும். ஆக, தன் நிலை என்பது அறிவும் அறிவு இல்லாததும் ஆன இரண்டின் தொடர்பில் அறிவு கொளுத்திக் கொள்ளும் நிலை எனத் தன்னை ஆன்மா முடிவு செய்து கொள்ளும். இந்நிலையில் ஆன்மாவின் பெயர் 'சித்தசித்து' என்பது. பொருளால் சத்தாகவும் அசத்தாகவும் இன்றி சதசத்தாக இருக்கிறது.

எடுத்துக்காட்டு வெண்பா 7-3-1

**அருஉருவம் தான்அறிதல் ஆய்இழைஆய் ஆன்மா**
**அருஉருவம் அன்று ஆகும் உண்மை - அருஉருவாய்த்**
**தோன்றிஉடன் நில்லாது தோன்றாது நில்லாது**
**தோன்றல் மலர்மணம்போல் தொக்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** ஆயிழை ஆன்மா அரு உருவம் அன்று ஆகும்; அறிதல் தான் அரு உருவம்; அருஉருவாய் ஆகும் உண்மை தோன்றி உடல் நில்லாது தோன்றாது நில்லாது தோன்றல் மலர் தொக்கு மணம் போல்.

**விளக்கம்**

அழகான அணிகலன் ஆயிழை. அது தன்னைக் காட்டி இழுக்கும் தகையது. உடம்பின் உள் இருந்து தான் இருப்பதைக் காட்டிக் கொள்ளும் ஆன்மா அருவுருவமல்ல.



அருவுருவம் என்பது பார்க்கப்படுகின்ற ஒன்று. அனுபவப் பொருள்களில் உருவமாக பெயரறுதிபடாமை. ஆன்மா அத்தன்மையதன்று. உடம்பின் உள்ளே அருவமாக இருந்து உருவங்களின் வழி உருவங்களை உணர்கிறது.

அருவமாக இருந்து உருவங்களின் மூலம் உருவம் காணும் ஆன்மாவுக்கு அருவமாக இருந்து இயக்குகிற பொருளை இறைவனில் கண்டாலும் அருஉருக்காட்சி. இதுதான் 'அருவுருவாக' ஆக வேண்டிய உண்மை.

'அருஉரு' என அனுபவம் கொள்ளும் ஆன்மா இருக்கும் தன்மையை இரு எடுத்துக்காட்டால் விளக்குகின்றார்.

அ. மலர் தோன்றுகிறது - கண்ணில் படுகிறது.
ஆ. மலரில் மணம் தொக்கியிருக்கிறது - கண்ணில் படாமல் மூக்கில் படுகிறது.

மலரும் அறிவே மணமும் அறிவே. ஆனால் மலரின் உள் மணம் மறைவது இருந்து விளைவு ஆதல் போல் ஆன்மா உருஉடம்பில் இருந்து விளைவு செய்கும் என்பது.

எடுத்துக்காட்டு வெண்பா 7-3-2

**மயக்கமது உற்றும் மருந்தின் தெளிந்தும்**
**பெயர்த்து உணர்நீ சத்துஆகாய் பேசில் - அசத்தும்அலை**
**நீஅறிந்து செய்வினைகள் நீஅன்றி வேறுஅசத்துத்**
**தான் அறிந்து துய்யாமை தான்.**

**வெண்பா உரைத்தொடர் :** நீ சத்து ஆகாய், மயக்கமது உற்றும் மருந்தின் தெளிந்தும் பெயர்த்து உணர் நீ; பேசில் அசத்தும் அலை; நீ அறிந்து செய்வினைகள் நீ அன்றி வேறு அசத்துத்தான் அறிந்து துய்யாமைதான்.

**விளக்கம்**

ஆன்மாவான நீ சத்துப் பொருளான இறைவனாக ஆக மாட்டாய். நீ சத்துப் போலன்றி ஒரு தனித்தன்மைப் பொருள்.

தெளிவை நேராகப் பெறாமல் மயக்கத்துடனே அறிவைப் பொருந்துகிற பொருளாகவும் தெளிவுக்கு இன்னொரு அனுபவத்தை வேண்டுவதாகவும் வேறுபட்ட நிலைகளை எதிர்பார்க்கும் அறிவினன் நீ, ஆனால் நீ அசத்தும் அல்ல.

நீ அறிந்து செய்கின்ற செயல்கள் நீ தான் அனுபவிப்பன; அறிவன. அவற்றை அசத்து துய்த்து அறியாது.

எடுத்துக்காட்டு வெண்பா 7-3-3

**மெய்ஞ்ஞானந் தன்னில் விளையாது அசத்தாதல்**
**அஞ்ஞானம் உள்ளம் அணைதல்காண் - மெய்ஞ்ஞானம்**
**தானே உளஅன்றே தண்கடல்நீர் உப்புப்போல்**
**தானே உளம்உளவாய்த் தான்.**

**வெண்பா உரைத்தொடர் :** அஞ் ஞானம் அசத்து ஆதல், மெய்ஞ் ஞானம் தன்னில் விளையாது, மெய்ஞ் ஞானம் தானே உளது அன்றே உள்ளம் அணைதல் காண், தான் ஏய் உளம் உளவாத் தான்.

**விளக்கம்**

அஞ்ஞானத் தன்மையானது அசத்துப் பொருள். அதனால் அறிவு வராது. அதனால் வரும் அறிவு 'அறியாமை அறிவே'. ஆன்மாவில் ஞானம் பெறுந்தன்மை உண்டேயொழிய ஞானத்தன்மை இல்லை. எனவே ஆன்மாவில் மெய்ஞ்ஞானம் விளையாது. மெய்யல்லாத பொருளான் வந்த ஞானமே இருக்கும்.

ஞானத்தன்மை மெய்யாக இருப்பது என்பது சிவசத்தியம். அது தானே முன்பே ஆன்மாவில் பொருந்தி இருக்கிறது. அதை ஆன்மா அணைந்தால்தான் மெய்ஞ்ஞானம். ஆன்மா தான் பொருந்துவதற்கு (ஏய்வதற்கு) உள்ளதானது அது. உள்ளம் என்ற ஆன்மா அதனால்தான் இருக்கிறது. அதன் மூலம் மெய்ஞ்ஞானம் பெற வேண்டும்.

# எட்டாம் நூற்பா

**ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு**
**அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே**

வார்த்திகம் : என் நுதலிற்றோ எனின், ஞானத்தினை உணரும் முறைமையினை உணர்த்துதல் நுதலிற்று.

**நூற்பா உரைத்தொடர் :** ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை எனத் தவத்தினில் தம் முதல் குருவுமாய் உணர்த்த; விட்டு; அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

**விளக்கம்**

ஞானம் பெறும் முறை விளக்குகிறார்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து அறிவின் காரணமாக நாக்கு, கண், தோல், செவி, மூக்கு எனும் ஐந்து வேடர்களிடம் சிக்குண்டு வளர்ந்தது ஆன்மா. இதனை முறையாகப் பயிற்சிக்கு உள்ளாக்கி அதன் உள்ளே இணைந்து இருந்து முதற் பொருளான அரனே 'குருவாகி' உண்மை உணர்த்துகிறான். இதை ஏற்று, ஐம்புலச் சிக்குண்ட வேடத் தன்மையை விட்டு, குருவார்த்தையின் பிரியாது ஒழுகி அவன் இணைப்பில் அனுபவித்து அவன் திருவடி அடையும்.

## முதல் அதிகரணம்

**மேற்கோள் : ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முன்செய் தவத்தால் ஞானம் நிகழும் என்றது.**

**ஏது : மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா ஆகலான்.**

மேற்கோள் விளக்கம் : பிறவிகள் பெற்று அதன் பயிற்சியில் தம் கரும உறுதியில் ஞானந் தேடல் அமையும்.

ஏது விளக்கம் : உடல், மனம் எல்லாவற்றாலும் அறிவுப் பொருளான இறைவனைக் கூடி அருளை அனுபவிக்கும் செயலின் ஞானத்தால் வீடு பெறுவது.

எடுத்துக்காட்டு வெண்பா 8-1-1

**தவம்செய்தார் என்றும் தவலோகம் சார்ந்து**
**பவஞ்செய்து பற்றுஅறுப்பார் ஆகத் - தவஞ்செய்த**
**நற்சார்பில் வந்துஉதித்து ஞானத்தை நண்ணுதலைக்**
**கற்றார்சூழ் சொல்லுமாம் கண்டு.**

**வெண்பா உரைத்தொடர் :** பவம் செய்து பற்று அறுப்பார் ஆக, கற்றார்சூழ் தவலோகம் சார்ந்து என்றும் ஞானத்தைக் கண்டு தவம் செய்தார் தவம் செய்த நற்சார்பில் உதித்து வந்து நண்ணுதலைச் சொல்லுமாம்.

### விளக்கம்

பிறப்பு அடைந்து உடன் பற்றிய ஆணவப் பற்றினை அறுப்பவராக ஆன்மா செயல்பட வேண்டும். அதற்கு கற்றவர் சூழ்ந்த தம் கரும முயற்சியில் உறுதியுடன் இயங்குமிடத்தில் இயங்க வேண்டும். தொடர்ந்து பரம்பொருள் தரும் ஞானத்தில் செல்லுவதுதான் தவம் செய்து கொண்டிருப்பது. இப்படிச் செய்தால் சார்பு நல்ல சார்பாவது. இதனால் நல்லதான அருள் உள்ளிருந்து வெளிப்பட்டுத் தன்னைப் பொருந்தி அனுபவிக்கத் தக்க வார்த்தை சொல்லும்.



எடுத்துக்காட்டு வெண்பா 8-1-2

**பசித்துஉண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்**
**இசைத்து வருவினையில் இன்பம் - இசைத்த**
**இருவினை ஒப்பில் இறப்பில் தவத்தான்**
**மருவுவன் ஆம் ஞானத்தை வந்து.**

**வெண்பா உரைத்தொடர் :** இசைத்து வருவினையில் இன்பம் வந்து பசித்து உண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்; இசைத்த இருவினை ஒப்பில் ஞானத்தை மருவுவன் இறப்பில் தவத்தான்.

### விளக்கம்

பொருந்திப் பொருந்திச் செய்வது வினை. அதில் பொருந்த வேண்டியதாக நன்மையைப் பொருந்தினால் இன்பம் வரும். பசித்து உண்டால் நன்றாகப் பசிப்பது போல. பசித்து உண்பது பசி ஆர அல்ல. மீண்டும் நன்றாகப் பசிக்க. அதுபோல் வினை தொடரும். இந்த வினையை ஒக்க வைத்த பின்தான் ஞான உயர்ச்சி கூடும். வினையை ஒக்க வைத்து ஞான உயர்ச்சி தருபவனாக இறப்பில்லாத செயலாளனான இறைவன் இருக்கிறான். இருவினையும் வினை அனுபவிக்கும் ஆன்ம எண்ணத்தால் ஒக்க வைப்பன்.

## இரண்டாம் அதிகரணம்

**மேற்கோள் : இனி, இவ்ஆன்மாக்களுக்குத் தமது முதல் தானே குருவுமாய் உணர்த்தும் என்றது.**

**ஏது : அவன் அன்னியம் இன்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்.**

மேற்கோள் விளக்கம் : ஆன்மாவில் பொருந்தியுள்ள முதல்வனான பரம்பொருளே குருவாகச் செயல்படுவன் என்பது.

ஏது விளக்கம் : பிரிவிலாது ஆன்ம அறிவில் அறிவாய் இணைந்த வகையில் அவனே குருவாம் தகையவன்.

எடுத்துக்காட்டு வெண்பா 8-2-1

**மெய்ஞ்ஞானம் தானே விளையும்விஞ் ஞானகலர்க்கு**
**அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய் - மெய்ஞ்ஞானம்**
**பின்னுணர்த்தும் அன்றிப் பிரளயா கலருக்கு**
**முன்னுணர்த்தும் தான்குருவாய் முன்.**

**வெண்பா உரைத்தொடர் :** அஞ்ஞான அச் சகலர்க்கு அக்குருவாய் மெய்ஞ்ஞானம் பின் உணர்த்தும்; அன்றிப் பிரளயாகலருக்குத் தான் குருவாய் முன் உணர்த்தும்; விஞ்ஞானகலர்க்கு தானே விளையும் மெய்ஞ்ஞானம்.

**விளக்கம்**

அஞ்ஞானப் பொருள்களின் மூலம் பெற்ற அறியாமை ஞானம் உடையவர் சகலர். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களின் தாக்குதல் உள்ளவர். இவர்கட்கு உலகில் உள்ள குருமார்களின் பின்புலத்தில் செயல்பட்டு அறியாமை நீக்கி மெய்ஞ்ஞானம் உணர்த்துவான்.

பிரளயாகலர் மாயை மலத்தின் மயக்கத் தாக்கமின்றி நல்வினை, தீவினைத் தாக்கத்தை யான் எனது என்பதால் கொண்ட கன்ம, ஆனவ மலத் தாக்கம் உடையவர். இவருக்கு தானே எண்தோள் முக்கண் ஈசன் போல அருளால் மேனி நிறுத்தி வந்து வார்த்தை சொல்லி மெய்ஞ்ஞானம் தரும்.

யான், எனது எனுந் தாக்கத்தில் ஆணவத் தாக்கத்தில் மட்டுமே நின்ற விஞ்ஞானகலருக்கு அவர் உள்ளேயிருக்கும் இறைவனே உள்ளேயே உணர்த்துவான். இதனால் ஆன்மாவில் இயைந்த அவர்க்கு மெய்ஞ்ஞானம் விளையும்.



எடுத்துக்காட்டு வெண்பா 8-2-2

**அறிவிக்க அன்றி அறியா உளங்கள்**
**செறியுமாம் முன்பின் குறைகள் - நெறியில்**
**குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடுஎன்**
**குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** உளங்கள் அறிவிக்க அன்றி அறியா. சகன் சொற் கொள்பவர்க்கு குறைவில் நெறியில் முன் பின் குறைகள் வீடு என்; சொற் கொள்ளார் பவத்தின் செறியுமாம் குறை உடைய சூழ்.

**விளக்கம்**

ஆன்மாக்களுக்கு இறைவன் அறிவித்தால் அன்றி அவை அறியமாட்டா. இறைவன் அறிவித்ததே அறிவு.

நாம் உலகத்தின் உடன் இருக்க வைத்தான் அவன். அதன் உடன் இருந்தான் அவன். நம் உடன் நின்றான். 'உடன்' நின்ற அவன் 'சகன்'. அவன் வார்த்தை கொண்டால் குறைவுபடாத நெறி அமையும் முன்னும் பின்னும் குறைகளைப் பற்றிக் கவலை வேண்டாம் விடு, வீடும் உலகு.

உடனிருப்பவன் சொல்லைக் கேளாதவர் பிறப்பில் புகுந்து குறை உடைய சூழலில் அமைவர்.

"தோன்றாத் துணையாய்" இருக்கும் இறைவன் ஈன்றாள், எந்தை, உடன் தோன்றினர் என எல்லாமாய் இருக்கிறான் என்றார் அப்பரடிகள். இப்படி உலக நடவடிக்கையில் இறைவனைக் காணுதலே முறை. அதில் இயங்கவே நெறி.

உடலால் செய்வன சரியை.
மனமும் உடலும் இணையச் செய்வன கிரியை.
மனமும் உடலும் செய்தவழி இறைவனை நினைவில் நிறுத்திக் கூடுதல் யோகம்.

அவனை நிறுத்தியதில் அவன் தந்ததைக் கேட்டுச் செய்தல் ஞானம்.

இப்படி ஆலய வழிபாட்டிலும் அன்றாடச் செயல்பாட்டிலும் நெறிப்படலே குறைவு இல்லாத நெறியாம்.

எடுத்துக்காட்டு வெண்பா 8-2-3

**இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால்**
**நல்லாய் உளவாமால் நீர்நிழல்போல் - இல்லா**
**அருவாகி நின்றானை ஆர்அறிவார் தானே**
**உருவாகித் தோன்றானேல் உற்று.**

**வெண்பா உரைத்தொடர் :** நல்லாய், முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழையால் இல்லா உள ஆம்; இல்லா அருளாகி நீர் நிழல்போல் நின்றானை தானே உரு ஆகித் உற்றுத் தோன்றானேல் யார் அறிவார்.

**விளக்கம்**

நன்மை செய்பவளாக அன்பின் இயங்கும் பெண்ணுக்கு இல்லாதிருந்து குழந்தை பிறந்த பின் முலையில் பாலும் வளர்த்தெடுக்கும் கண்ணீரும் உளதாகும். அப்படி ஆன்மாவின் உள்புகுந்து ஆன்மாவுக்காக அருளால் செயற்படுவன்.

தெளிவான தண்ணீருக்குள் ஒளி புகுமேயன்றி தண்ணீர் நிழல் தராது. ஆன்மாவில் பதிந்து ஆன்மா அடிபடாமல் தன் சுவடு வைத்துக் காத்து தானே வெளிப்பட்டு காட்டுகின்றான். அப்படி உள் இருந்து அவனே வந்து காட்டாவிட்டால் நமக்குரிய உண்மையை யாரும் காட்ட மாட்டார்.

## மூன்றாம் அதிகரணம்

**மேற்கோள் : இனி, இவ்ஆன்மாக்கள் உணர்வுகளால் மயங்கித் தம்மை உணரா என்றது.**



**ஏது : அவைதாம் பளிங்கில்இட்ட வன்னம்போல் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்.**

**மேற்கோள் விளக்கம் :** ஐம்புலன்களின் மயங்கி தம்மை உணராத ஆன்ம நிலையில் வார்த்தை தரல்.

**ஏது விளக்கம் :** கண்ணாடியில் காட்டப்பட்ட நிறம் காட்டப்படுமாறு போல அவற்றின் சார்பில் ஆன்மா இருப்பது. சார்ந்ததன் வன்னமாய் உள்ள ஆன்மத் தன்மையை இறைவன் பயன்படுத்தி ஆளாக்குவது.

எடுத்துக்காட்டு வெண்பா 8-3-1

**பன்நிறம் காட்டும் படிகம்போல் இந்திரியம்**
**தன்னிறமே காட்டும் தகைநினைந்து - பன்னிறத்துப்**
**பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய் கண்டான்**
**மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு.**

**வெண்பா உரைத்தொடர் :** இந்திரியம் பல் நிறம் காட்டும் படிகம் போல்; பல்நிறத்தும் பொய்ப் புலனை வேறு உணர்வது; பொய் பொய்யா வேறு மெய்கண்டான், மெய்ப்பொருட்டுத் தைவம் ஆம்.

**விளக்கம்**

ஆன்மாவிற்குத் தரப்பட்ட கருவிகள், காட்டப்படும் எந்த நிறத்தையும் காட்டும் கண்ணாடி போன்றவை. காட்டப்படும் நிறத்தை நீக்கினால் கண்ணாடி அதன் இயல்பில் இருக்கும். தன் மயக்கிற்கு கருவிகள் காரணமாவதை உணர்ந்து அவற்றின் நீங்க வேண்டும். பொய்யைப் பொய்யாக்கினால் மெய்கண்டான் வேறு ஆவன். அவன் மெய்ப்பொருள் தரும் தைவம் (தெய்வம்) ஆவன்.

## நான்காம் அதிகரணம்

**மேற்கோள் : இனி, இவ்ஆன்மாத் தன்னை இந்திரியத்தின் வேறாவான் காணவே தமது முதல் சீபாதத்தை அணையும் என்றது.**

**ஏது : ஊசல் கயிறு அற்றால் தாய்தரையேயாம் துணையால்.**

**மேற்கோள் விளக்கம் :** கருவிகளின் வேறாகத் தன்மை காணும் போது தம்முள் நின்ற முதல்வனின் திருவடியே சேர்ந்த இடமாக இருக்கிறது.

**ஏது விளக்கம் :** ஆடிய ஐம்புலன் கயிறு அற்ற போது தரையில் இருப்பது போலத் தன்னுள் இருந்த திருவருளில் இருப்பது. தான் அடையாமல் இருந்து அடைவது.

எடுத்துக்காட்டு வெண்பா 8-4-1

**சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்**
**சிறைசெய் புலன்உணர்வில் தீர்ந்து – சிறைவிட்டு**
**அலைகடலில் சென்றுஅடங்கும் ஆறுபோல் மீளாது**
**உலைவுஇல் அரன் பாதத்தை உற்று.**

**வெண்பா உரைத்தொடர் :** சிறை செய்ய நின்ற செழும்புனலின் ஆறு; புலன் செய் சிறை உணர்வில் உள்ளம்; சிறைவிட்டு அலை கடலில் சென்று அடங்கும் போல் தீர்வது உலைவு இல் அரன் பாதத்தை உற்று மீளாது.

**விளக்கம்**

அணை கட்டி நிரப்பப்பட்ட நல்ல நீர் ஆறு போல ஐம்புலன்களால் செய்யப்பட்ட சிறையில் அவற்றின் அனுபவத்தில் ஆன்மா இருக்கிறது. அது அனுபவம் தீர்ந்து, அணையிலிருந்து வெளிவந்து ஓடி கடலில் கலக்கும் ஆறு போல, அழிவு இல்லாத அரன் திருவடியை அடைந்து மீளப் பிறவாது.



எடுத்துக்காட்டு வெண்பா 8-4-2

**எவ்வுருவும் தான்என்னில் எய்துவார் இல்லைதாள்**
**இவ்வுருவின் வேறேல் இறைஅல்லன் – எவ்வுருவும்**
**கண்போல் அவயவங்கள் காணாஅக் கண்இல்லார்**
**கண்பேறே காண்அக் கழல்.**

**வெண்பா உரைத்தொடர் :** இறை எவ்வுருவும் அல்லன், எவ் உருவும் தாள், இவ்வுருவின் வேறேல் தான் என்னில் எய்துவார் இல்லை; அவயவங்கள் கண் போல் காணா; அக்கண் இல்லார் கண் பேறே காண் அக்கழல்.

**விளக்கம்**

எந்த உருவமும் இறைவனல்ல. அவ்வப் பொருள்களே உண்மை. ஆனால் எந்த உருவமாகவும் அருள் நிறைந்து அதன் உண்மையை விளங்க வைத்துக் கொண்டு இருக்கிறது. வேறு பொருளாக இருந்தாலும் அருளின்றி தான் வேறு என்று செயல்பட்டால் எதையும் அடைபவர் இல்லை.

கருவிகள் காணாது. கண் தான் காணும். கண் இல்லாதவர் கண் பெற்று எல்லாக் கருவிகளையும் காணுதல் போல 'அருள்' பெற்றால்தான் எல்லாம் பெற முடியும்.

எடுத்துக்காட்டு வெண்பா 8-4-3

**ஐம்பொறியின் அல்லைஎனும் அந்த தர! சிவனை**
**ஐம்பொறியை விட்டுஅங்கு அணைசகலன் – ஐம்பொறியின்**
**நீங்கான்நீர்ப் பாசிபோல் நீங்குமல கன்மம்வரின்**
**நீங்கானை நீங்கும் நினைந்து.**

**வெண்பா உரைத்தொடர் :** அந்த தர நீ ஐம்பொறியின் அல்லை; அங்கு ஐம்பொறியை விட்டு சிவனை அணை சகலன்; கன்மம் நீர்ப்பாசி போல் நீங்கும், மலம் வரின்

நீங்கும்; நீங்கானை நினைந்து ஐம்பொறியின் நீங்கான் எனும்.

**விளக்கம்**

உள்ளேயிருந்து செயல்படுபவனே (அந்ததர) நீ ஐம்பொறியினாலேயே இருப்பவன் இல்லை. உள்ளே ஐம்பொறியை விட்டுப் பார்த்தால் சிவனால் இருப்பது தெரியும். அவனைச் சேர். அவனே சகலமும் தருபவன் / சதாசிவன்.

அவனைச் சேர்ந்தால் குளத்தில் கல்லைப் போட நீரில் உள்ள பாசி நீங்குவது போல் கன்மம் விலகும். ஆணவத் தாக்கம் வந்தாலும் நீங்கும். உன்னில் நீங்காத அவனை எண்ணி ஐம்பொறித் தாக்கத்திலிருந்து விடுபட்டு பொறிகளில் அவன் நிறைந்திருக்க அவஅனுபவம் பெறுவாய்.

# ஒன்பதாம் நூற்பா

**ஊனக்கண் பாசம் உணராப் பதியை**
**ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி**
**உராத்துனைத் தேர்த்துஎனப் பாசம் ஒருவத்**
**தண்நிழலாம் பதிவிதி எண்ணும்அஞ் செழுத்தே**

வார்த்திகம் : என் நுதலிற்றோ எனின், ஆன்மசுத்தி பண்ணுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**நூற்பா உரைத்தொடர் :** ஊனக் கண் உணராப் பாசம்; ஞானக் கண்ணினில் சிந்தை பதியை நாடி; அஞ்செழுத்து விதி எண்ணும்; பாசம் உராத்துனைத் தேர்ந்து என ஒருவ தண் நிழல் ஆம் பதி.

**விளக்கம்**

ஆன்மா அறியாமை தொடங்கி மலங்கள் எல்லாவற்றிலும் நீங்கிச் சுத்தம் பெறும் முறைமை விளக்குகிறார். கண்ணானது அறிவில்லாத பொருளாக அமைந்தது. 'ஊனம்' என்பது குறை. செயல்படுவதற்கு இல்லாத கருவி வகையில் கூறப்படும் 'கண்' செயல்பட அமைந்ததே. ஆனால் அதுவே செயல்படாதது. அதற்கு அறிவு என்ற இருப்பே இல்லை. அறியாத் தன்மை கொண்ட கண்ணை உடையது ஆன்மா. ஆன்மாவில் அறிவு

இருப்பு உண்டு. ஆனாலும் கண் இல்லாது காணாது. அவ்வகையில் ஆன்மா ஊனமாகவே நின்றது.

ஆன்மா அறிவினால் செயல் குறை உடையவனாகவும், பாசம் அறிவே இல்லாதனவாகவும் இருப்பன.

அறிவே இல்லாத கண்ணைப் பெற்றிருந்தாலும் ஊனம் உடையதான ஆன்மா தானே செயல்படாத தன்மை உணர்ந்து ஊனம் நீக்கிக் கொள்ள வேண்டும். அறிவு உள்ளதைக் கண்ணாகப் பெற்றால்தான் ஊனம் நீங்கும் தன்மை.

கண்ணுக்குக் கண்ணாடி அணிந்து பார்வை சரியாகுவதை விட கண்ணே மாறினால் எப்படியோ அப்படி அறிவே ஆன்மாவிற்குப் பொருந்தினால் பின் 'ஊனம்' இல்லாத நிலை. இந்த அறிவாக உள் இருப்பவன் இறைவன். இவனைப் பொருந்தி நாடிட வேண்டும். அதன் உறவுக்கு 'சிவயநம' என்பதை முறைப்படிக் கருத வேண்டும்.

இறைவனை முன்னாகக் கொண்டு தன் முனைப்பைப் பின்னுக்குத் தள்ளிச் செயல்படுவதே அஞ்செழுத்தைக் கருதுதல். அதை எண்ணி அதற்கு மாறாது அனைத்துச் செயல்களும் செய்தல்.

அப்படிச் செய்தால் பாசம் கானல் நீர் போல இல்லாமல் போகும். இறைவன் தாகப்படாத (பிறவியிலாத) நிழல் இருப்பு ஆவான். தட்டுப்படாமல் காட்சிப்படும் கானல் நீரை 'உராத்துணைத் தேர்' என்றார்.

மலம் இருந்து எந்தத் தடையாகவும் இல்லாமல் அருள் புகும் வெளியாம் என்பது கருத்து.

## முதல் அதிகரணம்

**மேற்கோள் : ஈண்டு, அம்முதலை ஞானக் கண்ணினாலே காண்க என்றது.**



**ஏது : அவன் வாக்கு மன அதீத கோசரமாய் நிற்றலான்.**

**மேற்கோள் விளக்கம் :** முதல் பொருளான இறைவனைத் தன் உள்ளே பொருந்திய வகையிலேயே காணும் முறை கூறினார்.

**ஏது விளக்கம் :** வாக்கு மனம் கடந்த பொருளாக அவன் இருக்கிறான். அவனைப் புறத்தே தேடாமல் உள்பொருந்திய வகையில் பற்றுக என்பது.

எடுத்துக்காட்டு வெண்பா 9-1-1

**நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ**
**தேடி எனையறியேன் தேர்ந்தவகை - நாடிஅரன்**
**தன்னாலே தன்னையும் கண்டு தமைக்காணார்**
**என்னாம் எனஅறிவார் இன்று.**

**வெண்பா உரைத்தொடர் :** நரம்போ நாடியோ என்போ கோழையோ தேடி எனையறியேன், அரன் தன்னாலே தன்னையும் கண்டு தமைக் காணார் அறிவார் என என்னாம் இன்று.

### விளக்கம்

உடம்பில் ஆன்மா தன்னை அறியத் தேடினால் நரம்பு, நாடி, எலும்பு, கோழை இவையே தேடும் கருவி வகையில் கிடைக்கும். அதில் 'தான்' என்ற உறுதி கிடைக்காது.

உடம்பில் செயல்படும் வகையில் உடம்பால் ஒன்றும் உறுதிபடாததை உணர்வது, உறுதியால் தான் அரனை உணர்ந்து அவன் மூலமாகத் தான் யார் என்பதில் தெளிவுபட்டு 'தாம்' என பன்மைப் பொருளாக நிற்கும் தன்மையில், இறைவனை முன்னிறுத்திச் செயல்படுக. இப்படியின்றி அறிபவர் அறிபவராக ஆகமாட்டார்.

எடுத்துக்காட்டு வெண்பா 9-1-2

**காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக்**
**காட்டாய உள்ளத்தைக் கண்காணா - காட்டிய**
**உள்ளம் தனைக்காணா உள்ளத்தின் கண்ணாய**
**கள்வன்தான் உள்ளத்திற் காண்.**

**வெண்பா உரைத்தொடர் :** காட்டிய கண் தனைக் காணா; கண்ணுக்குக் காட்டாய உள்ளத்தைக் காணா கண்; காட்டிய உள்ளம் தனைக் காணா; தான் உள்ளத்தின் கண் ஆய கள்வன்; உள்ளத்தில் காண்.

**விளக்கம்**

கண் பொருள்களைக் காட்டினாலும் காட்டுகின்ற தன்னைக் காணாது. கண்ணாடியில் கண் தன்னைக் காணலாம். அது தன்னைக் காணுதல் என்பதன்று. ஐம்பொறிகளான எந்தப் பொருளும் தானே தன் செயலைத் தன்னில் காணா. தன் வழியாக நடக்க நிற்கும் அவ்வளவே.

தன்னைக் காண நிற்பது அறிவுப்பொருளே. ஆனால் ஆன்மாவும் அறிவுக் களங்களாகச் சடப் பொருள்களைக் கொண்டிருப்பதால் தன்னைக் காணாது. தன்னைக் காணுமாறு தானே அறிவுடையதாக இல்லை. தன்னில் அறிவாகவே உள்ள ஒன்றால் தன்னைக் காணலாம். அப்போது 'தன்நிலை தனி நிலையாக இல்லாததை' உணர்ந்து 'தம்' என இறையுடன் உணர வேண்டும். இதைக் 'கண்' காட்டாது. உள்ளத்தில் காட்டிக் கொண்டு தன்னை மறைத்துக் கொண்டு இயங்கும் (கள்ளம்) இறைவனில் இணைந்தால் உள்ளம் இயங்கிக் காண்பதாக ஆகும்.

## இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்து என்றுகாண, உளதாய் நிற்பது ஞானசொரூபம் என்று உணரற் பாற்று.



ஏது : இனி அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞானசொரூபம் என்றது வேற்றியல்பாகிய வன்னபேதங்களை வேற்றியல்பு என்று கண்டு கழிப்பின் உளதாய் நிற்பது படிக சொரூபமாம் துணையான்.

மேற்கோள் விளக்கம் : அறிவில்லாதனவற்றின் வேறுபாடுகளை 'அசத்து' என உணர்வது; 'அறிவு முழுமை' உள்ளதை உணர்ந்து நிற்பது.

ஏது விளக்கம் : அறிவில்லாதவற்றில் இருந்து நீங்கும் போது தன் உண்மை இயல்புக்குரியதான ஒன்றின் முழுமை காணுதல்.

எடுத்துக்காட்டு வெண்பா 9-2-1

**நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்**
**தற்பரமாய் நின்ற தனிமுதல்வன் - அற்புதம்போல்**
**ஆனா அறிவாய் அளவுஇறந்து தோன்றானோ**
**வானே முதல்களையின் வந்து.**

**வெண்பா உரைத்தொடர் :** நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியானந்தனாய்த் தற்பரமாய் நின்ற தனிமுதல்வன் ஆனா அறிவாய் வானே முதல் களையின் வந்து அளவிறந்து அற்புதம் போல் தோன்றானோ.

**விளக்கம்**

குணம் இல்லாதவன், மலம் இல்லாதவன், நிலையான இன்பம், தானே இயங்கும் மேலான்மையனாய் இருக்கிறவன் தனி முதல்வன். அவன் ஆன்மாவின் அறிவை அறிவாகச் செய்யப் பொருந்தியவன். அதன் பயிற்சிக்காக ஆகாயத்திலிருந்து அடுக்களை வரை வந்து 'தனு, கரண, புவன, போகம்' தந்தருளுகின்றார். அவன் செயலை நினைத்தால் அளவிறந்து அற்புதம் போல் தோன்றுவன் அவன். அப்படிப்பட்ட அவன் இனியும் தோன்றுவன் என்பதாம்.

எடுத்துக்காட்டு வெண்பா 9-2-2

**சுட்டி உணர்வதனைச் சுட்டி அசத்தென்னச்**
**சட்ட இனியுளது சத்தேகாண் - சுட்டி**
**உணர்ந்தநீ சத்துஅல்லை உண்மையைத் தைவம்**
**புணர்ந்ததனால் பொய்விட்டுப் போம்.**

**வெண்பா உரைத்தொடர் :** சுட்டி உணர்வதனைச் சுட்டி அசத்து என்ன; இனி சட்ட உளது சத்தே; சுட்டி உணர்ந்த நீ சத்து அல்லை; தைவம் புணர்ந்து அதனால் உண்மையைச் சுட்டி; பொய் விட்டுப் போம்.

**விளக்கம்**

இது எனச் சுட்டி உணர்வது ஆன்மா. சுட்டி உணரப் பயன்பட்டதும் கட்டப்பட்டதுமானவை 'அசத்து' ஆனவை. அவ்வாறு அவற்றை ஆன்மாவே சுட்டாது. சுட்ட ஆன்மா தானே அறிவுடையதாக இல்லை. அதற்கு அறிவாக இறைவன் (சத்து) நிற்பதனாலேயே அவை அசத்து எனச் சுட்டும்.

அவன் மூலமாகச் சுட்டி உணரும் ஆன்மாவான நீ சத்து அன்று. உடம்பைச் சார்ந்து அசத்து அறிவு பெற்ற நீ சத்தைச் சார்ந்து அறிவு பெறுகிறாய். நீ தெய்வம் சேர்வதனால், தெய்வம் உனக்கு உண்மை சுட்டும். இதன்பின் பொய் உன்னை விட்டுப் போகும். எல்லாம் நிகழ்த்தப்படுவதால் நீ மாறாத் தன்மையிலேயே இருந்தவனல்ல. மாறும் அசத்தும் அல்ல.

எடுத்துக்காட்டு வெண்பா 9-2-3

**கண்டதை அன்று அன்று எனவிட்டுக் கண்டுஅசத்தாய்**
**அண்டனை ஆன்மாவில் ஆய்ந்துணரப் -**
**பண்டுஅணைந்த**
**ஊனத்தைத் தான்விடுமாறு உத்தமனின் ஒண்கருட**
**சானத்தின் தீர்விடம்போல் தான்.**



**வெண்பா உரைத்தொடர் :** அண்டனைக் கண்ட சத்தாய் அன்று அன்று எனக் கண்டதை விட்டு ஆன்மாவில் உத்தமனின் ஆய்ந்து உணரப் பண்டு அணைந்த ஊனத்தைத் தான்விடும் ஆறு ஒண் கருட சானத்தில் விடம் தீர் போல் தான்.

**விளக்கம்**

அண்டனாக உலகம் முழுமையில் இணைந்தவனை அத்தன்மையிலேயே காணும் போது ஆன்மா சத்து அனுபவத்ததாகும்.

இதுவல்ல இதுவல்ல எனல் பொருள்களை முறையாகக் கண்டு அவற்றை விட்டு, தன்னுள் உத்தமத் தன்மை தர நின்ற இறைவனை மையமாக்கி அறிந்து, உடன் இருந்த அறியாமை செய்து ஊனமாக்கிய ஆணவத்தைத் தான் விடும்.

கருட மந்திர உபாசனை பெற்றவன் மூலம் விடக் கடிபட்டார் விடம் தீர்வது போல் எந்தத் தாக்குதலும் செய்யாமல் ஆன்மாவின் மூலமே ஆன்மாவைச் செயல்படுத்தி நோய் நீக்குகிறான் இறைவன்.

## மூன்றாம் அதிகரணம்

**மேற்கோள் :** இனி, இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை (திருவைந்தெழுத்தை) விதிப்படி உச்சரிக்க என்றது.

**ஏது :** இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்பு நின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கு எனக் கொள்க.

எடுத்துக்காட்டு வெண்பா 9-3-1

**அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டுஅரனை**
**அஞ்செழுத்தால் அர்ச்சித்து இதயத்தில் - அஞ்செழுத்தால்**
**குண்டலியிற் செய்துஓமம் கோதண்டம் சானிக்கில்**
**அண்டனாம் சேடனாம் அங்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** உள்ளம் அரன் உடைமை, அரனை அஞ்செழுத்தால் கண்டு, அஞ்செழுத்தால் அர்ச்சித்து, அஞ்செழுத்தால் இதயத்தில் ஓமம் செய்து, கோதண்டம் சானிக்கில் அங்கு அண்டன் ஆம் சேடன் ஆம்.

**விளக்கம்**

ஆன்மாவானது இறைவனின் உடைமை. ஆன்மா ஐந்தெழுத்தால் காண வேண்டும். ஐந்தெழுத்தால் அர்ச்சனை செய்ய வேண்டும். தன்னுடைய எண்ணத்திலிருந்து செயலில் அமைத்துப் பயிற்சிப்பட்டால் உடம்பின் ஆற்றல் மூலத்திலிருந்து (குண்டலி) உடம்பை நிலைப்படுத்தும் ஆற்றலும் எழும். இந்த உடம்பின் நிலைப்பாட்டுடன் இறைவனை முன்னிறுத்தி ஆன்மா செயல்படுவதே அவனுக்கு அடிமையாக நிற்கும் நிலை. இறைவன் யாவையுமாக இருப்பதை விளக்கப்படுத்துவன்.

எடுத்துக்காட்டு வெண்பா 9-3-2

**இந்துவில் பானுவில் இராகுவைக் கண்டுஆங்குச்**
**சிந்தையில் காணில் சிவன்கண்ணாம் - உந்தவே**
**காட்டாக்கின் தோன்றிக் கனல்சேர் இரும்பென்ன**
**ஆள்தாள் ஆம் ஓதுஅஞ்சு எழுத்து.**

**வெண்பா உரைத்தொடர் :** சிந்தையில் அஞ்செழுத்து ஓது காணில் கண் ஆம் சிவன்; இராகுவை பானுவில் இந்துவில் கண்டு ஆங்கு உந்தவே காட்டாக்கின் தோன்றிக் கனல் இரும்பு என்ன ஆள் தான் ஆம்.

**விளக்கம்**

ஓதத் தொடங்கிய வகையில் ஆன்மாவின் உள்பதிந்துள்ள சிவன் நேர்ப்பட்டிட அவன் அறிவின் ஆன்ம அறிவு இணைதல் அமையும். அதன் பின் ஓதுவதுடன் செயலில் நிற்கும் தகவால் முழுதும் ஆட்கொள்வன்.



இராகு, கேது எனும் கோள்களைப் பற்றிய செய்தியை இணைக்கும் இடமாக கதிரவனும் நிலவும் அமைகின்றன. சூரிய கிரகணத்திலும் சந்திர கிரகணத்திலும் அதைக் காட்டுவர். இது காட்ட இல்லாத ஒன்றைக் காட்ட ஆகும் இடம். அதுபோல சிந்தையில் அஞ்செழுத்தைப் பதிக்க வேண்டும். சிந்தை மனத்தின் விருத்தி. இதனிடமாக அஞ்செழுத்தை வைத்தால் மனத்துள் பற்றுதல் தொடர்ச்சியாக நிகழ்த்தல் வேண்டும். காணப்பட்டிராததை ஒன்றின் காரணமாகப் பற்றுதல் ஒரு உதாரணமாக இராகு, கேது மூலம் கூறினார்.

ஐந்தெழுத்தின் நிற்றல் என்பது எப்போதும் இறைவனை முன்னிலைப்படுத்திச் செயல்படுதல். இதன் மூலம்தான் 'உந்தல்' நடைபெறும். இதுதான் நெருப்பாய்த் தோன்றி இரும்பின் நிறையும் செஞ்சூடு போல உயிர் அவனை முழுதும் உள்வாங்கி அவன் ஆள் என ஆகும்.

எடுத்துக்காட்டு வெண்பா 9-3-3

**மண்முதல் நாளம், மலர் வித்தை, கலாரூபம்**
**எண்ணிய ஈசர் சதாசிவமும் - நண்ணில்**
**கலைஉருவாம் நாதமாம் சத்திஅதன் கண்ணாம்**
**நிலைஅதில்ஆம் அச்சிவன்தாள், நேர்.**

**வெண்பா உரைத்தொடர் :** எண்ணிய ஈசர் மண் முதல் நாளம்; சதாசிவமும் மலர் விந்தை, கலா ரூபம்; சத்தி கலை உருவாம்; நாதம் அதன் கண் ஆம்; அச்சிவன் தான் அதில் நிலையாம் நேர்.

**விளக்கம்**

ஐந்தெழுத்தை ஓதுதலில் ஐந்தெழுத்தின் இயக்கத்தில் நின்ற தெய்வங்களும் அவற்றின் மூலமான சிவன் திருவடியும் நேர்படும்.

# பத்தாம் நூற்பா

**அவனே தானே ஆகிய அந்நெறி**
**ஏகன் ஆகி இறைபணி நிற்க**
**மலமாயை தன்னொடு வல்வினை இன்றே**

வார்த்திகம் : என் நுதலிற்றோ வெனின், பாசக்ஷயம் பண்ணுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**நூற்பா உரைத்தொடர் :** அவனே தானே ஆகிய அந்நெறி; ஏகன் ஆகி இறைபணி நிற்க; மலமாயை தன்னொடு வல்வினை இன்றே.

**விளக்கம்**

பாசம் கெடுக்கப்படல் கூறுகிறார். பாசமான அதன் வலிமையறுமாறு ஆன்ம வலிமை இறைவலிமையாதல் ஆதல்.

இறைவன் ஆன்மாவில் பொருந்தி அதற்குத் தன்னைக் கொடுக்கிறான். அவ்வகையில் ஆன்மா அவனைத் தன்னில் பெற்று அவன் தானாக ஆகிறது.

இறைவன் பணியில் நிற்க இறைவன் ஆன்மாவில் தன்னை முழுமையாக இணைக்கிறான். இதனை 'ஓங்கு உணர்வின் உள்ளடங்குதல்' என்பார் திருவருட்பயன் ஆசிரியர்.

ஆன்மா எவ்வளவு பெரியதாக வேண்டுமானாலும் அவ்வளவு பெரியதாகத் தன்னை ஆக்கிக் கொள்பவனாக இறைவன் இருக்கிறான். அவனை அடைந்த ஆன்மா தன்



எல்லையில் அவனாகவே தான் ஆகும். இந்நிலையில் மலம், மாயையால், எவ்வாறேனும் துடைபடாத வினை யாவும் இல்லாமல் போகும்.

**முதல் அதிகரணம்**

மேற்கோள் : ஈண்டுப் பரமேசுரன் இவ்ஆன்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்து ஏகனாகி நிற்க என்றது.

ஏது : அவ்வாறு நிற்கவே யான் எனது என்னும் செருக்குஅற்று அவனது சீபாதத்தை அணையும் ஆகலான்.

மேற்கோள் விளக்கம் : ஆன்மாவாக இறைவன் இணைந்து வெளிப்படுகிறான். ஆன்ம எல்லையில் ஒருமையாக நிற்கிறான்.

ஏது விளக்கம் : ஆன்மா யான் எனது எனும் ஆணவ ஆதாரம் இன்றி திருவடி சாரும்.

எடுத்துக்காட்டு வெண்பா 10-1-1

**நான்அவன்என்று எண்ணினர்க்கும் நாடும்உளம் உண்டாதல்**
**தான்என ஒன்றுஇன்றியே தான்அதுவாய் - நான்எனன்று**
**இல்லென்று தானே எனும் அவரைத் தன்னடிவைத்து**
**இல்லென்று தான்ஆம் இறை.**

**வெண்பா உரைத்தொடர் :** நான் அவன் என்று எண்ணினார்க்கும் நான் என ஒன்று இல் என்று உளம் உண்டாதல் தானே எனும் அவரை நாடும் தான் என ஒன்று இன்றியே தான் அதுவாய் தன் அடி வைத்து தான் இல்லென்று இறை ஆம்.

**விளக்கம்**

நான் அவன் என்று எண்ணம் கொண்டவரும் நான் என ஒன்று இல்லையாக தன் உளத்தில் எண்ணம் உண்டானால்

தானாக இருந்து உணர வைத்த அவரை நாடுவர். இருந்து உணர வைத்தவரே உணர்ந்த நான் என மாட்டார். அவரை இவர் நாடுவார்.

'தான்' எனத் தன்னைத் தனிப்படுத்திக் கொண்டோ ஆக்கிரமித்தோ தாக்கியோ பாதித்தோ அமைத்துக் கொள்ளாமல் அதுவாகவே தன்னை அமைத்துக் கொள்கிறான்.

எவ்வளவு கோபப்படுத்தினாலும் அவ்வளக்களவு கோபம் வந்தாலும் அழும் குழந்தையை அடிக்க மாட்டாத பெற்றோர் போல, அடித்தாலும் குழந்தை அழுகை நிறுத்தாது. ஆகையால் குழந்தை இயல்பின் அமைதியாதற்கு தம் அதீதத்தை முற்றாக மறைத்து குழந்தைத் தன்மையிலேயே குழந்தையை அமைதிப்படுத்தி இயல்பான நிலைக்கு ஆக்க வேண்டும்.

அத்தன்மையில் இறைவன் முழுமையானவன். ஒன்றுமிலாத அறியாமை வயப்பட்ட ஆன்மாவைத் தாக்குரவாக இன்றி ஆன்மாவில் பதிந்து அதன் இயல்பில் அதை வளர்த்தெடுக்கிறான். இதனையே, **'தான் என ஒன்று இன்றியே தான் அதுவாய்'** ஆனான் இறைவன் என விளக்கினார். தன் திருவடியை ஆன்மாவில் வைத்துப் பதித்தல் சுவடும் இன்றி, தான் தன் முழுமையினைச் செலுத்தாமல், தான் என்பது இல்லையாக ஆன்ம இருப்பில் அப்போதைய அத்தன்மையனாகவே இணைந்து தன் நிலைக்கு ஆக்குவானாம்.

## இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இறைபணி வழுவாது நிற்க என்றது.

ஏது : அவன்அருளால் அல்லது ஒன்றையும் செய்யான் ஆகவே அஞ்ஞானகன்மம் பிரவேசியா ஆகலான்.

மேற்கோள் விளக்கம் : இறைவன் செயலில் பிழைபடாது தன்னை இருத்திக் கொள்வது.



ஏது விளக்கம் : இறைவன் அருளாலேயே எல்லாவற்றையும் செய்வதால் ஆணவம் கன்மம் தலையெடுக்கா.

எடுத்துக்காட்டு வெண்பா 10-2-1

**நாம்அல்ல இந்திரியம் நம்வழியின் அல்ல, வழி**
**நாம்அல்ல நாமும் அரனுடைமை - ஆம் என்னில்**
**எத்தனுவில் நின்றும் இறைபணியார்க்கு இல்லைவினை**
**முற்செய்வினையும் தருவான் முன்.**

**வெண்பா உரைத்தொடர் :** இந்திரியம் நாம் அல்ல, நம் வழியின் அல்ல, நாம் வழி அல்ல, நாமும் அரன் உடைமை ஆம்; என்னில், எத்தனுவில் நின்றும் இறைபணியார்க்கு வினை இல்லை; முன் செய்வினையும் முன் தருவான்.

**விளக்கம்**

கருவிகள் அல்ல நாம் என உணரும். 'நாம்' என்று இறைவனுடன் இணைந்து நின்ற ஆன்மா இறைவன் சார்பில் புறக்கருவிகளை வைத்துக் கொண்டு கூறுவது.

இந்திரியம் நம் வழியில் செயல்படவில்லை; அவற்றைச் செயல்படுத்த நாமும் வழியல்ல. நாம் அரனின் உடைமை. அவையும் அரனின் உடைமை. இதனால், எந்த உடம்பில் நின்றாலும் இறை செயலே நிகழ்வது; கன்மம் எனும் வினையாக இல்லை. செயலில் இனி வரும் வினை என்று இல்லை. அவனே முன்னின்று நடத்தித் தருவன்.

எடுத்துக்காட்டு வெண்பா 10-2-2

**சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்**
**சார்ந்தாரைக் காத்தும் சலம்இலனாய்ச் - சார்ந்தடியார்**
**தாந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்**
**ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன் ஆதல்; சார்ந்தாரைக் காத்தும் சலம் இலனாய் தாம் தானாச் சார்ந்து அடியார் தங்கள் வினை செய்து, பிறர்முன்செய்வினையும் கொடுத்தல்தான் ஆய்ந்தார் ஆங்கு.

**விளக்கம்**

தலைவனாகிய இறைவன் கடமையாக அவனைச் சார்ந்த ஆன்மாவைக் காத்தல் அமைகிறது. இதுநாள் வரை அவன் காத்தவன் தான். அது அவனே செய்தது. இப்போது ஆன்மா அவனைச் சார்ந்துவிட்ட வகையில் அவன் ஆன்மாவிற்குக் கட்டுப்பட்டு அவற்றின் விருப்பத் தன்மையில் காத்தலுக்கு ஆட்படுகிறான். இதற்கு முன் ஆன்மாவின் விருப்பத் தன்மையை அமைத்து அதை மாற்ற இறுதி செய்தவன் இப்போது மாற்றி ஆக்கித் தருவன். இதில் அவனுடைய விருப்பம் முதலியன இல்லை.

ஆன்மா சேர்ந்த வகையில் 'தாம்' என்பதில் உள்ள இறைவன் அடியார் வினையை முடிப்பதில் தானே செய்து முடிக்கிறான். அவர் மற்றவர்க்காகச் செய்வதையும் செய்து கொடுக்கிறான்.

எடுத்துக்காட்டு வெண்பா 10-2-3

**இங்குளி வாங்கும் கலம்போல ஞானிபால்**
**முன்செய் வினைமாயை மூண்டிடினும் - பின்செய்வினை**
**மாயையுடன் நில்லாது மற்றவன்தான் மெய்ப்பொருளே**
**ஆயஅதனால் உணரும் அச்சு.**

**வெண்பா உரைத்தொடர் :** இங்குளி வாங்கும் சலம் போல ஞானிபால் முன்செய்வினை மாயை மூண்டிடினும் செய்வினை மாயையுடன் பின் நில்லாது; மற்று அவன் தான் அச்சு, மெய்ப்பொருளே ஆய அதனால் உணரும்.



**விளக்கம்**

பெருங்காயம் வாங்கி வைக்கிற பாத்திரத்தில் பெருங்காயம் இல்லையானாலும் வாசனை இருப்பது போல, ஞானியரிடம் செயலாலும் கருவியாலும் வினை, மாயைத் தாக்கம் வந்தாலும் அவை பிறவிக்குரியனவாக ஆகா.

அவர்க்கு அச்சு என இறைவன் இருக்கிறான். பொருள்கள் யாவும் பொய் சம்பந்தம் இன்றி மெய்யானவை. அவைகளால் தான் அவர் உணர்வர்.

எடுத்துக்காட்டு வெண்பா 10-2-4

**நண்அனல் வேவாத நற்றவர் தம்மினும்**
**பண்அமர மாச்செலுத்தும் பாகரினும் - எண்ணி**
**அரனடி ஓர்பவர் ஐம்புலனில் சென்றும்**
**அவர்திறல் நீங்கார் அதற்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** நண் அனல் வேவாத நல் தவர், பண் அமர மா செலுத்தும் பாகரினும், அரன் அடி எண்ணி ஓர்பவர் நீங்கார், ஐம்புலனில் சென்றும் அதற்கு அவன் அடி எண்ணி ஓர்பவர் அவர் திறன் நீங்கார்.

**விளக்கம்**

அடர்த்தியான நெருப்பிலும் வேகாத நல்ல தவத்தினர் ஆவர்; சரியாக அமர்ந்து குதிரையைச் செலுத்தும் குதிரைக்காரனை விட அரன் திருவடியை எண்ணிச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் நீங்காத தன்மையர். ஐம்புலனில் அவர்கள் சென்றாலும் அரன் திருவடியால் அதனை அனுபவிப்பர். எல்லாவற்றிலும் திருவடி நீங்காத செயலினர்.

பரவையை பன்நாளும் பயில் யோக பரம்பரையின் சுந்தரர் அனுபவங் கொண்டதை ஓர்க.

எடுத்துக்காட்டு வெண்பா 10-2-5

**சதசத்தாம் மெய்கண்டான் சத்தருளிற் காணின்**
**இதமித்தல் பாசத்தில் இன்றிக் – கதமிக்கு**
**எரிகதிரின் முன்னிருள்போல், ஏலா அசத்தின்**
**அருகுஅணையார், சத்துஅணைவார் ஆங்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** சதசத்தாம் மெய்கண்டான் அருளின் காணின் சத்து, இதமித்தல் இன்றி பாசத்தில் கதம் மிக்கு எரி கதிரின் முன் இருள்போல் ஆங்கு ஏலா அசத்தின் அருகு அணையார்; அணைவார் சத்து.

**விளக்கம்**

சத்தாகவோ அசத்தாகவோ இன்றி அசத்தில் அனுபவம் கொண்டிருந்து, சத்தாம் இறைவனால் சத்து அனுபவத்தையும் அதன் மூலமாகவே அசத்து அனுபவத்தை வெற்றி கொண்டும் 'சதசத்' தன்மையினனாக இருந்து மெய்கண்டவன் ஆன்மா.

ஆன்மா அருளால் காணும் வகையில் எல்லாம் சத்தாகக் காணும். பாசத்தில் பற்று இலாது இருக்கும். கொழுந்து விட்டு அனலிடும் கதிரவன் ஒளியின்முன் இருள் இரிந்தமை போல் அசத்தும் நில்லாது இவரும் அதனருகில் செல்லார். சத்தே அணைந்திருப்பார்.

# பதினொன்றாம் நூற்பா

**காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்**
**காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்**
**அயரா அன்பின் அரன்கழல் செலுமே**

வார்த்திகம் : என் நுதலிற்றோ எனின், பரமேசுரனது சீபாதங்களை அணையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**நூற்பா உரைத்தொடர் :** காணும் கண்ணுக்கு உளம் காட்டும் போல் காண உள்ளத்தைக் காட்டலின் கண்டு அயரா அன்பின் அரன் கழல் செலுமே.

**விளக்கம்**

இறைவன் திருவடி சேரும் நிலை உணர்த்துகிறான். காணுகின்ற கண்ணுக்குப் பொருளைக் காட்டுவது ஆன்மா. காணுமாறு உள்ளத்தைக் காட்டுகிறான் இறைவன்.

கண்ணானது காணத் துணையாகுமேயொழிய தனக்குத் தலைவனான ஆன்மாவைப் பார்க்காது. இறைவன் கண்ணால் பொருளைக் காணத் துணை செய்ததோடு ஆன்மாவையே அதற்கே காட்டுகிறான். இதனைக் கண்ட ஆன்மா அங்கே அரன் திருவடி இருப்பதையும் அதுவே இருந்து செய்த அன்பையும் கண்டு அவன் திருவடியில் நின்று அவன் கருத்தை முற்றுவிக்கும்.

## முதல் அதிகரணம்

மேற்கோள் : ஈண்டு, அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்றது.

ஏது : இவ்வான்மாக்கள் அவனையின்றியமைந்து ஒன்றையும் விட யியா ஆகலான்.

**மேற்கோள் விளக்கம் :** இறைவனும் ஆன்மாக்களின் செயலை உணர்வன்.

**ஏது விளக்கம் :** அவன் மூலமே அனைத்தையும் அறியும் முறை அறிந்துவிட்டமையால் அவன் மூலமே அனைத்தும் நுகரும். இன்னும் சிறப்பாக அவன் அறிந்தவற்றை ஏற்பதாகத் தன்னை நிறுத்திக் கொள்ளும்.

எடுத்துக்காட்டு வெண்பா 11-1-1

**ஐந்தையும் ஒக்க உணராது அவற்றுணர்வது**
**ஐந்தும்போல் நின்றுணரும் ஆகலான் – ஐந்தினையும்**
**ஒன்றொன்றாப் பார்த்துணர்வது உள்ளமே எவ்வுலகும்**
**ஒன்றொன்றாப் பார்க்கும் உணர்ந்து.**

**வெண்பா உரைத்தொடர் :** ஒக்க ஐந்தையும் உணராது ஐந்தும் போல் நின்று உணர்வது ஆதலால், ஐந்தினையும் ஒன்று ஒன்றாய் பார்த்து உணர்வது உள்ளம். அவற்று எவ்வுலகும் ஒன்றா ஒன்று உணர்ந்து பார்க்கும்.

### விளக்கம்

ஐந்தில் ஒன்று ஒன்றாக இணைந்து உணருவது ஆன்மா. அது ஐந்தையும் ஒரு சேர உணராது. ஐந்துமாகத் தான் நின்று உணர்வது.

எந்த உலகமும் பொருந்த முடியாத ஒன்றான இறைவனை உணர்ந்து ஐம்புலனை ஒக்கவும் பார்க்கும்; எவ் உலகும் பார்க்கும்.



எடுத்துக்காட்டு வெண்பா 11-1-2

**ஏகமாய் நின்றே இணையடிகள் ஒன்றுணரப்**
**போகமாய்த் தான்விளைந்த பொற்பினான் – ஏகமாய்**
**உள்ளத்தின் கண்ணானான் உள்குவார் உள்கிற்றை**
**உள்ளத்தாற் காணானோ உற்று.**

**வெண்பா உரைத்தொடர் :** ஏகமாய் நின்றே உள்ளுவார் உள்கிற்றை தான் போகமாய் விளைந்த பொற்பினான் இணையடிகள் உணர ஏகமாய் உள்ளத்தின் கண் ஆனான் உள்ளத்தால் காணானோ உற்று ஒன்று.

### விளக்கம்

ஆன்மாவில் ஆன்மாவாகவே (ஒரு பொருளாக) நின்று ஆன்மா நினைப்பதை தானே போகமாக இருந்து தந்த சிறப்பு உடையவன் இறைவன். தன்னளவில் ஒரு பொருளாகவே இருப்பதை உணர்ந்து அவன் மூலமாகப் பொருளைப் பார்க்க வைக்கிறான். அப்படித் திருவடிகளை ஆன்மா உணர நின்றவன். அவன் ஆன்மாவால் பிடித்துக் கொள்ளப்பட்ட பிறகு ஆன்மாவாலும் உற்றுக் காணமாட்டான். ஆன்மாவுக்காக ஒன்றையும் உறாமலே (ஆன்மாவை உறவைக்காமலே) காட்டுவன்.

## இரண்டாம் அதிகரணம்

மேற்கோள் : இனிப், பத்தியினான் மறவாது ஏத்த அவனது சீபாதத்தை அணையும் என்றது.

ஏது : அவன் அன்னியமின்றிச் செய்வோர் செய்திப்பயன் விளைத்து நிற்றலான்.

மேற்கோள் விளக்கம் : பத்தியால், ஏத்தித் திருவடி ஆளாதல்.

ஏது விளக்கம் : அவனின் பிரிவு இன்றி செய்வோர் புண்ணிய பாவமற்ற செயல்களைப் பயனாக்கி நிற்பது.

எடுத்துக்காட்டு வெண்பா 11-2-1

**அருக்கன் நேர் நிற்பினும் அல்லிருளே காணார்க்கு**
**இருட்கண்ணே பாசத்தார்க்கு ஈசன் - அருட்கண்ணால்**
**பாசத்தை நீக்கும் பகல்அலர்த்தும் தாமரைபோல்**
**நேசத்தின் தன்னுணர்ந்தார் நேர்.**

**வெண்பா உரைத்தொடர் :** காணார்க்கு அருக்கன் நேர் நிற்பினும் அல் இருளே, பாசத்தார்க்கு ஈசன் இருட்கண்ணே; நேசத்தின் தன் உணர்ந்தார் பாசத்தை பகல் அலர்த்தும் தாமரை போல் நீக்கும் நேர்.

**விளக்கம்**

கதிரவன் நேரே நின்றாலும் காணாதவர் / காண முடியாதவர் இருவர்க்கும் இருளே அமையும்.

பாசங்களையே கண்ணாகக் கொண்டவர்க்கு ஈசன் இருட்கண்ணன். அதாவது ஈசன் அவர்கள் இயல்பில் அவர் நின்ற இருள் இயல்பில் தானும் அத்தன்மைக் கண்ணாக இருட்டாக இருப்பன்.

நேயமாம் அன்பில் நின்று அவனை உணர்ந்தார்க்கு அவர் பாசத்தை பகலில் தாமரையை மலர வைப்பது போல் ஆன்ம ஞானத்தை எழுப்பி நீக்குவான்.

எடுத்துக்காட்டு வெண்பா 11-2-2

**மன்னும் இருளை மதிதுரந்த வாறு அன்பின்**
**மன்னும் அரனே மலம் துரந்து - தன்னின்**
**வலித்துஇரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்**
**சலிப்பில் விகாரிஅலன் தான்.**

**வெண்பா உரைத்தொடர் :** காந்தம் இரும்பைத் தன்னின் வலித்து வசம் செய்தல் மன்னும் அரன் சலிப்பில் அன்பின் செய்வான்; மன்னும் இருளை மதி துரந்தவாறு மலம் துரந்து மன்னும்; தான் விகாரி அலன்.

**விளக்கம்**

காந்தமானது இரும்பைத் தன்னுள் வைத்து காந்தத் தன்மையை உரப்படுத்தும். அவ்வாறே அரன் ஆன்மாவைத் தன்னுள் வைத்து அன்பினால் சலிப்பிலாது செய்வான். அதனால் இருளை நிலவு துரப்பது போல ஆன்மாவின் மலம் நீங்கும்; இறைவன் இதற்கு எந்த விகாரமும் அடையான்.

கதிரவன் ஒளியைப் பிரதிபலித்து இருளை நிலவு விரட்டுவது போல இறைவனின் அறிவால் வருத்தம் இன்றி மலங்களிலிருந்து ஆன்மா நீங்குகிறது. இதற்கு உதவும் இறைவனும் கதிரவன் போல விகாரம் அடையாமல் இருந்து உதவுகிறான்.

எடுத்துக்காட்டு வெண்பா 11-2-3

**நசித்து ஒன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்றா**
**நசித்திலதேல் ஒன்றாவது இல்லை - நசித்துமலம்**
**அப்பு அணைந்த உப்பின் உளம் அணைந்து சேடமாம்**
**கப்புஇன்றாம் ஈசன் கழல்.**

**வெண்பா உரைத்தொடர் :** நசித்த ஒன்றின் நசித்தலால் ஒன்றாவது இல்லை; நசித்து இலதேல் ஒன்றாவது இல்லை; மலம் நசிந்து, அப்பு அணைந்த உப்பின் உள்ளம் அணைந்து சேடம் ஆம்; ஈசன் கழல் கப்பு இன்றாம் உளம்.

**விளக்கம்**

நசித்தல் - கெடுதல், அழிதல். கெட்ட ஒன்று இன்னொன்றாக ஆகாது (அது தனி). கெடாவிட்டால் ஒன்றாக ஆகாது (இரண்டும் கெட்டால் புதிது. நெய்யும் தேனும் விடமாதல் போல). மலமானது கெட்டு ஆன்மா இறைவனுக்கு ஆள் ஆகிறது. நீரில் உப்பு சேர்தல் போல உள்ளம் இறைவனில் கலக்கிறது (இரண்டின் இணைப்பு). மலம் நசிகிறது என்றால் ஒன்றிலிருந்து விடுபடுவது

இரண்டிலிருந்து ஒன்று விடுபட்டு விட்ட தன்மை. இதன்பின் இறைவன் திருவடியிலிருந்து ஆன்மா பிரிவதே இல்லை. இது ஏற்றுக் கொள்ளுவதாயும் ஏற்றுக் கொள்ளப்படுவதாயும் இருக்கிற இரண்டின் ஒத்தல் கூறு. இதில் நசிதல் இல்லை. தனித்தனி அழியா இருப்புப் பொருள்களில் நசித்தலும் அணைதலும் விளக்கினார்.

எடுத்துக்காட்டு வெண்பா 11-2-4

**பொன்வாள்முன் கொண்மூவிற் புக்கு ஒடுங்கிப் போய் அகலத்**
**தன்வாளே எங்குமாம் தன்மைபோல் - முன்வாள்**
**மலத்தின் மறைந்து உள்ளம் மற்றுஉலகை உண்ணும்**
**மலத்து இரித்துச் செல்லும் வரத்து.**

**வெண்பா உரைத்தொடர் :** பொன்வாள் முன் கொண்மூவில் புக்கு ஒடுங்கிப் போய் அகல, எங்கும் தன் வாளே ஆம் தன்மைபோல்; முன் வாள் மலத்தின் உள்ளம் மறைந்து மற்று உலகை உண்ணும்; வரத்து மலத்து இரித்துச் செல்லும்.

### விளக்கம்

கதிரவன் முன்னதாக மேகக் கூட்டத்தின் மறைந்து இருந்து அது அகன்ற பின், எல்லாவிடத்தும் தன் ஒளி விளங்குமாறு நிற்றல் போல, முன் அறிவுப் பொருளான ஆன்மா மலத்தின் மறைந்து விட்டிருந்தது. பின் உலகை அனுபவித்தது. அதனுள் சேர்ந்த வாழ்வாக இறைவனால் மலத்தை நீக்கி உயரும்.

# பன்னிரண்டாம் நூற்பா

**செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா**
**அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ**
**மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே**

வார்த்திகம் : என் நுதலிற்றோ வெனின், அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**நூற்பா உரைத்தொடர் :** செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா அம் மலம் கழீஇ; அன்பரொடு மரீஇ; மால் அற; நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே.

### விளக்கம்

சடமானாலும் அறியும் பொருளானாலும் அதன் உரிமையைத் தாக்காமல் ஆதிக்கம் இன்றி ஆட்கொண்டு அவ்வவ் இயல்பில் செயல்படுத்தி அவையே உயர ஆளாக்கி சலிப்பிலாமல் சவரனை செய்த வகையில் ‘எத்தாலும் சிறிதும் குறைவுபடாத் தகைமையில் செயல்படும்’ திருவடியை மலம் சேர விடா. அம் மலம் நீங்கத் தரப்பட்ட கருவிகள் மலத் தாக்கத்தால் தெளிவு தராது மயக்கந் தந்தன. இதை அறுத்திட அன்பு நிறைந்த அரனைக் காட்டும் அடியார், அரன் அடையாளமான ஆலயம் இவற்றை வணங்கி உயர்வு நாடுக என்றார்.

## முதல் அதிகரணம்

**மேற்கோள் : ஈண்டு, ஆணவம் மாயை கான்மியம் என்னும் மலங்களைக் களைக என்றது.**

**ஏது : அவைதாம் ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்தும் ஆகலான்.**

**மேற்கோள் விளக்கம் :** மூன்று மலம் களைவாயாக என்பது.

**ஏது விளக்கம் :** மும்மலங்கள் ஞானத்தை உணர்த்தாதவை. அஞ்ஞானத்தைத் தருபவை.

எடுத்துக்காட்டு வெண்பா 12-1-1

**புண்ணிய பாவம் பொருந்தும் இக் கான்மியமும்**
**மண்முதல் மாயைகாண் மாயையும் - கண்ணிய**
**அஞ்ஞானம் காட்டும்இவ் ஆணவமும் இம் மூன்றும்**
**மெய்ஞ்ஞானிக் காகா விடு.**

**வெண்பா உரைத்தொடர் :** புண்ணிய பாவம் பொருந்தும் இக் கான்மியமும் மண் முதல் மாயை காண் மாயையும் அஞ்ஞானம் காட்டும் கண்ணிய இவ் ஆணவமும் விடு, இம் மூன்றும் ஆகா மெய்ஞ்ஞானிக்கு.

### விளக்கம்

**கான்மியம்** - வினை. இது நல்வினை, தீவினை எனப்படுவது. புண்ணிய பாலமாக வரும்

**மாயை** - மண் முதல் மாயை என அமையும். ஆணவத் தாக்கத்தால் மயக்கம் ஆவது.

**ஆணவம்** - அஞ்ஞானம் தருவது.

மெய்ஞானத்தை அடைய விரும்புபவருக்கு மூன்றும் ஆகாதன; மூன்றையும் விடு.



## இரண்டாம் அதிகரணம்

**மேற்கோள் : இனிச், சிவபத்தர்களோடு இணங்குக என்றது.**

**ஏது : அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவார் ஆகலான்.**

**மேற்கோள் விளக்கம் :** சிவன் தலைமையில் நின்று தன்னைப் பின் வைத்துச் செல்பவர் சிவ பத்தியினர். இவருடன் சேர்க.

**ஏது விளக்கம் :** சிவ பத்தரைத் தவிர பிற எவரும் மெய் அல்லாத ஞானம் தருபவரே.

எடுத்துக்காட்டு வெண்பா 12-2-1

**மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்**
**சிறப்பிலார் தம்திறத்துச் சேர்வை - அறப்பித்துப்**
**பத்தர் இனத்தாய்ப் பரன் உணர்வி னால் உணரும்**
**மெய்த்தவரை மேவா வினை.**

**வெண்பா உரைத்தொடர் :** தம்மை மறப்பித்து மலங்களின் வீழ்க்கும் சிறப்பு இல்லார் தம் திறத்துச் சேர்வை அறப்பித்து; பரன் உணர்வினால் உணரும் பத்தர் இனத்தாய்; மெய்த்த அவரை மேவா வினை.

### விளக்கம்

இறைவனுடன் இணைந்த உள்ளமாக 'தாம்' என நின்ற தம்மை மறக்கச் செய்து மலங்களில் வீழ்த்துவது வாழ்வின் உயர்வுத் தன்மை காண விழையாதார் சேர்க்கை. வாழ்வின் உயர்வுத்தன்மை காணுபவர் தம்மில் உள்ள உயர்ந்தாரைப் பிடித்தவர். அவ்வாறு செய்யாதார் சேர்க்கை அறுத்து, மேலான அவ்இறைவனின் உணர்வினால் தன் உணர்வை வழி நடத்தும் பத்தருடைய இனத்தில் சேர்ந்து மெய்த்தன்மை நோக்கிச் செயல்படுபவரை புண்ணிய பாவமான வினை நெருங்காது.

## மூன்றாம் அதிகரணம்

மேற்கோள் : இனிப், பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரன் எனக் கண்டு வழிபடுக என்றது.

ஏது : அவன்மற்று இவ்விடங்களில் பிரகாசமாய் நின்றே அல்லாத விடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்.

மேற்கோள் விளக்கம் : பத்தர் வேடம், சிவாலயம் வழிபடற்கு காரணம் உரைத்தது.

ஏது விளக்கம் : தான் அடையாளப்பட்ட அன்பர், நீறு, கண்டிகை இவற்றில் வெளிப்பட்டே இருக்கிறான். பிறவற்றில் வெளிப்படுத்த வேண்டி முயற்சி எளிதின் இயலாது.

எடுத்துக்காட்டு வெண்பா 12-3-1

**தன்உணர வேண்டித் தனதுஉருவைத் தான்கொடுத்துத்**
**தன்உணரத் தன்னுள் இருத்தலால் - தன்உணரும்**
**நேசத்தர் தம்பால் நிகமும் ததிநெய்போல்**
**பாசத்தார்க்கு இன்றாம் பதி.**

**வெண்பா உரைத்தொடர் :** பதி தன் உணர வேண்டி; தனது உருவைத் தான் கொடுத்து; தன்னுள் தன் உணர இருந்தலால் தன் உணரும் ததி நெய் போல் பாசத்தார்க்கு இன்றாம்; நேசத்தார் தம்பால் நிகமும்.

### விளக்கம்

இறைவன் பதியாக எல்லாவற்றிலும் பதிந்த தலைவன். அவன் ஆன்மாவானது தன் தன்மையைத் தெரிந்து கொண்டு தம்முடைய செயலை உயர்த்திக் கொள்ள வேண்டி, தன்னுடைய அடையாளங்களாக திருநீறு, உருத்திராக்கம் முதலியவற்றையும் கொடுத்து அகமும் புறமுமாக இணைகிறான். ஆன்மாவின் உள் அதன் உண்மை உணரப்பட இறைவன் இருப்பதால் அது அதன் உண்மையை உணர்வதாக ஆகும். தயிரில் இருக்கிற நெய் மறைந்து இருப்பது போல பாசத்தில் நின்றவர்க்கு அது வாய்க்காது. நெய் நோக்கிக் கடைவது போல் அன்பான அவனை நோக்கி அன்பால் செய்தால் அவன் அகப்படுவன்.



எடுத்துக்காட்டு வெண்பா 12-3-2

**கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தில் அங்கிவேறு**
**உண்டல்போல் நின்றுஅங்கு உளதாமால் - கண்டஉருத்**
**தான்அதுவாய் அன்றுஆனான் தான்அதுவாய்த்**
**தோன்றானோ**
**தான்அதுவாய்க் காணும் தவர்க்கு.**

**வெண்பா உரைத்தொடர் :** கண்டது ஒரு மந்திரத்தால் நின்று அங்கு உளது ஆமால்; காட்டத்தில் அங்கி வேறு உண்டல் போல் கண்ட உரு தான் அதுவாய் அன்று ஆனான், தான் அதுவாய்க் காணும் தவர்க்கு தான் அதுவாய்த் தோன்றானோ.

### விளக்கம்

சிவயநம எனும் மந்திரம் அவன் கண்டது. அவனும் ஆன்மாவும் உலகமும் அதில் நின்றன. அதில் உள்ளதை அவன் மூலம் பயில வேண்டும். விறகில் நெருப்பு வேறாக உள்ளது; ஆனால் விறகின் முழுமையில் நெருப்பு அத்துவிதமாக உள்ளது. இவ்வாறு எதிலும் அப்பொருளாகவே அன்றே ஆனவன் இறைவன்.

தான் அவனாய் அறிவது செயல்பட்டவர்க்கு.

தான் ஆன்மாவாய் தோற்றுவித்துக் கொள்வான்.

தம் கருமம் செய்தல் தவம். தான் இன்னொன்றால் இருப்பதை உணர்தல் 'தாம்' என உணர்தல். இதில் தலைமையான பொருளின் செயல்பாட்டில் நிற்பதே தவம். செய்க தவம்.

## நான்காம் அதிகரணம்

மேற்கோள் : இனி, இவ்விடங்களில் வழிபடுக என்றது.

ஏது : நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும் புருடன் அவையாகாவாறு அப்புருடனும் ஆகலான்.

மேற்கோள் விளக்கம் : வழிபடும் இடங்கள் காட்டியது.

ஏது விளக்கம் : நரம்பு, நாடி உள்ள உடம்பு கொண்டே, இறைவன் தானான ஆன்மாவும் இயங்கும். இதன் உடம்பு பிறர் உடம்பு போன்றதன்று, அவரும் சாதாரண ஆன்மா போன்றவர் அல்லர்.

எடுத்துக்காட்டு வெண்பா 12-4-1

**அதுஇது என்றது அதுஅல்லான் கண்டார்க்கு**
**அதுஇது என்றதையும் அல்லான் - பொதுஅதனில்**
**அத்துவிதம் ஆதல் அகண்டமும் தைவமே**
**அத்துவிதி அன்பின் தொழு.**

**வெண்பா உரைத்தொடர் :** அது இது என்றது அல்லான் அது இது என்றதையும் அல்லான் பொது; அதனில் அத்துவிதம் கண்டார்க்கு அகண்டமும் தைவமே, அன்பின் தொழு அத்துவிதி.

### விளக்கம்

அது, இது என வேறுபட்டு நில்லாது. அது, இது எனச் சுட்டியறிந்ததும் இல்லாது இறைவன் இணைந்த இணைப்புண்ட ஆன்மாவுக்கு உலகமே தெய்வமாகக் காட்சிப்படும். அன்பின் தலைமையரான, 'அத்துவிதி'யரை அத்துவித அனுபவம் விழையும் அன்பனே தொழுவாயாக.



எடுத்துக்காட்டு வெண்பா 12-4-2

**வினையால் அசத்து விளைதலால் ஞானம்**
**வினைதீரின் அன்றி விளையா - வினைதீர**
**ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்**
**ஆனத்தால் அன்பின் தொழு.**

**வெண்பா உரைத்தொடர் :** அசத்து வினையால் விளைதலால், வினை தீரின் அன்றி ஞானம் விளையா; வினை தீர ஞானத்தை நாடித் தொழவே அது நிகழும்; ஆன அத்தால் அன்பின் தொழு.

### விளக்கம்

உலகப் பொருள்களை அனுபவிக்கும் செயலில் விளைவது அசத்து நிலையே. தோன்றி இருந்து அழியும் தொடர்ச்சியால் ஆன்மா அடையும் வகையில் அசத்து என்றார்.

உலக அனுபவம் தீர்ந்தாலன்றி ஞானம் விளையாது. உலக அனுபவம் தீர்த்தல் என ஒன்று கை கூடாது. ஞானமாகத் தம்முள் நின்றதைத் தொழுதால் வினை தீர்தல் நிகழும்.

வினை தீர்ந்த அடியார்கள் அதற்கு எல்லையாக இருப்பவர்கள். அவர்கள் முறையாலோ அவர்களை அடைந்தோ அன்பின் கீழ்ப்படிவாயாக.

எடுத்துக்காட்டு வெண்பா 12-4-3

**தன்னை அறிவித்துத் தான் தானாச் செய்தானைப்**
**பின்னை மறத்தல் பிழையலது - முன்னவனே**
**தானேதா னாச்செய்தும் தைவமென்றும் தைவமே**
**மானே தொழுகை வலி.**

**வெண்பா உரைத்தொடர் :** தன்னை அறிவித்து தான் தானாச் செய்தானை பின்னை மறத்தல் பிழை அதை (பிழை வராது) தானே தானாச் செய்தும் முன் அவனே தைவம் என்றும் தைவமே மானே தொழுகை வலி.

**விளக்கம்**

தன்னை உயிர்க்குக் காட்டி, உயிரைத் தான் ஆக்கி உயர்த்தியவனை பின்னுக்குத் தள்ளுதல் பிழை ஆகாது; ஆன்மா இறைவனாகவே செய்து செல்வதிலும் அவன் முன் நிற்பவனாக இருக்கிறான். இதில் பின் நிற்கிறான் என்று கருதப்பட்டாலும் மல அனுபவத்தில் பின் வைத்தது போன்ற பிழை அல்ல.

தெய்வம் மலத்தன்மையாகாது; மல அனுபவமாக மாற்றத்திற்குரிய அனுபவத்தைத் தராது. என்றும் அது தெய்வமே. அதனைத் தொழுத வகையில் வலிமை கூடுகிறது. மருண்டாலும் வலிமை தரும்.


இந்த 'மருட்சி' மயக்கமன்று. ஒரு வீட்டில் இழவு, ஒரு வீட்டில் மங்கலம் என்றதற்கு மருட்சிப்பட்டு மாற்றுவது. இதற்கு வலிமையாவது தைவம். எவரும் தொழுக!


## நூற்கு அதிகாரிகள்

**சிவமென்னும் அந்ததர சிந்தைநேர் நோக்கப்**
**பவம்இன்றாம் கண்வா சகத்தின் – சிவம் உண்டாம்**
**ஒன்றும் இரண்டும் மலத்தார்க்குஇங்கு ஒண்குருவால்**
**இன்று இந்நூல் மும்மை மலர்க்கு.**

சிறப்புப் பாயிரம்

எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழுஇயல்பாய்
நந்தி உரைத்து அருளும் ஞானநூல் – சிந்தைசெய்து
தான்உரைத்தான் மெய்கண்டான் தாரணியோர்
தாம்உணர
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று.





## இந்நூலாசிரியரைப் பற்றி

மயிலாப்பூர், இராமகிருஷ்ணா மிஷன் விவேகானந்தா கல்லூரியின் தமிழ்த்துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றும் இவர் இடைகழிநாட்டு நல்லூரில் திரு. பெ. சாரங்கபாணி திருமதி நீலாவதி ஆகியோரின் மகனாகப் பிறந்தவர்.

மயிலம் ஸ்ரீ மத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் பி.லிட் (தமிழ்) பட்டம், சென்னைப் பல்கலைக் கழகச் சைவ சித்தாந்தத் துறையில் (தமிழ்) எம்.ஏ., பிஎச்.டி.,பட்டங்கள், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ., பட்டம் பெற்றவர். இந்தி வடமொழி ஆகிய மொழிகளிலும் பயிற்சி உள்ளவர்.

சென்னைப் பல்கலைக்கழகச் சைவ சித்தாந்தத் துறையில் தொடர்பு நிலை விரிவுரையாளராக எட்டாண்டுகள் பணியாற்றினார். வாரணாசி காசி இந்துப் பல்கலைக் கழகத்தின் இந்திய மொழிகள் துறையில் தமிழக அரசு நிறுவிய பாரதியார் தமிழ் இருக்கை'யில் விரிவுரையாளராக மூன்று ஆண்டுகள் பணியாற்றினார்.

சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றத்தில் செயலாளராகவும் (2001-2003) சித்தாந்தம் இதழின் துணை ஆசிரியராகவும் (1997-2003) தொண்டாற்றியவர். சமய சித்தாந்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்துபவர். பல்கலைக்கழக ஆய்வரங்குகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் வழங்கியுள்ளார்.

நண்பர்கள் வெளியீடு, சென்னை - 32 மூலமாக வெளிவந்த இவரின் நூல்கள் சிவபுராணம், தேவாரத்தில் திருவண்ணாமலைப்பதிகங்கள் ஆகியவற்றின் உரை, பாரதியார் ஆளுமை உருவாக்கம் (எட்டயபுரம் - காசி) சைவ சித்தாந்த வரைவு எனும் ஆய்வு நூல்கள்

**பிற வெளியீட்டில் இவரின் நூல்கள் :-**

- நால்வகைச்சமயங்கள் (மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 108),
- தமிழில் மெய்யுணர்வு; கேட்டலும் தன்மையும் (மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608 001)
- சங்க இலக்கியச் செம்மைநலம் (பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை - 14.)

